[ISSUED 5—11—1983

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY 8th MARCH 1983

Volume CXCIV (No. 3)

GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price *Rs.* 2.75 *Paise*]

143141
சென்னை-600 008.
V211, 32'N83
N83.194.3-5

# பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| | | பக்கங்கள் |
| 1. | வினாக்கள்—விடைகள் | 179—192 |
| 2. | அறிவிப்பு— | |
| | பேரவையிலிருந்து செய்தி | 192—193 |
| 3. | தகவல் கோரல்— | |
| | மேலவையில் நிதிநிலை அறிக்கை அளித்ததை நிழற்படமெடுக்காதது குறித்து | 193—194 |
| 4. | கவன ஈர்ப்பு— | |
| | (1) குறிஞ்சிப்பாடி எஸ்.கே.வி. மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தை அரசு ஏற்ற பிறகும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருப்பது குறித்து | 194—196 |
| | (2) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து | 196—200 |
| 5. | அரசின் சட்ட முன்வடிவுகள்— | |
| | (1) தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983) | 200—253 |
| | (2) தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1983) | 254—255 |
| | (3) தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983) | 255—256 |

(உ) திண்டுக்கல் அரசினர் கள்ளர் மாணவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் 18—8—1981 அன்று ஏற்பட்ட உணவுக் கோளாறினால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.

(எ) 18—8—1981 அன்று அருகிலுள்ள கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீரைக் கொண்டு சமைக்கப்பட்ட உணவில் ஏற்பட்ட நச்சுத்தன்மை காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு 70 மாணவர்கள் திண்டுக்கல் பொது மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். அதில் 64 மாணவர்கள் புறநோயாளிகளாக சிகிச்சை பெற்று நலம் பெற்று அன்றே திருப்பி அனுப்பப்பட்டனர். ஆறு மாணவர்கள் மட்டும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று நல்ல நிலையில் 19—8—1981 அன்று திருப்பி அனுப்பப் பட்டனர்.

**திரு. த. சந்தோஷம் :** "கிணற்றுத் தண்ணீரில் உள்ள நச்சுத் தன்மை" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தவிதமான நச்சுத்தன்மை? அமீபியாசிஸ் போன்றவையா அல்லது வேறு ஏதாவது கிணற்றில் போடப்பட்ட நச்சுத் தன்மையா? அதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தத் தண்ணீர் மற்றும் அதிலிருந்து பொருள்கள் ஆகியவை கிண்டியில் உள்ள ஆய்வுமனைக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன. ஆய்வு அறிக்கை வந்த பிறகுதான் நச்சுத் தன்மை எப்படிப்பட்டது என்பது நமக்குத் தெரிய வரும். இப்போது மாணவர்கள் அந்த இல்லத்திலிருந்து கல்லூரிக்குள் அமைக்கப்பட்டிருக்கிற விடுதிக்கு மாற்றி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மீனவர்களுக்குச் சலுகைகள்.**

* 130 **வினா—திரு. க. அருணாசலம் :** (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்விச் சலுகை மற்றும் அரசுப் பணிகளில் மீனவர்களுக்குத் தனி சதவிகிதம் ஒதுக்கீடு வேண்டும் என்று மீனவர்களிடமிருந்து 5—3—1982 அன்று கோரிக்கைகள் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) உச்சநீதி மன்றத்தின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு அரசு பிற்பட்டோர் பட்டியலை ஆய்வு செய்து தொகுக்க இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழுவை ஓய்வு பெற்ற இந்திய அரசுப் பணி அதிகாரியும், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் முன்னாள் தலைவருமான திரு. ஜே. எ. அம்பாசங்கர் அவர்கள் தலைமையின் கீழ் அமைத்து ஆணை பிறப்பித்துள்ளது. இக் குழு தனது அறிக்கையினை ஒரு ஆண்டிற்குள் அரசுக்கு சமர்ப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்த பின் அரசு அவற்றின் மீது முடிவு எடுக்கும்.

**பி. டி. ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமித்தல்.**

* 131 **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும், பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களை தலைமையாசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் ஆசிரியர் சங்கங்களிடமிருந்து 1980 மார்ச் மற்றும் 1981 பிப்ரவரி மாதங்களில் அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) நடுநிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களோ அல்லது தமிழாசிரியர்களோ தலைமையாசிரியர்களாக அமைய வகை செய்யும் நோக்கோடு, அரசு நிதி நிலை இடம் தரும் அளவுக்கு பி.டி. தரத்தில் தலைமையாசிரியர்கள் பணியிடங்கள் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடுநிலைப்பள்ளிகளில் மரணம் அடைதல், ஓய்வு பெறுதல், பணி விலகல் முதலிய காரணங்களால் நிரந்தரமாக காலியாகும் இடைநிலைத் தலைமையாசிரியர் பணியிடங்களை பி.டி. தர தலைமை ஆசிரியர் பணியிடங்களாக உயர்த்தி, பி.டி. தரத்திலான பி.டி. ஆசிரியர்களை அல்லது தமிழாசிரியர்களை நியமிக்கவும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

[1983 மார்ச் 8

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும், பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களை, தலைமை ஆசிரியர்களாக நியமிக்க நிதி நிலை இடம் தராவிட்டாலும் கூட, குறிப்பிட்ட அளவு எண்ணிக்கை மாணவர்கள் படிக்கின்ற நடுநிலைப் பள்ளிகள் அனைத்திலும் கட்டாயமாக இத்தகைய கல்வித் தகுதி பெற்றவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று அரசு ஒரு திட்டவட்டமான முடிவு எடுத்தால்தான் கல்வியின் தரத்தை உயர்த்த வழிவகை கோலும் என்ற அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நம்முடைய நிதியாதாரத்திற்கேற்ப பணியிடங்களை ஏற்படுத்தி அவர்களுக்குத் தருகின்றபோது, மாணவர் எண்ணிக்கையைப் பார்க்கிறோம். பார்த்துத்தான் தந்துகொண்டிருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டவாறு ஒரு சில பள்ளிகளிலே இவ்வாறு தகுதி பெற்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இது வரவேற்கக் கூடியது. ஆனால் ஐந்நூறு, அறுநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள், ஆயிரம் மாணவர்கள், எண்ணூறு மாணவர்கள் படிக்கின்ற நடுநிலைப் பள்ளிகளிலே இந்தப் பதவிகள் ஏற்படுத்தப்படாமல் இருப்பதால், கல்வியின் தரம் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து மிகுந்த அளவிற்கு எண்ணிக்கையுள்ள பள்ளிகளில் இப்பதவியை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பணியிடங்களைத் தருகின்றபோது இத்தகைய பள்ளிகளின் நிலைமை கவனத்திலே எடுத்துக்கொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

**செல்வி ஆ. லீலாவதி:** 750 மாணவர்கள் உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் தனி தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதே மாதிரி 750 மாணவர்களுக்கு அதிகமாக உள்ள நடுநிலைப் பள்ளிகளிலும் தனி தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போதைக்கு அத்தகைய கருத்து எதுவுமில்லை.



1983 மார்ச் 8]

**வேலையில்லாத தமிழாசிரியர்கள்.**

* 132 **வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேலை வாய்ப்பகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு, 1—3—1979 ஆம் நாள் வரை வேலையில்லாமல் உள்ள தமிழாசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வேலையளிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 3895.

(இ) மற்றும் (உ) அரசு நிதி நிலை இடம் தரும் அளவுக்கு ஆண்டு தோறும் பள்ளிகளுக்கு கூடுதல் தமிழாசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக 1981-82-ல் 500 பதவிகளும் 1982-83-ல் 500 பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. வேலை வாய்ப்பற்ற மற்ற நிலை ஆசிரியர்கள் பிரச்சினையைப்போல் இவர்கள் பிரச்சினையையும் படிப்படியாகத் தான் தீர்க்க இயலும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்தப் பிரச்சினை வேலை இல்லாத தமிழாசிரியர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற அம்சத்தைப் பொறுத்ததல்ல. உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் ஏழாவது வகுப்பிலிருந்து தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அரசின் கொள்கை அமைந்திருக்கிற காரணத்தால், அந்த அளவிற்கு நாம் எடுத்துக்கொண்டிருக்கிற கொள்கையின் அடிப்படையில் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படாததால், தமிழ் மொழி வளர்ச்சி குன்றக்கூடிய அளவுக்கு இருக்கிறது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்கூட, தமிழ் பாடத்திலேகூட மாணவர்கள் தேர்ச்சி பெறாத நிலை, தோல்வி அடையும் நிலை இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைப் போக்க, அரசு ஏற்கெனவே எடுத்துக்கொண்டுள்ள கொள்கையின் அடிப்படையில் போதிய தமிழாசிரியர்கள் பதவிகளை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தொடக்கப் பள்ளி அல்லது உயர் தொடக்கப் பள்ளி எதுவாக இருந்தாலும், தமிழைச் சொல்லித் தருகின்ற தகுதி தமிழாசிரியர்களுக்கு மட்டுமல்லாமல், இடைநிலை ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. அந்த நிலையிலே தமிழைச் சொல்லிக் கொடுப்பதில் யார் சிறந்தவர் என்று பார்க்கும்போது, இடைநிலை ஆசிரியர்கள் உரிய தகுதியைப் படைத்தவர்கள் அல்ல என்ற முடிவுக்கு அரசு வரவில்லை. இன்னும் சொல்லப் போனால், புலவர்கள் மொழியாற்றலை வெளிப்படுத்துவதைவிட இலக்கிய ஆற்றலிலே அதிக அக்கறை செலுத்துகிறார்கள் என்ற குறைபாட்டைப் பார்க்கிறோம். ஏழாவது, எட்டாவது வகுப்பு படிக்கும் மாணவர்கள் மொழியாற்றலை வளர்த்துக் கொண்டால், அதற்குப் பிறகு மேல்வகுப்புக்கு வரும்போது, இலக்கிய ஆற்றலை வளர்க்க நாம் முயற்சி செய்யும்போது, நாம் வெற்றி பெற முடிகிறது. இரண்டையும் வித்தியாசம் பாராட்டாமல் கீழ் வகுப்பிலேயே இலக்கியத்தைச் சொல்லித் தந்து மொழிக்கு முக்கியத்துவம் தராமல் இருக்கும் குழப்பமான நிலை இருப்பதால்தான், பத்தாவது வகுப்பு மாணவன், 12-வது வகுப்பு மாணவன் தாய்மொழியான தமிழில் தேர்வுறாமல் போவதைப் பார்க்கிறோம். இந்த வித்தியாசத்தின் அடிப்படையிலே பார்க்கும்போது, புலவர்களை 7-வது வகுப்பு வரை நியமித்து தமிழைச் சொல்லித் தரலாமா அல்லது இடைநிலை ஆசிரியர்களை நியமித்து சொல்லித் தரலாமா என்பது கல்வித் துறை நிபுணர்கள் பரிசீலிக்க வேண்டிய ஒன்று.

**செல்வி. ஆ. லீலாவதி:** முழுத் தகுதி பெற்ற தமிழாசிரியர்களை பகுதி நேர ஆசிரியர்களாக உயர் நிலைப் பள்ளிகளிலும், மேல் நிலைப் பள்ளிகளிலும் நியமிப்பதைப்போல, அவர்களுக்கு ஓரளவிற்குச் சம்பளம் கொடுத்து தமிழை வளர்க்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படிப்பட்ட திட்டம் எதுவுமில்லை. ஆனால் அதிகமான அளவிற்கு, பயிற்சி பெற்ற தமிழாசிரியர்களுக்கு, வேலை தர வேண்டும் என்ற முயற்சியை ஒவ்வொரு கட்டத்திலும் செய்து வருகிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மேல் நிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட 400 தமிழாசிரியர்கள், தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விதி செய்யப்பட்டு, தேர்வாணைக் குழுவிற்குச் சென்றதில் அதிலே 50 ஆசிரியர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு 350 ஆசிரியர்கள் வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்குத் தவிர்ப்பு அளித்து அவர்களை மீண்டும் வேலையில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 50 பேர்களுக்குக் கிடைத்தது 350 பேர்களுக்குக் கிடைக்கவில்லை என்றார். கிடைத்த 50 பேர்களும் தமிழ் ஆசிரியர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆக, 400 தமிழாசிரியர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது, ஆனால் அதில் வேலையில் இருந்த 350 பேர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பது வேண்டுமானால் ஒரு பிரச்சினையாக இருக்கலாம். இந்த 350 பேர்கள் இருந்த இடத்தில் நாம் வேறு தமிழ் ஆசிரியர்களைத்தான் நியமித்திருக்க முடியும். ஆக இந்த தேர்வாணைக் குழு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, தமிழ் ஆசிரியர்களைத்தான் எடுத்திருக்கிறது. தேர்வாணைக் குழு தமிழ் ஆசிரியர்கள் பதவிக்கு ஆட்களைப் பொறுக்கும்போது, தமிழ் ஆசிரியர்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறது. அந்தக் கணக்கைப் பார்க்கும்போது ஆட்சேபணை இல்லை. ஆனால் வேலையிலே இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்பது அவர்களைப் பொறுத்தமட்டில் ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினையை நாம் அனுதாபத்தோடு பார்க்கலாம்.

**கைத்தொழில் ஆசிரியர்கள்.**

*133 வினா—**திரு. நீலநாராயணன் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி தெற்கு கல்வி மாவட்டத்தில் தனியார் நடுநிலைப் பள்ளிகளில் ரூ. 175 மாத்திரம் சம்பளம் பெறுகிற கைத்தொழில் ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களில் எத்தனை பேர் இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதத்தில் 18 ஆண்டுகள் பணிபுரிந்த பிறகு இந்தச் சம்பளத்தில் மாற்றப்பட்டார்கள் என்ற நிலைமையை அரசு அறிந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்பிறகு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) அத்தகைய கைத்தொழில் ஆசிரியர்கள் யாரும் இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1963 மார்ச் 8

## தொழில்பிரிவு வகுப்புகள்.

***134 வினா—திரு. நீலநாராயணன் (திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் திரு.** பா. ரா. தாமஸ் சார்பில்) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டதால், அதற்கு முன்னால் உயர்நிலைப் பள்ளிகளில் இருந்த தொழில் பிரிவு வகுப்புகள் எவையேனும் மூடப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், எத்தனை பள்ளிகளில் என்னென்ன தொழில் பிரிவு வகுப்புகள் மூடப்பட்டுள்ளன?

(உ) மூடப்பட்ட பிரிவுகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ), (இ) மற்றும் (உ) 1978-79-க்கு முன் உயர்நிலைப் பள்ளிகளில் 1011 பிரிவுகளில் "இருமுனைப் பாடங்கள்" [illegible] தொழிற் பாடங்கள் 1978-79 முதல், மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் [illegible] தொழிற்பாட வகுப்புகளாக மாற்றப்பட்டன. [illegible] இருமுனைப் பாடங்கள் [illegible] 370 உயர்நிலைப் பள்ளிகளில் [illegible] மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படவில்லையாதலால், அந்தந்த பள்ளிகளில் [illegible] நிலையிலே "இருமுனைப் பாடங்கள்" [illegible] தொழிற்பாடப் பிரிவு, பெரும்பாலும் இப்பொழுது மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொழிற்பாடப் பிரிவாக இருக்கிறது. மீதி உள்ள 12 பள்ளிகளில் மட்டுமே இருமுனைப் பாட தொழிற் பிரிவு வகுப்புகள் மூடப்பட்டுள்ளன. மூடப்பட்ட பிரிவுகள் விவசாயம், பொறியியல், வணிகப் பிரிவு மற்றும் [illegible] ஆகியவை ஆகும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, இப்படி இருமுனைப் பாடத் திட்டம் [illegible] அந்தப் பள்ளிகளிலே [illegible] வாங்கப்பட்டு [illegible] பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன. [illegible] பள்ளிகளுக்கு, இதற்காக சுமார் 50 ஆயிரம் ரூபாய், 60 ஆயிரம் ரூபாய் [illegible] செலவு செய்யப்பட்டு [illegible] இருக்கிறது. அந்த தளவாடங்களை அந்தந்தப் பள்ளிகளுக்கே சொந்த மாக்கிக்கொள்கின்றார்கள். [illegible] திட்டம் தொடங்கப்பட்டுள்ள தொழில் பிரிவு பள்ளிகளுக்கு இந்த தளவாடங்களை மாற்றிக் கொடுக்கலாம் அல்லவா? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது? பல பள்ளிகளில் அந்த தளவாடங்களை விற்று பணம் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படி பயன்படுத்தக்கூடிய அளவுக்கு அந்தப் பள்ளிகளில் தளவாடங்கள் இருந்தால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மற்றொரு பிரச்சினை. இருமுனைப் பாடத் திட்டம் நீக்கப்பட்ட சில பள்ளிகளிலே ஆசிரியர்கள் முழுமையாகப் பயன் படுத்தப்படாமல் அவர்கள் வெறுமனே இருக்கிறார்கள். அவர்களுடைய பணியில் மாற்றம் கொடுக்கப்படவில்லை. இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவர்களுடைய பணியில் மாற்றம் செய்து, அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அந்த அடிப் படையிலேதான் அவர்களுக்கு மாற்றுப் பணிகளைத் தர அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## பொறியியல் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை.

***135 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பொறியியல் ஆசிரியர்களுக்கு 10 ஆண்டு பணிக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்க அரசு ஆணை பிறப்பித்து இருந்தும் அவ்வாணை இதுவரையும் அமுல்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அரசு அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ): உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பொறியியல் ஆசிரியர்களுக்கு அரசாணை நிலை எண் 1050, நிதி, நாள் 5—10—1978-ன்படி 1—10—1978 முதல் பத்தாண்டுக் கால பணி அடிப்படையிலே தேர்வு நிலை வழங்கப் படுகிறது. தேர்வுநிலை வழங்கப்படவில்லை என எவ்வித கோரிக்கையும் வரப்பெறவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வுநிலை வழங்கியதிலே இதுவரை உயர்நிலைப் பள்ளியில், மேல்நிலைப் பள்ளியில் தேர்வுநிலை இதுவரையில் பெறாதவர்கள் வேறு பிரிவில் யாராவது இருக்கின்றார்களா என்ற விவரம் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா? அதைப் பற்றித் தெரிவிப்பார்களா?

[1983 மார்ச் 8

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதைப்பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** இந்தப் பிரிவினைச் சார்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு சிறப்புத் தேர்வு நிலை வழங்கவில்லை. மற்ற பிரிவில் அதை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். தலைமை ஆசிரியர்களும், இருமுனைப் பாடத் திட்டத்தில் அமர்த்தப்பட்ட அந்த ஆசிரியர்கள் மட்டும் இந்த 20 ஆண்டு அடிப்படையிலே வழங்கப்படுகின்ற சிறப்பு ஊதிய விகிதத்தினை வாங்கவில்லை. அதை அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது குறித்து பரிசீலிக்கப்படும்.

## எட்டாம் வகுப்புத் தேர்வு.

*** 136 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) எட்டாம் வகுப்புவரை மாணவர்கள் அனைவரையும் தேர்வில் வென்றவர்களாகக் கருத வேண்டும் என்று மத்திய அரசு மாநில அரசுக்குத் கருத்து தெரிவித்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) அவ்வாறு கருத்து தெரிவித்து மத்திய அரசிடமிருந்து தாக்கீது எதுவும் வரவில்லை. எனினும், 1977 ஆகஸ்ட் 10-11 நாட்களில் டெல்லியில் நடைபெற்ற அனைத்து மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றில் 8-ஆம் வகுப்பு வரை யாரையும் தேர்வில் தோல்வியுறச் செய்ய வேண்டாம் என்ற நடைமுறையைக் கடைப்பிடிக்கலாம் என்று பரிந்துரைக்கப் பட்டிருந்தது. இப்பரிந்துரையை இவ்விஷயத்தில் அண்டை மாநிலங்கள் பெற்றுள்ள அனுபவத்தையும் கருத்தில் கொண்டு ஆராய்ந்த பின் தமிழக அரசு இக்கொள்கையை 1977-78 முதல் 1-3 வகுப்புகளில் மட்டும் செயல்படுத்த முனைந்துவிட்டது. மேல் வகுப்புகளுக்கு இக்கொள்கையை விரிவாக்குவது தற்போதைக்கு உசிதம் எனக் கருதப்படவில்லை.



1983 மார்ச் 8]

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கல்வித் தரம் இன்றைய நிலையிலே குறைந்து வருகிறது என்ற எண்ணம் பொது மக்களிடையே இருக்கிறது. அப்படி குறைந்து வருகிறது என்ற எண்ணத்தை அடிக்கடி நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட இங்கே சுட்டிக்காட்டுகிறார்கள். அப்படி இருக்கின்ற நிலையிலே 8-வது வகுப்பு வரையிலே தேர்வு இருக்கக்கூடாது என்று சொல்கின்ற அடிப்படையிலே 3-வது வகுப்பு வரையிலே அதை நிறுத்தவேண்டாம் என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். தமிழக அரசு ஆணை பிறப்பித்திருப்பதாகச் சொன்னார்கள். கல்வித் துறையின் உயர்வு கருதி தேர்வுகளை நிறுத்தக் கூடாது என்ற அந்த ஆணையைத் திரும்பப் பெற்று, தேர்விலே தரம் இல்லாதவர்களைத்தான் நிறுத்தவேண்டுமென்ற முறையிலே செய்தால்தான் கல்வித் தரம் உயரும் என்ற கருத்தை மனதிலே கொண்டு அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கல்வித் தரத்தைப் பற்றி நாம் பேசுகின்றபோது, இன்னொரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மாணவர்களிடையே காணப்படுகின்ற கல்வித் தரத்தின் குறைபாட்டிற்கு அல்லது கல்வித்தரம் இல்லாமைக்கு ஆசிரியர்கள் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று நாம் பேசிக்கொண்டு வருகிறோம். அப்படி ஒரு நிலை வருகின்றபோது அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** பாரிசில் மாணவர்கள் தேர்வுகளே தேவையில்லை என்று சொல்கிறார்கள். அப்படியெல்லாம் நாம் ஆதரிக்க முடியாது. அதே நோக்கில் தேர்வு என்பது மாணவர்கள் அறிவைச் சோதிக்கின்ற அளவுக்கு ஏதாவது புதிய முறைகள் புகுத்தப்படுமா? அந்த அடிப்படையிலே 8 ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்வு பயத்திற்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் அறிவைத் தேர்வு இல்லாமல் சோதிக்கின்ற முறையை வகுக்க அரசுக்கு எண்ணம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நாம் 3-வது வகுப்பு வரையில் யாரையும் தோல்வியுறச் செய்வதில்லை என்று வைத்திருக்கிறோம். பரிட்சை எல்லாம் உண்டு. ஆசிரியர்கள் திருத்துவார்கள். மாணவர்களுடைய தேர்ச்சியைப் பற்றி மாணவர்களுக்கும் தெரியும், ஆசிரியர்களுக்கும் தெரியும். ஆனால் 'பெயில்' ஆக்க மாட்டார்கள். 'பெயில்' ஆக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு என்ன காரணம்? 1-வது வகுப்பு முதல் 3-வது வகுப்பு வரை, சிறு குழந்தைகள் மனதில் தோல்வி என்கின்ற அளவில் சொல்லி, அந்த பாதிப்பு அவர்களுக்கு ஏற்படக்கூடாது என்ற அடிப்படையிலேதான் அப்படி வைத்திருக்கிறோம். அப்படி அந்த 1வது, 2-வது

[1983 மார்ச் 8

வகுப்பில் 'பெயில்' ஆக்குகின்றபோது, சில படிக்காத முதல் தலைமுறையினைச் சார்ந்த குடும்பத்தினர் குழந்தைகளின் பெற்றோர்கள், அந்தக் குழந்தைகளை நிறுத்துகின்ற அளவுக்குப் போய்விடுகிறார்கள். அந்தக் குழந்தைகளும் படிக்க வேண்டும். அதுவும் பின்தங்கிய குடும்பத்தினர் குழந்தைகள் தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற அளவிலேதான், 3-வது வகுப்பு வரையில் தோல்வியுறச் செய்ய வேண்டாம் என்று சொல்கிறோம். அதிலும் குறிப்பாக இந்தக் குழந்தைகள் புரட்டாசி மாதத்தில் வந்து சேர்ந்து கொண்டிருப்பார்கள். அப்படிச் சேர்கின்ற குழந்தைகளுக்கு ஏதாவது கொஞ்சமாவது ஆற்றலை வளர்க்க வேண்டும். அதற்குள் இந்தப் பரிட்சை கூட வந்துவிடலாம். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களும் அந்தப் பொறுப்பை ஏற்கும் சூழ்நிலையில் அவர்களும் இருக்க முடியாது. மாணவர்கள் மீதும் அந்தப் பொறுப்பைச் சுமத்த முடியாது. ஆகவே 3 ஆண்டு தொடர்ந்து படிக்கின்றபோது, ஓரளவுக்காவது அறிவு வளர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள் என்ற அடிப்படையிலேதான் சொல்கிறோம். அவர்கள் இப்படி 4-வது வகுப்புக்கு தகுதி பெற்றவர்களாகப் போவார்கள் என்ற அடிப்படையிலேதான் 3-வது வகுப்பு வரை இந்த முறை என்று சொல்கிறோம். அந்தக் குழந்தைகள் தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் இது செய்யப்பட்டது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாணவர்களுடைய தேர்வுக்கு ஆசிரியர்கள் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று சொன்ன அமைச்சர் அவர்கள், ஆசிரியர்கள் பொறுப்பு ஏற்க முடியாத சூழ்நிலையையும் விளக்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நோக்கிலே அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல், பள்ளியில் சேர்க்கப்பட்டால்கூட, பள்ளிக்கு வராத சூழ்நிலையிலே இருந்துவிட்டு, பிள்ளைகள் தேர்வுக்கு மட்டும் கடைசியிலே வந்து எட்டாருகின்றார்கள். ஆகவே அத்தனை பேர்களுக்கும் தேர்வு செய்தாக வேண்டுமென்று இல்லாமல், ஒரு சில பெர்செண்ட்டேஜ், அதாவது 5 பெர்செண்ட் அல்லது 10 பெர்செண்ட் பேர்களுக்குத் தேர்வு என்ற வகையிலே செய்தால்தான், கல்வித் தரம் உயரும் என்ற அளவில் அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போது அவையின் முன்னாலே பேசப்பட்டிருக்கின்ற கேள்வி மத்திய அரசு அளவில் அமைச்சர்கள் மகாநாடு நடந்தபோது, அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். எட்டாவது வகுப்பு வரையிலே யாரையும் நிறுத்தவேண்டாம் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாடு அரசு அதை ஏற்றுக்கொள்ளாமல் அவர்கள் முடிவு மேற்கொள்வதற்கு முன்னாலேயே நாமே சிந்தித்து 3-வது வகுப்பு வரையில்தான்



1983 மார்ச் 8]

அந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம், அதற்கு மேல் அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தால் மாணவர்கள் சரியாகப் படிக்க மாட்டார்கள் அல்லது ஆசிரியர்கள் சரியாகச் சொல்லிக் கொடுக்க மாட்டார்கள் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்று கருதி, 3-வது வகுப்பு வரையில் வைத்திருக்கிறோம். அதை இப்போது 8-வது வகுப்புவரை வைக்கலாமா அல்லது 3-வது வகுப்பு வரை வைக்கலாமா என்ற அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நாம் 3-வது வகுப்புவரை தோல்வியுறச் செய்வதில்லை என்று வைத்திருக்கிறோம். அதை எடுக்கிற பிரச்சினை இப்போது இல்லை. நான் முன்னாலேயே சொல்லிய காரணங்கள் அடிப்படையிலே குழந்தைகளுடைய நலனை மனதில் வைத்துக்கொண்டு நாம் இந்த முடிவை எடுத்திருக்கிறோம். அதுவும் நல்லபடியாகச் செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-50)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவரவர்களே, ஆசிரியர்கள் மாணவர்களைத் தேர்வுக்காகத் தயார் செய்கிறார்கள். மாணவர்களும் தேர்வுக்காகப் படிக்கிறார்கள். இதை மாற்றுவதற்கு தேர்வு முறையில் மாற்றம் செய்வது நல்லதென்று அமைச்சரவர்கள் கருதுகிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, அது அவ்வப்போது தொடர்ந்து நடைபெற்று வருகிற காரியமாகும். அதற்கென்று ஆராய்ச்சி நிறுவனங்கள் இருக்கின்றன. கல்வித் துறை நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அதைப்பற்றி ஆராய்ந்து அறிக்கைகள் தரும்போது, அதன் அடிப்படையில் மத்திய அரசும், மாநில அரசும் தக்க முடிவுகளை மேற்கொண்டு, செயல்படுகின்றன.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்களே, பொதுவாக மாநிலம் முழுவதிலும் 8 ஆம் வகுப்பிலிருந்து 9 ஆம் வகுப்பு வரும் மாணவர்கள் 9 ஆம் வகுப்பில் டிராப்-அவுட் ஆகிறார்கள். அவர்கள் தேர்வில் தோல்வியடைந்து வெளியேறுகிறார்கள். இதற்குக் காரணம் எட்டாம் வகுப்புவரை மாணவர்களின் கல்வித் தரம் குறைந்திருப்பதுதான். நகரங்களில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு ஈடாக இல்லை. அதனால் வருவாய் மாவட்ட அளவில் கேள்வித்தாள் தயாரிக்கப்பட்டு, தேர்வுகள் நடக்கின்றன. அப்படியில்லாமல் மாநில அரசே இந்தத் தேர்வை நடத்தி, தரமான தேர்வாக அதை மாற்ற அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

[1983 மார்ச் 8

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இப்போது மாநிலக் கல்வித் துறை சார்பில் 2 தேர்வுகளை நடத்திக்கொண்டு வருகிறோம். ஒன்று எஸ்.எஸ்.எல்.சி., இன்னொன்று ஹையர் செகண்டரி. இதை நடத்துவதில் மிகப் பெரிய சிரமங்களை கல்வித் துறை அனுபவித்துக்கொண்டு வருகிறது. பல பல்கலைக் கழகங்கள் பரிட்சைகளை நடத்தி தேர்வு முடிவுகளை வெளியிட முடியாத இந்தச் சந்தர்ப்பத்தில் லட்சக்கணக்கான மாணவர்களுக்கு 2 பரிட்சைகள் நடத்தி, முறையாகத் தேர்வுகளை நடத்தி வரும் சாதனையை தமிழக கல்வித் துறை செய்து வருகிறது. இந்தியாவில் இப்படி வேறு எங்குமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதைக் கெடுக்கும் வகையில் இன்னொரு பரிட்சையை அவர்களிடம் கொடுத்தால், இப்போது நன்றாக நடந்து கொண்டிருப்பதும் சரியாக நடக்காது. இப்போது இருக்கிற நம்முடைய யோசனை எல்லாம் எஸ்.எஸ்.எல்.சி. பரிட்சையையாவது வட்டார வாரியாக 'டிசென்ட்ரலைஸ்' பண்ணலாமென்ற கொள்கை குறித்து யோசனை செய்து வருகிறோம். அப்படி வருகிறபோது வட்டார நிலையில் ஒரு பரிட்சை நடத்தலாம். ஹையர் செகண்டரி தேர்வு மாநில அளவில் நடத்தலாம். எட்டாம் வகுப்பு பரிட்சை வருவாய் மாவட்ட அளவில் இருப்பது போதுமானது. அதை அந்த அளவில் சிறப்பாக நடத்தலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1983-ம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983).



1983 மார்ச் 8]

2. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1983).

3. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983).

4. தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1983).

5. 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1983).

6. 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1983).

7. தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1983).

## 3. தகவல் கோரல்.

### மேலவையில் நிதிநிலை அறிக்கை அளித்ததை நிழற்படமெடுக்காதது குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தினை முன்மொழிவதற்கு முன்னால் ஒரு முக்கியமான பிரச்சினையை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 5—3—1983 அன்று பிற்பகல் நம்முடைய மேலவையில் மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்தபோது, அந்த நிகழ்ச்சியைப் படம் பிடிக்கவில்லை. தொலைக்காட்சி நிலையமும் அதைப் படம் பிடிக்கவில்லை. யாருமே இங்கு வரவில்லை. அப்படி என்றால் இந்த மேலவை மதிக்கப்படவில்லையா? மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் சமர்ப்பித்த நிகழ்ச்சி புறக்கணிக்கப்பட்டதா? மேலவையின் உரிமைகள் அவமதிக்கப்படுகின்றனவா என்பதை, மாண்புமிகு தலைவரவர்களே, தாங்கள்தான் தெளிவிக்க வேண்டுமென்று கேட்டு, இது குறித்து தங்களுடைய கருத்தினை அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 8

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவரவர்கள் கடமையைச் செய்ய வேண்டும். ஏறக்குறைய பெருவாரியாகச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். எப்போதோ ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் தவறு இருந்தால், அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்பது என்னுடைய அபிப்பிராயம். இதை அரசின் கவனத்திற்கு வைத்து, நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதைவிட அதிகமாக எதிர்பார்க்க மாட்டார் என்று கருதுகிறேன்.

### 4. கவன ஈர்ப்பு.

**(1) குறிஞ்சிப்பாடி எஸ். கே. வி. மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தை அரசு ஏற்ற பிறகும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருப்பது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

"தென்னார்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி எஸ்.கே.வி. மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்தை அரசு மேற்கொண்ட பிறகும் சட்டச் சிக்கலினால் அப்பள்ளி நிர்வாகம் செயலற்றுப் போய் குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதால் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பல பாதிப்புகளுக்கு உள்ளாகியிருப்பது குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இது குறித்து ஒரு விவர அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, அறிக்கையில் கண்டுள்ள விவரத்தின்படி 5—8—1982 ஆம் தேதியன்று மேற்படி பள்ளி நிர்வாகத்தை ஏற்பதாக அரசு முடிவு செய்து ஆணை வெளியாகப் பிறப்பிக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஆணையைச் செயல்படுத்துவதை மிகத் துரிதமாகச் செய்ய வேண்டும். டேக்ஓவர் ஆணைகளையெல்லாம் அதே நாளிலே செயல்படுத்த வேண்டுமென்பதுதான் அரசின் மரபு. 5—8—1982 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணை 15—8—1982 வரை செயல்படுத்தப்படாமல், 16—8—1982 அன்று தான் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இடைக்காலத்தில் பள்ளி நிர்வாகத்தின

@ 265-266 ஆம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 மார்ச் 8] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ருக்கு உயர்நீதி மன்றத்திற்குச் செல்வதற்கு வாய்ப்பு கிடைத்ததால், இப்போது சட்டச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இடைக்காலத்தில் பள்ளி நிர்வாகம் தடை உத்தரவு பெற முயற்சித்தபோது, அரசு வழக்கறிஞர்கள் எந்தவித அப்ஜெக்ஷனும் செய்யாததால், தங்கள் கடமைகளைச் செய்யாத தால், இப்படி ஒரு இடர்ப்பாடு ஏற்பட்டு, அரசின் கொள்கைக்கு எதிராக சாதாரண தனி நபர் சவால் விடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கல்வி அமைச்சரவர்கள் உணர்ந்திருக்கிறார்களா? தடை உத்தரவை நீக்குவது என்பது சாதாரண காரியம். அரசு வழக்கறிஞர்கள் சரியாகச் செயல்பட்டிருந்தால், அது எளிதானது. ஏன் அவ்வாறு செய்யவில்லை?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றால், அதை முதலில் முன்மொழிந்து, அமைச்சர் அதற்கு பதில் தந்த பிறகு, மேற்கொண்டு விளக்கம் கேட்க உறுப்பினருக்கு உரிமையுண்டு. இங்கே சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டார். தவறு செய்த, தங்கள் கடமையைப் புறக்கணித்த அரசு வழக்கறிஞர்களின் பொறுப்பற்ற தன்மையை அமைச்சரவர்கள் கவனத்தில் கொண்டு, விரைவாக இதில் செயல்பட்டு, சட்டத் தடையை நீக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசோடு தொடர்பு கொண்ட அதிகாரிகள் அல்லது வழக்கறிஞர்கள் பற்றிய புகார்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி விளக்கம் பெற அரசு முயற்சி எடுக்கும். கோர்ட்டிலே அவர்கள் தடை வாங்கி, அதை நிரந்தரமாக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கோர்ட்டிலே சட்டப்படி, அவர்களுக்குத் தெரிந்த அளவிற்கு, தீர்ப்புகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நமக்கு அதில் திருப்தியில்லை என்றால், அப்பீல் செய்துதான் அதை முறியடிக்க வேண்டும். அரசு அதை மீற முடியாது. அந்த அடிப்படையிலே தேவையான காரியங்களை அரசு செய்யும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, பாதிக்கப்பட்டிருக்கின்ற 13 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பண நிலுவையை, அரசாங்கம் கொடுக்கும் பணத்தைக்கூட வாங்கித் தர மாட்டேன் என்று அந்த நிர்வாகம் ஆணவப் போக்குடன் செயல்படுகிறது.

[திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 மார்ச் 8

(முற்பகல் 10-00)

அறிக்கையிலே ஒரு செய்தி இருக்கிறது. குறிப்பிட்ட ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 27—1—1982, 3—2—1982, 16—2—1982, 18—2—1982, 18—4—1982, 10—7—1982, 9—10—1982, 13—10—1982, 23—10—1982, மற்றும் 21—2—1983 ஆகிய தேதிகளில் சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்ற முறையிலும், பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத் தலைவர் என்ற முறையிலும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக பள்ளிக் கல்வி இயக்குநர், மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரி, மாவட்ட கல்வி அதிகாரி போன்றவர்களுக்கும் அரசு கல்விச் செயலாளர் மற்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் ஆகியவர்களுக்கும் முறையீடுகள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே புதிதாக இது குறித்து முறையீடுகள் தர தேவையில்லை. விரைவில் இந்த முறையீடுகளின்படி அவர்களுக்கு வர வேண்டிய 60 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை அரசு தர நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, சம்பந்தப்பட்டவர்களுக்கு காலதாமதம் என்பது அவர்கள் ஒரே வேலையில் ஈடுபட்டிருப்பதால், அப்படித் தெரியலாம். ஆனால் அதிகாரிகளுக்கு பல வேலைகள் இருப்பதால், அவர்களுக்குக் காலதாமதமாகத் தெரியாமல் இருக்கலாம். ஆசிரியர்கள் மனு தரவில்லையென்று நான் சொல்லவில்லை. அதைப் பரிசீலித்து இயக்குநர் அரசுக்குச் சிபாரிசை அனுப்ப வேண்டுமென்றுதான் நான் சொன்னேன். ஆசிரியர்கள் மனு தரவில்லையென்று நான் சொல்லவில்லை.

## (2) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் 2,500 பேர் 1—11—1982-லிருந்து வேலை நிறுத்தம் செய்து வருவதனால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை குறித்தும், வேலை நிறுத்தம் காரணமாக ரப்பர் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பு குறித்தும்".



1983 மார்ச் 8]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, அவை முன் ஓர் விவர அறிக்கையும் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, முழுமையான அறிக்கையாக அது இல்லை. இந்த வேலை நிறுத்தம் காரணமாக இதுவரை 3 கோடி ரூபாய்க்கு மேல் ரப்பர் தொழிலுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேலும் எத்தனை மனித உழைப்பு நாட்கள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது, எவ்வளவு நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள், இதனால் ரப்பர் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பு யாது போன்ற தகவல்களை நான் கேட்டிருந்தேன். ஆனால் முழுத் தகவலும் அறிக்கையில் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அறிக்கையில் இல்லாவிட்டாலும்கூட இப்போது அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்லலாம் அல்லவா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அதுபற்றிய விவரங்கள் இங்கே தரப்படவில்லை. ஆனால் பிரச்சினையைத் தீர்க்க என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்கிற தகவல் தரப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மெத்த மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் எனக்கு ஓரளவுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால் இந்த வேலை நிறுத்தம் தொடர்பாக அரசுக்கும், பொது மக்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டம், இந்த வேலை நிறுத்தத்தால் அந்தப் பகுதியில் ஏற்பட்ட நிலை, இந்த வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர செய்ய வேண்டிய ஏற்பாடுகள் போன்றவை குறித்து எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்க வேண்டும். இந்தகவல்கள் அவர்களுடைய கவனத்திற்கு வராத முறை இருக்கிறதே, அது சரியில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்தத் தகவல்களை நாளையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கேட்டுள்ளதற்கு தேவையான பதில்கள் இவை போதும் என்று கருதி இது கொடுக்கப்பட்டிருக்கிறது.

---

@ 266-668 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1983 மார்ச் 8

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அறிக்கை கொடுத்ததற்குப் பிறகு, நாளைக்கு அறிக்கை கொடுப்பது மரபு இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு முழுமையான பதிலைத் தர மாண்புமிகு தலைவரவர்கள்தான் எங்களுக்கு 'கேரண்டி' (guarantee) என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்கள் கொடுக்கிற அறிக்கை முழுமையாக இருக்கிறதா, இல்லை பாதியாக இருக்கிறதா என்பதல்ல. அது முழுமையாகத்தான் இருக்க வேண்டும். இது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் என்ன சொல்கிறார்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** நான் பேசிக்கொண்டிருக்கிறேன். இன்னும் பேசி முடியவில்லை. அதற்குள் உறுப்பினர் குறுக்கிடுவதால் என் உரிமை பாதிக்கப்படுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் 2 கேள்விகள் கேட்கலாம். இரண்டு கேள்வி கேட்டார்கள்.

(திரு. க. இராமமூர்த்தி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது இரண்டு கேள்விகள் கேட்கலாம் என்று இருக்கும் விதியின் அடிப்படையில் அதனை விவாதமாக ஆக்கிவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** நான் சொல்வதெல்லாம், இதிலேயுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்தப் போராட்டத்தை எப்படியாவது நிறுத்துவது என்பதை மனதிற்கொண்டு அதற்கான நடவடிக்கையை எடுத்து இலாகா சரியான பதிலைக் கொடுத்திருக்கிறது. இந்தத் தொடர் கூட்டம் சற்று அதிக நாட்கள் நடக்கும். எவ்வளவு நஷ்டம், எவ்வளவு 'மேன் டேஸ் லாஸ்' போன்ற தகவல்களையெல்லாம் அவசர கால வினாவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்புவார்களேயானால், நோட்டிசை 'வெய்வ்' பண்ணி கையெழுத்துப் போட்டு தேவையான தகவலை அவை மூலம் தருகிறேன். இப்போது அதனை கார்ப்பரேஷனாக மாற்றிவிட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அறிவார்கள். எனவே இதுசம்பந்தமான பிரச்சினைகள் வெகு விரைவில் தீர்ந்துவிடும் என எதிர்பார்க்கிறேன்.



1983 மார்ச் 8]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அரசின் சட்ட முன்வடிவுகள் மீது விவாதம் . . .

(திரு. க. இராமமூர்த்தி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அமைச்சர்தான் பதில் சொல்லிவிட்டாரே.

**திரு. க. இராமமூர்த்தி:** நான் இன்னும் முடிக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதற்காக இரண்டு நிமிடங்களுக்கு மேல் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. உறுப்பினர் பல முறை எழுந்து விளக்கம் கேட்டார். அதற்கெல்லாம் அமைச்சர் விளக்கம் அளித்து விட்டார். திரும்பவும் கேட்டார். நான் அனுமதித்தேன். அதற்கும் அமைச்சர் பதில் அளித்துவிட்டார். அதற்கு மேலும் என்ன விளக்கம்?

**திரு. க. இராமமூர்த்தி:** என்னுடைய 'கால் அட்டென்ஷனுக்கு' சரியாகப் பதில் இல்லை என்று சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதற்கு அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு உறுப்பினர் அவர்கள் நிலைமை என்ன?

**திரு. க. இராமமூர்த்தி:** அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் இதுசம்பந்தமாக எடுத்திருக்கிற முயற்சிக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் 'எக்ஸ் கிரேஷியா' என்கிற பிரச்சினை குறித்து இன்னமும் பேச்சுவார்த்தை தொடர்ந்து நீடித்துக்கொண்டேயிருக்கிறது. கார்ப்பரேஷன் என்று ஆகிவிட்ட பிறகு, இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்துவிட வாய்ப்பு இருக்கிறது என்றாலும் கூட, அதுவரை இப்பிரச்சினையை வேறு விதமாக சுமுகமாகத் தீர்க்க அரசு முனையுமா? அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, இந்தப் பிரச்சினைபற்றி தொழிலாளர் நல இலாகா சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி மூன்று யோசனைகளைத் தெரிவித்திருக்கிறது. ஒன்று, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இரண்டு, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது. மூன்று, எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரு மாத ஊதியத்தை முன் பணமாகக் கொடுப்பது. மேலும் அதைத் திரும்பப் பிடித்தம் செய்வதுபற்றி இணை ஆணையாளர் அவர்கள் திரும்பப்

பரிசீலனை செய்வார்கள். ஆகவே அரசு பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குப் பின்னர் இதனைக் கார்ப்பரேஷனாக மாற்றியது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அதனால்தான் இப்போது பிரச்சினை நல்ல முறையில் தீர்ந்துவிடும் என்கின்ற நம்பிக்கையைத் தெரிவித்தேன். டிப்பார்ட்மென்ட் என்று இருந்தால், போனஸ் கொடுக்க வேண்டாமென்று மத்திய அரசு 1965 ஆம் ஆண்டு இயற்றிய சட்டத்தில் இருக்கிறது. இப்போது கார்ப்பரேஷன் என்று மாற்றிவிட்ட காரணத்தால், 'கொடுக்கலாம்' என்பது சட்டத்தில் இருக்கிற விதிமுறை. எனவேதான் இப்போது இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்துவிடும் என்கிற கருத்தை நான் ஏற்கெனவே தெரிவித்தேன். நிச்சயமாகத் தீர்ந்துவிடும். ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, இந்த வேலை நிறுத்தத்தால் எவ்வளவு நஷ்டம், எவ்வளவு மனித உழைப்பு நாட்கள் இழப்பு போன்ற விவரங்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அறிய விரும்பினால், ஒரு குறுகிய கால வினாவாகக் கேட்டால், நான் இதுகுறித்து காலக் கெடு தவிர்ப்பு வழங்கி, தோட்டத்தில் கையெழுத்துப் போட்டு தகவல்களைப் பெற்று அவை மூலம் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983).**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

---

@ 268-269 ஆம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளன.



**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அடுத்து வருகின்ற ஐந்து சட்ட முன்வடிவுகளும் இதேபொருள் பற்றியவையாக இருப்பதால், ஐந்து சட்ட முன்வடிவுகளையும் ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். உறுப்பினர்கள் பேசுகின்றபோது, எல்லாவற்றையும் சேர்த்து ஒட்டுமொத்தமாகப் பேசி விடலாம். பிறகு தனித் தனியாக அவையின் முடிவிற்கு விடப்படும்.

(முற்பகல் 10-10)

* Thiru A. R. DAMODARAN: Mr. Chairman Sir, all these Bills are being introduced to extend the life of Panchayats, Panchayat Union Councils, Municipal Councils, the Madras City Municipal Corporation and the Coimbatore City Municipal Corporation for periods ranging from six months to one year. I am only sorry that the Hon. Minister should have been forced to the necessity of coming to this House to move these amendments. Even last time, if the Hon. Minister will remember, I told him that it was better to cyclostyle these Bills and keep the months vacant because that seems to be the intention of the Hon. Minister in coming so often before this House. He has played the same record and I do not know how often he will play this record again in this House. But, as a former Member of a Municipal Council and as a former Chairman of a Municipal Council, I must convey to the Government the deep plight of the people to Panchayats and other civic areas in not having representatives, elected representatives, to attend to their grievances in many of these institutions. The Hon. Minister may take comfort in the plea that he has appointed Special Officers. While I accept that many of them, or some of them at least, may be doing good and honest work, I would like to point out to the Hon. Minister that even such officers are not able to carry on their duties because of the deep vested interests that have developed amongst the employees in such Panchayats, Panchayat Union Councils and Municipalities themselves. We seem to think that elected representatives misbehave. I would like to inform the Hon. Minister that it is not merely some of the elected representatives who are likely to misbehave—it is quite possible—but there are also sections amongst the employees themselves who refuse to follow the directions of the Special Officer and there is considerable vacuum in the administration at present. Here, I am remainded of a poem by Alexander Selkink:

"I am the monarch of all I survey;
My right there is none to dispute;
From the centre all round to the sea
I am Lord of the fowl and the brute".

[Thiru A. R. Damodaran] [1983 மார்ச் 8

The Hon. Minister, as Minister for Local Administration, is the monarch of all he surveys. There is not one Panchayat President and there is not one Panchayat Union Chairman. There is also not one Municipal Corporation Mayor except the solitary example of Madurai, where, probably, because the Hon. the Chief Minister had been elected, the Hon. the Local Administration Minister decided to have an election. But, in all the other places there is a serious vacuum in the administration and, joking apart, I would like to state that, faced as we are with serious problems regarding drought relief work, water-supply, maintenance of roads, removal of encroachments, growing of trees to improve the environment and preventing the cutting down of trees in rural areas, it is absolutely necessary that we should have elected representatives.

Sir, the Hon. Minister has mentioned that some people have gone to Court in regard to elections to Panchayats and Panchayat Unions. May I remind him that nobody has gone to Court regarding the holding of elections to Municipalities and Corporations? But, now a new complication has been brought in by the Minister, as anticipated, because he has not yet made up his mind whether he wants reservations in Municipalities and Corporations also. So, before the period mentioned in this Bill expires, he may suddenly issue a statement regarding reservations, wait for people to go to Court, and then come forward with another Bill to postpone Municipal elections and Corporation elections for another one year or two years.

Sir, it is not desirable for us to continue with the Special Officers and without elected representatives. I do not wish to accuse the class of officers as such but the administration is stagnant and is staggering and we are not able to move at all anywhere in our Municipal areas. The responses from the administration is very dismal in the sense that none of us, even the representatives of the people in the Legislative Assembly and the Legislative Council are able to do anything. Excepting a few influential members personally known to the Hon. Minister who may wield greater influence with the Special Officers, excepting these few persons, none of us is able to make any impact on the administration. I would like to refer to Cuddalore but it is not necessary. Everything is going hoywise and I feel that the elected Government is doing a distinct dis-service to the very concept of democratic representation, when it come forward with Bills of this nature. In fact there is the danger of the A.I.A.D.M.K. Government running their second term of office also by 1985 without having elections to any



1983 மார்ச் 8] [Thiru A. R. Damodaran]

local bodies. This would be most damaging because I believe that M.L.A.'s and M.L.C.'s have to be groomed and 60 to 70 per cent of them has to be picked up from the elected representatives in Panchayats and Municipalities where they will receive training in local administration, training in fighting—how to fight in representative bodies. I feel that the continuance of the Special Officers is most damaging to the very concept of the Municipalities Act, the Corporation Act and the Panchayat Union Act.

One word more, Sir. For the past nine years we have had no people's representatives in the Madras Corporation and for the past 5 or 6 years in Panchayats, Municipalities, etc., and during all these five years, there was ample time for the Government to come forward with a comprehensive amendment to the District Municipalities Act which was passed in 1920 before our country achieved Independence. But the Government have not taken any steps to amend the Act when they had ample time to amend this at a time when they were having only Special Officers in the Municipalities and Corporations. We have made many pleas in the Mayors' Conference, in the Municipal Chairmen's Conference for the enlargement of powers of the local bodies, because they are the representatives of the people living in those localities. It is unfortunate that the Hon. Minister has not taken even this opportunity to amend these Acts which are over 60 years old and this is going to result in some difficulties when we have elected representatives. I would like the Hon. Minister to consider this. But I do not think there is any use in appealing for the holding of the election, unless the State Government are convinced. Therefore, I am canvassing the idea with the political parties, just as we amended the Constitution of India to prevent President's rule from being imposed for more than one year in a State, for having a Constitutional prohibition preventing the State Governments from coming forward with Bills of this kind. Unless this is done, the example set by the Hon. the Minister for Local Administration is likely to be followed by others who may follow him in office and this is a very bad precedent in district local democracy. I am only surprised that Ministers who have fought so valiantly in recent bye-elections and who have achieved great success for their party should feel nervous about holding elections to Panchayats, Panchayat Unions, Corporations and Municipalities. You will win a lot of seats, Mr. Minister. There is no doubt at all about it. Then, why are you hesitating to have the elections? I am not going to be a contestant. I am speaking as one who is interested in local

[Thiru A. R. Damodaran] [1983 மார்ச் 8

administration. I can see it literally going to dogs, if you will excuse the indelicate expression, and the Hon. Minister has such a cheerful countenance while introducing such dismal Bills. I am surprised that he does not even shed a tear. He introduces these Bills destroying the life in our Panchayats with a smile on his face; and this is a greater tragedy than the extension of life of Special Officers. The Minister for Local Administration should feel for us who have been representatives in Panchayats, but he is so happy at introducing these Bills. I hope this happiness will be shortlived and that the Government will decide that, at least before the end of 1983, they will go ahead with the elections, without offering any further excuses of amending the electoral rolls, of providing seats for women, of providing seats for the weaker sections and of providing seats for other classes which may suddenly come into being. Sir, 1984 is not a good year to hold an election. You will all be preparing for the 1985 General Elections. So, better get this done as quickly as possible, because the growth of your own Party, the strengthening of your power-base rests on the representatives who will come to all these institutions. I hope that this Bill which has been stereotyped so often, leaving blanks, will not come up before this House again; and, even if it does come up, I hope I will not have the misery of being here to witness the prolongation of the life of Special Officers. Thank you.

(ருத்ரபக்ஷ 19-20)

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நடைபெற வேண்டிய தேர்தலைத் தொடர்ந்து ஒத்திப் போடுவதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கண்டித் தார்கள். இதை யாரும் கண்டிக்க முடியாது. அதைப்பற்றி நான் முன்னாலேயே பல தடவை பேசியிருக்கிறேன். அவர்களைப் போலவே, பல அசிடத் தேவையில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இது கடைசியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** இது கடைசியாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். ஆனால் அது அவர்கள் கையில் இருக்கிறது. இதைப் பற்றி பேரவையில் பேசியதை பத்திரிகையில் பார்த்தேன். நவம்பர் மாதத்தில் சர்வ கட்சிக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை வந்தபோது, விசாரணை சம்பந்தமாக இலர் சுப்ரீம் கோர்ட்டில் ரிட் போட்டிருப்பதால், கால



1983 மார்ச் 8] [திரு. ஆ. நல்லசிவன்]

தாமதம் ஆகிறது என்று அரசு சார்பில் சொன்னார்கள். அப்போது, "ஒரே ஒருவருடைய அஃபிடவிட்தான் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறது, மொத்தம் 16 பேர் ரிட் போட்டிருக்கிறார்கள், அவர்களுடைய அஃபிடவிட் கிடைக்க வில்லை, அதெல்லாம் கிடைத்தால் ரிட் போட்டவர்கள் யார் யார் என்று தெரியும்" என்றும் சொன்னார்கள். இப்படி 16 பிளஸ் 1 17 பேர் ரிட் போட்டிருக்கிறார்கள். அவர்கள் யாரென்று தெரிந்தால், எந்தக் கட்சியைச் சேர்ந்த வர்கள் என்று தெரிந்தால், "சுப்ரீம் கோர்ட்டில் முடிவாக காலதாமதமாகும், வாபஸ் பெறுவதன் மூலமாகச் சீக்கிரமாக இந்தத் தேர்தலை நடத்த உதவி செய்ய வேண்டும்" என்று கேட்கலாம். ஆகவே அந்த ஒரு அஃபிடவிட் தவிர மற்ற 16 அஃபிடவிட்டுகள் வந்துவிட்டனவா? அவர்களுடைய பெயரைக் கொடுப்பார்களா? அவர்கள் யாரென்று தெரிந்தால், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளை வேண்டிக் கொள்ளலாம். எலக்ஷன் நடக்க உதவுவதற்காக அந்த மனுக்களை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எல்லா அரசியல் கட்சி களும் சேர்ந்து வேண்டிகொள்ளலாம். ஏனென்றால் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வர தாமதமாகும். சுப்ரீம் கோர்ட் அந்தக் கேசை எடுக்கவே 'எக்ஸ்பிடைட் பெட்டிஷன்' போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தல் நடந்து 12 வருடங்கள் ஆகிவிட்டன. கலைக்கப்பட்டு 7 வருஷங்கள் ஆகிவிட்டன. அதனால் இந்தச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு வர வேண்டிய மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் வராமல் இருக்கி றார்கள். இதையெல்லாம் அரசாங்கம் தன்னுடைய அஃபிடவிட்டில் சொல்லி யிருக்கிறார்களா என்று தெரியவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் இந்த மாதிரி கேஸ் வந்தபோது, மாநில அரசுகளை விமர்சனம் செய்திருக்கிறது. கவுன்சிலில் பிரதிநிதிகள் இல்லாத நிலை சரியல்ல என்று அவர்களே சொல்லி யிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, எங்கள் மாநிலத்திலும் கவுன்சிலில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் அரை குறையாக இருந்துகொண்டிருக்கிறது என்பதையும் அந்த அஃபிடவிட்டில் சொல்லியிருக்கிறார்களா என்ற சமாசாரத்தைச் சொல்ல வேண்டும். 'எக்ஸ்பி டைட் பெட்டிஷனுக்கு' என்ன காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள்? அல்லது ஃபார்மாலிட்டி பெட்டிஷனாகப் போட்டிருக்கிறார்களா? ஜனநாயக அமைப்பு எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்களா? அந்த அஃபிடவிட்டிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும். எக்ஸ்பிடைட் பெட்டிஷனின் காப்பியைக் கொடுத்தால் பரவா யில்லை. அந்த பெட்டிஷனில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 மார்ச் 8

பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில், சட்டம் நிறைவேற்றிவிட்டோம். இப்போது அது சுப்ரீம் கோர்ட்டில் மாட்டிக் கொண்டிருக்கிறது. அந்த 17 பேரும் வாபஸ் பெற முயற்சி செய்வோம். எல்லா அரசியல் கட்சிகளும் முயற்சி செய்யலாம். பெயரைக் கொடுங்கள், தனியாக 'அப்ரோச்' செய்து பார்க்கிறோம். சுப்ரீம் கோர்ட்டில் இலட்சக்கணக்கான கேஸ்கள் இருப்பதால், இந்தக் கேசிற்கு பிரையாரிட்டி கொடுக்க வேண்டுமென்றால், எந்தக் காரணத்தின் அடிப்படையில் எடுப்பது? பிரையாரிட்டி கொடுத்து இந்தக் கேசை எடுக்க வேண்டிய அளவிற்கு போதிய காரணங்களை அதன் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்களா என்பதை நாங்கள் அறிய அந்த அபிடவிட்டைக் காட்ட வேண்டும்.

பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில், சிக்கல் இருக்கிறது. ஆனால் முனிசிபல் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், நாம் தேர்தலைத் தாமதப் படுத்த வேண்டியதில்லை. 1969-ல் தேர்தல் நடந்தது. இப்போது 14 வருஷங்கள் ஆகிவிட்டன. கலைக்கப்பட்டு 7 வருடங்கள் ஆகிவிட்டன. சென்னை கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், 1968-ல் தேர்தல் நடந்தது. 15 வருடங்கள் ஆகிவிட்டன. 1981-ல் கலைக்கப்பட்டது—11 வருடங்கள் ஆகிவிட்டன. கோவை கார்ப்பரேஷன் அமைக்கப்பட்ட நேரத்திலிருந்து அங்கே மேயர் இல்லை. மேயர் இல்லாத கார்ப்பரேஷனாக அது இருக்கிறது. இதனால் மக்களுடைய நலன்கள் பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ள நிலைமைகளைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சாலை பராமரிப்பு விஷயத்தில் ரொம்பவும் மோசமாக இருக்கிறது. பெரம்பூரில் மேல்பட்டி பொன்னப்ப முதலி தெருவில் கடந்த மூன்று ஆண்டுகளாக குண்டும் குழியுமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னையிலே சுற்றிப் பார்க்கிறார்கள். எனக்குத் தெரிந்து கடந்த ஐந்தாண்டுகளாக இப்படி இருக்கிறது. அதைப் போலவே ஓட்டேரி பாலத்தை இடித்துப் போட்டு இரண்டு அல்லது மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. 'ஓட்டேரி', டிராபிக்காக இருந்தது. இப்போது பாலத்தை இடித்துப் போட்டு விட்டதால், அங்குள்ள நியூ போக்ஸ் ரோட் குறுகிய இடமாக இருப்பதால், இரண்டு வருஷத்திற்குள் [illegible] பஸ் போகும்போது [illegible] நடந்திருக்கின்றன. இது மட்டுமல்லாமல், எருக்கஞ்சேரி பாலம். இது தேசிய நெடுஞ்சாலை இதைப் போட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. கார்ப்பரேஷன் கவுன்சிலர்கள் இருந்திருந்தால், இப்படி மூன்று வருடத்திற்கு விட்டிருக்க மாட்டார்கள்.



1983 மார்ச் 8] [திரு. ஆ. நல்லசிவன்]

பத்திரிகையில் ஒரு அட்வர்டைஸ்மெண்ட் வந்திருக்கிறது. "குடிநீர்க் குழாய்கள் எல்லாம் சாக்கடைக் குழாய்களோடு கலந்துவிட்டன, அடையாறு, மைலாப்பூர் ஆகிய பகுதிகளில் இப்படி கலந்துவிட்டன. ஆகவே தண்ணீரைச் சுட வைத்துக் குடியுங்கள்" என்று கார்ப்பரேஷன் சார்பில் விளம்பரம் செய்யும் நிலைமை இருக்கிறது. இப்போது புதிதாகப் போடும் குழாய்களை வெவ்வேறு பக்கத்தில் போடுகிறார்கள். முன்னால் இரண்டையும் பக்கத்திலே ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் போட்டார்கள். குடிதண்ணீர்க் குழாயில் வெக்குவம் ஏற்படுகிறபோது, சாக்கடைத் தண்ணீரை அது இழுத்து விடுகிறது என்ற தகவல் வந்திருக்கிறது. இந்தத் தகவல் வந்ததின் பேரில் இராயபுரம் பகுதியில் இரண்டையும் பிரித்துப் போட்டிருக்கிறார்கள். மற்ற எல்லா இடங்களிலும் இந்த இரண்டு குழாய்களும் பக்கத்திலேயே இருக்கின்றன.

இந்த டீலிமிட்டேஷனுக்காக நாம் காத்திருக்க வேண்டாம். தேர்தல் தேதி நிர்ணயம் செய்வதற்காக 13-ஆம் தேதி சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். டீலிமிட்டேஷன் இதற்குக் கொண்டு வர வேண்டாம். அப்படிச் சொல்லும்போது, நாங்கள் டீலிமிட்டேஷனை எதிர்க்கிறோம் என்பது அல்ல. நாங்கள் அதை ஆதரிக்கிறோம். டீலிமிட்டேஷன் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் பஞ்சாயத்து, முனிசிபல் கார்ப்பரேஷன் ஆகியவற்றைப் பிரித்திருக்கலாம். பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வந்த பிறகு, அது சாதகமாக இருந்தால், பிறகு முனிசிபல் கார்ப்பரேஷன் [illegible]. அப்படி [illegible] டீலிமிட்டேஷனுக்குப் போவார்கள். அதில் தீர்ப்பு வர ஐந்து வருஷம் ஆகும். முனிசிபல் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், இப்போது டீலிமிட்டேஷன் இருக்கிறது. அந்த [illegible] தேர்தலை நடத்தலாம். தேர்தலை நடத்திய பிறகு [illegible] வந்த பிறகு அந்த [illegible]. அப்படி இருக்கிற பிறகு டீலிமிட்டேஷனுக்குப் போகலாம். அதற்குள் அந்த [illegible] இருக்கும். அடுத்த தேர்தல் நடக்கும்போது, [illegible] தேர்தலை நடத்தலாம். ஆகவே டீலிமிட்டேஷனைக் [illegible] முனிசிபல் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் எந்த காலதாமதமும் [illegible] மூன்று மாதங்களுக்குள் [illegible] தேர்தலை நடத்தலாம். 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓட்டுரிமை கொடுத்த இந்த அரசு [illegible] நடத்தலாம்.

பஞ்சாயத்துத் தேர்தலுக்கு ஆறு மாத கால நீட்டிப்பு கேட்கிறார்கள். அதற்கிடையிலே சுப்ரீம் கோர்ட் விவகாரம் இருப்பதால், அதைத் தீர்த்து தேர்தல் நடத்த முயற்சி செய்ய வேண்டும். தேர்தலை நடத்த வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் கேட்கும் போது, அதற்கு மெரிட் அடிப்படையில் பதில் சொல்லாமல், "தேர்தலை நடத்தத் தயார், நாங்கள் ஜெயிப்போம்" என்று சொல்லுகிறார்கள். எலெக்ஷனில் நாங்கள்தான் ஜெயிப்போம் என்று சொல்லும்போது, எப்படி ஜெயித்தார்கள் என்று கேட்க வேண்டியிருக்கிறது. திருச்செந்தூர் தேர்தலில் ஒரு வாரம் அங்கு போய் கூடாரம் போட்டு இருக்க வேண்டியது இருந்தது. அப்படித் தான் ஜெயிக்க வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 10.30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இப்போது, இந்த மசோதாவின் மீது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுவதுதான் சரியாக இருக்க முடியும். அரசியல் பிரச்சினைகளையெல்லாம் இங்கே கொண்டு வந்தால், நானும் பேசுகின்ற நிலை ஏற்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் இரண்டு பேர்களையும் அனுமதிக்கத் தயாராக இல்லை. அடுத்த பிரச்சினையை மட்டும் பேச வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : நான் சொல்வது என்னவென்றால், இந்த எலெக்ஷன் 3 மாதத்திற்குள், 6 மாதத்திற்குள் முடியும் என்று சொல்லும்போது, 'அட்மினிஸ்ட்ரேட்டிவ் கன்வினியன்ஸ்' என்று சொன்னால் பாவாயில்லை.

* மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலே ஏதாவது இடைத் தேர்தல் நடந்து அங்கே அமைச்சர்களெல்லாம் போய் பிரச்சாரம் செய்வது என்பது நடக்கிறதா, இல்லையா என்பதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் தெளிவுபடுத்தி னால் நன்றாக இருக்கும்.

திரு. ஆ. நல்லசிவன் : அதை நான் தெளிவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விஷயம் ரொம்ப தூரம் வருகிறது. விவாதத்திற்கே வரலாம்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : விவாதத்திற்காக அல்ல. கல்கத்தாவிலேகூட ஒரு பெரிய வரலாறு படைத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே எவ்வளவு காலமாக மாநகராட்சி தேர்தல் நடத்தப்படாமல் இருந்தது.

முகாமிடவில்லை. அப்படி முகாமிட்டு அந்தத் தேர்தல் நடக்கவில்லை. சாதாரணமாகத் தேர்தலில் அவர்கள் தங்கள் கட்சிப் பொறுப்பை நிறைவேற்ற சென்றிருக்கிறார்கள். அவர்கள் சென்றது அமைச்சர் என்ற முறையில் அல்ல. இப்படி தேர்தலில் கட்சிப் பணியாற்றிவிட்டு வருவதைக்கூட, இங்கே விமரிசனம் செய்கின்றார்கள். தேர்தல் நடத்துவதைக்கூட இப்படி விமரிசனம் செய்கிறார்கள். இன்னொரு இடத்தில் ஏன் பஞ்சாயத்துத் தேர்தல் நடக்கவில்லை என்று கேட்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்துத் தேர்தலில் அமைச்சர்கள் எல்லாம் பிரச்சாரம் செய்யலாமா வேண்டாமா என்று அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. ஆ. நல்லசிவன் : தேர்தலுக்காகப் போய் அங்கே பிரச்சாரம் செய்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. நாங்கள் தேர்தல் வந்தால் 'சிபேஸ்' பண்ணுவதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்கள் தேர்தலை 'பேஸ்' பண்ண பயப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சரி சரி, விஷயத்திற்கு வா வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன்: அட்மினிஸ்ட்ரேடிவ் காரணங்கள் அல்ல பொலிட்டிக்கல் காரணம்தான் குறுக்கே நிற்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மாநில சுய ஆட்சியில் என்னைப் போல மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் நம்பிக்கை உள்ளவர்கள்தான். அப்படிப்பட்டவர்கள் கூட இந்தப் பஞ்சாயத்து, லோகல் பாடி எலெக்ஷன் நடத்துகின்ற பொறுப்பை சென்ட்ரல் எலக்ஷன் கமிஷனுக்கு விட்டுவிடலாமா என்று யோசிக்கின்ற அளவுக்கு வந்திருக்கிறார்கள். இன்று நிர்வாகம் சரியாக இல்லை. இது அரசின் காண்ட்ரிபியூஷன் அல்லவா ? தலைவர் அவர்கள் சொன்னமாதிரி மீண்டும் ஒரு முறை கால நீட்டிப்புக்கு சந்தர்ப்பம் கொடுக்காமல், அடுத்த 6 மாத காலத்தில், செப்டம்பருக்குள்ளாவது இந்த எலெக்ஷனை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, மாநகராட்சி, பஞ்சாயத்துத் தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டுமென்ற சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். 13-ஆம் தேதி எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி ஒரு நாள் குறிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் கூட எடுத்துச் சொன்னார்கள். இதற்கு வழக்கு மன்றத்திலே பல தரப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தடைபெற்றிருக்கிறார்கள்.





அரசியல் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் செல்லாவிட்டாலும், அரசியல் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் அங்கே சென்று தடை பெற்றிருக்கிறார்கள். ஜாதிக்கு ஒருவராக என்றுகூட சொல்லலாம். அப்படி தடை பெற்றிருக்கின்ற சூழ்நிலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் '13 ஆம் தேதி ஒன்றாகக்கூடி ஒரு நல்ல முடிவுக்கு வருவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இங்கே இருக்கக்கூடிய நம்முடைய அருமை உறுப்பினர்கள், எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள், அது திரு. நல்லசிவனாக இருந்தாலும் சரி, அது திரு. மாணிக்கமாக இருந்தாலும் சரி, அல்லது திரு. திண்டிவனம் இராமமூர்த்தியாக இருந்தாலும் சரி, அங்கே இருக்கக்கூடிய முன்னாள் நீலநாராயணன், தி.மு.க.வானாலும் சரி . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்னாள் தி. மு. க. வா? மேலவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு பொறுப்பு உண்டு. என்னுடைய பட்டியலிலே மாறுபட்டு இருக்கிறதோ என்ற சந்தேகம் வந்துவிடுகிறது. உறுப்பினர் அவர்கள் முன்னாள் நீலநாராயணன் என்பதும் முறையல்ல. முன்னாள் தி. மு. க. என்பதும் முறையல்ல. இந்நாள் நீலநாராயணன், இந்நாள் தி.மு.க. தான். என் பட்டியல் சரியாக இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : நான் முன்னாள் தோழர், முன்னாள் நண்பர் என்றுதான் சொல்ல இருந்தேன். அதற்கு நாம் எல்லாம் ஒன்றாகக் கூடிப் பேச வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்ட அந்தக் கால நீட்டிப்பை ஒத்துக்கொண்டு 13 ஆம் தேதியாவது உட்கார்ந்து பேசவேண்டும். அதற்கு அரசியல் சார்பிலே தடை வாங்கியிருந்தாலும் சரி, அரசியல் சார்பிலே உள்ள வழக்கறிஞர்கள் தடை வாங்கியிருந்தாலும் சரி, அதையெல்லாம் அவர்கள் திரும்ப பெற்றுக்கொண்டு இந்தியாவிலே எல்லோராலும் பாராட்டப்படும் வகையில் பஞ்சாயத்துத் தேர்தல் நடக்கவிடவேண்டும். இதிலே 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு வாக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது போலவே, தாய்மார்களுக்குத் தொகுதி ஒதுக்கியும், அரிசனங்களுக்கு 18 சத விகிதம் ஒதுக்கீடும் கொடுக்கிறோம். இப்படியெல்லாம் வரையறுத்து வந்த அந்தச் சட்ட முன்வடிவை நடைமுறைப்படுத்தமுடியாமல் தடை வாங்கியிருப்பதைக் குறித்து, நாம் எல்லாம் விவாதிக்கிறோம், பிறகு போய்விடுகிறோம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

நான் அவையிலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனக்கு 4 மாநிலங்களிலே உறவினர்கள் இருக்கிறார்கள். தென் பகுதியிலே உள்ள 4 மாநிலங்களிலேயும் என்னுடைய நண்பர்கள் இருக்கிறார்கள். அங்கே உள்ள மாநிலங்

களிலே, தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். அதற்கு அப்பால் திரு. இராமமூர்த்தி போன்ற நண்பர்கள் இருக்கிறார்கள். அவருக்கு டெல்லியிலே இருக்கிறார்கள் என்றால், எனக்கு உத்தரப் பிரதேசத்திலே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்த நான்கு மாநிலங்களுக்குள் வருவதில்லையோ?

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தேசிய நீரோட்டத்திலே இருப்பதால், அவர்கள் டெல்லியிலே போய் கலந்து இருக்கிறார்கள். இன்றைக்கு ஆந்திராவிலே தேர்தல் நடத்தினார்கள். அந்த மாநிலம் தென்னிந்திய மாநிலம் என்ற முறையிலே உள்ள ஒரு மாநிலம்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேசிய நீரோட்டத்திலிருந்து விடுபட்டிருக்கிறார்களா? வெறும் அ. தி. மு. க. வா அல்லது அகில இந்திய அ.தி.மு.க.வா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** நான் தேசிய நீரோட்டத்திலே ஊறி வளர்ந்தவன். நான் கருத்தறிகின்றபோது, என் தந்தை காங்கிரஸ்காரர். தியாகியாகவே இருந்தார்கள். அதற்கு நான் எந்தவிதமான ஆட்சேபனையையும் சொல்லவில்லை, மறுக்கவில்லை, தேசிய நீரோட்டம் என்று ஓடுகின்ற ஆறு. வெள்ளக்காடாக ஆகிவிட்டால், அது கடலில்தான் போய்ச் சேரும். நான் சொல்வதெல்லாம், ஓடுகின்ற ஆற்றை அணை கட்டி 4 விதமாகப் பிரிக்கவேண்டும். மாநில சுயாட்சி மூலம், காட்டாற்று வெள்ளம்போல் போகாமல் இதைத் தடையாக நிறுத்தி, அதைப் பிரித்துக் கொடுப்பதிலேதான் தேசிய நீரோட்டத்திலிருந்து கிளைகளாகப் பிரிந்து நாம் வாழவேண்டும் என்பதுதான் என் எண்ணம், தி.மு.க. வின் எண்ணம், அ.தி.மு.க. வின் எண்ணம். தேசிய நீரோட்டத்திலிருந்து பிரிவதற்காக அல்ல.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் சட்ட முன்வடிவில் வரவில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கமாகச் சொல்கிறேன். மற்ற நான்கு மாநிலங்களும் என்ன சொல்கின்றன? "நல்ல அருமையான திட்டம். ஆதி திராவிடர்களுக்கு எவ்வளவு, பெண்களுக்கு இவ்வளவு என்றெல்லாம் வந்திருக்கிறது. ஒரு அருமையான திட்டம். ஏன் உங்கள் மாநிலத்திலே உள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம் ஸ்டே



வாங்குகிறார்கள்?" என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் அப்படிக் கேட்கிறார்கள். தம்மைப் பிறர் பார்த்துப் பெருமைப்பட வாழ வேண்டுமே தவிர, பிறர் பார்த்து [illegible] வாழக்கூடாது என்பதுதான் புரட்சித் தலைவர் அவர்கள் தத்துவம். அந்தப் பிற மாநிலங்கள் நம்மைப் பார்த்து, "ஓஹோ, தமிழ்நாடு சிறந்த மாநிலம். அந்த மாநிலம் கொண்டு வந்த அந்தச் சிறந்த திட்டத்தை நாம் வரவேற்கிறோம்" என்று பேசுகிற அளவிற்கு நடக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே சென்னை, தமிழ் நாட்டிலே ஒரே ஒரு மாநகராட்சியாக இருந்தது. இப்போது கோயம்புத்தூர் மாநகராட்சி ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே மதுரை மாநகராட்சியாக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு மாநகராட்சிகளைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நான் பணிவன்போடு ஒரு வேண்டுகோளை அவருக்கு வைக்கிறேன். இன்றைக்கு மாநகராட்சியிலே பணியாற்றுகிற சிப்பந்திகள், இன்ஜினியர்களாக இருந்தாலும் சரி, மருத்துவர்களாக இருந்தாலும் சரி, வேறு சிப்பந்தியாக இருந்தாலும் சரி, ஆசிரியாக இருந்தாலும் சரி, ஒரே இடத்திற்குள்ளாக அவர்களுடைய மாறுதல்கள் எல்லாம் நடைபெற்று வருகின்றன.

(முற்பகல் 10.40)

இன்றைக்கு சென்னையிலே இருப்பவரை, அதாவது திருவான்மியூரிலிருந்து வண்ணாரப்பேட்டைக்கு மாற்றலாம். ஆனால் அவருடைய நடைமுறை எல்லாம் அப்படியே இருக்கும். சென்னையிலே ஒரு இடத்திலே குடித்தனம் இருந்துகொண்டு, சென்னையிலேயே சுற்றிச் சுற்றி வருகிறார்கள். அதில் திறமையோடு பணியாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள், திறமைக் குறைவாக இருக்கிறவர்களும் இருக்கிறார்கள். எந்த ஆட்சியாக இருந்தாலும், அதற்குக் கெட்ட பெயர் வர வேண்டுமென்று சிலர் பணியாற்றுகிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் ஆசிரியர்களை ஒரு யூனியனிலிருந்து இன்னொரு யூனியனுக்கு மாற்றலாமென்று கொண்டு வந்ததுபோல, மாநகராட்சிகளில் பணியாற்றும் சிப்பந்திகளையும் மாற்ற வகை செய்ய வேண்டும். இங்கிருந்து கோவைக்கு மாற்ற வேண்டும், திருச்சிக்கு மாற்ற வேண்டும், மதுரைக்கு மாற்ற வேண்டும். அப்படி ஒரு நியதியைக் கொண்டுவர வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். இங்கே ஒரு இன்ஜினியர் இருக்கிறார். . .

[1983 மார்ச் 8

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முக்கியமான பாயின்ட்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து முக்கியமான பாயின்ட் என்று தலைவர் சொல்லுவதால், அதற்கு ஆதரவு தெரிவிக்கிறாரா? அதில் வேறுவிதமான கருத்துக்களும் இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவருக்கு முக்கியமான பாயின்ட்.

திரு. சி. இராமலிங்கம் : இந்த நாட்டுக்கு நல்லது என்பதால் முக்கியமான பாயின்ட் என்று சொல்லுகிறேன். மாநகராட்சியிலே ஒரு இன்ஜினியர் சரியாகப் பணியாற்றவில்லை என்று வைத்துக்கொள்வோம். அவரை திருவான்மியூரிலிருந்து வண்ணாரப்பேட்டைக்கு மாற்றினால், அது அவருக்கு பனிஷ்மென்ட் அல்ல. அவரை ஏன் மதுரைக்கு மாற்றக்கூடாது, கோவைக்கு மாற்றக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: சரியாக ஒரு அதிகாரி செயல்படாவிட்டால், அவர்மீது இலாக்காபூர்வமாக நடவடிக்கை எடுப்பதுதான் சரியாக இருக்கும். இங்கே தவறு செய்யும் அதிகாரி, மதுரையிலும் தவறு செய்யாமல் மல் இருப்பாரா?

டாக்டர். இரா. சனார்த்தனம் : நன்றாகப் பணியாற்றும் அதிகாரிகளின் திறமையை வேறு பகுதிகளிலும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்த சர்ச்சையே தேவையில்லை. அப்படி சட்டம் இன்னும் வரவில்லை. வரும்போது அதைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையில் உள்ள சட்ட முன்வடிவின் மீது மட்டும் பேச வேண்டும்.

திரு. சி. இராமலிங்கம் : பஞ்சாயத்து யூனியனில் கொண்டு வந்துள்ளது போல, ஒரு மாநகராட்சியிலிருந்து இன்னொரு மாநகராட்சிக்கு மாற்ற வேண்டும். தமிழ் நாட்டில் ஒரு மாநகராட்சி இருந்தது. இப்போது 4, 5 ஆகியிருக்கிறது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பணிவன்போடு தனிப்பட்ட முறையில்—கட்சி சார்பில் அல்ல—என் உள்ளத்தில் பட்டதைச் சொல்கிறேன்.



அவர்களை மதுரைக்கு மாற்றலாம், கோவைக்கு மாற்றலாம். திறமையானவர்களையும் மாற்றலாம், தவறு செய்பவர்களையும் மாற்றலாம். அதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, தேர்தல்களை உடனடியாக நடத்த, நகராட்சி, மாநகராட்சி, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களை நடத்த, . . . .

(திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்)

தயவு செய்து அமருங்கள். நான் முடிக்கப் போகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒன்றிய ஆசிரியர்களை ஒன்றியத்திற்குள்ளேதான் மாற்ற முடியுமென்பதை உறுப்பினரவர்கள் அறிவார்களா?

திரு. சி. இராமலிங்கம் : நான் ஒன்றிய ஆசிரியர்களைப் பற்றிப் பேசவில்லை. நான் டிஸ்டிரிக்ட் போர்ட் பள்ளியிலே படித்தவன். அப்போது கல்வி நன்றாக இருந்தது. இப்போது கல்வியின் தரம் நன்றாக இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் முடிக்க நினைக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுகிறார்கள். நிர்வாகம் சீரும் சிறப்புமாக இருக்க வேண்டும். சீரும் சிறப்புமாக இருக்க சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். தமிழ் நாட்டில் மற்ற இலாக்காக்கள் இருக்கின்றன. ரெவின்யூ இலாக்கா இருக்கிறது, கல்வி இலாக்கா இருக்கிறது. அதைப் போன்று உள்ளாட்சித் துறையிலும் அப்படி ஒரு நியதியைக் கொண்டு வந்தால், சிறப்பாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் 13 ஆம் தேதி கூடி, ஒருமித்த கருத்துக்கு வந்து, தேர்தல்களை விரைவில் நடத்த ஒத்துழைக்க வேண்டுமென்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்று சொல்லி, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சட்ட முன்வடிவை ஆதரித்து, அமைகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது மற்றும் தேர்தல்களைத் தள்ளி வைப்பது சம்பந்தமான சட்டமுன்வடிவின்மீது ஒருசில சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய அனைவருமே, ஆளும் கட்சித் தரப்பில் பேசிய உறுப்பினரைத் தவிர, இந்தக் கால நீட்டிப்பை ஏற்றுக்கொள்ளாமல் பேசியிருக்கிறார்கள். கால நீட்டிப்பை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதை அமைச்சரவர்களின் உள்ளம்கூட ஏற்றுக்கொள்ளும் என்றே நான் கருதுகிறேன். மேலவைத்

தலைவாவர்கள்கூட, இங்கே இதுதான் கடைசியாகப் பேசக்கூடிய வாய்ப்பாக இருக்குமென்ற அடிப்படையிலே குறிக்கிட்டார்கள். நானும் இதுதான் கடைசியாக இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். முதலில் ஒரு அமைச்சர் சொல்லி, அதற்கு அடுத்து இன்னொரு அமைச்சர் சொல்லி, இப்படி வழிவழியாக இந்தத் துறைக்குப் பொறுப்பேற்கும் அமைச்சர்களுக்கு எல்லாம் கால நீட்டிப்பு கேட்பதே கடமையாக இருக்கிறது. அதை மாற்றும் வகையிலே, இப்போது இருக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சாவர்கள் மிக அண்மையிலேயே இந்தத் தேர்தல்களை நடத்த முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அங்கே பணிகள் பல பாதிக்கப்பட்டிருக்கின்றன. வறட்சிப் பணியானாலும், நிவாரணப் பணியானாலும், ஊராட்சிப் பகுதிகளிலும், நகராட்சிப் பகுதிகளிலும் எது எதற்கு முக்கியத்துவம் தந்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு அதிகாரிகள் பார்ப்பதைவிட அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால், சிறப்பாகச் செயல்பட வாய்ப்பாக இருக்குமென்பதை அனைவரும் உணர்வார்கள். உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்லுகிறேன். திருச்சி மாவட்டத்திலே சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது குறும்பப்பட்டி, ஆண்டிப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு இடையிலே வரும்போது, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இருக்கும் இடத்திற்குப் பக்கத்திலேயே மற்றொன்றை குடிநீர் வடிகால் வாரியம் கட்டுகிறது. முதலில் இருப்பது ஊராட்சி திட்டத்திலே செய்யப்பட்டது, இது வாரியத்தின் திட்டத்திலே செய்யப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அவசியம் இல்லாத பகுதியில் செய்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருந்தால், அதைத் தடுத்து, உரிய இடத்தில் நிறுவ வாய்ப்பு கிடைக்கும். அதிகாரிகள் மட்டத்திலே அதைச் செய்யவில்லை. அதே போன்று தலைஞாயிறிலே ஒரு நூலகம் கட்ட நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு இடம் இருக்கிறது. பேரூராட்சியிலிருந்து தருவதற்கு நிர்வாக அதிகாரி அஞ்சுகிறார். கொடுத்துவிட்டு, பின்னாலே யாராவது ஏதாவது சொன்னால் என்ன செய்வது என்று அதைத் தடுக்கிறார். வளர்ச்சிப் பணிகள் ஒன்றும் நடக்கவில்லை. மின்சாரம் இல்லை, எப்போதோ வருகிறது. வரும்போதும் விளக்குகள் எரிவதில்லை. அந்த அளவிற்கு அங்கே வேலை பார்ப்பதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருந்தால், அவர்களே அந்த வேலையைப் பார்ப்பார்கள். எனவே தேர்தல்களைச் சீக்கிரம் நடத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொரு விஷயம், எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எல்லோரையும் நான் குற்றம் சாட்டவில்லை. எல்லாத் தரப்பிலும் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள். அதிகாரிகள் எல்லோரையும் நான் சொல்லவில்லை. ஒருசிலர் இருக்கிறார்கள். இன்



றைக்கு அதிகாரிகள் சாம்ராஜ்யம் நடக்கிறது. அவர்கள் நினைத்தது என்னவோ அதுதான் நடக்கிறது. யாரும் குறுக்கே வர முடியாத நிலை இருக்கிறது. இங்கேயுள்ள எம். எல். சி., எம். எல். ஏ. க்கள் சொத்துக் கணக்கு தர வேண்டுமென்று வைத்திருக்கிறோம். எல்லோரும் கணக்கு தருகிறார்கள். அப்படிக் கேட்பதில் தவறில்லை என்று தான் வைத்திருக்கிறோம். அதே போன்று அதிகாரிகளிடம் பொறுப்பை ஒப்படைத்து, அவர்கள் பொறுப்பிலே சேர்ந்த அன்று அவர்களிடம் என்ன சொத்து இருந்தது, இன்றைக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்பதை தேர்தல்களை நடத்துவதற்கு முன்னதாக அறிய ஒரு கமிஷன் வைத்தால், அதிகாரிகள் எல்லாம் லட்சாதிபதிகளாக இருக்கிறார்கள் என்பது தெரியும். சிலர் அப்படி செய்திருக்கிறார்கள் என்பதற்கு திட்டவட்டமாகச் சான்றுகள் கிடைக்கும். யாரும் கேட்காமல், யாருடைய தலையீடும் இல்லாமல் அவர்கள் இருக்கிறார்கள். அதிகாரிகள், தேர்தல்கள் நடக்கக்கூடாது என்று கருதும் சூழ்நிலை இருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஊராட்சித் தேர்தல்கள் நடந்து, அதற்கு பிறகு நகராட்சித் தேர்தல்கள் நடந்து, அதற்குப் பின்னாலே மாநகராட்சித் தேர்தல்கள் நடக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே என்றால் எப்போது நடக்கும்? ஆக்டோபர் 1985? எப்போது வரப் போகிறது என்பது தெரியவில்லை. அந்த அளவிற்குக் காலம் கடத்தப்படும் சூழ்நிலை இருக்கிறது.

(முற்பகல் 10-50)

மற்றொரு கருத்தும் பொதுமக்களிடத்தில் நிலவுகிறது. இது மீனாட்சிசுந்தரத்தின் கருத்தில்லை, நானும் பொதுமக்களில் ஒருவன்தான், தேர்தலை நடத்தினால், அது மாநகராட்சியாக இருந்தாலும் சரி, நகரசபையாக இருந்தாலும் சரி, கிராமப் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, நகரப் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து யூனியனாக இருந்தாலும் சரி, பல்வேறு கட்சிகளைச சார்ந்தவர்கள் பொறுப்புக்கு வரக் கூடும். ஆனால் தேர்தலே நடைபெறாமல் இருந்தால் 'நாமே ராஜா', வேறு யாருமே நிர்வாகத்திற்கு வரமுடியாது என்கிற எண்ணம் ஆளும் தரப்பிலே இருக்கிறது. அந்தக் காரணத்தால் தான் தேர்தலைத் தள்ளி வைத்திருக்கிறார்கள் என்கிற கருத்து பொதுமக்களிடத்தில் இருக்கிறது. இப்போது இருப்பதுமாதிரி இருந்தால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் அனைத்து நகரசபைகளுக்கும், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பெருந்தலைவர். அதுபோல் மதுரை மற்றும் சென்னை

ஆகிய இரு மாநகராட்சிகளுக்கும் அவர்தான் மேயரும் கூட. மற்றவர்கள் யாருமே குறுக்கிட முடியாது. மற்றவர்கள் யாருமே குறுக்கிடக்கூடாது என்கிற அடிப்படையில்தான் இப்படிச் செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தவறான தகவலை அவைக்குச் சொல்லக்கூடாது. பத்திரிகையில் இந்த அமைப்புகளுக்கு எல்லாம் ஏதோ உள்ளாட்சித் துறை அமைச்சர் தான் ராஜாவாக இருக்கிறார் என்று வந்து, வெளியே உள்ளவர்களும் அப்படித் தவறாக நினைக்கக் கூடிய நிலை வரக் கூடாது என்பதற்காக ஒரு எச்சரிக்கைக்காகச் சொல்கிறேன். அதிகார துஷ்பிரயோகம் எங்காவது நான் செய்திருக்கிறேனா? அப்படி எங்காவது நடந்திருக்கிறதா? அமைச்சர், தனி அதிகாரி யாருக்காவது 'போன்' செய்து இப்படி இப்படித்தான் செய்யப்பட வேண்டுமென்று ஆணைகள் பிறப்பித்திருக்கிறாரா? அதுபற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சொல்ல வேண்டும். பொதுக் கூட்டத்தில் பேசுவதுபோல் மாமன்றத்திலேயும் பேசுவது கூடாது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் சொல்லப்படுகிற கருத்துக்களின் பயன்கள் பொதுமக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். நல்ல பல திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் அவை அமைய வேண்டும். எதையும் பேசுவதாக இருந்தால், பொதுக் கூட்டங்களிலேயே பேசி விடலாமே. என்மீது குற்றம் சாட்டுவது குறித்து நான் கவலைப்படவில்லை. ஆனால் ஆதாரம் இருந்தால், ஆதாரப்பூர்வமாகக் குற்றம் சாட்டினால் நான் உண்மையிலேயே அவையில் எப்போது வேண்டுமானாலும் நிதிக்குத் தலை வணங்கத் தயாராக இருக்கிறேன். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஆதாரங்களோடு பேச வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படி பதில் அளித்தாலும் கூட, நிலைமையை அவரே அறிவார். சாதாரணமாக ஒரு சின்ன வேலைக்கு இந்த அமைப்புகளிலே போனாலும்கூட, அங்கே அமைச்சரிடத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 'அமைச்சரிடத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது' என்று சொன்னால், எந்த இடத்தில், யாருக்கு. அப்படி 'அப்பாயின்ட்மென்ட்' போடப்பட்டிருக்கிறது? அதற்கு ஆதாரம் தேவை. இல்லாவிட்டால் நானும் மாண்புமிகு உறுப்பினரைப் போல பேச முடியும். இப்படியே பேசிக்கொண்டே போவது சரியாக இராது.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இடம் அளிக்காத வகையில், அரசுக்கு நற்பெயர் ஏற்படும் அளவுக்கு, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். இப்போது கால அவகாசம் கேட்டு சட்ட முன்வடிவை நிறைவேற்றினாலும்கூட, இந்தக் கால அவகாசத்திற்கு உள்ளாகவே எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தலை நடத்த வேண்டும். 13ஆம் தேதி அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலே கூட ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் சொன்னதுபோல், வழக்கு கொடுத்திருக்கும் நபர்களை சம்பந்தப்பட்ட கட்சிகளைச் சார்ந்தவர்கள் சமாதானப்படுத்தி வழக்கை வாபஸ் வாங்கச் செய்து, தேர்தலை உடனே நடத்த வேண்டும். அதோடு அப்படி அவர்கள் வாபஸ் வாங்குகிற நிலையில் அவர்களுக்கு நியாயமான கோரிக்கை ஏதாவது இருந்தால், அதை அரசு நிறைவேற்ற வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு நகராட்சியில் பணிபுரியும் ஊழியர்களையும், ஆசிரியர்களையும் வேறொரு மாநகராட்சிக்கு மாற்றுகின்ற நிலை வரக் கூடாது. அப்படி ஒரு நிலைமை வந்தால், அதை கடுமையாக எதிர்ப்போம் என்கிற எச்சரிக்கையை விடுத்து என் உரையை முடிக்கிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்து ஒன்றியம், பஞ்சாயத்துகள் போன்றவற்றுக்குத் தேர்தலை கொஞ்சம் நாட்களுக்கு ஒத்தி வைக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவுகளை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் அரசு அதற்கு நியாயமான ஒரு காரணத்தைச் சொல்லியிருக்கிறது. அதாவது நகரசபை, மாநகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரை, 1—1—1983 அன்று 18 வயதானவர்களைச் சேர்க்க, மீண்டும் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்தப் பட்டியலைத் தயாரிக்க கொஞ்சம் நாட்கள் ஆகும். மேலும் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து வார்டுகளைப் பிரிக்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் தனியாக கார்டுகளை ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது. அந்த வகையில் கால நீட்டிப்பு கேட்டிருப்பதால், நான் இச்சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். சொல்லியிருக்கிற காரணம் மிகவும் நியாயமாக இருக்கிறது.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முக்கியமாக சென்னையிலே ஆங்காங்கு சென்று பார்த்து, நகரின் தூய்மையைப் பற்றி அறிந்து வருகின்றார். நானே அப்படிப்பட்ட சில இடங்களைப் போய் பார்த்தபோது, அவை மிகத்தூய்மையாக இருப்பதைக் கண்டுகொண்டேன்.

அமைச்சர் வருகின்றார் என்றவுடன், அந்த இடத்தை முழுமையாகத் தூய்மை செய்து விடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த இடத்தை நிரந்தரமாகவும் தூய்மை செய்து விடுகிறார்கள். தனி அதிகாரிகளுக்குப் பதிலாக மக்கள் பிரதிநிதிகள் வரும்வரையாவது இம்மாதிரி அமைச்சர் அவர்கள் நகரில் பெரும்பான்மையான இடங்களுக்கு அடிக்கடி சென்று பார்த்தால், நகரில் தூய்மை அதிகமாக வாய்ப்பு ஏற்படும். தூய்மையைத் தவிர மற்ற பணிகள் எல்லாம் மாநகராட்சியில் சரியாக நடக்கின்றன. தூய்மைப் பகுதி என்று எங்காவது ஏற்படுத்துவதற்கு பதிலாக பல இடங்களைத் 'தூய்மைப் பகுதி' என்று ஏற்படுத்த வேண்டும். அதற்கேற்ற வகையில் சில கமிட்டி மெம்பர்களையும் இதற்காக நியமித்துவிட்டால், தூய்மை கெடாமல் நாம் பாதுகாக்க அது வாய்ப்பாக இருக்கும். ஆகவே இதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு 13ஆம் தேதி இந்தத் தேர்தல்களை விரைவில் நடத்துவதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்த இருப்பதற்காகவும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். தேர்தலை முழுமையாக ஒத்திப்போடவில்லை என்றும் தேர்தலை சீக்கிரம் நடத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். தவிர்க்க முடியாத காரணத்தால் தான், இந்தத் தேர்தலைத் தள்ளிப் போட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அவைக்கு மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நான் இச்சட்டமுன் வடிவை வரவேற்கிறேன்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களையும், ஊழியர்களையும் மாற்றம் செய்யும் சட்டம் இப்போது வரவில்லை என்று கூறியிருக்கிறார்கள். நான் இதுபற்றி அவர்களிடம் பேசிய நேரத்தில் இப்படி சட்டம் கொண்டு வந்தால், அதனால் பல தொல்லைகள் வரும் என்று கூறியபோது அவர்கள் மிகத் தெளிவாக சட்டத்தைப் பரிசீலனை செய்து பார்க்காவது தொல்லைகள் அதனால் ஏற்படுவதாக இருந்தால், அத்தொல்லைகளை விலக்கு வதாக வாக்குறுதி அளிக்கிறேன் என்று குறிப்பிட்டதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொது மக்களின் நியாய மான கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்று செயல்படுத்து கிறார்கள். அந்த வகையில் இச்சட்ட முன்வடிவைக் கொண்டு வருவது என்பது அவசியமாகிறது. ஆசிரியர்களையும் ஊழியர்களையும் மாற்றம்



செய்கின்ற வகையில் எப்போதுமே சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வரக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இச்சட்டமுன்வடிவை வரவேற்று, ஆதரித்து அமைகிறேன்.

Thirumathi TARA CHERIAN: Hon. Deputy Chairman, I have got a little experience in Municipal administration. As one interested in the democratic working of these bodies and knowing that the electorate is responding very well, I feel very strongly that the time has come when we should hold elections to the local bodies. It looked as if the hon. Member Thiru A. R. Damodaran had mentioned almost all the salient points and the sensible point of supporting the elections and therefore there was no need for me to repeat all that he had already stated. Sir, many areas of the peripheral parts of Madras City have come within the jurisdiction of the Municipal Corporation and they have no representation. Now there are problems like drought and water scarcity. If there were the representatives of the people, they would easily understand the cause for the problem and also the logical way of solving them by asking for more number of tanks to be put in those areas and I am sure people will be better satisfied with them. I hope I will not be misunderstood. The Hon. the Chief Minister and all the Members of the Cabinet including the Hon. the Minister for Local Administration are definitely for holding the elections at an early date. No problem is there which cannot be surmounted. Let it be a stay order, or representation for women. They could have been thought of even earlier. The Government may say that it is only rule by the majority.

எல்லோரும் கை தூக்கி 'ஆம், ஆம்' என்று சொல்லி விடலாம்.

The Bill will be passed. The only thing is that we must have the elections at the earliest. An all-Party meeting has been convened on the 13th March 1983 and even this, I am sure, could have been held a little earlier. The Hon. Minister has stated that they will not postpone the elections any longer. We will have the elections at an early date. I am sure this will be done and the people will be satisfied. There are a lot of things coming under

Municipal administration like elementary education, health, sanitation and many things have gone wrong. The Special Officers however super-human they may be, will not be able to do all the work while the people's representatives will be able to help the people.

[முற்பகல் 11-00]

The people take part in the elections and choose the deserving candidates. Therefore, it is up to them to choose the best of the lot to represent them in the Councils. I feel strongly that we should have the elections as early as possible. Thank you.

Thiru J. M. MIAKHAN: Mr. Deputy Chairman, Sir, I thank you for the opportunity given to me. I do not wish to go into controversial subjects and I wish to confine myself only to the amendments proposed in this Bill which seeks to extend the term of office of Special Officers. I am going to concern myself only with that subject.

Sir, all of us know that it is better to have democracy at all levels. Unless there is democracy at the grass-root level, democracy cannot flourish, all the ameliorative measures will not bear results and the funds allocated to various heads will not be properly utilised. When all the powers are given to the officers, as one hon. Member has said, it becomes a one-man rule. There is nobody to question them and ask them why a certain thing has not been done. If the elected representatives are there in the various local bodies, they will definitely keep these officers in check and see that the amounts that are allocated to the various schemes are spent properly.

Sir, this is not the first time that the Government are seeking extension of term of office of Special Officers. This has been done umpteen times. Every time, they find some excuse or the other. There is a saying in Tamil:

"நொண்டிக் குதிரைக்கு சறுக்கினதுதான் சாக்கு".

Like that, they are finding some excuse or the other to put off the elections for as long a period as possible. I do not think in any other country the election has been put off like this. In countries where there is dictatorship, elections might not have been held even for twenty years. I am not speaking of such



countries. Only in our country, this is happening. This might have happened in some other State also. I am glad that, at least in that respect, Tamil Nadu is trying to follow what is being done in other States. In no country where democracy flourishes are these elections to local authorities put off for so long a time. The M.L.A.'s, M.L.C.'s and M.P.'s alone are not the only elected representatives of the people. They alone cannot run the Government and they alone cannot do all the work. It is the democratically elected local bodies at the grass-root level which can look after the local needs of the people. It is only they who can monitor the implementatioin of the various schemes sanctioned at the higher level. Therefore, I request the Government not to try to put off the elections on some lame excuse. I am not very hopeful of their conducting all the elections within the stipulated time. Even now, I can say and challenge that they may not conduct all the elections. They will conduct one or two elections and request for some more time mentioning some more causes and putting forth some more excuses. That is how it is going to be. Therefore, I request the Government sincerely to see that the elections are conducted.

Sir, now, in all sincerity, it has been announced in the Lower House that an all-Party meeting is going to be conducted on the 13th of this month. This should have been done before the Bill was brought to the House. If an all-Party meeting had been convened before the Bill was brought to the House, we could have accepted the sincerity of the Government and appreciated their move. If that had been done, Government could have known our considered views. But, now everything is over. What is the use of conducting an all-Party meeting now? How are the Government going to consider and implement our suggestions? I am not able to understand this. I do not know how the Government are going to make use of the fruitful suggestions that may be coming forth in the all-Party meeting. They will simply say, 'We will consider the suggestions'. Our Hon. Minister has stated like this. "If you bring any specific instance to my notice where the Special Officers have not functioned properly, I will definitely take necessary action. If anybody tells me that the Hon. Minister has interfered unnecessarily with the affairs of the Special Officers, we will take action". In that connection, I will give a specific instance, though I am not levelling any charges against the Special Officer concerned. In the present state of affairs, the officers are acting very leisurely. It

appears that days and hours do not at all count; but only months and years count. When they conceive a thing and implement it in two or three years, they think that they have done their duty well. For example, in Chromepet, in the Second Cross Street, just abutting the Trunk Road, a culvert has been constructed at a cost of Rs. 15,000. When a lorry just passed over it the culvert broke down. There is a pit in the middle of the road and the pit is of the measurement of 6 feet into 3 feet. They tried to put some rubbish and sand to cover it. Only last month they put some concrete slab. Even that has cracked. It was done last month and it is of no use now.

I will give another example. There is a very big well and that has been constructed by the Chrome Leather Company but has been donated to the Municipality. It is a 30 feet diameter well and there is very good potable water in plenty. Some 10 years back the Government had even sanctioned a grant of Rs. 1 lakh for that well. If a pumpset is installed in that well, the water could be supplied to the people in surrounding areas. Of course, one individual went to Court claiming the well to be his but the litigation has ended and it has been vindicated that it belongs to the Municipality. There is no dispute now. Even now people are drawing water from the well because the water is soft and potable, as against the hard and brackish water that is only available in other wells nearby. But the difficulty is that many people are not able to draw water at the same time. Only 2 to 3 people are able to draw water simultaneously. I pointed this out to the Collector of Chengalpattu and he has also agreed with what I said. I said to him that if a 5 HP pumpset was installed, the water could be supplied to surrounding areas and also taken to other places through lorries. Now people draw water from the well with their buckets and by this method, the water may get contaminated and many people are not able to draw water simultaneously. If a pumpset is installed and about ten taps are also provided for, at least 10 people can take water at a time. I have mentioned this to the Hon. Minister in charge of water-supply also. He said that he would take action. But, nothing has happened so far. Even about ten days back, I told our Minister about this. He wanted me to give him another note



so that he could take action again. That is the position now. I also told the Special Officer about this. He said, "Yes, Sir. Even the motor is ready. Only the pumpset is necessary. The allocation also is there. I will do it." But, he has not done it. I do not know what prevents him from doing it. This is the way things are happening. If an elected representative from the locality is there, this will not happen. He may or may not be from the ruling Party because various Parties are there. He will definitely pull up the concerned officer and see that the work is done.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மணியடித்தார்).*

I will finish in a minute, Sir. With all the good intentions of the Hon. Minister, he cannot go and have an eye on the developmental activities that are taking place in all the 104 Municipalities and the 6,000 and odd Village Panchayats. He cannot do it. He has to rely on the subordinates and other officers; they, in turn, will have to rely on their junior officers and so on. Unless there is democracy at the grass-root level, democracy cannot flourish and it will lead only to dictatorship. Therefore, I request the Government to be sincere at least this time and conduct the elections as early as possible. Thank you.

திரு. ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு காலத்தை நீட்டிப்பதற்கான இந்தச் சட்ட முன்வடிவுகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பல ஆண்டுகளாக நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களும் ஊராட்சிகளுக்கான தேர்தல்களும் நடைபெறாமல் நாட்டு மக்கள் பல்வேறு அவதிகளுக்கு உள்ளாகியிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். நாம் இப்படி தேர்தல்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டே போனால், நகரங்களில் மட்டுமல்லாமல் ஊராட்சி மன்றங்களிலும் நடக்க வேண்டிய முன்னேற்ற காரியங்கள் எதுவும் நடக்கப் போவதில்லை. இன்றைக்கு சென்னை நகரைப் பார்த்தால், மாநகராட்சி மன்றத்திற்கான தேர்தல் நடைபெறாத காரணத்தால், வீதிகளெல்லாம் பாழாகியிருக்கின்றன. சாக்கடைகள் தேக்கமடைந்திருப்பதோடு, குப்பைகள் எடுக்கப்படாமல் நகரின் பல்வேறு இடங்களும் பல நாட்களாக நாற்றமடித்துக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக, சென்னை நகரமே ஒரு நரகமாகக் காட்சியளிப்பதைப் பார்க்கிறோம்.

(முற்பகல் 11-10)

இதற்காக பிரதிநிதிகள் இருப்பார்களேயானால் அந்த வட்டத்தின் குறைகளை எடுத்துச் சொல்லும் வாய்ப்பு இருக்கும். அதே நேரத்தில் தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு வர வேண்டுமென்ற அச்சத்தில் அந்தப் பகுதியைச் சுத்தமாக வைத்துக்கொள்வார்கள். எந்தக் கட்சி வந்தாலும் சரி, மக்களுடைய பிரதிநிதிகள் வரக்கூடிய நிலைமை உருவாகும். தேர்தலை நடத்தாமல் அரசு காலத்தை நீட்டிப்பது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிகாரங்கள் பூராவையும் அரசே வைத்துக் கொண்டிருக்கிறது. மக்களுடைய பிரதிநிதிகளிடத்திலே இல்லை. அரசை எதிர்பார்த்து அதிகாரிகள் வேலை செய்யும் நிலைமையைப் பார்க்கிறோம். அங்கே சென்று எதைக் கேட்டாலும், "அரசுக்கு எழுதியிருக்கிறோம், அங்கிருந்து உத்தரவு வரவில்லை" என்று சொல்லுகிறார்கள். சாலை போடுவதற்குக்கூட அரசிடமிருந்து உத்தரவு வர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எதற்கெடுத்தாலும் மாநில அரசு மத்திய அரசைக் குறை சொல்லுவதைப் போல, மாநகராட்சியிலே உள்ளவர்கள் மாநில அரசிடமிருந்து உத்தரவு வரவில்லை, எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க சீக்கிரமாக மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

திரு. பா. ரா. காமல்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் குறித்த கால நீட்டிப்புக்கு எங்கள் அணியின் ஆதரவு தெரிவிப்பது என்பது தெரியாத நிலையில் நான் பேச முனைந்திருக்கிறேன். அடுத்தடுத்து தொடர்ந்து கால நீட்டிப்பு கேட்டுக் கொண்டே இருப்பது என்பது இந்த மன்றத்தை எந்த அளவிற்குப் பாதித்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த மன்றத்தில் நான் எந்த காலத்தில் இரண்டு, மூன்று உறுப்பினர்களைத் தவிர மற்ற எல்லா உறுப்பினர்களும் நிறைந்திருந்து இந்த மன்றம் முழுமையாக இருந்தது. 21 உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வந்திருந்து அமர்ந்திருந்தார்கள். அவர்கள் பிரச்சினைகளை எழுப்பிய காலங்களில் மிகச் சிறப்பாக எழுப்பினார்கள். ஏனென்றால் அந்தப் பிரச்சினையில் அவர்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தார்கள். பிரச்சினைகளை முழுமையாக அறிந்துக் கூறி பரிகாரம் தேடுவதில் திறமையாகச் செயலாற்றினார்கள். இது வரலாறு.

கிராமப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவைகள் ஜனநாயகத்தின் அடிப்படைத் தளங்களாக விளங்குகின்றன. அவற்றை இந்த ஆட்சியாளர்கள் கலைத்தார்கள் என்று நான்



சொல்லவில்லை. ஆனால் இவர்கள் தொடர்ந்து அந்தப் பாரம்பரியத்தைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். அதை உடைக்க வேண்டும். பல இடங்களில் இவ்வாறு நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவில்லையே என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வேதனைப்பட்டார்கள். நகராட்சி, மாநகராட்சி என்றாலே எல்லோருக்கும் அச்சம் இருக்கிறதா என்று ஐயப்படுகிறேன். காரணம் மன்றங்கள் எல்லாம் முழுமையாக நிரப்பப்படாமல் இருந்தால், அங்குள்ள மக்கள் பெற வேண்டிய முழு வசதிகளையும் பெற முடியாத நிலை இருக்கிறது. சிறு பஞ்சாயத்துக்களிலும் அப்படித்தான். நகராட்சிகளில்கூட எல்லாப் பகுதிகளிலும் உள்ள தேவைகளை அதிகாரிகள் முழுமையாக நேரிடையாக உணர முடியாது. மக்கள் பிரதிநிதிகளால்தான் அவைகளை நிச்சயமாக உணர முடியும். அந்த அளவிற்கு உள்ளாட்சி மன்றங்கள் ஜனநாயகத்தில் பயிற்சி தளமாக இருக்கின்றன. நகராட்சியாக இருந்தாலும், பஞ்சாயத்து ஒன்றியமாக இருந்தாலும், அங்கே பணியாற்றும்போது, சட்டதிட்டங்களை அறிந்துகொள்வது, நிர்வாகப் பொறுப்பில் அதிகாரிகளோடு பங்கேற்று இரண்டு கண்களாகச் செயல்படுவது, பொது நோக்கோடு ஒத்துழைப்பது போன்ற அனுபவங்களைப் பெறுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இன்றைக்குப் பேசும்போது, "தமிழகத்திலே கல்வி ரொம்பவும் மோசமாகிவிட்டது" என்ற ஒரு தவறான கருத்தைச் சொன்னார்கள். அவர் இப்போது அவையில் இல்லை. நல்ல கல்விக்காக தமிழகம் யுனெஸ்கோவிடமிருந்து கிரப்ஸ்காயா பரிசைப் பெற்றிருக்கிறது. கல்வியைப் பொறுத்தவரையில், தமிழகம் சிறப்பாக இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இப்படிப் பேசுவார் என்ற காரணத்தாலே, அவர் வெளியே போகவில்லை.

திரு. பா. ரா. காமல்: தமிழகத்திலுள்ள ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில் கல்வி தமிழகத்திலே சிறப்பாக இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். அதற்கு யுனெஸ்கோவே சான்று கொடுத்திருக்கிறது. ஆனால் ஊராட்சி மன்ற, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று அந்த அமைப்புகள் உருவானால், எப்படிச் செயல்படும் என்று கற்பனை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

மதுரை மாநகராட்சிக்கு தேர்தல் நடந்து முழுமையாக மாநகராட்சி உறுப்பினர்கள் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறார்கள். அங்கே சில பிரச்சினைகள் வருவதைப் பத்திரிகையிலே பார்க்கிறோம். அங்குள்ள எல்லாக் கட்சிகளும் முழுமையாக மக்களுடைய நலனுக்காக சேவை செய்து தீர்மானம் நிறை

வேற்றும்போது, அதிகாரிகள் எப்படிப்பட்ட கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள், அதை எப்படி விமர்சனம் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, தயவுசெய்து இனிமேலும் காலம் கடத்தாமல் தேர்தலை நடத்துங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன். இப்போது அமைப்புகள் உருவானாலும்கூட, மேலும் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்துத்தான் ஒத்துழைப்பு சரியாக வரும். அதிகாரிகளும், பிரதிநிதிகளும் ஒத்துழைக்க, தேர்தல் முடிந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகும். வளர்ச்சித் திட்டங்கள் அப்போதுதான் சிரமம் இல்லாமல் நடைபெறும். இப்போது வறட்சி ஏராளமாக இருக்கிறது. மாநகராட்சியாக இருந்தாலும் சரி, ஊராட்சி ஒன்றியப் பகுதியாக இருந்தாலும் சரி, மக்கள் பிரதிநிதிகள் இருந்தால், இவற்றையெல்லாம் நல்ல முறையில் மேற்பார்வை செய்ய முடியும். இப்போது அப்படி மேற்பார்வையிட முடியாத சிக்கலான நிலை இருக்கிறது. இதையெல்லாம் போக்க வேண்டும் என்பதற்காக சில உறுப்பினர்கள் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒன்று "டிம்ஸ் அண்டு ஃபோன்சிஸ்" என்று— அதாவது அரசு விரும்பும்போது தேர்தலை நடத்தலாம் என்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இந்த அரசு கட்டாயமாகத் தேர்தலை நடத்தும் என்ற நம்பிக்கை எதிர்க் கட்சியில் உள்ள எங்களுக்கு இருக்கிறது. இந்த முறை நிச்சயமாகத் தேர்தலை நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பொதுவாக மாநகராட்சிகளில் உள்ள பணியாளர்களை மாற்ற வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். இது குறித்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாநகராட்சிகள் அட்டானமஸ் யூனிட்டாக இருக்கின்றன. அதற்கென்று உள்ள தனிச் சட்டங்களின் அடிப்படையில் இயங்குகின்றன. மாநிலம் முழுமைக்கும் ஒரே மாநகராட்சிச் சட்டம் இருக்க முடியாது. மதுரை மாநகராட்சிக்கு என்று ஒரு சட்டம், கோவை மாநகராட்சிக்கென்று ஒரு சட்டம், சென்னை மாநகராட்சிக்கென்று ஒரு சட்டம் என்று ஒவ்வொன்றிற்கும் தனித் தனியாகச் சட்டம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இவர்களையெல்லாம் எப்படி மாற்ற முடியும் என்று தெரியவில்லை, மாற்ற முடியாது. அப்படி மாற்றக்கூடிய யோசனை இருந்தாலும், தயவுசெய்து அதைக் கைவிட்டு விடுங்கள் என்று அந்தச் சமுதாயத்தின் சார்பில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைக் கொண்டுவரக் கூடாது. ஆசிரியர்களை மாற்ற வேண்டாம். நகராட்சிப் பகுதிகளில் மாற்றுகிறார்கள். இதற்காக ஏற்கெனவே 'டைரக்டர் ஆஃப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன்' என்ற இயக்ககம் இருக்



கிறது. அங்கு மாற்றுகிறார்கள். இப்போது பல ஆசிரியர்கள் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெறும்போது, பதவி உயர்வு வேண்டாம் என்று விட்டுவிட்டு, ஆசிரியராகவே இருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் உள்ள பணியாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும். மதுரையில் கல்வித் துறையில் ஏ.சி.ஓ., சி.ஈ.ஓ. என்று கல்வியதிகாரிகள் இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் உள்ள நகராட்சிகளில், மாநகராட்சிகளில் மிகத் திறமையாக நடைபெறும் அமைப்புகள் மதுரையில் உள்ளன. தனியார் பள்ளிகளோடு ஈடு இணையாக நின்று தேர்வு விழுக்காடு கொடுத்து, நல்ல பெயரை உருவாக்கியிருக்கிறார்கள். அங்குள்ள ஆசிரியர்களுக்கு உயர்வு கொடுக்க வேண்டும். அரசுத் துறையில் உயர்வு கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை உருவாக்கி, அங்குள்ள பல பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்களுக்குப் பதவி உயர்வு முழுமையாகக் கொடுக்க வேண்டுமென்று கூறி, இந்த முறையோடு கடைசியாக ஒத்திவைத்து இதற்கு மேல் ஒத்திவைப்பு இல்லாமல் தேர்தலை நடத்தி நல்ல பெயரை இந்த அரசு சம்பாதிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-20)

திரு. ப. மாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன்பு பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன், நகராட்சிகள், மாநகராட்சிகள் தேர்தல்கள் சம்பந்தமாக தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிப்பதற்கான முறையிலே இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. இப்படிப் பேசுவது முதல் தடவை அல்ல. இப்போது இந்த அவகாசத்தை நீடித்துத் தரவேண்டும் என்ற முறையிலேதான் இந்தத் திருத்தங்கள் வந்து கொண்டிருக்கின்றன. வேறு நிவர்த்தி இல்லாத நிலையிலே, இந்த நிலைக்கு உந்தப்பட்டுள்ளோம். நம்முடைய மாநிலத்திலே ஆளுநர் ஆட்சி தொடர்ந்திருக்குமானால், ஒரு கிளர்ச்சி நடந்திருக்கும். இவ்வளவு காலம் தேர்தலை ஒத்திப் போட்டிருக்க முடியாது. தேர்தல்கள் நடந்திருக்கும். ஆனால் உள்ளாட்சித் துறையிலே இப்படி நாம் நீடித்துக்கொண்டு செல்வது, நடைமுறையிலே ஜனநாயகத்தை வேரிலே வெந்நீர் ஊற்றி அழிப்பதாக இருக்கும். இப்போது அந்த நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. இப்படி, சிறு ஏற்படக்கூடிய ஆபத்து, மேலே ஆபத்தாக முடியும் என்ற நிலையிலேதான் நாம் சென்று கொண்டிருக்கிறோம். எனவே தேர்தல்களை ஒத்தி வைக்காமல், அரசு உறுதியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், இப்போது பேரவை நடந்து, அங்கே நடந்த விவாதத்தின் அடிப் படையிலே வந்திருக்கக்கூடிய பத்திரிகைச் செய்திகளை அவ்வளவு ஆதாரமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்றாலும்கூட, 13 ஆம் தேதி நகராட்சித் தேர்தல் சம்பந்தமாக ஒரு கூட்டம்கூட இருக்கிறது. திரும்பத் திரும்ப ரிசர் வேஷன் என்பது தேர்தல் சம்பந்தமாக பிரச்சினைகள் நீடிப்பதற்குக் காரணம் என்று சொன்னால், இன்றைய நிலையில் அதைத் திருப்திகரமாகத் தீர்ப்பதற்கு கொஞ்ச அவகாசம் தேவைப்படலாம். அவகாசம் தேவை என்பதிலே, என்னைப் பொறுத்தவரையிலே, மாறுபாடு இல்லை. ஏனென்றால் அது ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினை. ஆனால் ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினைக்காக உள்ளாட்சித் துறையிலே நிலவ வேண்டிய ஜனநாயகத்தை நாம் தொடர்ந்து மறுப்பது நியாயமாகாது. அதற்கு வழி காண வேண்டும். எனவே, தனி அதிகாரிகளுடைய காலத்தை நீடிப்பது என்று வரும்போது இப்போது சாதாரண காரியங்கள்கூட ஒழுங்காக நடைபெறவில்லை. அது மட்டுமல்ல, பொது மக்களிடையே ஒரு விரக்தி ஏற்படும். அந்த உணர்வு ஏற்பட்டால், அடுத்த கட்டத்தில் அவர்கள் விரும்பத்தகாத அராஜகத்தில் சென்றுவிடு வார்கள். அப்படி முடியும். பல பஞ்சாயத்துக்களைப்பற்றி, நகராட்சிகளைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. ஒன்றிரண்டு பற்றி சொல்கிறேன். கொசுத் தொல்லை என்று மக்கள் சொல்கின்றார்கள். இந்தக் கொசு முட்டை களை அழிக்க பயன்படுத்தக்கூடிய மருந்து வாங்குகிறார்கள். அந்த மருந்து சம்பந்தமாகக்கூட எதிலே கமிஷன் வருகிறதோ அதை வாங்குகிறார்கள். அது டைய விளைவாக அந்தக் கொசுக்கள் அழியவில்லை என்று தெரிகிறது. அதை யாரும் பார்த்து தடுப்பதில்லை. அரசு இருக்கிறது அதிகாரம் இருக் கிறது. ஆனால் தடுக்க முடியவில்லை. அரசு உத்தரவு போட்டாலும்கூட, அது கீழே நிறைவேறவில்லை. அரசு அதை ஒவ்வொரு தடவையும் போய்ப் பார்க்க முடியாது. உத்தரவு இருக்கிறது. குளங்களை குடிசை போட பயன் படுத்தக்கூடாது என்று சொல்கின்றார்கள். ஆனால் அந்த இடத்தைப் பயன் படுத்தி பலர் குடிசை போட்டுக்கொள்கிறார்கள். இந்த மாதிரி போடக்கூடிய உத்தரவுகள் இருக்கின்றன. அந்த உத்தரவுகள் போடுகின்ற இடத்தில்தான் இருக்கின்றன. அவைகள் நிறைவேறாமல் இருக்கின்ற நிலைமைகள்தான் வந் திருக்கின்றன. வடிகால்கள் அமைக்கிறார்கள். கழிவு நீர் அதிலே போவ தற்குப் பதிலாக சாக்கடை நீர் இதற்குள்ளேயே வந்துவிடுகிறது. இதற்குள்ளே ஏறி வருகிறது. இது தலைகீழாக இருக்கிறது. இதைப்பற்றி அதிகாரி களிடம் முறையிட்டால், நான் நேரிலேயே அனுபவித்திருக்கிறேன், செய்கிறோம் என்று சொல்கிறார்கள். சரி செய்கிறோம் என்று சொல்கின்றார்கள். சொல்லி 2 ஆண்டுகள் ஆகிறது. செய்யவில்லை. ஒரு இடத்திலே சாக்கடை கட்ட



வேண்டுமென்றால், 10 வருடம் கூட ஆகிறது. அப்படி கட்டினால் அந்த வாடிகாலில் சாக்கடை நீர் ஏறி வருகிறது. இப்படி வெளியே இருப்பது உள்ளே வருகிறது. உதாரணங்கள் நிறைய சொல்லலாம். எனக்கு தனி அதிகாரிகள் குறித்து கோபம் இல்லை. அதிகாரிகளிடம் அதிகாரத்தைக் கொடுத்து நிறை வேற்றுங்கள் என்று சொல்லிவிட்டு எந்தவிதமான கண்காணிப்பும் இல்லாமல் விட்டுவிட்டால், எல்லையற்ற ஊழல்கள் நடக்கின்றன.

அரசினுடைய உத்தரவுகள் இருக்கின்றன. பழைய உத்தரவுகள் போடப் பட்டிருக்கின்றன. பல நகராட்சிகளிலே கழிவு நீர் சுத்தம் செய்ய அல்லது பல பொதுச் சுகாதார வேலைகளை நிறைவேற்ற போடப்பட்ட உத்தரவுகளிலே ஆட்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அன்றைக்குப் போட்டபடி இப்போதும் இருக்கிறது. ஆட்கள் குறைவாக இருக்கிறார்கள். இப்போது இருப்பதற்குத் தகுந்த அளவுக்கு ஆட்கள் போடப்படவில்லை. அரசு உத்தரவு இருக்கிறது. பழைய உத்தரவுதான் இருக்கிறது. அந்தப் பழைய உத்தரவுப் பிரகாரம் ஆட்கள் குறைவாக இருக்கிறார்கள். அந்த உத்தரவுப் பிரகாரம் ஆட்களை அதிகப்படுத்த முடியாது. அப்படி ஆட்கள் அதிகப்படுத்தப்படவில்லை என்றால் சுத்தம் இருக்காது. இது மட்டுமல்ல. போடப்பட்ட உத்தரவு ஒழுங்காக அமுல் நடக்கிறதா என்றால் இல்லை.

Director of Public Health : Public Health—Local Authorities—Fixation of Strength and Scales of Pay—General Principles to be observed—Instructions—Issued.

என்று சொல்லப்பட்ட உத்தரவு இருக்கிறது. இதன் பிரகாரம்கூட ஆட்கள் போடவில்லை. ஃபிட்டர்ஸ், ஸ்கேவஞ்சர்ஸ், டிரைவர்ஸ் கிளீனர்ஸ் இவர்கள் எல்லாம் பல முனிசிபாலிட்டிகளிலே அதிகமாக இல்லை. இதற்கான ரிக்கார்டுகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். இதையெல்லாம் அமைச்சர்கள் நேரடியாகப் பார்க்க முடியாது. சேலம் முனிசிபாலிட்டியிலே அமைச்சர் அவர்கள் போய் பார்த்திருக்கிறார்கள். அங்கேகூட குறைகள் இருந்தன. அப்படி இருக்கின்ற பழியையெல்லாம் அரசுதான் சுமக்கவேண்டி வரும். அந்த நிலைமைகள்தான் வந்துகொண்டிருக்கின்றன. எனவே காலம் தாழ்த்தாமல் அரசு தேர்தலை நடத்த வேண்டும். அதிலே சங்கடம் வரலாம். இந்தச் சட்டத் திருத்தப் பிரகாரம் பின்னர் தேர்தல் வரலாம். இந்தத் தேர்தலில் முறைகேடு கெட்ட பெயர் இருந்தாலும். ரிசர்வேஷன் பற்றி எல்லோரும் ஒரு ஏகோபித்த முடிவைச் சொல்ல வேண்டும். அந்த ரிசர்வேஷனை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஒரு சின்ன அவநாறு-வந்தர்

(திரு. ப. மாணிக்கம்) [1983 மார்ச் 8

ஆம் பரவாயில்லை, தேர்தலை நடத்த என்ன வழி என்று கண்டு பிடிக்க வேண்டும். சீக்கிரம் தேர்தல் நடந்தால், ஓரளவுக்காவது ஜனநாயகத்தைக் காப்பாற்றலாம். ஏதாவது நடந்தால், கேட்பதற்கு ஆள் இல்லை. கூட்டம் போட்டால் கூட யாரும் அஞ்சுவதில்லை. Everybody is immunized. கொசுகூட எந்த மருந்திற்கும் அஞ்சுவதில்லை. மனிதன் ஏன் அஞ்ச வேண்டும்? அந்த அளவுக்கு வந்துவிட்டது. மனிதர்களும்கூட அப்படி Immunized ஆகிவிட்டார்கள். எந்த விமரிசனம் வந்தாலும் கவலையில்லை, யார் என்ன செய்ய முடியும் என்று இருக்கிறார்கள். அந்த நிலைமைதான் வந்திருக்கிறது. இந்த நிலைமைகள் வந்தால், மக்களுடைய அராஜகம் வந்துவிடும். அவர்கள் அந்த நிலைமைக்கு வருவதற்கு முன்னால் நாம் தேர்தலை நடத்த வேண்டும். எக்ஸ்டென்ஷன் கேட்டு இந்த அவையிலே அனுமதி வாங்கிவிடலாம். அது நல்லது அல்ல. எனவே மேலும் மேலும் நீடிக்க வேண்டாமென்று கேட்டு இந்தத் தேர்தலை சீக்கிரம் நடத்த வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டும். குறைந்தபட்சம் நகராட்சித் தேர்தலுக்கு முதலிடம் கொடுத்து நடத்திவிட வேண்டும். பஞ்சாயத்துத் தேர்தலைக் கொஞ்சம் காலம் கழித்து வைத்துக் கொள்ளலாம். எல்லாக் கட்சிகளும் இதிலே பொறுப்பேற்றுச் செய்ய வேண்டும். அனுபவத்திலே 7, 8 வருடங்கள் தள்ளிவிட்டோம். இன்னும் ஆறு மாதம் தள்ளிப்போடுங்கள் என்ற நிலை இருக்கிறது. எனவே முதலில் நகராட்சித் தேர்தலைகளையாவது நடத்திவிட்டு, பிறகு பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்த வேண்டும். ரிசர்வேஷன் காரணமாக தாமதம் ஏற்படலாம். இதை பின்னாலே எடுத்துக்கொள்ளலாம். இந்தத் தேர்தலை நடத்துவதற்கு வழிவகை காணவேண்டும். அதற்கு நம்மால் வழி கண்டுபிடிக்க முடியும். அதற்கு வழி கண்டு பிடிப்பதற்கான மன உறுதி, பொலிடிக்கல் வில் நமக்கு இருக்கிறது என்ற அளவில் இந்த அரசு மேலும் எக்ஸ்டென்ஷன் கேட்காமல், இதுவே கடைசி எக்ஸ்டன்ஷன் என்று கொண்டு சீக்கிரத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே மீண்டும் மீண்டும் கால நீட்டிப்பு கேட்டு வழக்கமாகக் கொண்டுவரக்கூடிய ஒரு கால நீட்டிப்புக் கோரிக்கையாக இது இருப்பதைக் குறித்து நான் வருந்த வேண்டியதாக இருக்கிறது. இந்த உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முன்னால் இருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். பிறகு இந்த அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டில் நடக்க



1983 மார்ச் 8] (திரு. செ. முத்துசாமி)

வேண்டிய பஞ்சாயத்து யூனியன் தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல்களை ஒவ்வொரு தடவையும் தள்ளி வைக்கப்பட்டு 1983 ஆம் ஆண்டிலேயும் இன்னும் கால நீட்டிப்பு கேட்பதாக இருக்கிறது. இப்படி கேட்க ஜனநாயகத்திலே, நாட்டிலே அதிகாரம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். இதை நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், தவிர்க்க முடியாத காரணத்தினால், தள்ளி வைக்கப்படவேண்டியிருக்கிறது என்றால்தான், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். அதுபோலவே பார்லிமெண்டுக்கும் சட்டசபைக்கும் தேர்தலைத் தள்ளி வைக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அதிகாரத்தை அடிக்கடி பயன்படுத்த அல்ல. இதற்கு ஒரு மதிப்பு மரியாதை ஜனநாயகத்தில் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு கால கட்டத்திலே ஏதாவது ஒரு நெருக்கடியைச் சொல்வது என்பது சரியல்ல. புதிதாகக் கண்டு பிடிக்கவேண்டிய விஷயம் அல்ல. இப்போது ஜனநாயகத் தில் எப்படி ஆங்காங்கே பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னால், மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருக்கின்றன. அங்கே நியாயமான பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அது தெருக்கள் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அது ஊரினுடைய பிரச்சினையாக இருந்தாலும் சரி, இப்போது கேள்வி கேட்பாரற்று இருக்கிறது. யார் எதைக் கேட்பது என்றே புரியாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-30)

கால நீட்டிப்பு என்பது மிகவும் சரியில்லாத கொள்கை. இந்தக் கால நீட்டிப்போடு நின்று கொள்வோம் என்ற வாக்குறுதியைத் தந்து, அதற்குள் தேர்தல்களை நடத்த முன்வந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சியைக் கொண்டு வர வேண்டும். பஞ்சாயத்துக்களைவிட நகராட்சிகளில் உள்ள நடைமுறைகள், தவறுகள் தெரியாததல்ல. அமைச்சரவர்கள் அறியாததல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால், அதிகாரிகளைத் தட்டிக் கேட்டு, திட்டங்களை நடைமுறைப்படுத்தி, அதன் நன்மைகள் மக்களுக்குப் போய்ச் சேர வழிமுறை இருக்கும். இன்றைக்கு யாரும் கேள்வி கேட்க முடியாத அளவிற்கு நிர்வாக நடைமுறை இருக்கிறது. அதற்கு மீண்டும் ஊக்கமளிப்பதுபோல கால நீட்டிப்பு கேட்டால், ஜனநாயகத்தையே மறந்து விடும் சூழ்நிலை ஏற்படுமென்பதைச் சொல்ல விரும்புகிறேன். மேலும் கொஞ்ச காலம் சென்றால், எப்படி இதைச் செய்வது என்பதே புதிய அனுபவமாக இருக்கும். ஆதலால், இன்ன காலத்திற்குள் செய்து முடிப்போமென்று

(திரு. செ. முத்துசாமி) [1983 மார்ச் 8

சொல்ல வேண்டும். அப்படிச் செய்து முடியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை நல்லபடியாக எடுத்து முடிக்க வேண்டும். மக்களுக்குப் பிரதிநிதித்துவம் போகிறது. இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சியிலே உட்காருகிறோம். நாமே ஜனநாயக உரிமைகளை வழங்க மறுப்பது தர்மமல்ல. அந்த தர்மத்தை நிலைநாட்ட இந்த அமைச்சரவை முன்வர வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் வாய் தவறிச் சொல்லிய சில வார்த்தைகள் என்னைப் பிரச்சினைக்குரியவனாக ஆக்கியிருப்பதை தாங்கள் அறிவீர்கள். ஆகவே என்னைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல அனுமதிக்குமாறு வேண்டுகிறேன். அவர் என்னை 'முன்னாள் தி.மு.க.' என்று வாய் தவறிக் கூறியிருக்கிறார். ரிகார்டிலே அது பதிவாகியிருப்பதால் அதைப்பற்றி நான் பேச வேண்டியவனாக இருக்கிறேன். அவரே, 'முன்னாள் நீலநாராயணன்' என்று சொல்லியிருக்கிறார்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, 'முன்னாள் நண்பர்' என்று அவரே திருத்திக் கொண்டிருக்கிறார்.

**திரு. நீலநாராயணன் :** அதுவும் தவறு. இன்றைக்கும் அவர் நண்பர் தான், தோழர் தான்.

**திரு. செ. முத்துசாமி :** பதவிகள் பற்றிச் சொல்லும்போது தான் 'முன்னாள்', 'இன்னாள்' என்று சொல்லுவார்கள்.

**திரு. நீலநாராயணன் :** தயவுசெய்து அவருடைய பேச்சுக்கு சப்பைக்கட்டு கட்ட வேண்டாம். நான் 'முன்னாள் தி. மு. க' அல்ல; அன்றும் தி.மு.க., இன்றும் தி.மு.க. என்றும் தி.மு.க. என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே திட்டவட்டமாக, தெளிவாக எடுத்துக்கூற விழைகிறேன். அதுமட்டுமல்ல, 'முன்னாள் நண்பர்' என்று சொன்னார். அரசியல் கட்சிகள் என்று சொல்லும்போது, பல்வேறு கட்சிகள் இருக்கலாம். ஆனால் அவர்கள் நண்பர்களாக இருக்கக்கூடாது என்பது நியதியல்ல. இங்கே இருக்கின்ற அனைவரும் நண்பர்களாக இயங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே அப்படி அவர் சொன்னதும் தவறு. 'முன்னாள் நண்பர்' என்று சொன்னதும் தவறு. இன்றைக்கும் அவர் நண்பர்தான் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1983 மார்ச் 8] [திரு. நீலநாராயணன்]

அடுத்து, ஜனநாயகப் படுகொலைக்குத் துணை போகின்ற இந்த மசோதா
மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்
களை இங்கே கூற விழைகிறேன். சென்ற தடவை இந்த மசோதா இந்த
மன்றத்தில் வந்தபோது, நான் ஒன்றைச் சுட்டிக் காட்டினேன். அதிகார்
டில் இருந்து கொண்டிருக்கிறது. "6 மாதம், 1 வருடம் என்று கால நீட்டிப்பு
நீங்கள் கேட்கிறீர்கள், இது தொடர்கதையாக இருந்து கொண்டிருக்கிறது,
இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலே தயவுசெய்து 6 மாதம், 1 வருடம்
என்று கேட்டு திருத்தம் கொண்டு வராமல், தேர்தல்கள் நடந்து முடிகிறவரை
யிலும் அவர்களுடைய பதவிக் காலம் நீட்டிக்கப்படுகிறது என்ற அளவிலே
சட்டத் திருத்தத்தைக் கொண்டு வாருங்கள்" என்று சென்ற முறையே குறிப்
பிட்டிருக்கிறேன். "இது கடைசியாக இருக்கும், நிச்சயமாக அடுத்த முறை
இது வராது" என்ற தன்மையிலே அன்றைய தினம் பதில் அளிக்கப்பட்டது.
ஆனால் அதே நிலைமைதான் இருந்து கொண்டு இருக்கிறது. அதைத்
தொடர்ந்து இன்றைய தினம் இந்த மசோதாவின் மீது திருத்தம் கொடுத்
திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் அதே அடிப்
படையில் திருத்தம் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கும்
போது, இந்த மசோதா எந்த அளவிற்குத் தேவைப்படுகிறது என்பதை மாண்பு
மிகு அமைச்சரவர்கள் சுட்டிக்காட்ட வேண்டும். இதில் தனி அதிகாரிகளின்
பதவிக் கால நீட்டிப்பு என்பது முக்கியமல்ல. தேர்தல்களைத் தள்ளிப்
போடப் போகிறோமே, அதனால் விளைகின்ற தடங்கல்களை எண்ணிப் பார்க்க
வேண்டும். பல பணிகள் நடக்காமல் இருக்கின்றன. அவைகளை விரைவு
படுத்த வேண்டுமென்றால், தேர்தல்கள் மிகவும் இன்றியமையாத ஒன்றாக
இருந்து கொண்டிருக்கிறது என்பதை எனக்கு முன்னாலே பேசிய எல்லா
மாண்புமிகு உறுப்பினர்களும் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். தேர்தல்கள்
நடைபெறாத காரணத்தால், பஞ்சாயத்துகளில், நகராட்சிகளில், உள்ளாட்சி
மன்றங்களில் என்னென்ன பணிகள் நடக்க வேண்டுமோ அந்தப் பணிகள்
நடக்காமல் தேங்கிக் கிடக்கின்றன என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.
அதனாலே மேற்கொண்டு பணியாற்றும் நிலைமையை எந்த அளவிற்கு அவர்கள்
அசுத்தப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, மிகமிக விரைந்து
தேர்தல்களை நடத்த வேண்டும். 13-ஆம் தேதி சர்வ கட்சித் தலைவர்கள்
கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். எதற்காக
அந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது என்பதையும், இந்தத் தேர்தலுக்கான
தேதிகள் அந்தக் கூட்டத்திலே நிர்ணயிக்கப்படுமா என்பதையும் சொல்ல
வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலே நீதிமன்றத்திலே வழக்கு இருந்து கொண்
டிருக்கிறது. அதையும் மீறி சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

எடுக்கப்பட்டால், அந்த முடிவைச் செயல்படுத்த இயலுமா என்ற சந்தேகத்தை இந்த மன்றத்திலே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், சட்டமன்றத்திலே நம்முடைய அமைச்சரவர்கள் பேசியிருக்கிறார்கள், கூட்டத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், பல பல பிரச்சினைகளைப் பேசி பத்திரிகையிலே அதனுடைய நிலவரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. தேர்தல்களை நடத்த ஒரு மார்க்கமாக அந்தக் கூட்டம் இருக்குமென்றால், அதை வரவேற்கலாம். மேலும் மேலும் ஒத்திப் போட எங்களையும் துணைக்கு அழைக்கக்கூடாது என்ற அச்சத்தின் காரணமாகச் சொல்கிறேன். இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்க வேண்டும், அந்த முடிவு எல்லோராலும் செயல்படுத்தும் முடிவாக அமைந்துவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தேர்தல்கள் வரக்கூடாது என்று கருதுகிறவர்கள் அல்ல நாங்கள். எப்போது வரும், கலந்து கொள்ளலாமென்று கருதுகிறவர்கள்தான் நாங்கள். ஜூனியனுக்கு எலக்ஷன் அறிவிக்கப்பட்டபோது, திராவிட முன் முன்னேற்றக் கழகம் எந்த அளவிற்கு அந்தப் பணியிலே ஈடுபட்டது, எந்த அளவிற்கு வேட்பாளர்களை அறிவித்தது, அதற்குரிய நாமினேஷன் தொகைகளை கட்டியது என்பதை அனைவரும் அறிவார்கள். இப்போது தேர்தல்கள் வந்தால், அந்தக் கட்டுத் தொகைகள் நிலை என்ன? அதை ஏற்றுக் கொள்வார்களா அல்லது புதிதாகக் கட்டுத் தொகை கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படுமா என்பதற்கெல்லாம் பேரவையில் விளக்கம் இருக்குமென்று எதிர்பார்த்தேன். அங்கே இல்லை. இந்த மன்றத்தில் பதில் அளிக்கின்றபோது கட்டுத் தொகை பற்றி விளக்கம் வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இங்கே 6 சட்ட முன்வடிவுகள் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எல்லோருமே தேர்தலை சீக்கிரமாக நடத்த வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஜனநாயகத்தினுடைய தொட்டில்களாக இருக்கின்ற பஞ்சாயத்துத் தேர்தலை முடக்குகின்ற சூழ்நிலை ஏற்படக் கூடாது என்று இங்கே எல்லோரும் விளக்கமாகக் கோடிட்டுக் காட்டிப் பேசியிருக்கிறார்கள். இந்த அரசை பொறுத்தவரையிலும்கூட, இந்தத் தேர்தலை எவ்வளவு சீக்கிரமாக நடத்த வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக நடத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் தான் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், இந்தத் தேர்தல் நடைபெறாத காரணத்தால் அல்லது நடைபெற இயலாத காரணத்தால், ஏறத்தாழ 21 சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் இந்த



அவைக்கு வர முடியாத நிலை இருக்கிறது என்பதும் அரசின் கவனத்தில் இருக்கிறது. இதுபற்றி ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் தெரிவித் திருக்கிறோம். இந்த 21 இடங்களையும் 1983 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் ளாவது நிரப்ப வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அரசு இருக்கிறது. ஆகவே அதற்குள்ளாகவாவது இந்த வழக்கை முடித்துத் தர வேண்டுமென்று நாங்கள் உச்ச நீதிமன்றத்தில் கொடுத்துள்ள மனுவில் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம். இது சம்பந்தமாக 26—11—1982 அன்று கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர் கள் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் கலந்து கொண்டார்கள். அப்போது கலந்துகொண்டு பேசிய நேரத்தில் கேட் டிருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்லி உச்சநீதிமன்றத்தில் சிவில் அப்பீல் நம்பர் 2845/82-ல் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, அது இன்றைக்கு நிலுவையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வழக்கு வாபஸ் பெறப்படாவிட்டால். எப்போது உச்ச நீதிமன்றத்தி னுடைய தீர்ப்பு கூறப்படுகிறதோ அப்போது தான் நாம் பஞ்சாயத்துக்களுக் கான தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவோம். அதனால் தான் அதையும் விளக்கி மனுவில் சொல்லியிருக்கிறோம். அதற்காகத் தான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் செய்த முடிவுக்கு ஏற்ப 15—12—1982 அன்று ஒரு மனுவை 'எக்ஸ்பெடிஷன்' என்கிற அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறோம். அதிலே விவரங்களை எல்லாம் கூறியிருக்கிறோம். 21 உறுப்பினர் பதவிகள் இங்கே நிரப்பப்படாமல் இருக்கின் றனவே என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் இங்கே கேட்டார். இவர்களைப் பற்றி எடுத்துச் சொல்ல மறந்து விட்டீர்களா என்றும் இங்கே கேட்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். "நீங்கள் எப்படி கவனமாக இருக்கிறீர்களோ அதை விட பன் மடங்கு கவனத் தோடு இந்த அரசு இருக்கிறது". இவைகளைப் பற்றியெல்லாம் கூட எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற அடிப்படையில்தான் மனுவிலே கூட இதனைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம். இப்பதவிகளை நிரப்புவதற்காகத் தான் வழக்கை 1983 மே மாதத்திற்குள் முடித்துவிட வேண்டுமென்று கேட்டிருக் கிறோம். இன்றைக்கு இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக் கிறது. ஆகவே பஞ்சாயத்துத் தேர்தலை உடனடியாக நாம் நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ஹாஜா ஷெரிப் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இது சம்பந்தமாகத் திட்டவட்டமாக பதிலளித்தார்கள். தேர்தலை எப்போதும் சந்திக்க, தேர்தலை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். அனைத்துக்

[திரு. ப. குழந்தைவேலு] [1983 மார்ச் 8

கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி நகராட்சி மற்றும் மாநகராட்சித் தேர்தலை எப்போது நடத்தலாமென்று கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்து, இந்த நேரத்தில் நடத்தலாமென்று சொன்னால், அப்போது தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம். இது அன்றைக்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சொல்லப்பட்ட கருத்து. அதற்கேற்ப தான் அன்றைக்குக் கூட பேரவையிலே இது குறித்து நான் பேசும்போது, 13-ஆம் தேதி அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, அந்தக் கூட்டத்திலே அவை வரும் சேர்ந்து நகராட்சி, மாநகராட்சி ஆகியவைகளின் தேர்தலை எப்படி நடத்தலாம், எப்போது தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்கிற முடிவுக்கு வரலாம் என்று அறிவித்தேன். அந்த நிலையைத் தான் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இன்றைக்கு நாம் இருக்கக்கூடிய நிலையில் பஞ்சாயத்துக்கான தேர்தலை உடனடியாக நடத்த முடியாது என்றாலும், நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்றவைகளுக்கான தேர்தலை உடனே நடத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகவே தான் எப்படி இந்தத் தேர்தலை நடத்தலாம், எப்போது நடத்தலாம் என்பது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களும் 13-ஆம் தேதி தங்களுடைய ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால், நகராட்சிகளைப் பொறுத்தவரை, மாநகராட்சிகளைப் பொறுத்தவரை, 1—1—1983 அன்று 18 வயதானவர்களையெல்லாம் வாக்காளர் பட்டியலில் சேர்த்து மீண்டும் வாக்காளர் பட்டியலைத் தயாரித்தாக வேண்டும். அதுபோல் நகராட்சிகளில் மக்கள் தொகை கணக்குக்கு ஏற்ப வார்டுகளைப் பிரித்தாக வேண்டும். இந்த நிலையில் நாம் தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது. அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதைப் பற்றியெல்லாம் விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தால், எவ்வளவு சீக்கிரம் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நாங்கள் தேர்தலை நடத்த முடியும். அந்த நேரத்தில் சில மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] போன்றவர்கள் எல்லாம் ஒன்றை இங்கே சொன்னார்கள். [illegible] தானே நேரடியாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இருப்பதாகச் சொன்னார்கள். மாநகராட்சித் தேர்தலாக இருந்தாலும் சரி, நகராட்சித் தேர்தலாக இருந்தாலும் சரி, கிராமப் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, நகர பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி அல்லது பஞ்சாயத்து ஒன்றியங்களாக இருந்தாலும் சரி—தேர்தலை நடத்தாமல் இவர்களே தலைவர்களாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். உண்மையிலேயே அப்படிப்பட்ட எண்ணம்



1983 மார்ச் 8] [திரு. ப. குழந்தைவேலு]

எங்களுக்கு கிஞ்சிற்றும் இல்லை. ஆனால் உள்ளபடியே எல்லா அமைப்புகளுக்கும் தேர்தல் நடைபெற்று தலைவர்கள் வரவேண்டும், அதன் மூலம் இங்கே சொல்லக்கூடிய குறைகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த அரசு இருக்கிறது. அதற்கேற்ப தான் இந்த அரசு நடவடிக்கையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுகிற நிலையில் சிலர் இருந்தால் அது நல்ல நிலை அல்ல என்பதை நான் மன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு பக்கம் பார்த்தால் அங்கே மேல் முறையீடு செய்திருக்கிறார்கள் உச்ச நீதிமன்றத்திலே அதற்கு பரிந்துரை செய்வது. இங்கே வந்து ஏன் தேர்தலை சீக்கிரம் நடத்தவில்லை என்று சொல்லி, 'விம்ஸ் அண்ட் பேன்சிஸ்' என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே, அதுபோல் அதற்கு நேர் எதிராகத் திரித்து கேட்க முன்வருவது. இப்படிப்பட்ட நிலையை எடுத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், தேர்தலுக்கு பயந்தவர்கள் அல்ல நாங்கள். எப்போது தேர்தல் வந்தாலும் வெற்றி எங்கள் பக்கம் தான் என்கிற அடிப்படையைத் தான் சமீபத்தில் நடைபெற்ற பல்வேறு தேர்தல்களின் முடிவுகள் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. எந்த நேரத்திலும் மக்களைச் சந்திக்கின்ற எண்ணத்தில் தான் இந்த அரசும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சரி, இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு பல்வேறு நகராட்சிகளில், மாநகராட்சிகளில் இருக்கக் கூடிய பிரச்சினைகளைப்பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இப்போது நாம் இருக்கக்கூடிய நிலையில் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்காமல், அவர்களிடத்தில் பொறுப்பை ஒப்படைக்காமல் நிர்வாகத்தை நடத்துவது என்பது இயலாத காரியம். அப்படிப்பட்ட இக்கட்டான நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், தனி அதிகாரிகளை வைத்துக்கொண்டுதான் நாம் சரிசெய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே தான் அவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டியது அவசியமாகிறது. நான் மேலே சொன்ன விளக்கங்களை ஏற்று இந்த 8 சட்ட முன்வடிவுகளையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 'ஆம்' என்போரே அதிகம்.

Thirc A. R. DAMODARAN: Sir, I ask for a division. I think the 'Noes'' are in the majority.

Thiru J. M. MIAKHAN: We want a division, Sir.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் இருக்கையில் வந்து அமர்ந்தார்).

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'ஆம்' என்போரே அதிகம் . . .

(முற்பகல் 11-50)

Thiru K. RAMAMOORTHY: We press for a division, Sir.

அழைப்பு மணி ஒலிக்கப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'ஆம்' என்போரே அதிகம் . . .

Thiru K. RAMAMOORTHY: Wo press for a division, Sir.

(When voting in Block I was in progress, the Hon. Thiru S. Raghavanandam, entered the House.)



Thiru A. R. DAMODARAN: The Labour Minister has entered after the ringing of the bell was over, Sir.

(The Hon. Thiru S. Ragravanandam withdrew from the House.)

வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

**ஏற்போர்.**

1. மாண்புமிகு திரு கா. இராசா முகமது
2. மாண்புமிகு புலவர் புலமைப்பித்தன்
3. திரு. எஸ். முத்து
4. திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி
5. செல்வி ஆ. லீலாவதி
6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்
7. டாக்டர் இரா. சனார்த்தனம்
8. திரு. வலம்புரி ஜான்
9. திரு. எஸ். ஆர். இராதா
10. திரு. சி. இராமலிங்கம்
11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே
12. திரு. காரிசெட்டி கன்னையப்பன்.

**மறுப்போர்.**

1. திரு. ஜெ. எம். மியாகான்
2. திரு. செ. முத்துசாமி
3. திரு. க. இராமமூர்த்தி
4. திரு. ஏ. ஆர். தாமோதரன்
5. திரு. ப. மாணிக்கம்
6. திரு. அ. நல்லசிவம்
7. திரு. க. அருணாசலம்
8. திரு. பி. முனுசாமி
9. திரு. எ. ஜே. தாஸ்
10. திரு. நீலநாராயணன்.

வாக்களிக்காதவர்.

திருமதி தாரா செரியன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வாக்கெடுப்பு முடிவு—தீர்மானத்தை ஆதரிப்போர்—12. எதிர்ப்போர்—10. ஆகவே, தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

Thiru K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:—

"In clause 2, for the words 'four years', substitute the words "six months from the date of disposal of the civil suits pending in the Supreme Court" or "for a period convenient to the Government."

Thiru P. MUNUSWAMY: Sir, I second it.

* **திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தையொட்டி சில கருத்துக்களை இந்த அவையின் பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அனைத்து சட்ட முன்வடிவுகளின் மீதும் கொடுத்துள்ள திருத்தங்களைக் குறித்தும் கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் அவையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கும் ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை [illegible] சட்ட முன்வடிவுகள், தற்போது உள்ளாட்சி மன்றங்களின் நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்வதற்கு ஒரு அருமையான வாய்ப்பை இந்த அவைக்கு உருவாக்கியிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனவே, சட்ட முன்வடிவுகளின் மீதான பரிசீலனை என்பதைவிட இந்தச் சந்தர்ப்பம் தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி மன்றத் துறையின் நிலைமைகளைப் பற்றி விரிவாக விவாதிப்பதற்கான வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்ட முன்வடிவுகளை [illegible] இங்கே தெரிவித்தார்கள். இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இருக்கிற சிக்கல் என்னவென்றால், அவர் இருக்கிற [illegible] என்றால், இன்னொருவர் பெற்ற பிள்ளைக்கு [illegible] வேண்டிய சிக்கல், [illegible] கிறது.



மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் கொண்டு வந்த இந்தச் சட்ட முன்வடிவுகள் இன்றைய தினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கும் திரு. குழந்தைவேலு அவர்களால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டு அவைகளுக்கான பதிலைச் சொல்ல வேண்டிய கட்டாயமும் சிக்கலும் அவருக்கு உண்டாகியிருக்கிறது. இதில் நான் ஒன்றைத் தெளிவு படுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தேர்தல்களை நடத்துவது குறித்து நீதிமன்றங்களுக்குப் போய்விட்ட பிறகு, நீதிமன்றங்களின் தீர்ப்பு கிடைக்காமல், அவைகளின் முடிவு கிடைக்காமல், இடையில் நாம் தேர்தலை நடத்த முடியாது என்பதை, சட்டம் தெரிந்த அனைவரும் மறுக்க முடியாது. விவரம் தெரிந்த அத்தனை பேரும் இதை ஏற்றுக் கொள்வார்கள். இதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அந்த அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. என்றாலும் உண்மையிலேயே இருக்கிற நிலைமைகள் வேறாக இருக்கின்றன என்பதை நாம் உணர வேண்டும்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், உள்ளாட்சி மன்றங்களில் பெண்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் (ஹரிஜனங்களுக்கும்) இட ஒதுக்கீடு செய்வதைப்பற்றி தமிழகத்தில் இருக்கிற ஏகோபித்த அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே யாருக்கும் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. அது மட்டுமல்ல. தனிப்பட்டவர்கள்கூட வரவேற்று அதை ஒப்புக் கொண்டு விட்டார்கள். இந்த நிலைமைதான் தேர்தலை அணுகியபோது ஏற்பட்டது. ஆனால் எதிலே சிக்கல் வந்தது என்றால், அதைப்பற்றி சட்ட முன்வடிவு இந்த அவையில் வந்தபோதே நான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னேன்—எந்தெந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் அல்லது ஊராட்சி மன்றங்களை இப்படிப்பட்ட ஒதுக்கீட்டுக்கு உள்ளாக்குவது என்பதில்தான் "அதற்கு என்ன கொள்கையைக் கடைப் பிடிக்கப் போகிறோம்? எந்த அடிப்படையில் ரிசர்வேஷனைச் செய்யப் போகிறோம்? இதை யார் செய்யப் போகிறார்கள்?" என்கிற இந்த விஷயங்களில்தான் சிக்கலே ஏற்பட்டது. சட்ட முன்வடிவு வந்தபோது இந்தக் குறைகள் இருந்தன. அந்தச் சட்டத்தில் இந்த இரண்டு குறைகளுக்குமான பதில் மட்டும் இல்லாமல் இருந்தது. அந்தக் குறைகள் தான் இன்றைக்கு தமிழகத்தில் பெருங் குழப்பத்தையே உருவாக்கியிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்போது சென்சஸ் (மக்கள் தொகை) அடிப்படையில்தான் ஒதுக்கீடுகள் செய்யப்படும் என்று இரண்டு அவையிலுமே சொன்னார்கள். ஆனால் சென்சஸ் அடிப்படையில் அந்தகைய ரிசர்வேஷன்கள் செய்யப்பட்டனவா என்றால்,

[திரு. க. இராமமூர்த்தி] [1938 மார்ச் 8

இல்லை; இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே மறுக்கமாட்டார் என்று கருதுகிறேன். பல இடங்களில் இத்தகைய ரிசர்வேஷன்கள் என்பவை எப்படி நடைபெற்றன என்பதை நான் இங்கே ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மற்றும் அவர்களுக்குக் கீழே இருப்பவர்கள் பல இடங்களில் இத்தகைய ரிசர்வேஷனுக்குள் வராதவைகளைக்கூட மாற்றி அமைத்து ரிசர்வேஷன் என்று அறிவித்தார்கள். இது பேரவையில் கூட விளக்கமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கே கொண்டு வந்தார். ஒரு பஞ்சாயத்தை அவர்கள் அரிஜனங்களுக்காக ஒதுக்கும்போது, அங்கே ஒரு ஹரிஜன் ஓட்டுகூட இல்லை. அல்லது இருந்தாலும் அவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. 2, 3 பேர் கூட இல்லாத ஒரு இடம் ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது. அதனால் ஹரிஜனங்களுக்கும் நன்மையில்லை, சட்டத்திற்கும் பயனில்லை. இப்படி பல்வேறு தவறுகள் செய்யப்பட்டன. அதுமட்டுமல்ல, ஒதுக்கீட்டைப் பற்றி முதலில் ஒரு லிஸ்ட் வெளியிடப்பட்டது, பிறகு மற்றொரு லிஸ்ட் வெளியிடப்பட்டது. மூன்றாவது முறையாக இன்னொரு லிஸ்ட்டும் வெளியிடப்பட்டது. இப்படி மாற்றங்கள் நடைபெறுகிறபோது, கடைசியாக ஒரு கொள்கை அறிவிக்கப்பட்டது. அதாவது கன்டிகுவஸ் (contiguous) ஆக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள்.

(நண்பகல் 12-00)

அதாவது இன்னொரு தாலுக்காவிலிருந்து இரண்டு தொகுதிகள் ரிசர்வேஷன், அடுத்த தாலுக்காவில் இருந்து இரண்டு தொகுதிகள் ரிசர்வேஷன் என்று தொடர்ந்து நான்கு தாலுக்காக்களில் ரிசர்வேஷன் என்ற அடிப்படையில் செய்ததனாலேதான் இப்படிச் செய்கிறோம் என்று சொன்னார்கள். எப்படிச் செய்த போதிலும் நியாயம் இல்லாத முறையில் நடைபெற்றது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது அரசின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. அதைக் களைய நடவடிக்கை இல்லாத வகையில் என்ன ஏற்படுகிறது என்றால், குறிப்பிட்ட பஞ்சாயத்தில் குறிப்பிட்ட ஒருவர் வெற்றி பெற முடியும் என்ற நிலை இருந்தால், அவர் வெற்றி பெறக்கூடாது என்று யாராவது சிலபேர் ஆளும் கட்சியில் செல்வாக்கு உள்ளவர்கள் விரும்பினால், அந்த நிமிடத்திலேயே அதைத் தனித் தொகுதியாக மாற்ற முடியும் என்ற நிலைமையை அரசாங்கம் தன்னுடைய நடவடிக்கையின் மூலமாக ஏற்படுத்தி விட்டது. அந்த அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் பற்றிய ஐயங்கள் ஏற்பட்டன.



1983 மார்ச் 8] [திரு. க. இராமமூர்த்தி]

இன்னுமொன்றை நான் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வழக்குக்குப் போனார்கள் என்பதைப் பற்றி பெல்லாம் சொன்னார்கள். நமக்கு ஒன்றிலே தெளிவு இருக்குமென்று கருது கிறேன். அநேகமாக எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வழக்குத் தொடர்ந்து சென்றார்கள் என்ற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் பரவலாக வந்திருக்கிறது. ஆகவே இந்த நடைமுறை யிலே சங்கடம், சிக்கல் இருக்கிறது என்பதை ஆளும் கட்சி உட்பட அனைத்து கட்சியைச் சேர்ந்தவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் நீதிமன்றம் சென்றது. ஆகவே இன்றைக்கு அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில், மக்களைப் பொறுத்தவரையில் ரிசர்வேஷன் பற்றிய இந்தப் பிரச் சினை வரவில்லை. ஆனால் செயல்படுத்தும் விதத்திலே, இதை எடுத்துக் கொண்ட முறையிலே இன்றைக்கு பிரச்சினை வந்தது. இதிலே இன்னுமொரு சிக்கல். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு வழக்கறிஞர். அவருக்கே நன்றாகத் தெரியும். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர் களுக்கும் தெரியும். நீதிமன்றத்திற்குச் செல்லுகிறபோது, எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பதற்காக, கூடுதலாக இரண்டு பாயிண்டுகளைப் போடு வது வழக்கம். ஆகவே இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக இதிலே ஒருவர் "நான் வரக்கூடாது என்பதற்காக என்னுடைய தொகுதியிலே ரிசர்வேஷன்" போட்டிருக்கிறார்கள் என்று கூறி நீதிமன்றத்திற்குப் போகலாம். அப்படிப் போகிறபோது, அதற்காக வேண்டிய இரண்டு பாயிண்ட்டுகளைச் சேர்த்திருக்கிறார்கள். இது சாதாரணமாக எங்கும் நடக்கும். வேயர் டில் பிழுட்டில் பத்து பாயிண்ட் போட்டு அதிலே ஏழு பாயிண்டில் ஜெயித்து ஒருவரைப் போல இதையும் செய்திருக்கிறார்கள். அரசியல் கட்சிகள் விரும்பினால், வழக்குப் போட முடியும் என்ற நிலை இருக்கிறது. இதுதான் பிரச்சினை என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ரிசர்வேஷனைப் பொறுத்தவரையில், யாருக்கும் எதிர்ப்பு இல்லை. பெண்களுக்கானாலும் சரி, அரிசனங்களுக்கா னாலும் சரி, ரிசர்வேஷனைப் பொறுத்தவரையில், ஒதுக்கீடுகளையின் அடிப் படையில் இப்படித்தான் செய்ய வேண்டும். இன்ன வேறு அடிப்படையிலே இப்படித்தான் செய்ய வேண்டும் என்று திட்டவட்டமாகக் கொள்கை முடிவை எடுப்போம். அதைச் சட்டத்திலே கொண்டு வந்து சேர்த்து விடுவோம். Let us incorporate it in the Act itself. அதைச் செய்துவிட்டு தேர்தலை நடத்தினால், சங்கடம் வேறு எதுவும் இருக்க முடியாது. இப்படிச் செல்வதற்குக் கூட நீதிமன்றத்திலுள்ள வழக்கு இருந்துதான் ஆக வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களேயானால், அதற்கும் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். Let us make the present Act

infructuous. அப்படிச் செய்துவிட்டு மேலும் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவோம். இப்போது இருக்கிற சட்டம் காலாவதியாகி விட்டது என்று சொல்லுவோம். 15 நாளில் மற்றொரு புதிய சட்டத்தை நிறைவேற்றுவோம். இந்தச் சிக்கல்களையெல்லாம் நீக்குகின்ற அளவிலே முழுமையான சட்டத்தை நிறைவேற்றி, அதன் அடிப்படையிலே தேர்தலை நடத்தினால், நிச்சயமாக தேர்தலை முழுமையாக நடத்த முடியும். இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகள் மிகவும் சிக்கலை உண்டாக்கித் தந்து கொண்டிருக்கின்றன. ஒரு காலத்திலே மக்களுடைய மன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்களுக்கு நாற்றங்காலாக விளங்கியது பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள். இந்தியாவினுடைய தலைசிறந்த பிரதமராக விளங்கிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அலகாபாத் மாநகராட்சியின் மேயராக இரண்டாண்டு காலம் இருந்து பணியாற்றியவர். "தன்னுடைய அரசியல் வாழ்க்கையில் மாநகராட்சி மேயராக விளங்கிய காலம் தலைசிறந்த காலம், அரசியல்வாதியாக உருவாக்கியது அந்தக் காலம்தான்" என்று அவரே எழுதியிருக்கிறார். விருதுநகர் நகராட்சி மன்றத்திற்கு பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர் ஒரு நாள்கூட அந்தப் பதவியிலே இல்லையென்றாலுங்கூட, நகராட்சி மன்றத்திலே பணியாற்ற வேண்டும் என்ற உணர்வோடு செயல்பட்டதை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன். தந்தை பெரியார் அவர்கள் ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராக இருந்து மிகச் சிறந்த முறையில் பணியாற்றியதை இன்றைக்கும் தமிழகம் நினைத்துப் பார்க்கிறது. திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சேலம் நகராட்சி மன்றத் தலைவராகப் பணியாற்றியவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. மதுரை முத்து அவர்கள் மதுரை மாநகராட்சியினுடைய மேயராகப் பணியாற்றியவர். திரு. இராமலிங்கம் அவர்கள்கூட அணைக்கரை பஞ்சாயத்துத் தலைவராகப் பணியாற்றியவர்தான். பெரும்பாலான ஆட்சியாளர்கள் நகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்கள்தான்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேற்கொண்டும் மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு அமைச்சர்கள் நினைவுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு க. இராமமூர்த்தி:** இவ்வளவு சிறந்த லெஜிஸ்லேட்டர்கள் எல்லாம் நகராட்சி மன்றத்திலே, பஞ்சாயத்திலே பணியாற்றி வந்து சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன்.





**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூட விழுப்புரத்திலே இருந்தார்.

**திரு. க. இராமமூர்த்தி :** அவரும் அவருடைய துணைவியாரும் விழுப்புரம் நகராட்சி மன்றத்திலே பணியாற்றியவர்கள். அடியேனும் நகராட்சி உறுப்பினராகப் பணியாற்றியவன். இந்த மாமன்றத்திலுள்ள தலைசிறந்த உறுப்பினர்கள் நகராட்சி மன்றத்தில், பஞ்சாயத்தில் இருந்து வந்திருக்கிறார்கள். பல பேருடைய பெயர் விட்டுப் போய்விட்டது. இந்தச் சிறப்பான வாய்ப்பு தமிழகத்திலே உள்ள ஒரு தலைமுறைக்கு இல்லாமலே கடந்த 12 ஆண்டு காலமாகச் செய்துவிட்டோம். ஒரு தலைமுறைக்கு இந்தப் பயிற்சியே இல்லாமல் போய்விட்டது.

சில இடங்களில் பணியாளர்கள்—அலுவலர் ஆபீசர் முதல் கடைநிலை ஊழியர்கள் வரையில்—நகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றம், பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்கள் ஆகியவைகளில் பணியாற்றுகிறார்கள். ஆனாலும் கட்சி உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சொன்னதைப் போல, அமைச்சர் வந்தால்தான் அப்புறம் நன்றாக இருக்கும். அமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப சென்னையிலேயே சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள். பல ஊர்களுக்கு அவர் எப்போது வருவது? can he send his duplicate? அதுவும் நடக்காது. நமக்கு எவ்வளவு செல்வாக்கும், திறமையும் இருந்தாலும், We have got to function through the official machinery. அந்த மெஷினரியில் இருக்கின்ற தவறுகளை நேரடியாகக் கண்டுபிடிப்பது கஷ்டம். அந்த வேலையை அந்தந்தப் பகுதியில் உள்ள பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், நகராட்சி, போன்ற அமைப்புகள் செய்து கொண்டிருந்தன. அதைத் தான் இந்நேரம்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் . .

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சியில் 1976-ஆம் ஆண்டுக்குப் பின் நகராட்சிகளைக் கலைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பஞ்சாயத்துகளைக் கலைத்தார்கள். [illegible] ஒன்றியங்களைக் கலைத்தார்கள். அவர்கள் தொடர்ந்து இருந்திருந்தால் [illegible] இருந்திருக்கும். கலைத்துவிட்டுப் பிறகு இப்போது [illegible]?

**திரு. க. இராமமூர்த்தி :** [illegible] மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். கலைத்தோம். ஏன் கலைத்தோம்? [illegible] தேதி [illegible] ஆண்டுகள் [illegible]. அந்தத் தேர்தல்

நடத்தாமல் 6 வருஷத்திற்கு, 8 வருஷத்திற்குப் பிறகு தொடர்ந்து பல்லுப வர்களே நிர்வாகத்தை நடத்தியபோது கலைத்தோம். அந்த தேர்தலில்தான் கலைத்தோம்.

(பிற்பகல் 12-10)

ஆகவே இன்றைய நிலைமையில், அதனுடைய வயதை, வரம்பைத் தாண்டிய பிறகுதான் உள்ளாட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டன. அப்படி கலைக்கப் பட்டபோது, தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இடையில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு நீங்களே ஆட்சிக்கு வந்தீர்கள். ஆட்சிக்கு வந்ததும் உள்ளாட்சித் தேர்தல்களை நாங்கள் உடனே நடத்துவோம் என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு இந்தச் சட்டம் எவ்வளவு காலம் கழித்து வந்தது என்பதும் நமக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் கூட அந்தக் கட்சியில்தான் இருந்தார்கள். அவர்கள்தான் ஆட்சி நடத்தியது. அவர்கள் செய்யவில்லை. சட்ட முன்வடிவும் வந்தது. இந்த மாமன்றத்திலேகூட உறுதியைக் கொடுத்தார்கள். நீங்கள் என்ன பண்ணுவீர்கள். நீங்கள் சொல்வதை அவர்கள் கேட்கவில்லை. கொஞ்ச நாள் பிறகுதான் இந்தச் சட்ட முன்வடிவும் வந்தது. வந்த சட்டத்திலேயும் இவ்வளவு சிக்கல் ஏற்பட்டு தேர்தலும் நடக்கவில்லை.

இன்றைக்கு இருக்கின்ற நிலைமையிலே, மாநகராட்சி மன்றம் மட்டுமல்ல, பஞ்சாயத்து யூனியம் மட்டுமல்ல, அங்கெல்லாம் என்ன நடக்கிறது? அரசாங் கத்தினுடைய பெருவாரியான நிர்மாணப் பணிகள் அவர்கள் மூலமாகத்தான் நடைபெறுகிறது. நடந்துதான் ஆக வேண்டும். வேறு வழி கிடையாது. ஆனால் அதிலே எல்லாமே ஊழல் என்று நான் சொல்வதற்கு தயாராக இல்லை. ஆனால் அதே நேரத்திலே ஊழல் நடைபெறாமல் தடுப்பது என்பது இந்த அரசுக்கு முடியாது. காரணம் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை. நான் இன்னும் தாராளமாகச் சொல்ல முடியும். ஆளும் கட்சி உறுப்பினர்கள் மட்டும்தான் அதைச் செய்கிறார்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. யார் யாருக்குத் திறமை இருக்கிறதோ அவர்கள் எல்லாம் செய்கிறார்கள். ஒரு ரோடு போடுவதில் இருந்து, ஒரு பிரிட்ஜ் கட்டுவதில் இருந்து, ஒரு கட்டடம் கட்டுவதில் இருந்து செய்கின்றார்கள். இதிலே தான் அபிசியல் மட்டுமல்ல, அபிசியல்கூட செய்து கொண்டிருக்கிறார்கள். மனத் திறமை தானே தவிர வேறல்ல. தவறு செய்பவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதல்ல. எனக்கு ஒரு நல்ல அனுபவம் இருக்கிறது. 1½ ஆண்டு அல்லது 2 ஆண்டுக் காலம் என்று நினைக்கிறேன். அப்போது பஞ்சாயத்து யூனியத்திலே காண்ட்ராக்ட் முறையிலே என்னென்ன நடந்தது என்று இங்கேகூட கொண்டு வந்து ரெக்கார்டுகளைக் காட்டினேன். நடவடிக்கை



எடுக்க வேண்டும் என்று சொன்னேன். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட காண்ட்ராக்டர் இன்றைக்கு ஏ. டி. எம். கே. A.D.M.K. வில் சேர்ந்திருக்கிறார்கள். நீங்கள் இடம் கொடுக்கிறீர்கள் என்பதல்ல. யாருக்கும் இந்த உணர்வு வருகிறது. எதையோ செய்து ஏதோ சம்பாதிக்க வேண்டு மென்ற ஒரு நிலைமை வந்து விடுகின்றது. அது காங்கிரஸ் கட்சியாக இருந் தாலும் இருக்கும். அது தி. மு. கவிலே இருக்கும். ஏ. டி. எம். கேவில் இருக்கும் அல்லது வேறு எந்தக் கட்சியிலும் இருக்கும். அப்படி நடக்கும். இப்படி தவறுகள் நடைபெறாமல் பார்க்க வேண்டுமென்றால், அது உள்ளாட்சித் துறை யிலே முடியாது. ஒரு அட்வைசரி கமிட்டி போட்டார்கள். ஆனால் அது பங்க்ஷன் பண்ணுவதில்லை. அதிகாரிகளுக்குக் கீழே அது 'பங்க்ஷன்' பண்ண வில்லை. அதனாலே இன்றைக்கு இருக்கின்ற நிலைமையைப் பார்க்கும் போது, எப்படியாவது இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டும். அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் வேகம் இருக்கிறது. எப்படி நடத்து வது என்று பார்த்து அந்த நிலைமைகளைப் பார்த்து, அதிலே இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்தாக வேண்டும். இன்றுள்ள பிரச்சினை ரிசர்வேஷனை எப்படிச் செய்வது என்பதுதான். இந்த ரிசர்வேஷனை எப்படி ஒதுக்குவது என்பதிலேதான் பிரச்சினை இருக்கிறது. எப்போது உங்களுக்குத் தேர்தலை நடத்துவது என்று ஆர்வம் இருக்கிறதோ தெரியவில்லை. இப்போது நீங்களே சொல்கின்றீர்கள். நாங்கள் இன்னொருவரை பாதிக்க வேண்டுமென்று ரிசர் வேஷனைக் கொண்டு வரவில்லை என்று சொல்கின்றீர்கள். அப்படி என்றால் 'லெட் அஸ் கோடிபை' (Let us codify) . சட்டப்பூர்வமாக இப்படித்தான் ரிசர்வேஷன் செய்யப் போகிறோம் என்று சொல்லுங்கள். அது இல்லாமல் டிஸ்கிரிஷனரியாக வைத்திருந்தால், கடைசி நிமிடம் வரையில் எதை யும் மாற்றிச் செய்ய முடியும் என்ற உணர்வு இருக்கின்ற வரையில், இந்த மாதிரி நிலைமைகள் இருக்கின்ற வரைக்கும், இந்தப் பிரச்சினை தீர்ந்தாலும், இனி வருகின்ற பிரச்சினைகள் அடிப்படையிலே யாராவது நீதிமன்றத்திற்குச் சென்று கொண்டுதான் இருப்பார்கள். அந்த நிலைமைகளை வளர்ப்பது நல்ல தல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். தற்போதுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயத் துறைப் பொறுப்பினை ஏற்றிருந்தபோது, இந்தச் சட்டம் வந்தது. அப்போது இருந்த அமைச்சர் அவர்கள் வேகமாகப் பேசினார்கள். அந்த வேகம் இப்போது இல்லை. அன்றைக்கு அந்த அமைச்சர் அப்படிப் பேசிவிட்டார்கள். வேறு வழியில்லை. இன்று உள்ள இந்த அமைச்சர் நமக்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இன்றைக்கு 13-ஆம் தேதி கூட்டம் என்று சொல்கின்றார்கள். அது எப்படி சரியாக வரும் என்று எனக்குக்கூட சந்தேகம். 13-ஆம் தேதி மார்ச் ரொம்ப

சாதாரணமானவர்களுக்குத் தெரியும். அது மனிதர்களுக்கு நல்ல தேதி அல்ல என்று சொல்வது வழக்கம். ஆண்டு ஆண்டுக்காலமாக இருக்கிறது. ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறார். ஜூலியஸ் சீசர் கொலை பண்ணப்பட்ட தேதி அது.

**திரு. எஸ். முத்து:** நான் சாதாரண தொழிலாளியாக இருந்து சேர்மேனாக இருந்து, மேயராக இருந்து, இன்று எம். எல். சி. ஆக வந்திருக்கிறேன். அது நல்ல நேரம் என்றுதான் நான் நினைக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** ஷேக்ஸ்பியர் சொன்னது 'பிவேர் ஆப் ஐட்ஸ் ஆப் மார்ச்' (Beware of the Ides of march) என்றுதான் முடிகிறது. எல்லோரும் அப்படி இல்லை. எக்சப்ஷனலாகத்தான் இருக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மார்ச் 13-ல்தான் பிறந்தார்களா? ஆம் என்று சொல்கின்றார்கள் உறுப்பினர் அவர்கள். அவர்கள் மார்ச் 13-ஆம் தேதி பிறந்திருக்கிறார்கள். பாவாயில்லை. அவர் ரொம்ப சாமர்த்தியக்காரர் தான். ஜூலியஸ் சீசரே நிமிர்ந்து நிற்க முடியாமல் போன நாள் அது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அது அந்த நாள் காரணமா அல்லது ஜூலியஸ் சீசர் காரணமா ?

**திரு. க. இராமமூர்த்தி:** ஷேக்ஸ்பியர் அவர்கள் சொன்னதைத்தான் சொல்கிறேன். 'பிவேர் ஆப் தி ஐட்ஸ் ஆப் மார்ச்' என்று சொல்லியிருக்கிறார். அந்தத் தேதி எதுவாக இருந்தபோதிலும்கூட, எத்தனை முறை நாம் கூட்டம் கூட்டினாலும்கூட, இந்த அடிப்படையான பிரச்சினையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

Let us make the Act infructuous by bringing an Ordinance. Let us bring a new Act.

ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்துவிட்டு, பழைய சட்டத்தைத் திரும்பப் பெறுகிறோம் என்று சொல்லிவிட்டு, ஒரு புதிய சட்டத்தை, முழுமையான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். Let us bring it. ரிசர்வேஷன் பற்றி யாருக்குமே 'அப்ஜக்ஷன்' இல்லை. அது முடிந்து போன விஷயம். எல்லோரும் ஏற்றுக்கொண்ட விஷயம், விவகாரம். ரிசர்வேஷன் எப்படிச் செய்யலாம் என்பதிலேதான் விவகாரம் இருக்கிறது. இரண்டாவது 1, 2 கேஸ்கள்தான் என்று சொல்கின்றார்கள். 17 கேஸ்கள் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கின்றன. 3வது, இன்னொரு அபாயத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாநகராட்சி, நகராட்சி தேர்தல்களை நடத்துவதாக



முடிவு எடுத்தால், கொள்கையின் அடிப்படையிலே தேர்தலை நடத்துவீர்களா அல்லது கொள்கையை விட்டுவிட்டு தேர்தல் நடத்துவீர்களா? இந்த ரிசர்வேஷன் வந்தபோது என்ன சொன்னீர்கள்? (In the Bill itself) 'இன் தி பில் இட்செல்ப்' சொல்லியிருக்கிறீர்கள். இதே கொள்கையைத்தான் மாநகராட்சி மன்றத்திற்கும் நகராட்சி மன்றத்திற்கும் அப்ளை பண்ணுவோம் என்றுதான் சொன்னீர்கள். இப்பொழுது இல்லை என்றால், இந்த மாநகராட்சி மன்றத்திற்கும், நகராட்சி மன்றத்திற்கும் தேர்தல் எந்த அடிப்படையிலே நடத்தப் போகிறீர்கள்? அடுத்து இந்த 3 மாதம், 6 மாதம் என்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். அவர்களுக்குத் தெரியும் அந்தக் காலம் போதாது என்று. வேறு வழியில்லை என்றுதான் 6 மாதம் என்று கேட்கின்றார்களே தவிர, வேறல்ல. அவருடைய திருத்தத்திலே கொடுத்திருக்கிறார்கள், பில்லிலே கொடுத்திருக்கிறார்கள். எல்லா பில்களிலும் இருக்கிறது. "So that the feasibility of introducing the reservation of seats for the members of Scheduled Castes and Scheduled Tribes and for women in Municipalities and Municipal Corporations may be examined." இந்த மாநகராட்சி மன்றங்களுக்கான, நகராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குக் காரணமாக இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் காரணம் சொல்லியிருக்கிறார்கள்.

"The electoral rolls have to be prepared afresh by house to house enumeration with the 1st January 1983 as the qualifying date. It will take a minimum period of six months. Hence it is not possible to conduct the elections to the Municipal Corporation of Madras before the 30th May 1983."

6 மாதம் ஆகும். ஆகவே 1983-லே நடத்த முடியாது. மேற்கொண்டு 6 மாதம் என்று கேட்டு ஒரு வருடம் கேட்கிறார். இதுதான் கொள்கை என்று சொன்னால், எப்படி ஒரு வருடத்திலே நடத்த முடியும்? அது மட்டுமல்ல, (May) மே-யிலே இருந்து ஒரு வருடம் கேட்டிருக்கிறார். இப்போது எனுமரேஷன் நாம் இன்னும் ஆரம்பிக்கவில்லை. மே மாதம் வந்த பிறகுதான் ஆரம்பிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கூற்றுப்படி, அதற்கு மேலே எனுமரேஷனுக்கு 6 மாத காலம் ஆகும். எனுமரேஷனுக்கு ஆறு மாத காலம் என்றால், தேர்தலை நடத்துவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதை போன தடவை நாம் பார்த்தோம். எனுமரேஷன் முடிந்த பிறகு தேர்தல் நடத்த கிட்டத்தட்ட 8 மாத காலம் நமக்கு ஆயிற்று. டேட் பிக்ஸ் பண்ண எவ்வளவு காலம் ஆயிற்று? ஆகவே நிச்சயமாக இதுவே முடிவல்ல.

இன்னொரு தொடர்கதை தொடர்ந்து வர இருக்கிறது என்பதைத்தான் இந்தச் சட்ட முன்வடிவு சொல்கிறது. Let us be plain. Let us be frank. Let us be clear. You withdraw the Act and bring a new Act—or you codify as to how you are going to make reservation. அது இல்லாத வரையிலே மக்களை நாம் குழப்பத்திலே வைத்துவிட்டு தேர்தலை நடத்தாமல் ஜனநாயகத்தினுடைய ஆணி வேரை, நாற்றங்காலை வீணடித்துக்கொண்டிருக்கிறோம் என்ற பழி பாவத்திற்கு இந்தத் தலைமுறை ஆளாகிவிடும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அதற்கு ஏற்ற வகையில் என்னுடைய திருத்தங்களை எல்லாம் நான் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய திருத்தத்தைப் பொறுத்தவரையில், நிச்சயமாக மகிழ்ச்சி அடையலாம். அவர்கள் சௌகரியத்திற்கு எப்போது வேண்டுமானாலும் தேர்தல் நடத்தலாம் அல்லது அரசாங்கத்திற்குச் சாதகமானபோது நடத்தலாம். அந்த மாதிரியான திருத்தங்களை நான் கொடுத்திருக்கிறேன். அவையெல்லாம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, நடைமுறை சாத்தியமானவற்றைச் செய்து அந்தச் சட்டத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய திருத்தத்தை அவர்கள் ஏற்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அவரே என் திருத்தத்தை முன்மொழிந்து ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

(பிற்பகல் 12-20)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்களின் திருத்தங்கள் தேவையில்லை என்பதற்கு ஒருசில கருத்துக்களை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்த அளவில், நான் ஏற்கெனவே சொன்னதுபோல உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே நிலுவையில் அது உள்ளதால், அந்தத் தேர்தல்களை நடத்த முடியாத நிலையிலே இருக்கிறோம். ஆனால் நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நாம் தேர்தல்களை [illegible] நடத்த முடியும். 1—1—1983 அன்று 18 வயதை அடைந்தவர்களையெல்லாம் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் [illegible] அடிப்படையில் வார்டுகளைப் பிரிப்பது போன்ற வேலைகளை முடித்துவிட்டால் உடனடியாக தேர்தல்களை நடத்தலாம் [illegible] தனி



அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டித்தாலும், அதை 6 மாதமாகக் குறைத்துக் கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. அந்த விதிமுறை அதிலே இருக்கின்ற காரணத்தால், இவைகளை உடனடியாக நடத்தலாம். அதனாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்த திருத்தங்கள் தேவையில்லை. இருக்கின்ற சட்டத்தின்படி வருகிற 13—3—1983 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் யோசனையைக் கேட்டு, எப்போது தேர்தல்களை வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவைக் கொண்டு வரலாம் என்று சொல்லி, திருத்தங்களை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தன்னுடைய திருத்தத்தை திரும்பப் பெறுகிறாரா, வலியுறுத்துகிறாரா ?

**Thiru K. RAMAMOORTHY** : In view of the request of the Hon. Minister, I do not press my amendment.

*திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.*

*பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

*பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

*தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

**(2) தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1983).**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் முன்மொழியப்படவில்லை.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 269 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983).**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் முன்மொழியப்படவில்லை.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

---

@ 270 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1983 மார்ச் 8

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983) நிறைவேற்றப்பட வேண்டும் " என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1983) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(4) தமிழ் நாடு 1983-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/1983).**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1983) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 270 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 மார்ச் 8]

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் முன் மொழியப்படவில்லை.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1983) நிறைவேற்றப்பட வேண்டும் ".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1983) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) 1983-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1983).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1983) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் முன்மொழியப்படவில்லை.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1983) நிறைவேற்றப்பட வேண்டும் ".

என்று முன்மொழிகிறேன்.

@ 271 ஆக அச்சிடப்பட்டுள்ளது. VII.ஆம் பக்கத்தில் இணைப்பு



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1983) நிறைவேற்றப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1983).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1983) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் முன்மொழியப்படவில்லை.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

@ 271 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1983 மார்ச் 8

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 12-30)

(7) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1983).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1983) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

---

@ ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 மார்ச் 8]

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதி லிருந்தும் பாதுகாப்பளித்தல் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். பயிரிடு வோர்கள் முன்பாக்கி வாரத்தையும் இப்போது தர வேண்டிய வாரத்தையும் தாவிட்டால். அவர்களை வெளியேற்றக் கூடாது என்கிற அம்சம், ஒரு பாது காப்பு. சாகுபடியாளர்களுக்கு இருப்பதால், இச்சட்ட முன்வடிவு இப்போது வந்தாலும் அதாவது 1982 ஜுலை 1 ஆம் தேதி முதல் ஜனவரி 15, 1984 வரை அமுலுக்கு வருவதால் மறுபடியும் இதை நான் வரவேற்கிறேன். ஆனாலும் ஒன்றிரண்டு திருத்தங்கள் செய்ய வேண்டும். இப்போது அதைச் செய்யா விட்டாலும்கூட, பின்னால் வாய்ப்புக்கள் கிடைக்கும்போது இதைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு நிறை வேற்றப்படும் வரை அவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

திரு. ஆ. நல்லசிவன் : நான் என்ன சொல்கிறேன் என்றால், 1—7—1982 க்கு முன்னால் வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கும் அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும். தவிரவும் 1982-83-ல் மழை பொய்த்துவிட்ட காரணத்தால் வாரம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டால், அவர்களையும் வெளியேற்றக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவர்களுக்கு வரி தள்ளுபடி செய்யக் கூடிய நிலையில் அரசு இருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றிய முழுத் தகவல் எனக்குத் தெரியவில்லை. ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் வார பாக்கிகளை வசூல் பண்ணுகிற நிலைமை ஏற்படக் கூடாது. சாகுபடியாளர் களுக்கு எல்லாம் அரசு பாதுகாப்பு தர வேண்டும். தமிழ் நாட்டிலே அவர் களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. சாகுபடியாளர்கள் பெயர் களைப் பதிவு செய்ய வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால் அது பற்றி பெரும்பாலான சாகுபடியாளர்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே பதிவு செய்வதிலுள்ள சிக்கல்களையெல்லாம் அரசு தவிர்க்க ஆவன செய்ய வேண்டும்.

இன்னொரு விஷயம். வாரம் என்று வரும்போது 75க்கு 25ஐ ஸ்ட்ரிக்ட் ஆக அமுல்படுத்த வேண்டும். ஆனால் இது தற்போது நடைமுறையில் பின் பற்றப்படுவதில்லை. பாக்கிகள் என்று வரும்போது, 60க்கு 40 என்கிற அடிப்படையிலே சொல்லி அவர்களை மீண்டும் வெளியேற்றக்கூடிய நிலைமை

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 மார்ச் 8

ஏற்படக்கூடாது. மேலும் 75க்கு 25ஐ களத்து மேட்டிலேயே கண்டிப்பாக அமுல்படுத்த அரசு தீவிரமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டு இச்சட்ட முன்வடிவை வரவேற்று, ஆதரித்து அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, பயிரிடு குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல் சட்ட முன்வடிவின் மீது ஒருசில வார்த்தைகளைக் கூறி முடித்துக் கொள்கிறேன். தமிழ் நாட்டிலே பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தாலும், வறட்சி ஏற்பட்டிருக்கிற காரணத்தாலும், தமிழ் நாட்டிலே இருக்கிற விவசாயிகளுக்கு உதவிட வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இச் சட்ட முன்வடிவை அரசு கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாக இப்போது மத்திய அரசின் வறட்சி நிவாரணக் குழு தமிழகத்திற்கு வந்திருக்கிறது. இங்கிருக்கிற வறட்சியின் கொடுமையை இந்தக் குழு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் இச்சட்ட முன்வடிவு இங்கே வந்திருப்பது இந்த அரசுக்கு விவசாயிகளிடம் எந்த அளவுக்கு அக்கறை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. இதுவரை விவசாயிகளுக்காக பல சட்டங்களை நாம் நிறைவேற்றியிருந்தாலும், இது மிக மிகத் தேவையான ஒன்று. விவசாயிகளுக்கு அனுகூலம் பயக்கக்கூடிய, விவசாயிகளுக்கு நலன் பயக்கக்கூடிய சட்ட முன்வடிவு இது. அதுமட்டுமல்லாமல், விவசாயிகள் ஜூலை 1, 1982லிருந்து ஜனவரி 15, 1984 வரை பயனடைவார்கள். ஆகவே ஏற்கெனவே தவிர்க்க முடியாத காரணங்களால் பயிரிடுவோர்கள் தங்கள் நிலங்களை இழந்திருந்தாலும்கூட, அவர்களுக்கே மீண்டும் அந்த நிலங்களை மீட்டுத் தருகிற வகையில் பாதுகாப்பு அளிக்கிற சட்ட முன்வடிவு இது. மேலும் இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டம் எவ்வளவு என்று கணக்கெடுத்து, விவசாயிகளுக்கு உதவ இயலும் வகையிலும் இச்சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளதால், இதனை நான் வரவேற்று ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பயிரிடு குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல் சட்ட முன்வடிவின் மீது கலந்து கொண்டு பேசாததிலிருந்தே இதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிய முடிகிறது. அதுமட்டுமல்லாமல் இதுகுறித்த பேசிய உறுப்பினர்கள் இருவருமே ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இச்சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 8]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை.

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும், பாதுகாப்பளித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று. அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-34)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

Nil.

B. *Reports, Notifications and Other Papers.*

* 50. The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1983 (L.A. Bill No. 19 of 1983), as passed by the Assembly.

* 51. The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1983 (L.A. Bill No. 20 of 1983), as passed by the Assembly.

* 52. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 21 of 1983), as passed by the Assembly.

* 53. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1983 (L.A. Bill No. 22 of 1983), as passed by the Assembly.

* 54. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 23 of 1983), as passed by the Assembly.

* 55. The Coimbatore City Municipal Corporation (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 24 of 1983), as passed by the Assembly.

* 56. The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Bill, 1983 (L.A. Bill No. 15 of 1983) as passed by the Legislative Assembly.

---

* Circulated to all M.L.Cs. on 7th March 1983.



இணைப்பு I

(104 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-ன்கீழ் அடிக்குறிப்பைப் பார்க்கவும்)

தென்னார்க்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி எஸ். கே. வி. உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தை இரண்டு ஆண்டுகளுக்கு அரசு தன் பொறுப்பில் ஏற்கவும் கடலூர் மாவட்டக் கல்வி அலுவலரை மேற்பார்வையாளராக (நிர்வாகப் பொறுப்பாளராக) செயல்படவும் அனுமதி வழங்கி 5—8—1982 ஆம் தேதியன்று அரசு ஆணைகள் வழங்கப்பட்டன. மேற்கண்ட அரசாணைகளின்படி கடலூர் மாவட்டக் கல்வி அலுவலர், மேற்படி பள்ளியின் நிர்வாகத்தை 16—8—1982 ஆம் நாள் பிற்பகல் முதல் ஏற்றுக் கொண்டார். இதற்கிடையில் இப்பள்ளிக் குழுவின் தலைவர் திரு. எஸ். கே. சம்பந்தம் அவர்கள் மேற்படி அரசாணையை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் 19—8—1982 ஆம் நாளன்று நீதிப் பேராணை மனு (டபிள்யூ. பி. எண் 6660/82 மற்றும் டபிள்யூ. எம். பி. எண் 10199/82) ஒன்றை தொடுத்து மேற்கண்ட அரசாணைகளுக்குத் தடை பெற்றுள்ளார். இந்த வழக்கை எதிர்க்கவும், நீதிமன்றத்தின் தடைகளை நீக்கவும். தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் அமர்த்தப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் 29—9—1982 அன்று இதற்கான தடையை நிரந்தரமாக்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் இப்பள்ளியின் செயலாளர், கடலூர் சார் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து (ஓ. எ. 251/1982) 4—9—1982 ஆம் நாளன்று, கடலூர் மாவட்டக் கல்வி அலுவலரிடம் பள்ளிச் செயலாளரின் அறைக்கு சீல் வைத்ததை உடைக்க நீதிமன்றத்தின் ஆணைகள் பெறப்பட்டுள்ளன. மேலும், மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி அரசாணைகளுக்குத் தடை விதிக்கும்படி வேறு ஓர் வழக்கு (சி. எம். ஏ. 54/1982) செயலாளரினால் தொடரப்பட்டு நடை பெற்று வருகிறது. மேற்படி வழக்கிலும், வழக்கை எதிர்க்கவும் நீதிமன்றத்தின் தடைகளை நீக்கவும் தக்க நடவடிக்கைகள் தனியே எடுக்கப்பட்டு உள்ளன.

2. இந்த விதமான சட்டப் பிரச்சினைகளினால், மேற்படி பள்ளியின் நிர்வாகத்தை அரசு தன் பொறுப்பில் ஏற்று நிர்வாகச் சீர்கேடுகளைக் களையவும், பள்ளியை நல்ல முறையில் நடத்திடவும், கடலூர் மாவட்டக் கல்வி அலுவலர், பள்ளியின் நலன் காப்பாளராக செயல்படவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் பள்ளியில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு, கடலூர் மாவட்டக் கல்வி அலுவலரினால் நேரிடையாக மாதாந்திரப் பணியாளர் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி பள்ளியில் பணி புரிந்து வந்த 13 பட்டதாரி ஆசிரியர்களை பள்ளியின்

நிர்வாகம் 17—10—1980-ஆம் நாள் முதல் 15—12—1980-ஆம் நாள் முடிய தற்காலிகப் பணி நீக்கம் செய்தது. 16—12—1980-ஆம் நாள் அன்று பள்ளியில் மீளப் பணியேற்க அந்த ஆசிரியர்கள் சென்றபோது அவர்களை பணியில் சேருவதற்கு நிர்வாகம் அனுமதிக்கவில்லை. எனினும் கல்வித்துறை இப்பிரச்சினையில் தலையிட்டு, ஆணைகள் வழங்கிய காரணத்தினால் மேற்குறித்த 13 ஆசிரியர்கள் மேற்படி பள்ளியில் 27—1—1981-ஆம் நாள் முதல் மீளப் பணியேற்று பணி புரிந்து வருகின்றனர். 16—12—1980-ஆம் நாள் முதல் 26—1—1981-ஆம் நாள் முடிய பணி புரியாத காலத்திற்கு, ஊதியம் வழங்க வேண்டும் என்ற ஆசிரியர்களின் கோரிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. முடிவாக, மேற்படி பள்ளியின் நிர்வாகம் செயலற்று போய் இருப்பது குறித்தும் ஆசிரியர்கள், மாணவர்கள் பல பாதிப்புகளுக்கு உள்ளாகி இருப்பது குறித்தும் புகார்களோ அல்லது கோரிக்கைகளோ பெறப் படவில்லை. குறிப்பிட்ட ஆசிரியர்களின் பணி பாதிப்பு, குறைகள் முதலிய விவரங்களை பள்ளிக் கல்வி இயக்குநரின்/அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## இணைப்பு II

(19 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க)

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு ரப்பர் தோட்ட நிறுவனங்களில் பணி புரியும் சுமார் 2,[illegible] தொழிலாளர்களுக்கு போனசுக்கு பதிலாக கருணைத் தொகை Ex-gratia வழங்கப்பட வேண்டும். விடுப்பு நாட்களில் பணி புரிந்துள்ள காவலர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் மற்றும் ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டபடி அகவிலைப்படியை தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும் என்ற 3 கோரிக்கைகளை முன்வைத்து, மேற்கண்ட நிறுவனத்தில் இயங்கி வரும் 4 தொழிற்சங்கங்கள் முறையே கன்னியாகுமரி மாவட்ட எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (சி.ஐ.டி.யு.), குமரி எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (ஐ. என். டி. யு. சி.) குமரி எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (டி. எல். டி. யு. சி) மற்றும் குமரி மாவட்ட எஸ்டேட் ஒர்க்கர்ஸ் புராகிரசிவ் யூனியன் (எல். பி. எப்) ஆகியவை 1—7—1982 அன்று அடையாள வேலை நிறுத்தம் மற்றும் 2—7—1982 முதல் தொடர் உண்ணாவிரதம் மேற்கொள்வதாகவும் அறிவித்தனர்.

2. இத்தாவாவில் சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர் 15-6-1982, 27-7-1982, 27—9—1982, 14—10—1982, 8—11—1982, 27—12—1982 மற்றும் 18—12—1982 ஆகிய தேதிகளில் பேச்சு வார்த்தைகள்



மேற்கொண்டார். 27—7 1982 அன்று இணை ஆணையர் தமது அறிவுரையில் காவலர் பணியில் இருந்த அந்த தொழிலாளர்களுக்கு [illegible]12—1981 காலத்திற்கு முன்னாலுள்ள பணிக் காலத்திற்குண்டான பாக்கித் தொகையை நிர்வாகம் வழங்க வேண்டும் என்றும் அதனால் தொழில் அமைதியின்மை தேவையில்லையென்றும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தினார். இணை ஆணையரின் தலையீட்டால் தொழிற் சங்கங்களால் 1—7—1982 அன்று முதல் நிர்ணயிக்கப்பட்ட தர்ணா மற்றும் போராட்டங்கள் தள்ளி வைக்கப் பட்டன. இறுதியாக மேலே சொன்ன நான்கு தொழிற் சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் [illegible]—11—1982 முதல் கால் வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

3. இணை ஆணையர் மேற்கொண்ட சமரச முயற்சிகளில் சுமுக முடிவு ஏற்படாததால் சமரச முறிவறிக்கையினை அரசுக்கு அனுப்பினர். அதன் மீது அரசு 18—2—1983-ஆம் நாளிட்ட ஆணை எண் 430-ல் [illegible] காரணங்களுக்காக இக்கோரிக்கைகளை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அனுப்பத் தேவையில்லை என்று முடிவு செய்துள்ளது.

**போனசுக்குப் பதிலாக கருணைத் தொகை வழங்கல்.**—போனசுக்கு பதிலாக கருணைத் தொகை வழங்க போனஸ் சட்டத்தில் வழிவகை ஏதும் இல்லை.

**விடுப்பு நாட்களில் பணி புரிந்த காவலர்களுக்கு ஊதியம் வழங்கல்.**—சமரசப் பேச்சு வார்த்தையின்போது இருதரப்பாரும் இந்தக் கோரிக்கையை தோட்ட நிறுவனங்களின் தலைமை ஆய்வாளரின் இறுதி முடிவிற்கு விட ஒப்புக் கொண்டனர்.

**ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டபடி தொடர்ந்து அகவிலைப்படி வழங்கல்.**—அடுத்து ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்படும் வரை, 4—12—1979 அன்று இணை ஆணையர் முன்பு ஏற்படுத்தப்பட்ட 12 (3) ஒப்பந்தப்படி, அகவிலைப் படி வழங்க நிர்வாகம் ஒப்புக் கொண்டது.

4. இதற்குப் பின்னும் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வந்ததால், தொழிலாளர் துறை இணை ஆணையர் இரு தரப்பினருடனும் 23—2—1983 மற்றும் 24—2—1983 ஆகிய இரு நாட்களிலும் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார். வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற இரு தரப்பினருக்கும் சில ஆலோசனைகள் கூறப்பட்டன.

5. முடிவில், நிர்வாகம் இணை ஆணையர் கூறும் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதாகக் கூறியதால் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுடன் பேசி முடிவெடுக்க ஏதுவாக இருக்குமெனக் கூறினார். அதற்கேற்ப கீழ்க்கண்ட ஆலோசனைகள் நிர்வாகத்தினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.—

(1) தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்றுக் கொள்வது.

(2) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தற்காலிகத் தொழிலாளர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது.

(3) எல்லா தொழிலாளர்களுக்கும் ஒரு மாத ஊதியத்தை முன்பணமாக கொடுப்பதென்றும், அதைத் திருப்பப் பிடித்தம் செய்வதைப் பற்றி இணை ஆணையர் அவர்களே பிறகு பரிசீலனை செய்வார்கள்.

இணை ஆணையரின் மேற்கூறிய பரிந்துரைகளின் மீது முக்கியமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தற்காலிக தொழிலாளர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கவும், எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஒரு மாத ஊதியத்தை முன்பணமாக கொடுப்பதைக் குறித்தும் அரசின் வனம் மற்றும் மீன் துறையில் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இதுகாறும் அரசு ரப்பர் தோட்ட நிறுவனங்களாக இயங்கிவந்தவற்றை "தமிழ் நாடு ரப்பர் தோட்டக் கழகமாக" அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

## இணைப்பு III

(200 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

*L.A. Bill No. 19 of 1983.*

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Act, 1983.

(2) It shall come into force at once.



2. *Amendment of section 4, Tamil Nadu Act 60 of 1979.*—In clause (a) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979 (Tamil Nadu Act 60 of 1979), for the expression "three years and six months", the expression "four years" shall be substituted.

## இணைப்பு IV

(254 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க)

L.A. Bill No. 20 of 1983.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Act, 1983.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 4, President's Act 5 of 1977.*—In clause (a) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977 (President's Act 5 of 1977), for the expression "six years and two months", the expression "six years and eight months" shall be substituted.

## இணைப்பு V

(255-256 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க)

L.A. Bill No. 21 of 1983.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats Act,* 1958.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Amendment) Act, 1983.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 155, *Tamil Nadu Act XXXV of* 1958.—In section 155 of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958), in sub-section (1), in clause (*b*), in the provisofor the expression "five years and eight months", the expression "six years and two months" shall be substituted.

## இணைப்பு VI

(256 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. Bill No. 22 of 1983.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act,* 1976

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follws:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Municipal Councils (Appointment of special Officers) Amendment Act, 1983.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 4, *President's Act* 28 *of* 1976.—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 28 of 1976):—

(i) for the words "fr a period of six years and nine months", the words "for a period of seven years and nine months" shall be substituted;

(ii) in the first proviso, for the words "the said period of six years and nine months", the words "the said period of seven years and nine months shall be substituted.



## இணைப்பு VII

(258 ஆம் பக்கத்தில் இனம் 5 (5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. Bill No. 23 of 1983.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Madras City Municipal Corporation Act,* 1919.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation (Amendment) Act, 1983.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 55-B, Tamil Act IV of* 1919.—In section 55-B of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), in sub-section (1), for the words "within a period of eight years and six months", the words within a period of nine years and six months" shall be substituted.

## இணைப்பு VIII

(259 ஆம் பக்கத்தில் இனம் 5 (6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

*L.A. Bill No.* 24 *of* 1983.)

*A Bill further to amend the Coimbatore City Municipal Corporation Act,* 1981.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Coimbatore City Municipal Corporation (Amendment) Act, 1983.

(2) It shall come into force at once.

2. *Amendment to Schedule VII to Tamil Nadu Act* 25 *of* 1981.—In Schedule VII to the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981), in sub-rule (*a*) of rule 4, for the expression "period of two years", the expression "period of three years" shall be substituted.

## இணைப்பு X

*(255-ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.*

### A BILL No. 15 OF 1983.
(As passed by the Assembly.)

*A Bill to provide for the protection from eviction of cultivating tenants who are in arrears with respect to the rent payable to the landlords.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title, extent, commencement and duration.*—(1) This Act may be called the Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Act, 1983.

(2) It extends to the whole of the State of the Tamil Nadu.

(3) It shall be deemed to have come into force on the 1st day of July, 1982 and shall remain in force up to and inclusive of the 15th day of January 1984.

(4) Upon the expiry of this Act, the provisions of section 8 of the Tamil Nadu General Clauses Act, 1891 (Tamil Nadu Act I of 1891) apply as if this Act had then been repealed by a Tamil Nadu Act.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(a) "cultivating tenant" means—

(i) a cultivating tenant as defined in clause (*aa*) of section 2 of the Tenants Protection Act ; or

(ii) a cultivating tenant as defined in clause (5) of section 2 of the Public Trusts Act ;

(b) "Public Trusts Act" means the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961) ;

(c) "Tenants Protection Act" means the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955) ;

(d) words and expressions used and not defined in this Act but defined in the Tenants Protection Act or in the Public Trusts Act shall have the meanings respectively assigned to them in the Tenants Protection Act or in the Public Trusts Act, as the case may be.

6. *Continuance of applications and suits and proceedings, after the expiration of the Act.*—All applications for the eviction of a cultivating tenant under the Tenants Protection Act or under Chapter III of the Public Trust Act, as the case may be, and all suits and proceedings stayed under this Act, shall, after the expiration of this Act, be proceeded with subject to the provisions of any law which may then be in force, from the stage which had been reached when the application, suit of proceeding was stayed.

7. *Right to restoration of possession of evicted cultivating tenants.*—(1) Any cultivating tenant who had been evicted from any land on or after the 1st day of July 1982, but before the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, on the ground that such cultivating tenant was in arrear with respect to the rent payable to the landlord or the public trust, as the case may be shall on application to the Revenue Divisional Officer within a period of three months after the date of such publication be entitled to be restored to possession of such land and to hold it with all the rights and subject to all the liabilities of a cultivating tenant under the Tenants Protection Act or under the Public Trusts Act, as the case may be :

Provided that the application may be received after the period of three months aforesaid, but before the expiry of this Act, if the applicant satisfies the Revenue Divisional Officer that he had sufficient cause for not making the application within the said period of three months.

(2) The provisions of sub-section (4) of section 4 of the Tenants Protection Act or, as the case may be, sub-section (2) of section 20 of the Public Trusts Act shall, so far as may be, apply to applications under sub-section (1).

8. *Act to override other laws, contract, etc.*—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in the Tenants Protection Act, the Public Trusts Act, the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Act, 1980 (Tamil Nadu Act 15 of 1980), the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Act, 1980 (Tamil Nadu Act 16 of 1980), the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908), or in any other law for the time being in force, or any custom usage or contract, or decree or order of a court or other authority.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கங்கள். |
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. | 275—286 |
| 2. | தகவல் கோரல்— | |
| | வினாக்களுக்கான விடைகளைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் குறித்து .. .. | 286 |
| 3. | கவன ஈர்ப்பு— | |
| | (1) 1983 மார்ச் திங்களில் கல்லூரிகளையும், பள்ளிகளையும் மூடிவிடக் கருதியிருப்பதால், பாடங்கள் முடிக்கப்படாத நிலையில் மாணவர்கள் தேர்வு எழுத வேண்டியிருப்பது குறித்து .. .. | 287—288 |
| | (2) மேட்டூர் அணை இருக்கின்ற நகரத்திலேயே 20 லிட்டர் தண்ணீரின் விலை மூன்று ரூபாயாக விற்கப்படும் நிலையில் குடிநீர் பஞ்சத்தால் மக்கள் படும் அவல நிலை குறித்து ... .. .. .. | 288—291 |
| 4. | 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி .. | 291—348 |
| 5. | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 348 |


14314

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1983 மார்ச் 9.

மாசி 25, துந்துபி—திருவள்ளுவராண்டு-2014.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**சலவைத் தொழிலாளர்களுக்கு உரிமம், தொழில் வரி இரத்து செய்தல்**

*137 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் லாண்டரிகள் வைத்து தொழில் செய்யும் சலவைத் தொழிலாளர்களுக்கு லைசன்ஸ், தொழில்வரி ஆகியவை இரத்து செய்திடவேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தமிழகத்திலேயுள்ள சலவைத் தொழிலாளர்கள் கல்வி-பொருளாதார-சமூக நிலையிலே மிகவும் மோசமான நிலைமையிலே இருப்பதை இந்த அரசு உணரும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் வேலை செய்வதற்கு சில பகுதிகளிலே சலவைத் துறை கட்டுவதற்கு என்று ஒதுக்கப்பட்ட நிதியை வைத்து சலவைத் துறை கட்டாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இப்போது செயற்குறிப்பு இல்லாவிட்டாலும், அவர்களுடைய ஏழ்மை நிலைமையைக் கருதி, அவர்களுடைய வருவாய் மிகவும் குறைவாக இருப்பதைக் கருதி, அவர்கள் எடுக்க வேண்டிய லைசென்ஸ், மற்றும் அவர்கள் நகராட்சி, பேரூராட்சி மற்றும்

மாநகராட்சி போன்றவைகளுக்குச் செலுத்த வேண்டிய தொழில் வரியையும் ரத்து செய்யும் வகையில் அரசு அவர்களுடைய நிலைமையைப் பரிவுடன் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இப்போது லைசென்ஸ் கட்டணமாக நாம் பெறுவதும் கூட மிகவும் குறைவான தொகைதான். ஒன்றரை ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்ற அளவுக்குத்தான் மாநகராட்சிகளிலே வசூலிக்கப்படுகிறது. அதேநேரத்திலே அவர்களுடைய பின்தங்கிய நிலைமையைக் கருதித்தான், இப்போது ஊராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில், நாம் வரியை வசூலிக்கவில்லை. சலவைத் தொழிலைப் பொறுத்த வரையில், எந்தவிதமான வரியும் ஊராட்சி மன்றங்கள் மூலமாகப் பெறவில்லை. ஆனால் நகராட்சி, மாநகராட்சிகளில்தான் குறைந்த அளவுக்குக் கட்டணம் வசூலிக்கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஊராட்சிகளில் லைசென்ஸ் பெறுவதில்லை. தொழில் வரியும் அங்கே இல்லை. ஆனால் நகராட்சி, மற்றும் மாநகராட்சியை எடுத்துக்கொண்டால், அங்கே இந்த இரண்டு வரிகளும் பெறப்படுகின்றன. ஆகவே, அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால், அவர்களிடமிருந்து லைசென்ஸுக்குரிய ரூபாய் மட்டும் பெற்றுக் கொண்டு தொழில் வரியை ரத்து செய்யும் உத்தேசம் இந்த அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தொழில் வரியைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே இருக்கும் மத்திய அரசினுடைய விதிமுறையை அனுசரித்துத்தான் நாம் வசூலிக்கிறோம். அதற்கென்று நாம் ஒரு [illegible] வைத்திருக்கிறோம். மாநகராட்சி என்று சொன்னால், வருடம் ஒன்றுக்கு 1,200 ரூபாய்க்கும் அதிகமாகப் பெறுகின்றவர்கள் என்று வைத்திருக்கிறோம். அதேநேரத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சியைப் பொறுத்தவரையில், 1,800 ரூபாய்க்குமேல் பெறுகின்றவர்களுக்கு என்று வைத்திருக்கின்றோம். நகராட்சியைப் பொறுத்தவரையில், 1,200-க்கும் அதிகமாக அரையாண்டு வருமானம் பெறுகின்றவர்கள் என்ற அளவிலே வைத்திருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சலவைத் தொழிலாளர்கள் சலவை செய்ய முடியாத நிலையிலே இருப்பதைக் கருதி, அவர்கள் லைசென்ஸ் பெறுவதிலிருந்து விலக்களித்து மதுரை மாநகராட்சி அதற்கென்று இருந்த விதியை ரத்து செய்திருக்கிறது. அதுபோன்று மற்ற மாநகராட்சிகளிலேயும், நகராட்சிகளிலேயும் இந்த அரசு ரத்து செய்யுமா ? அப்படிச் செய்ய இந்த அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : [illegible] நகராட்சியைப் பொறுத்த வரையில் மட்டும்தான், லைசென்ஸ் கட்டணம் பெறவில்லை. [illegible]



கோவை மாநகராட்சியிலேயும், சென்னை மாநகராட்சியிலேயும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கலாம்.

திரு. த. சந்தோஷம் : சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்தம் செய்பவர்கள் எல்லாரையும் பொறுத்தவரையில், அவர்களை professionals என்று சொல்வதற்கில்லை. அவர்கள் செய்வது profession என்ற அளவிலே இல்லை. அவர்கள் செய்வது ஒரு service தான். அவர்கள் செய்யும் அந்தத் தொழில் மேம்பாடான ஒரு தொழில் என்று கருதுவதற்கில்லை. அவர்கள் செய்யும் தொழில் என்பது மக்களுக்குச் செய்யக்கூடிய ஒரு தொண்டு. ஆகவே, இப்படிப்பட்ட இந்தத் தொழிலுக்கு Profession Tax என்ற முறையிலே பெரிய மேம்பாடான தொழில்களுக்குப் போடும் வரியைப் போல போடுவதை ரத்துசெய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது தொழில் என்று தான் நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். profession இல்லை என்று சொல்ல முடியாது. 'சலவைத் தொழில்', 'சவரத் தொழில்' என்றுதான் நாம் சொல்லுகிறோம். ஒருசில இடங்களிலே இப்போது Air-conditioned Barber Shop என்ற அளவிலே வைத்திருக்கிறார்கள். சலவைத் தொழில் செய்யும் இடத்தில் கூட Air-condition வைத்து, அந்த முறையிலே தொழில் செய்கிறார்கள். இதை ஒரு சிறந்த தொழில் என்று கூட ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது சேவை என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அதேநேரத்திலே வருமானத்தின் அடிப்படையிலேதான் அவர்கள் அந்தத் தொழிலைச் செய்கிறார்கள். யார் வறுமையில் வாடுகிறார்களோ அவர்களைப் பொறுத்தவரையில்தான், நாம் கவலைப்பட வேண்டும். அப்படிப்பட்டவர்களுடைய நிலைமையைப்பற்றி இந்த அரசு கண்டிப்பாகப் பரிசீலனை செய்யும்.

குழுமூர்-அங்கனூர் சாலை

* 138 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், செந்துறை ஒன்றியம் குழுமூர்-அங்கனூர்-தளவாய்-தாமரைப்பூண்டி சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (இ) இச்சாலையில் பழைய அங்கனூரிலிருந்து பாத்தூர் இரயில் நிலையம் வரை (அங்கனூர்-தாமரைப்பூண்டி சாலை வழி-தளவாய்) மேம்பாடு செய்து, ஆணையாரி

ஓடையின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 12.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு கரும்பு சாலை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப் பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

குழுமூரிலிருந்து அங்கனூர் வரை 5.4 கி.மீ. நீளம் சாலையை மேம்பாடு செய்து, ஆணைவாரி ஓடையில் பாலம் கட்டும் பணியினை ரூபாய் 30.00 இலட்சம் மதிப்பீட்டில் 1983-84 ஆண்டின் இரண்டாம் பாகத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிப்பது குறித்து பரிசீலனையில் உள்ளது.

## East Cost Road.

* 139 *Q*.—THIRU D. SANTOSHAM (on behalf of Thiru P. R. THOMAS): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that the amount allocated by the Central Government for East Coast Road is very meagre; and

(*b*) if so, the steps taken by the Government to get more allocation of funds in this connection?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(இ) இப்பொருள் குறித்து 20—8—1982 அன்று பாண்டிச்சேரியில் நடைபெற்ற தெற்கு மண்டல மன்றக் கூட்டத்தில் மாநில அரசால் எழுப்பப் பெற்றது. கிழக்குக் கடற்கரைச் சாலையை மேம்படுத்தும் திட்டத்தை நிலைக் குழு ஆராய்ந்து மன்றத்திற்கு அறிக்கை தெரிவிக்க வேண்டுமென மன்றம் தீர்மானித்தது. இப்பொருள் குறித்து மத்திய அரசின் ஆணையைப் பெற ஒரு நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

திரு. த. சந்தோஷம்: இந்தக் கடற்கரைச் சாலைக்கு மொத்தம் செலவிடப் படும் என்று எதிர்பார்க்கப்படும் தொகை என்ன? மத்திய அரசு எவ்வளவு ரூபாய் இதற்கு என்று கொடுத்திருக்கிறது? இந்த வேலை எந்த அளவுக்கு முடிந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தக் கிழக்குக் கடற்கரையோரச் சாலை ஏறத்தாழ 773 கிலோமீட்டர் நீளமுடையது. இது பல்வேறு மாவட்டங் களின் குறுக்கே செல்லும் சாலை. செங்கை மாவட்டத்திலேயிருந்து, தென்னார்க்காடு, தஞ்சாவூர், முகவை, நெல்லை, குமரி போன்ற மாவட்டங்கள் வழியாகச் செல்லும் சாலை. இதை ஒருவழிச் சாலையாகப் போட வேண்டும் என்று சொன்னால், 52 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. இருவழிச் சாலையாகப் போட வேண்டும் என்று சொன்னால், இதற்கு 80 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இதற்கென்று நான்கு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஏறத்தாழ



88 பாலங்களின் வேலைகள் முடிந்திருக்கின்றன. இப்போதும் கூட மத்திய அரசு மூன்று கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதிலே 50 சதவீதத் தொகையைக் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். பாக்கி ரூபாய், அதாவது 150 லட்சம் ரூபாயை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நமக்கு நாக்கீதுகள் அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இப்போது பணிகளை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. சி. இராமலிங்கம்: நெல்லூர்-அம்பத்தூர் வழியாக ஒரு பைப்பாஸ் ரோடு போடப்போவதாக ஏற்கெனவே மத்திய அரசு அறிவித்து, அதற்கென்று நிதி ஒதுக்குவதாக பத்திரிகையிலே பார்த்தோம். அந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தச் சாலை அமைக்கப்படுமா? அந்தத் திட்டத்தை எந்த வகையிலே மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்த வினா கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்தது. பைப்பாஸ் சாலையைப் பொறுத்தவரையில், தனிக் கேள்வி போட்டால், விவரங்களைச் சொல்லலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கிழக்குக் கடற்கரைச் சாலை, பாதுகாப்புக் கண்ணோட்டத்திலே பார்க்கும்போது, மிகவும் முக்கியமான ஒன்று. ஆகவே, இதற்கு ஆகும் மொத்தச் செலவையும் மத்திய அரசே ஏற்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? இந்தச் சாலை கடற்கரையை யொட்டிப் போவதால், இப்போது காதலர்கள் கார்களிலே காதலிக்கிறார்கள் என்ற புகாரைப் போக்கும் அளவிலே, காதலர்கள் பூங்கா என்று ஆங்காங்கே அமைத்து, அங்கேயெல்லாம் பயணிகள் தங்கி பயனை அனுபவிக்கும் வகையிலே செய்ய இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது ஒரு முக்கியமான சாலை. போர்க்கால நேரங்களில் இந்தச் சாலை மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதால், இதைப் போர்க்கால அடிப்படையிலே செய்ய வேண்டும் என்ற அளவிலே வலியுறுத்தி மத்திய அரசை நாம் கேட்டோம். ஆனால், மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு அப்படிப்பட்ட ஒப்புதல் அளிக்காமல் இதை பொருளாதார-பன்மாநில திட்டத்தின் கீழ் படிப்படியாகச் செய்யும் அளவிலே பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். மேலும், மிகவும் குறைவாகப் பணம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் 150 லட்சம் ரூபாய் தான் கொடுத் திருக்கிறார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உள்ளாக இந்தப் பணியை முடிக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். நாம் அடிக்கடி போய் கேட்டால்தான் ஏதாவது பணம் கொடுப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

## மகசூல் தட்டுப்பாடு

* 140 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் மகசூல் தட்டுப்பாடு அண்மையில் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (அ) புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் அண்மையில் தட்டுப்பாடு ஏற்பட்டதாக அரசுக்குத் தகவல் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இந்த வினா 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலே எழுப்பப்பட்டது. அந்த நேரத்திலே தட்டுப்பாடு இருந்தது. அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: அந்த நேரத்தைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அந்த நேரத்திலே தட்டுப்பாடு இருந்ததாகத் தகவல் இல்லை. ஆகவே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை எழவில்லை.

## செங்காத்தலை வழியாக மீண்டும் பேருந்து விடுதல்

* 141 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேதாரண்யம்-திருத்துறைப்பூண்டி வழித்தடத்தில் செங்காத்தலை வழியாக சென்று கொண்டிருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ள சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை மீண்டும் விட வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (அ) வேதாரண்யம்-திருத்துறைப்பூண்டி வழித்தடத்தில் குரவப்புலத்திற்கும் வேதாரண்யத்திற்கும் (வழி) நெய்விளக்கு இடையே உள்ள சாலை பழுதடைந்திருந்ததால் 6—3—1982 முதல் 12—3—1982 வரை பேருந்துகள் இயக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: இப்படிப்பட்ட முடிவை மேற்கொண்டால், பிறகு பேருந்து முழுவதிலேயும் எதாவது எழுதி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். காரணம், பல இடங்களுக்குப் பல பேர் சென்று பாடியிருக்கிறார்கள். எனவே அவர்கள் சென்ற வழித்தடங்களிலெல்லாம் பாடல்களை எழுதி வைப்பது என்பது சரியல்ல.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த வழித்தடத்தில் குறைவான எண்ணிக்கையிலேயே பேருந்துகள் இயக்கப்படுவதன் காரணமாக அந்தப் பகுதிகளில் பயணம்செய்கிற பொதுமக்களும், உப்பளத் தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அந்த வழித்தடத்தில் இன்னும் கூடுதலாக நகரப் பேருந்துகளையும், இதர பேருந்துகளையும் விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: அந்த வழித்தடத்தில் 52 நடைகள் பேருந்துகள் இயக்கப்படுவதாக எனக்குக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவைகள் முழுவதுமே அந்த வழித்தடத்தில் செல்லுகின்றனவா என்று பார்க்க வேண்டும். எனினும் தேவை என்ற நிலை இருக்குமானால், போக்குவரத்துத் துறை நிச்சயமாக அனுதாபத்துடன் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Additional Town Bus between Vellore and Reddipalayam*

*142 *Q.*—THIRU D. SANTOSHAM (on behalf of Thiru C. R. LAKSHMIKANDHAN): Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether any representation has been received by the Government during September, 1982, from the Villagers of Reddipalayam, Arani Taluk, North Arcot District, to ply an additional Town Bus by the Thanthai Periyar Transport Corporation between Vellore and Reddipalayam in Route No. 11; and

(b) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) நகர பேருந்து நிலவரம் முன்னேற்றம் அடைந்தபின் வேலூர்-ரெட்டிப்பாளையம் வழித்தடத்தில் கூடுதலாக ஒரு பேருந்தை இயக்க தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது.



## *Prohibition Cases.*

*143 *Q.*—THIRU D. SANTOSHAM
Thiru C. R. LAKSHMIKANDHAN &
Dr. T. R. JANARTHANAM
Will the Hon. the Minister for Khadi and Public Works be pleased to state:

(*a*) the number of cases pending in the various Magistrates' Courts in Tamil Nadu, as on 15th July 1981, under the Tamil Nadu Prohibition Act;

(*b*) whether there is any proposal to withdraw those cases; and

(*c*) if so, when they will be withdrawn?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: (அ), (ஆ) மற்றும் (இ) 1—9—1980 முதல் 31—7—1981 வரை 17,576. நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள கீழ்க்கண்ட வழக்குகளை திரும்பப் பெறவேண்டும் என்று அரசு ஆணை எண் 269, ம & ஆ, நாள் 16—10—1981-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி

(1) மது அல்லது போதை தரும் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்ததற்காகவோ, ஏற்றுமதி செய்ததற்காகவோ, கடத்தப்பட்டதற்காகவோ அல்லது வைத்திருந்ததற்காகவோ 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4 (1) (a)-ன்படி தொடரப்பட்ட வழக்குகள்.

(2) தனக்குச் சொந்தமான அல்லது தன் வசம் இருந்த மரங்களில் இருந்து கள் இறக்கியதற்காக அல்லது இறக்க அனுமதித்ததற்காக, 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4 (1) (e)-ன்படி தொடரப்பட்ட வழக்குகள்.

(3) மது அல்லது போதை தரும் மருந்துப் பொருட்களை அருந்தியதற்காகவோ அல்லது வாங்கியதற்காகவோ 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4 (1) (j)-ன்படி தொடரப்பட்ட வழக்குகள்.

(4) மது அருந்திய நிலையில் பொது இடத்திலோ அல்லது தனியார் இடத்திலோ இருந்ததற்காக 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4-A ன்படி தொடரப்பட்ட வழக்குகள்.

இந்த ஆணையின்படி, இதுவரை 4,455 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் இருந்து உள்ளூர் காவலர் மற்றும் மதுவிலக்கைச் செயற்படுத்தும் காவல் பிரிவினரால் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

திரு. த. சந்தோஷம்: இந்தக் கேள்வி சுமார் 1¾ ஆண்டுக்கு முன்பு போடப்பட்டது. அப்போது அநேக வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவைகளில் பெரும்பாலானவை அரசால் திரும்பப் பெறப்பட்டதாக அறிகிறேன். ஆனாலும் இன்னும் 4 (1) (ஜே) என்ற செக்ஷனில் வழக்குப் போடுகிற நிலைமை நீடிக்கிறது. அதை எப்படிப் போடுகிறார்கள் என்றால் "4(1) (J) read with section 75 of the City Police Act" என்று சேர்த்துப் போடுகிறார்கள். இந்தக் குற்றம் சாதாரணமாக செக்ஷன் 75 ஆஃப் தி சிட்டி போலீஸ் ஆக்ட்-ன் கீழேயே வந்துவிடுகிறது. இருந்தாலும் 4 (1) (ஜே) என்று சேர்த்துப் போடுகிறார்கள். இப்படிப்பட்ட முறையில் வழக்குகள் போடப்படுவதன் காரணமாக, அரசாங்கத்தால் ஏலம் விடப்பட்ட போது, கள் மற்றும் சாராயக் கடைகளுக்கான ஏலம் எடுத்தவர்கள் தங்களுடைய விற்பனை பாதிக்கப்படுவதாகப் புகார் சொல்லுகிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு வெறும் எக்சைஸ் ஆக்ட்-ன் கீழேயே வழக்குகளைப் போடலாம். அரசாங்கத்திலேயே லைசென்ஸ் கொடுத்து கள், சாராயக் கடைகளை அனுமதித்துவிட்டு, அப்படிக் குடிப்பவர்கள் மீது மதுவிலக்குச் சட்டப் பிரிவின்கீழ் வழக்குப் போடுவது கள் சாராயக் கடைக்காரர்களின் விற்பனையைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது. செக்ஷன் 75-ன் கீழேயே 'டிரங்கன்னஸ் அண்டு டிஸ்-ஆர்டர்லி மேனர்ஸ்' எல்லாம் வந்துவிடுகிறது. எனவே மதுவிலக்குச் சட்டத்தை எடுத்துவிட்டு எக்சைஸ் சட்டத்தின்கீழ் மட்டும் உரிய திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: அதுபற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விவரமான விளக்கம் அளிக்க இயலும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இப்போதுள்ள நிலைமையில் கள்ளாடித் தள்ளாடி நடைபெற்ற வழக்குகளும், குற்றங்களும் குறைந்திருக்கின்றன என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: நிச்சயமாகக் குறைந்து கொண்டுதான் இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் 1¾ ஆண்டுகளுக்குப் பிறகு இந்த வினாவிற்கான விடை வந்திருப்பதாகச் சொன்னார். இதற்கு மேலவையின் அலுவலகம் காரணம் அல்ல. இதில் சம்பந்தப்பட்ட துறைகள்தான் அக்கறை செலுத்த வேண்டும். மாண்புமிகு அமைச்சர்களும் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.



## ஓய்வுபெற்ற பொறியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்காமை

* 144 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977 ஆம் ஆண்டுக்குப்பின் தமிழ்நாட்டில் ஓய்வுபெற்ற செயற் பொறியாளர், துணை செயற்பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர் (Superintending Engineer) துணைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் ஆகியோர்களில் இதுவரை ஓய்வு ஊதியம் வழங்கப்படாமல் இருப்பவர்கள் தரம் வாரியாக எத்தனை பேர்?

(இ) அதற்குரிய காரணம் யாது?

(உ) அவர்களுக்கு உடனடியாக ஓய்வு ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை ஏதும் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: (அ) 1977 ஆம் ஆண்டுக்குப் பின் தமிழ்நாட்டில் பொதுப்பணித்துறையில் ஓய்வுபெற்ற பொறியாளர்களில் ஓய்வு ஊதியம் வழங்கப்படாமலிருப்பவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| (1) தலைமைப் பொறியாளர் | 3 |
| (2) மேற்பார்வைப் பொறியாளர் | 1 |
| (3) செயற்பொறியாளர் | 4 |
| (4) உதவிசெயற்பொறியாளர் | 2 |
| மொத்தம் .. | 10 |

(இ) மூவர் தன்விருப்பப்படி ஓய்வு பெற்றவர்கள். இந்த மூன்று பேருக்கு ஓய்வு ஊதிய அறிக்கை தலைமைக் கணக்காயரிடம் இருந்து வந்த பின் ஓய்வு ஊதியம் வழங்கப்படும். மற்ற ஏழு பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் ஓய்வு ஊதிய விதிகளின்படி இவர்களுக்கு ஓய்வு ஊதியம் அளிக்க வகையில்லை. ஆனால் இந்த ஏழு பேர்களில் ஆறு பேருக்கு தற்காலிக ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. மற்ற ஒருவருக்கு தற்காலிக ஓய்வு ஊதியம் வழங்கப் பரிசீலனையில் உள்ளது.

(உ) ஓய்வு ஊதிய விதிகளின்படி, இவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் முடிவடைந்து இறுதி ஆணைகள் வெளியிட்டபின் அவர்களுக்கு அளிக்க வேண்டிய இறுதி ஓய்வு ஊதியம் வழங்க மேல் நடவடிக்கை தக்க சமயத்தில் எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இதுபோன்று நடவடிக்கைகள் எடுக்கும் போது, அவர்களுக்குரிய ஓய்வூதியத்தில் பாதித் தொகையையாவது தருகிற விதிமுறைகள் நடைமுறையில் இருக்கின்றனவா. அப்படிச் செய்வது, ஓய்வு பெறுகிறவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன்: நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுக் கொண்டிருக்கும்போதே அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்ற விவரத்தை நான் இங்கே தெரிவித்திருக்கிறேன். ஆகவே, சூழ்நிலை, சந்தர்ப்பம் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவைகளைப் பொறுத்து, அரசு பரிசீலனை செய்து உரிய முடிவெடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

வினாக்களுக்கான விடைகளைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் குறித்து.

Thiru A. R. DAMODARAN: Hon. Chairman, Sir, the Question-hour is over. I request your permission to submit one point. Out of 374 questions that are pending as on 1st March 1983, 49 questions have been pending for three months. 143 questions have been pending for 6 months, 129 questions have been pending for one year and 53 questions have been pending for over two years. I do not think it is fair on the part of the Government to delay replying. I request you to kindly issue a directive. May I also plead that in future when questions are put, the date of the questions may also be included in the Agenda papers?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் முன் கேள்வியில்போதே சொன்னேன். இந்த அவையில் முன்பே பலமுறை சொல்லியிருக்கிறேன். மேலவை அலுவலகத்தைப் பொறுத்தவரையில், இங்கே பெறப்படும் வினாக்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உடனே அனுப்பப்பட்டு விடுகின்றன. அதோடு நினைவூட்டுக் கடிதங்களும் திரும்பத் திரும்ப அனுப்பப்படுகின்றன. எனவே அமைச்சர்கள் தங்கள் தங்கள் துறைகளில் வினாக்களுக்கான பதில்களை அனுப்புவதில் தடைப்படாமல் பார்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.



(முற்பகல் 9-50)

3. கவன ஈர்ப்பு.

(1) 1983 மார்ச் திங்களில் கல்லூரிகளையும் பள்ளிகளையும் மூடிவிடக் கருதியிருப்பதால், பாடங்கள் முடிக்கப்படாத நிலையில் மாணவர்கள் தேர்வு எழுத வேண்டியிருப்பது குறித்து.

Thiru K. MEENAKSHISUNDARAM: Mr. Chairman, Sir I wish to a to call the attention of the Hon. the Minister for Education matter of urgent public importance, namely, "the confusion caused in the minds of the student community regarding the proposed closure of Colleges and Schools during March 1983 much before the completion of their studies and writing of their examinations."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 31—3—1983-க்கு முன்னதாக பள்ளிகளையும், கல்லூரிகளையும் மூடிவிட வேண்டும் என்று சொல்லுகின்ற இந்த விவர அறிக்கையிலே ஞாயிற்றுக் கிழமைகளிலேகூட தேவையானால் பணியாற்றி பாடத் திட்டங்களை முடித்து தேர்வுகள் வைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உலக நாடுகள் எல்லாம் ஞாயிற்றுக்கிழமையை விடுமுறையாக வைத்திருக்கின்ற நிலைமை நம்முடைய அரசுக்கு நன்றாகத் தெரியும். கிறித்துவர்கள் அன்றைய தினம் ஆலயங்களுக்குச் சென்று தொழுகை செய்யும் நாள் என்பது நன்றாகத் தெரியும். ஆகவே அவர்களுடைய மத நடவடிக்கைகளில் குறுக்கிடுவதாகக் கூட இந்த ஆணை அமைந்திருக்கிறது. தேவையானால் அவற்றை ரத்து செய்து சிலபசைக் குறைத்து ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: எஸ்.எஸ்.எல்.சி. ஹையர் செகண்டரி என்ற இரண்டு வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு இருக்கும் காரணத்தால், இந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இந்த இரண்டு வகுப்புகளைப் பொறுத்தவரையில், டிசம்பர் மாதத்திலே சிலபசை முடித்து சனவரி மாதத்தில் ரிவிஷன் நடந்து கொண்டிருக்கும் என்பதால், அந்த வகுப்புகளை பாதிக்காது. மற்ற வகுப்புகளைப் பொறுத்தவரையில், கேள்விப் பேப்பரில் தேவையான மாற்றங்களைச் செய்துகொள்ளும் அதிகாரம் அந்தந்தப் பள்ளிகளுக்கே இருக்கிறது. ஆகவே மாணவர்களைப் பாதிக்காத சூழ்நிலை இருக்கிறது.

---

@ 349-350 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## 288. 1983 மார்ச் திங்களில் கல்லூரிகளையும், பள்ளிகளையும், மூடிவிடக் கருதியிருப்பதால், பாடங்கள் முடிக்கப்படாத நிலையில் மாணவர்கள் தேர்வு எழுத வேண்டியிருப்பது குறித்து

[1983 மார்ச் 9

ஞாயிற்றுக்கிழமை பிரச்சினை குறித்து, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி என்னைச் சந்தித்து ஏற்கெனவே சொன்னதன் பேரில், அந்த உத்தரவை நாங்கள் மாற்றிப்போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, உத்தரவு மாற்றப் பட்டதற்குப் பின்னாலே அதை இந்த அறிக்கையிலே சேர்த்திருக்க வேண்டாம் என்று கருதுகிறேன். அதைச் சேர்த்திருப்பதால்தான், இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1—4—1983-க்குப் பின்னாலே தண்ணீர் கட்டுப்பாடு காரணமாக பள்ளிகளை மூடும்போது சத்துணவுத் திட்டம் நடைமுறையில் இருக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பள்ளியும் நடத்து, சத்துணவு அளிப்பதும் நடைபெறுவதைவிட வெறும் சத்துணவு அளித்தல் மட்டும் நடைபெறுவதில் சிரமம் குறைவாகத்தான் இருக்கும். சமுதாயத்தின் தன்மையை அடிப்படையாக வைத்து மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேட்டால் நமக்கும் பதில் சொல்வதற்கு நல்லதாயாக இருக்கும். இப்போது வறட்சி நிலைமை இருக்கும் காரணத்தால், பள்ளிகளை மூடுகிறோம். இது ஒன்றும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாதது அல்ல. சத்துணவுத் திட்டத்தை அவர் மூடச் சொல்லுகிறார் என்றால், குழந்தைகளுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. இருக்கின்ற கஷ்டத்தோடு அதையும் போடுவோம். மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்பதைப் பற்றி நான் குறை கூறவில்லை. பொது நன்மையை முதலில் வைத்து ஆசிரியர்களுடைய நன்மையை அதன் கீழ் வைத்து கேள்வியைக் கேட்டால், அது சரியாக இருக்கும்.

(2) மேட்டூர் அணை இருக்கின்ற நகரத்திலேயே 200 லிட்டர் தண்ணீரின் விலை மூன்று ரூபாயாக விற்கப்படும் நிலையில் குடிநீர்ப் பஞ்சத்தால் மக்கள்படும் அவலநிலை குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. க. மீனாட்சிசுந்தரம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எப்படி படிப்பது என்றே தெரியவில்லை. என்ன கவன ஈர்ப்புத் தீர்மானம் என்ற விவரம் இதிலே இல்லை. விவரத்தை இதிலே போடும் வழக்கமுண்டு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நிகழ்ச்சி நிரலில் போடப்பட்டிருக்கிறது.



1983 மார்ச் 9]

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பொருளைப்பற்றி இந்த விவர அறிக்[illegible] மேலேயே போடப்பட்டிருக்கும். முந்தைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கூட . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அது ஒரு குறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் மேற்கொண்டு பேசலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தேடிக் கொண்டிருக்க வேண்டியுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முதலில் ஆங்கிலத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கூறியபோது நானும் தேடினேன். தாங்கள் ஆங்கிலத்தில் சொன்னதைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருந்தது. ஆகவே தேடினேன். எனக்கு உள்ளதில் தமிழில் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். உறுப்பினர் ஆங்கிலத்தில் கூறியபோது அது அவருடைய உரிமை என்று அனுமதித்தேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"மேட்டூர் அணை இருக்கின்ற நகரத்திலேயே 200 லிட்டர் தண்ணீரின் விலை ரூபாய் மூன்றாக விற்கப்படும் நிலையில் குடிநீர்ப் பஞ்சத்தால் மக்கள் படும் அவலநிலை குறித்து."

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே, மேட்டூர் நகரியப் பகுதியில் நாள் ஒன்றுக்கு அதாவது 1983 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நாள் ஒன்றுக்கு 124 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுகுறித்து ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். டில்லியிலே ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 200 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது, கல்கத்தாவிலே நபருக்கு நாள் ஒன்றுக்கு 200 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது, பம்பாயிலே நாள்

@ 350-351ஆம் பக்கங்களில் இணைப்பு IIஆக அச்சிடப்பட்டுள்ளது

ஒன்றுக்கு ஒரு நபருக்கு 125 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது: ஆனால் மேட்டூர் அணைப் பகுதியில் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 124 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதனால் அங்கே தண்ணீர் பஞ்சம் மிக அதிகமாக இருப்பது தெரிய வருகிறது. வழங்குகிற அளவை இனிமேலாவது அதிகப்படுத்தும் முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** டில்லியைப் பொறுத்தவரையில் அங்கே ஆசிய விளையாட்டுப் போட்டி நடந்தது. அங்கே அதிகப் பணம் செலவழிக்கப்பட்டது. சென்னையைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட நிலையில் ஆசிய விளையாட்டுப் போட்டி வந்தால், மத்திய அரசாங்கம் பணம் கொடுத்தால், நல்ல முறையிலே தமிழ் நாட்டைச் செழிப்பாக்க முடியும்.

அதே நேரத்தில் மேட்டூரைப் பொறுத்தவரையில், 113 லிட்டர் நாள் ஒன்றுக்கு கொடுக்கக் கூடிய திட்டம் 1977-ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆகவே போதுமானது என்று புள்ளிவிவரங்கள் எடுத்துச்சொல்லுகின்றன. ஆனாலும் கூட அதற்கு மேலாக 124 லிட்டர் என்ற வகையில் அளித்துக் கொண்டிருக்கிறோம். இரண்டாயிரத்து ஒன்றில் இருக்கும் என்று எதிர் பார்க்கும் மக்கள் தொகையைக் கணக்கில் வைத்து திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. கொடுக்கக்கூடிய தண்ணீர் போதுமானதாக இருக்கிறது.

மேலும் இப்படியொரு தவறான செய்தியை அவைக்குக் கொண்டு வந்து கொடுப்பது சரியாக இருக்காது. ஏனென்றால் கடந்த 3—2—1983 அன்று இதுவும் சேலம் மாவட்டத்திலே சில பத்திரிகைகளில் செய்தியாக வெளியிடப் பட்டது. கடைசியில் இதை யார் வெளியிட்டார்கள் என்று போலீஸ் மூலமாக, அதிகாரிகள் மூலமாகத் தேடிப்பார்த்தும் ஆள் கிடைக்கவில்லை. அந்தச் செய்தி பொய்ச் செய்தி என்று தெரிகிறது. வேண்டுமென்றே பற்றாக்குறை இருப்பதைப் போல நிலைமையை உருவாக்குவது சரியாக இருக்காது. இந்தச் செய்தி தவறான செய்தி என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் நேரிடையாகச் சென்று ஊர்களுக்குப் போய் பார்த்து இங்கே கேள்வியை எழுப்ப முடியாது. பத்திரிகையில் வருவதைப் படித்துவிட்டுத் தான் மேற்கொண்டு விளக்கம் பெறுவதற்காக கவன ஈர்ப்புத் தீர்மானம் போன்றவற்றை எழுப்ப முயற்சி செய்கிறோம். அவைக்குத் தவறான தகவலை



நான் தரவில்லை. பத்திரிகை வேண்டுமானால் தவறான தகவலைத் தந்திருக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம். அங்கே 124 லிட்டர் தண்ணீர் வழங்குகிற நம்முடைய உள்ளாட்சித் துறை சென்னையில் மட்டும் 60 லிட்டர் தண்ணீர்தான் வழங்குகிறது. அதே 124 லிட்டர் தண்ணீரை சென்னையிலும் வழங்க அரசு முன்வருமா

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்வது, தினசரி பத்திரிகைகளைப் படிக்கிறவர்கள் நல்ல பத்திரிகைகளாகப் பார்த்துப் படிக்க வேண்டும், நல்லெண்ணத்தின் அடிப்படையில் செய்திகளைப் போடுகிற பத்திரிகைகளை வாங்க வேண்டும், படிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்பதுதான். வேண்டுமென்றே புகார் கூறுவது, அரசின் மீது களங்கம் சொல்லுவது, அதன் மூலம் பணம் சம்பாதிப்பது என்ற நிலை பத்திரிகை உலகத்திலே இன்றைக்கு இருக்கிறது. இந்த அரசுக்கு அவதூறு, களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றே இது போன்ற செய்தியை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சென்னையைப் பொறுத்தவரையில், ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குக் காரணம் சென்னையிலே இருக்கக் கூடிய தண்ணீர் பற்றாக்குறைதான். இங்கே 124 லிட்டர் கொடுக்க வேண்டுமென்றால், கண்டிப்பாக முடியாது இப்போது இருக்கக் கூடிய நிலையில்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, எந்தப் பத்திரிகை நல்ல பத்திரிகை என்ற செய்தியையும் சேர்த்துச் சொல்லியிருந்தால் நலமாக இருக்கும்.

(முற்பகல் 10-00)

## 4. 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. நீலநாராயணன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தொடரில் இந்த அறிக்கை, இந்த நிதிநிலை அறிக்கை 4-வது அறிக்கையாக

[திரு. நீலநாராயணன்] [1983 மார்ச் 9

வந்திருக்கிறது. நான்காவது அறிக்கை என்று சொல்கின்றபோது, தரத்திலேயும் நான்காவதாக அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். நலிந்தும், மெலிந்தும் இந்த அறிக்கை இன்றையதினம் இங்கே வைக்கப் பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கை என்னும்போது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த நாட்டிற்கு எந்தெந்தத் திட்டங்களை நாட்டு நலன் களுக்காக வைக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ அந்தத் திட்டங்களை உள்ளடக்கி சென்ற ஆண்டு இன்னின்ன திட்டங்களை நாங்கள் அறிவித்தோம், அதற்காக இவ்வளவு நிதியினை நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம், அந்தத் திட்டங்களிலே இன்னின்ன திட்டங்கள் முடிவுபெற்றிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதோடுகூட, அடுத்த ஆண்டு இன்னின்ன திட்டங்களை நாங்கள் நிறைவேற்ற இருக்கிறோம், அதற்காக இன்னின்ன நிதியினை ஒதுக்கியிருக்கிறோம் என்று வகைப்படுத்தி தொகுத்துக் கூறுவதுதான் அரசியல் கட்சிகள், ஆரோக்கியமான அரசியலை நடத்திக்கொண்டிருப்பவர்கள் நிதிநிலை அறிக்கையிலே கூறுகின்ற கருத்துக்கள் ஆகும். ஆனால் நம்முடைய துரதிருஷ்டம் இந்த ஆண்டு நம்முன்னே வைக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கை அப்படிப்பட்ட கருத்துக்களைக் கொண்டதாக இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக நான் சொன்னால் யாரும் மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

கைதேர்ந்த ஒரு கணக்குப்பிள்ளை தரும் வரவு-செலவுப் பேரேட்டை எடுத்து வைப்பதுபோல இன்றைய தினம் வைக்கப்பட்டிருக்கின்றதே அப்படித் தான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துவிட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

எடுத்தவுடனேயே ஒரு பற்றாக்குறை பட்ஜெட்டாக இன்றைய பட்ஜெட் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நாம் பற்றாக்குறை பட்ஜெட் என்று சொல்லும் போது, 159.55 கோடி ரூபாய் துண்டு விழுந்துள்ள அந்தப் பற்றாக்குறை பற்றி மட்டும் சொல்லவில்லை. அது எப்போதும் இருக்கின்ற நிலைமை. ஆனால் இந்தத் தடவை ஆரம்பிக்கின்றபோதே பற்றாக்குறை பற்றாக்குறை என்ற பல்லவியை முன் வைத்து, இந்த அறிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அரிசிப் பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை, மின்சாரப் பற்றாக்குறை என்று அடுக்கிக்கொண்டே போகலாம். அவர்களே அதைப் பகுத்து பாரா பாராவாக இங்கே குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பற்றாக்குறைகள் ஏன் வந்தன என்று கூறுகின்றபோது, வள்ளுவரைத் துணைக்கு அழைத்து நாட்டிலே பருவ மழை பொய்த்துவிட்டது என்று எடுத்துக்காட்டி காரணங்களை எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.



1983 மார்ச் 9] [திரு. நீலநாராயணன்]

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி"

என்ற குறளை இங்கே எடுத்துக்கூறி, விண்ணும் பொய்த்துவிட்டதால் நாட்டிலே மழையில்லை, ஆகவே மக்கள் அவதிப்படுகின்றார்கள் என்ற பொருள்பட இந்தக் குறளை இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். பருவமழை பொய்த்துவிட்டால், நாட்டிலே பல அவதிகள் ஏற்படத்தான் செய்யும். இல்லை என்று நான் மறுக்கவில்லை. ஆனால் அதே வள்ளுவர் பருவ மழை எப்போது பொய்க்கும் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். மழை பெய்யவில்லை, விண்ணும் பொய்த்துவிட்டது, இதற்கு யார் காரணம் என்று கேட்டால், இயற்கைக் கோளாறுக்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று ஆளுகின்றவர்கள் கூறக்கூடும். ஆனால் வள்ளுவர் கண்ணோட்டத்திலே கூறினால்,

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்"

அரசு முறை தவறி நாட்டை ஆளுகின்ற நிலை ஏற்பட்டால், நிச்சயமாக அந்த நாட்டிலே வானம் பொய்க்கும். அதன் காரணமாக பல இன்னல்கள் ஏற்படும் என்பதை வள்ளுவர் கூறியிருக்கிறார். இன்னும் தெளிவாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதுபோல், நாவலர் பாஷையிலே சொல்வது என்றால், திருவள்ளுவர் அவர்கள் தேர்ந்து தெளிந்து கூறுகிற உலகியல் உண்மை இது. அரசு முறைப்படி ஆட்சி செய்யாமல் முறை தவறி ஆட்சி நடக்கும் என்று சொன்னால், அந்த நாட்டிலே இப்படிப்பட்ட இன்னல்கள் ஏற்படத்தான் செய்யும் என்பதை வள்ளுவர் அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, திருவள்ளுவர் அவர்கள் இன்னொன்றையும் கூறியிருக்கிறார்கள்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் ஒரு நல்ல அறிவுரையைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சொல்கிறேன். அதை முன் வைத்து உறுப்பினர் அவர்கள் இவ்வளவு தூரம் பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருவேளை ஐநீகத்திற்குப் போய் அதில் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆக்கபூர்வமானவைகளை நம்பி வருவதைக் கேட்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

[1983 மார்ச் 9

**திரு. நீலநாராயணன்:** குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் இந்த அரசு இந்தப் பிரச்சினையை எந்த முறையிலே அணுகியிருக்கிறது என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். நிதிநிலை அறிக்கையைப் புரட்டினால், நிலத்தடி நீரைக் கொண்டு வருவதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி அதில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆழ் கிணறுகள் 22 இங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தாமரைப்பாக்கத்திலிருந்து புழலேரிக்குக் குழாய்கள் அமைத்து தண்ணீரைக் கொண்டு செல்கின்ற ஏற்பாடுகளைப்பற்றி இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 10,200 குழாய்க் கிணறுகள் போடப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. 130 லாரிகள் தண்ணீரை நிரப்பிக்கொண்டு 1,255 ஊருக்குத் தொட்டிகளிலே கொண்டுபோய் ஊற்றுகின்ற அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் இங்கே கூறியிருக்கிறார்கள். இங்கே கூறப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டங்கள், இந்தப் பணிகள் சென்னை நகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்குத் தற்காலிக ஏற்பாடாக அமைந்திருக்கிறதே அல்லாமல், நிரந்தரமாக சென்னை நகர குடிநீர்ப் பிரச்சினைக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே பல திட்டங்கள் சென்னை நகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்காக கடந்த காலத்திலே கொண்டுவரப்பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே வீராணம் திட்டத்தை இங்கே கொண்டுவந்தது சென்னை நகரத்திற்கு என்று. ஆனால் அந்தத் திட்டத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே கிடப்பிலே போட்டுவிட்டார்கள். சென்னை நகர மக்களுக்கும் இந்த ஆட்சியாளருக்கும் என்ன மனத்தாங்கலோ அது நமக்குத் தெரியாது. ஆனால் இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. அதற்குப் பதிலாக 1981-82-ல் கட்டளைக் கால்வாய்த் திட்டம் என்று ஒன்றை இங்கே அறிவித்தார்கள். இதே மன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. வீராணம் போனாலும் பரவாயில்லை. கட்டளைக் கால்வாய் வந்ததே, சென்னை நகர மக்களுக்கு கதி மோட்சம் கிடைக்கும் என்று அன்றையதினம் கருதினோம். உண்மையிலேயே அதை நாம் வரவேற்றோம். ஆனால் அடுத்த ஆண்டு 1982-83-ல் அந்தக் கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை கல்லறைக்கு அனுப்பிவிட்டு புதிதாக கிருஷ்ணா நதித் திட்டத்தை இங்கே கொண்டு வந்தார்கள். வீராணம் திட்டத்தை கிடப்பிலே போட்டுவிட்டார்கள்; பிறகு கட்டளைக் கால்வாய்த் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதையும் கல்லறைக்கு அனுப்பி விட்டார்கள். பின்னாலே கிருஷ்ணா நதித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.



1983 மார்ச் 9] [திரு. நீலநாராயணன்]

(மாற்றுத் தலைவர் திரு. பா. ரா. தாமஸ் தலைமை)

(முற்பகல் 10-10)

அதனுடைய நிலை எப்படி இருக்கிறது என்று தெரிந்துகொள்வதற்காக 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும், அதைப்பற்றித் தெளிவாக இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையிலே, குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சென்னை நகர மக்களை எந்த இடத்திலே கொண்டு போய் நிறுத்துவார்களோ, நமக்குத் தெரியவில்லை. உண்மையிலேயே இந்த அரசு குடிநீர்ப் பிரச்சினையில் ஒரு மோசமான கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாற்றுத் தலைவரவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த அளவில், ஒரு நல்ல திட்டத்தை, உருப்படியான திட்டத்தை சென்னை மாநகருக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த அரசு பல்வேறு திட்டங்களைப் பரிசீலனை செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் கிருஷ்ணா நதி நீர் திட்டத்தைக் கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்திலே இதே சென்னை நகரத்தில், இப்போது எப்படி குடிநீர்ப் பற்றாக்குறை நிலவிக் கொண்டிருக்கிறதோ அதே போன்ற நிலை கடந்த 1974-75-லும் இருந்தது. அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும், அன்றைய முதல்வராகவும் இன்றைய எதிர்க் கட்சித் தலைவராகவும் இருக்கும் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டம்தான் செயற்கை மழை பெய்விக்கும் திட்டம். செயற்கை மழை பெய்விக்கிறேன் என்று சொல்லி, மக்களுடைய வரிப் பணத்தை ஏறத்தாழ 70 லட்சம் ரூபாய்க்கு மேல் பாழடித்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கண்டிப்பாக மறந்திருக்க மாட்டார்கள். ஏனென்றால் அமெரிக்காவிலிருந்து விமானம் கொண்டுவருகிறேன், ஓடிக்கொண்டிருக்கும் மேகத்தை நிறுத்தி மழை பெய்விக்கிறேன் என்று அன்றைக்கு விழா எடுத்து, கடைசியில் விழாவிற்கு வந்துள்ள பெரியோர்களைப் பார்த்து, "யார் யார் குடை கொண்டு வந்திருக்கிறீர்களோ அவர்கள் எல்லாம் குடையை விரித்துப் பிடித்துக் கொள்ளுங்கள்; துண்டு கொண்டு வந்துள்ளவர்கள் அதைத் தலைமேல் போட்டுக்கொள்ளுங்கள்" என்றெல்லாம் சொல்லி விழா எடுத்தார்கள். ஓடிய மேகம் கூடவில்லை, மழையும் பெய்யவில்லை. எழுபது லட்சம் ரூபாய் பாழானது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அப்படிச் செயற்கை மழை பெய்விக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 மார்ச் 9

**திரு. நீலநாராயணன்:** மாற்றுத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம், கடந்த காலத்திலே, 1974-லே இந்த நாட்டு மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க எடுத்துக்கொண்ட முயற்சிகளைப்பற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். நாங்கள் சும்மா இருக்கவில்லை. எப்படியாவது சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டுமென்ற ஆதங்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் முயற்சி செய்தன் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித் கொள்கிறேன். அந்தத் திட்டம் எப்படிப்பட்ட திட்டம், அது எந்த வகையி தோல்வி அடைந்தது என்பதைப்பற்றி இங்கே சொல்ல விரும்புகிறேன். அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பல்ல. அந்த சமயத்திலே அந்த எண்ணத்தை, அந்தத் திட்டத்தை உருவாக்கியவர்கள் அதிகாரிகள். அவர்கள் எந்த அளவிற்கு முன் நின்று வேலை செய்திருக்கிறார்கள் என்பதை தான் அது காட்டிக் காட்டுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். ஆனால் 1974-லே ஏற்பட்ட குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவிற்குப் பணியாற்றியது, செயலாற்றியது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோதும், இப்போது ஏற்பட்டிருக்கின்ற நிலைமையை எண்ணிப் பார்க்கின்றபோதும், ஒரு வித்தியாசத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இன்றைய தினம் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடப்படும் என்ற திட்டம்—இது 1974-ல் வரவில்லை. அந்த அளவிற்கு சென்னை மக்களை திராவிட முன்னேற்றக் கழகம் துரத்தி அடிக்கவில்லை. தங்களால் இயன்ற அளவிற்கு கஷ்டப்படும் மக்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கருதியதால், அதற்கு அன்றைய தினம் பரிகாரம் காணப்பட்டது. இந்த அளவிற்குப் பற்றாக்குறை ஏற்பட இடம் வைக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இப்போதாவது நாங்கள், 'ஆல்டர்நேடிவ் டேஸ்' என்ற முறையில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 1974-ல் தண்ணீரும் கொடுக்காமல், அதற்கு மாற்று முறையையும் காணாமல் இருந்தார்கள்.

**திரு. நீலநாராயணன்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் தவறான தகவல் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன். இப்படி ஒரு திட்டத்தை நாம் ஏன் நடைமுறைப்படுத்துகிறோமென்பது



1983 மார்ச் 9] [திரு. ப. குழந்தைவேலு]

மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். பற்றாக்குறை இருக்கும்போது பகிர்ந்தளிக்கும் சூழ்நிலையில், அரசுக்குக் கட்டாயம் ஏற்படுகிறது என்று சொல்லும்போது, நாம் மிக மிக எச்சரிக்கையாக இருந்து, இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே இப்படிப் பட்ட முறையில் அணுக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வேண்டுமென்றே மக்களை விரட்டி அடிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் செய்கிறது என்ற கருத்தைக் கூற வேண்டாமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இப்படி இருந்தது. அப்போது இப்படிப்பட்ட முறையைக் கைக்கொள்ளவில்லை. ஆனால் தண்ணீர் கிடைக்காத நிலைதான் சென்னையில் இருந்தது.

**திரு. நீலநாராயணன்:** என்னுடைய கருத்து, ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுக்கும் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவர வில்லை என்பதுதான்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1974-75-ல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுத்தார்கள். 29 மில்லியன் காலன் வரையில் குறைந்துவிட்டது. வேண்டுமென்றால் நான் எழுத்து மூலமாக மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் எத்தனை மாதம் கொடுத்தார்கள், எவ்வளவு கொடுத்தார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன். ஒரு வாரத்தில் வேண்டுமானால் கொடுக்கிறேன். அப்படி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டது.

**திரு. நீலநாராயணன்:** கொடுக்கும்போது சொல்கிறேன். அடுத்து, குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒன்று சொல்ல விரும்புகிறேன். மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலி அறுக்க வேண்டும் என்ற மோசமான பழமொழி இருக்கிறது. அதைக் கொண்டிருக்கிறார்களோ என்று கருதும் அளவிற்கு இருக்கிறது. வீராணம் திட்டத்தை நடைமுறைப்படுத்தி யிருந்தால், இந்தச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்காது என்பது ஒருசில நிபுணர் களின் கருத்தாக இருக்கிறது. வீராணம் திட்டம் நல்ல திட்டம்தான், பயனுள்ள திட்டம்தான், செயல்படுத்தக்கூடிய திட்டம்தான் என்பதை நிபுணர் குழு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதனுடைய பணியும் பாதி அளவிற்கு முடிந்துவிட்டது. மீதியுள்ள பணியை இந்த அரசு ஏற்று நடத்தியிருக்கு மேயானால் இந்த அளவிற்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்குமா என்று சொல்ல வேண்டுமென்று நான் கேட்க விரும்புகிறேன். என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட வீராணம் திட்டத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டால், நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்பதைவிட, அவர்கள் முன்னால் நின்று கொண்டிருப்பது, இந்தத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்

[திரு. நீலநாராயணன்] [1983 மார்ச் 9

காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு அதனாலே மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன்கள் கிடைக்க ஆரம்பித்தால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நல்ல பெயர் வந்துவிடுமே என்பதுதான் என்று பல பேர் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே கவனப்படுத்த ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட எண்ணம் இருக்குமானால், தயவுசெய்து அந்தக் குறுகிய கண்ணோட்டத்தை விடுத்து, நாட்டு மக்களின் நலன்கள்தான் நமக்கு முக்கியம் என்ற அளவிலே அவர்கள் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வறட்சியைப்பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். வறட்சி— இந்தச் சொல் ஏறக்குறைய 1981-லிருந்து இந்த நாட்டிலே அடிபட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இவர்கள் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து வறட்சி என்ற சொல் இந்த மன்றத்திலே அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. மழை பொய்த்து விடுவதும், அதனாலே வறட்சி போன்ற நிலவரங்கள் ஏற்படுவதும் நாட்டிலே சகஜமாக இருக்கிறதென்றாலும்கூட, இப்படிப்பட்ட வறட்சியின்போது நிவாரணம் தேடுவதற்காக, வறட்சி ஏற்பட்டால் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதற்காக கடந்த காலத்திலே அரசுகள் பல முன் உதாரணங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. போர்க் கால நடவடிக்கைகளைப்போல வறட்சிக் காலத்திலே இயன்ற நடவடிக்கைகளை எடுத்து, அதற்குப் பரிகாரம் கண்டிருக்கிறார்கள். கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசும் சரி, காங்கிரஸ் அரசும் சரி இந்தப் பிரச்சினையிலே எந்த அளவிற்கு சுறுசுறுப்பாகப் பணியாற்றி வறட்சிக்கு நிவாரணம் தேடியிருக்கின்றன என்பது நாடு அறிந்த உண்மை. ஆனால் இந்த அரசு வந்த பின்னால்

(முற்பகல் 10-20)

இவர்கள் இந்த வறட்சி நிவாரணப் பணியிலே எந்த அளவுக்கு தங்களுடைய பணியை ஆற்றியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். 1982 ஆம் ஆண்டு அக்டோபரில் வறட்சி ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு வறட்சி நிவாரணத்திற்குரிய புள்ளிவிவரங்கள் அடங்கிய மெமோரண்டத்தை அனுப்புங்கள் என்று கேட்கிறார்கள். 1982 அக்டோபரில் ஏற்பட்ட நிலைமைக்கு 1984 சனவரி 4 ஆம் தேதி வறட்சி நிவாரண மெமோரண்டத்தை அனுப்புகிறார்கள். ஏறக்குறைய நான்கு மாதங்கள் கழித்து இங்கே இருக்கின்ற நிலைமைகள் குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்புகிறார்கள் என்று சொன்னால், உண்மையிலேயே இங்கே ஒரு அரசு இருந்துகொண்டிருக்கிறதா. இதுதான் போர்க் கால



[திரு. நீலநாராயணன்]

1983 மார்ச் 9]

நடவடிக்கையா என்பதை எண்ணிப்பார்த்தால், ஏமாற்றத்தைத்தான் பதிலாக நாம் பெற முடிகிறது. அந்த அளவுக்கு அக்கறையற்ற ஒரு தன்மை, அலட்சிய மனப்பான்மையுடன் இந்த ஆட்சியாளர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். "மாவட்ட அதோடு கூட ஏன் இந்தத் தாமதம் என்று கேட்டால், அறிக்கையைத் தர தாமதமாகிவிட்டது, ஆகவே இந்த ஆட்சியாளர்கள் நிலைமை" என்று சொல்கிறார்கள். அவர்களை இயக்குகின்ற உரிமையை, அதிகாரத்தைப் பெற்றிருக்கிற இந்த ஆட்சியாளர்கள் அந்தக் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்பது என்னுடைய துணிந்த முடிவு என்பதை நான் பகிரங்கமாக இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணி சம்பந்தமாக மற்றொரு உதாரணத்தையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். பத்திரிகையில் படித்த ஒரு சமாச்சாரத்தை இங்கே சுட்டிக் காட்டுகிறேன். எந்தப் பத்திரிகையில் வந்தது என்பதைச் சொல்லவில்லை. நான் படிக்கின்ற பல பத்திரிகைகளிலே சில பத்திரிகைகளிலே வந்ததை ஆட்சியாளர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அந்தப் பத்திரிகை, இந்தப் பத்திரிகை என்று இல்லாமல், பொதுவாக நாளேடுகள் எல்லாவற்றிலும் வந்திருக்கிற ஒரு செய்தியை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். மாநிலங்கள் அவையிலே மத்திய விவசாய அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்கள் பேசுகின்றபோது, "மத்திய சர்க்கார் சார்பிலே தமிழகத்திலே வறட்சி நிவாரணத்தைக் கண்டறிவதற்காக ஒரு குழுவை அனுப்புகின்றேன் என்று நான் கூறினேன், ஆனால் சட்டசபை நடந்துகொண்டிருக்கிறது, ஆகவே எங்களைக் கலந்த பின்னாலே அந்தக் குழுவை அனுப்புங்கள்" என்று இங்குள்ள ஆட்சியாளர்களின் தரப்பிலிருந்து பதில் கூறப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், சட்டசபை நடக்கும்போது அந்தக் குழு வந்தால் என்ன குடி மூழ்கிவிடும்? சட்டசபை முக்கியமா, வறட்சி நிவாரணம் குறித்து கண்டறிய ஒரு குழு வருகின்றது, அது முக்கியமா?

டாக்டர் இரா. சனார்த்தனம்: சட்டசபை முக்கியமா என்று அவையின் ஒரு உறுப்பினரே கேட்டு அவையின் முக்கியத்துவத்தைக் குறைத்துப் பேசுவது நியாயமில்லை.

திரு. நீலநாராயணன்: சட்டசபையின் முக்கியத்துவத்தை நான் குறைக்கவும் இல்லை, அது வேண்டாமென்று சொல்லவுமில்லை. ஆனால் சட்டசபை நடந்துகொண்டிருக்கும்போது, அந்தக் குழு இங்கே வந்தால் என்ன குடி மூழ்கியா போய் விடும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

[1983 மார்ச் 9

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இப்போது அந்தக் குழு வந்து வறட்சி பற்றிய உண்மை நிலைமையைத் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், வட மாநிலங்களில் வறட்சிக்குப் பெயர் பெற்ற இடங்களில் இல்லாத அளவுக்கு நம்முடைய மாநிலத்தில் வறட்சி இருக்கிற நிலைமை உணர்ந்திருப்பது நமக்கு லாபம் தான்.

**திரு. நீலநாராயணன்:** நான் கேட்பதெல்லாம் வறட்சி நிவாரணம் குறித்து போர்க் கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நியதி இருக்கும்போது கொஞ்ச நாட்கள் அந்தக் குழு வருவதை நிறுத்தி வைத்து விட்டு காரியங்களைச் செய்தது ஏன் என்பது தான்.

அடுத்து, இங்கே இதைப்பற்றிப் பேசுகிறபோது, இந்த அரசைப் பொறுத்தவரை, எந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும், எது உண்மை, எது உண்மைக்கு மாறானது என்று நமக்குத் தெரிகிறதோ இல்லையோ, ஆனால் ஒருவர் மீது பழியைப் போட்டு விட்டு தான் தப்பித்துக் கொள்ள எப்போதுமே தயங்கியதில்லை. அதைப் போலத்தான் இந்த வறட்சி நிவாரணப் பணியைப் பொறுத்தவரையிலும், என்னென்ன செய்திருக்கிறார்கள், என்னென்ன முடிவுகளை எடுத்திருக்கிறார்கள், என்னென்ன செய்திருப்பதாக இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டி விளக்கியிருக்கிறார்களோ அதைவிட ஒரு படி அதிகமாகச் சென்று மத்திய சர்க்கார் மீது இந்தப் பழிகளையெல்லாம் போட்டு விட்டு, தான் தப்பித்துக்கொள்ள முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. பா. ரா. தாமஸ்):** பத்து மணிக்கு பேச ஆரம்பித்தார்கள். இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன்:** மத்திய சர்க்காரைக் குறை கூறுவதை நான் தவறு என்று சொல்லவில்லை. மத்திய சர்க்காருக்காகப் பரிந்து பேசவும் நான் வரவில்லை. ஆனால் உண்மையில் மத்திய சர்க்கார் மாற்றாந்தாய் மனப் பான்மையுடன் நடந்துகொண்டால், அதை எதிர்க்க ஆளும் கட்சி முன்வந்தால், அதனுடன் இணைந்து நின்று போராடவும் நாங்கள் தயங்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இவர்கள் அப்படிச் செய்கின்ற போக்கு இறுதி வரை நீடிக்குமா? அல்லது சந்தர்ப்ப சூழ்நிலையால் அப்படிச் செய்கிறார்களா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆளும் கட்சிக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றை நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1983 மார்ச் 9]

**திரு. என். முத்து:** மத்திய சர்க்கார் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்தால், அதை எதிர்க்க ஆளும் கட்சி தயாராக இருந்தால், நாங்களும் ஒத்துழைக்கத் தயார் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இதில் அவர் களுடைய கொள்கை என்ன? நாங்கள் எதிர்த்தால் தான் அவர்களும் எதிர்ப்பார்களா? இதுதான் அவர்கள் கொள்கையா?

**திரு. நீலநாராயணன்:** எங்களைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட நிலைமை மத்திய அரசு மேற்கொண்டால், அதை எதிர்த்து நிச்சயமாகப் போராடுவோம். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இவர்கள் இங்கே சென்னையிலே தான் முழங்குகிறார்கள். இங்கே தான் 80 லட்சம் டன் அரிசி தேவை என்றும், 40 லட்சம் டன் கோதுமை மாதந்தோறும் தேவை என்றும் முழங்குகிறார்கள். ஆனால் இதை எங்கே போய் சொல்ல வேண்டுமோ, எங்கே போய் கேட்க வேண்டுமோ அங்கே போய் கேட்டார்களா என்றால் இல்லை. இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், "எங்களிடம் மத்திய இருப்புக்கு அரிசி தருகிறோம் என்று தமிழக அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது, ஆனால் தமிழகத்திற்கு என்னென்ன தேவை என்று சொல்லவில்லை" என்று மத்திய சிவில் சப்ளைஸ் இலாகா அமைச்சர் அவர்களே கூட சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு நிதியமைச்சரும் உணவு அமைச்சருமான டாக்டர் நாவலர் அவர்கள் எவ்வளவு நமக்குத் தேவை என்று திட்டவட்டமாக, தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு தந்தது போதாது, இன்னும் இவ்வளவு தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். என்னென்ன தேவை என்று தமிழக அரசு கேட்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியில்லை.

**திரு. நீலநாராயணன்:** அது என்னுடைய சொந்தக் கருத்தல்ல. மத்திய அமைச்சர் தெரிவித்த கருத்தைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டினேன். அதை நான் இங்கே நினைவுபடுத்தினேன். அவ்வளவுதான். அவர்கள் சொல்ல வில்லையென்று கூறுகிறார்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்திலே குறள் வாயிலாக ஒன்றை ஆட்சியாளர்களுக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்பதை அரசு உணர்ந்து இனிமேலாவது செயல்பட வேண்டுமென்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. நீலநாராயணன்] [1983 மார்ச் 9

இன்றையதினம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சிக்கு இயற்கையினுடைய கோளாறு மட்டுமே காரணமல்ல. ஆட்சியாளர்களுடைய ஆற்றலில், நிர்வாகத் திறமையில், அறிவில், ராஜ தந்திரத்தில்—இவைகளில் எல்லாம் பஞ்சம், வறட்சி ஏற்பட்டிருப்பது தான் முழுமையான வறட்சிக்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்று நான் பகிரங்கமாக ஆட்சியாளர்கள் மீது குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இங்கே புதிதாக 26 கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டிருக்கிறார்கள். நுழைவு வரி என்கிற பெயரால் புதிதாக வரி போட்டிருக்கிறார்கள். இந்த வரியால் நாட்டு மக்களுக்கு எந்த அளவுக்கு இடைஞ்சல்கள் ஏற்பட இருக்கிறது, எந்த அளவுக்கு ஊழல்கள் ஏற்பட இது காரணமாக இருக்கின்றது என்பதைப்பற்றியெல்லாம் நான் விளக்கமாக இங்கே எடுத்துச்சொல்வதாக இருந்தால்—தலைவரவர்கள் ஏற்கெனவே நேரத்தை நிர்ணயித்துவிட்டார்கள்—எனக்கு நேரம் போதாது. ஆகவே ஒரே ஒரு கருத்தை மட்டும் தெரிவிக்கிறேன்.

எதற்கெடுத்தாலும் அண்ணாவின் பெயரை இங்கே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் வரி போடுவதைப் பொறுத்த வரையில், ஒரு நிலையான கொள்கையைக் கடைப்பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்பு கூட நான் இதே அவையில் அந்தக் கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். இப்போது மறுபடியும் அதை நான் ஆட்சியாளர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். “தாங்கக்கூடியவர்கள் மீது வரியைப் போடுங்கள், தாங்க முடியாதவர்கள் மீது, ஏழையெளியவர்கள் மீது, நடுத்தர மக்கள் மீது போடுகின்ற வரியை ஒரு போதும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் போட்டிருக்கிற வரி மிட்டா மிராசுதாரர்களையோ அல்லது தொழில் அதிபர்களையோ பாதிப்புக்கு உள்ளாக்கப்போவதில்லை. ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள் இப்படிப்பட்டவர்களை பாதிக்கின்ற வரியாக இன்றையதினம் ஆட்சியாளர்கள் இந்த நுழைவு வரியைப் போட்டிருக்கிறார்கள். நிச்சயமாக எதிர்காலத்திலே இந்த மக்கள் ஆட்சியாளர்களை வாழ்த்துவார்கள் என்று எதிர்பார்க்கிறார்களா? இந்த நிலைமை நீடிக்குமானால் 1985 ஆம் ஆண்டு உங்களுக்குப் பதில் சொல்ல இருக்கிறது என்று கூறி முடிக்கிறேன், வணக்கம்.



1983 மார்ச் 9]

(முற்பகல் 10-30)

* திரு. க. அருணாசலம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை பற்றாக்குறை அறிக்கை என்று இருந்தபோதிலும் கூட, நமது மாநில அரசின் நிதி நிலைமை மிகவும் சிறப்பாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் வருவாய் அதிகரித்துக்கொண்டே போகிறது. செலவினங்களைக் கூட்டிக்கொண்டே இருக்கிறோம் என்று சொன்னாலும், நிதி நிலைமை பற்றாக்குறையாக இருப்பது கருதி, சில கூடுதல் வரிகளை இந்த அரசு போட்டிருக்கிறது. புதிய வரி என்ற முறையிலே ‘நுழைவு வரி’ என்று போட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டாலும், அதனால் தொல்லை அதிகமாக இல்லாமல் செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தொல்லை சிலருக்கு இல்லாமல் இருந்தாலும், பொதுவாக இந்த நாட்டிலே இருக்கும் லஞ்ச-லாவண்யத்தையும், மற்றும் பல இன்னல்களையும் செய்வதற்கு வழிவகை செய்யும் அளவுக்கு இந்த வரி இருந்துவிடக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கும் வரிகளிலே, அதாவது காமதேனு போன்ற அளவிலே இருக்கும் விற்பனை வரியிலே சில மாற்றங்களைச் செய்திருந்தால் கூட, இந்தப் புதிய வரி விதிப்புக்குரிய தேவை இருக்காது. வேறு சில மாநிலங்களில் ‘அக்ட்ராய்’ வரி என்ற அளவிலே போட்டிருக்கிறார்கள். அவைகளையே தான் நாம் மாற்றுப் பெயரிலே போட்டிருக்கிறோம் என்றும் சொல்லலாம். குறிப்பாக சர்க்கரை, துணி வகைகள் என்ற அளவிலேதான் இந்தப் பொருள்கள் இருக்கின்றன. துணி வகைகளை எடுத்துக்கொண்டால், எல்லாம் என்று இல்லாவிட்டாலும் கைத்தறி மற்றும் கதர் துணிகளுக்கு இந்த வரியிலேயிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் ஏழையெளியவர்கள் செய்யும் இந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டு அவர்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளாவார்கள். இப்போதேகூட மிகவும் அதிகமாக விலை உயர்ந்திருக்கிறது. மேலும், இப்போதே அதிக அளவிலே மானியம் கொடுக்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, கைத்தறி மற்றும் கதர் ஆகிய இந்த இரண்டுக்கும் விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், அது மிகவும் நல்ல திட்டம். அந்தத் திட்டத்திற்கு எங்கே பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று பார்த்தால்,

அதற்குரிய பணம் எங்கே இருக்கிறது என்று என்னால் கண்டுபிடிக்க முடிய வில்லை. பல வழிகளில் பிரித்துப் பிரித்து ஒதுக்கியிருக்கலாம். பல துறை களிலேயிருந்து வருவாய் வருகிறது. அந்தத் துறையினுடைய டிமாண்ட்லே இருக்கலாம். இந்தத் திட்டத்திற்கு என்று செலவிடப்படும் ரூபாய் 134 கோடி ஒன்றும் மிகவும் அதிகமான தொகையல்ல. 65 லட்சம் குழந்தைகளுக்கு 365 நாட்கள் உணவு கொடுக்கிறார்கள் என்றால், ஒரு குழந்தைக்கு ஒரு நேரத்திற்கு 60 பைசா தான் வருகிறது. அண்மையிலே ஆங்கிலேயர் ஒருவருடன் ஒரு சத்துணவு மையத்திற்கு நான் சென்றிருந்தேன். அப்போது அங்கே போடப்பட்ட உணவைப் பார்த்து, இந்த உணவினுடைய மதிப்பு இரண்டு அல்லது மூன்று ரூபாய் இருக்குமா என்று என்னைக் கேட்டார். இது 50 பைசா, அல்லது 60 பைசா மதிப்பு இருக்கும் என்று நான் அவரிடம் சொன்னேன். அந்த உணவைப் பார்த்தபோது, எனக்குக் கூட ஒரு சந்தேகம் ஐம்பது அல்லது அறுபது பைசாவுக்கு இப்படி ஒரு நல்ல உணவு கிடைக்குமா என்று எனக்குக்கூட சந்தேகம்தான். அந்த அளவுக்கு நல்லமுறையில் இருந்தது. மேலும் இந்தத் திட்டத்தை மிகவும் அதிகமான அளவிலே விஸ்தரித்து, வயதானவர்களுக்கும், ஏழைகளாக சொந்தமாக சமைக்க முடியாத நிலைமையில் இருக்கின்றவர்களுக்கும் விஸ்தரித்து ஜனவரி மாதத்திலேயிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் வரவேற்க வேண்டிய விஷயம். நான் இதை மிகவும் பாராட்டுகிறேன். இதோடுகூட கல்வியும் கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இதை நிர்வகிப்பவர்கள் பெண்களாக இருப்பார்கள் என்று சொன்னார்கள். தொடர்ந்து நடத்தினால், இன்னும் 10 அல்லது 15 ஆண்டு காலத்திலே மக்கள் மத்தியிலே ஒரு புத்துணர்ச்சியும், மறுமலர்ச்சியும் உண்டாகும். மக்கள் சிந்திக்கும் அளவுக்கு அவர்களுக்கு ஆற்றலையும் இது வளர்க்கும்.

நம்முடைய நாட்டிலே வருமானம் கொடுக்கக்கூடிய காமதேனு போன்று இருப்பது விற்பனை வரி என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதற்கு அடுத்தபடியாக இப்போது கள்ளுக்கடைகளைத் திறந்து வைத்திருக் கிறார்கள். மதுவிலக்கைத் தளர்த்தியதாலே நமக்குக் கிடைக்கும் வரி 100 கோடி ரூபாயாக இருந்தது, 140 கோடி ரூபாய் என்ற அளவிலே உயர்ந்து இப்போது 150 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. நான் கேட்கிறேன், இதுதான் இந்த அரசின் கொள்கையா? மதுவிலக்கைத் தளர்த்துவதன் மூலமாக இப்படி அதிகமான அளவிலே பணம் வசூலிப்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையா? மதுவை ரத்து செய்தால், நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கிறோம் என்று கூட அப்போது பேசப்பட்டது. ஆனால் அரசு அதை ஏற்கவில்லை. மதுவிலக்கு அவசியம் என்ற கொள்கையை அறிஞர்



உணர்ந்தவர்கள், அவர்கள் மதுவிலக்கை அமுலாக்க விரும்புகிறார்கள் என்று சொன்னால், ஏன் இந்த வருவாயை இப்படியே அதிகப்படுத்திக்கொண்டு போகிறார்கள்? மது அருந்துபவர்கள் தான் கொடுக்கிறார்கள், அதனால் வருவாய் வருகிறது, நீங்கள் கொடுக்கவில்லை என்று ஒருவேளை சொல்லலாம். இன்றையதினம் பார்த்தால், கள்ளுக் கடைகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது. எந்த எந்த இடங்களிலேதான் வைக்கப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கிறதோ, அந்த இடங்களிலே வைக்கப்படாமல், பள்ளிக் கூடங்களுக்குப் பக்கத்திலேயும், கோயில்களுக்கு அருகாமையிலேயும்தான் இன்றையதினம் கள்ளுக் கடைகள் இருக்கின்றன. இன்றைக்கு குடிப்பதிலேயும் புதிய புதிய குடிகாரர்கள் பெருகிக்கொண்டே இருக்கிறார்கள். புதிய புதிய பெண்கள், ஆண்கள், குழந்தைகள் எல்லாம் இன்றைக்கு குடிக்கும் நிலைமை உருவாகியிருக்கிறது. பல்கலைக் கழகங்களிலே மாணவர்கள் குடித்துவிட்டு வரும் நிலைமை வட இந்தியாவிலேதான் இருக்கிறது என்று நான் நினைத்திருந்தேன். அண்மையிலே சென்னையிலே கல்வி நிபுணர்களின் கூட்டம் நடந்தது. அந்தக் கருத்தரங்குகளிலே, கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல, பள்ளி மாணவர்களும் கூட குடித்துவிட்டு பள்ளிக்கு வருகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது வட இந்தியாவிலே இருந்த அந்த வளர்ச்சி தென்னாட்டிலேயும் ஏற்பட்டு, தமிழ் நாட்டிலேயும் வந்திருக்கிறது. இந்த நிலைமைகளை எப்படிக் கட்டுப்படுத்துவது? இன்றைக்கு இதிலிருந்து கிடைக்கும் வருமானம் ரூபாய் 151 கோடி என்ற அளவிலே இருந்தாலும், கள், சாராயம் குடிப்பது மிகவும் தீமை என்று மக்களிடம் பிரச்சாரம் செய்யும் செலவை மிகவும் குறைத்திருக்கிறார்கள். இப்போது மக்கள் எல்லாம் குடிக்கிறார்கள், அவர்கள் அப்படியே குடிக்கட்டும் என்ற ஆசையினாலோ என்னவோ, அந்தப் பிரச்சாரத்திற்கான செலவை மிகவும் குறைத்திருக் கிறார்கள். மதுவிலக்கை நாம் தளர்த்தியிருந்தாலும், மறுபடியும் மதுவிலக்கு அமுலாக்கப்படும், அதுவரையில் மக்கள் குடிக்கக்கூடாது என்றும், குடிபற்றிய தீமை பற்றியும் அவர்களிடம் பிரச்சாரம் செய்யப்படும், பிரச்சாரம் மூலம் மக்கள் குடிக்காமல் செய்வோம், அதன் மூலம் சமுதாயத்திலே நன்மை கிடைக்கும் என்றெல்லாம் சொன்வார்கள். அப்படிச் செய்வது கடமை என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இப்போது இருக்கும் நிலைமைகளைப் பார்க்கும்போது, 'எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும்' என்று நினைக்கும் நிலைமைதான் இருப்பதாகத் தோன்றுகிறது. மக்களிலே புதிய குடிகாரர்கள் வரக்கூடாது என்ற அளவிலே பிரச்சாரம் ஒன்றும் நடக்கவில்லை. இதற்கு இன்றைக்கு இரண்டு கோடி ரூபாய் தான் கேட்டிருக்கிறார்கள். வேண்டுமானால் இதற்கு இன்னும் இரண்டு கோடி ரூபாய் சேர்த்து ஒரு நான்கு கோடி ரூபாயோ அல்லது ஐந்து கோடி ரூபாயோ என்ற அளவிலே

வைத்து இன்னும் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து, குடியின் கொடுமையினை மக்கள் உணரும்படி செய்தால்தான், இந்தக் குடியின் கொடுமை குறையும். அண்மையிலே மதுவிலக்கை அமுலாக்க வேண்டிய சூழ்நிலை வரும். மதுவிலக்கை ரத்து செய்யவில்லை. தளர்த்தித்தான் இருக்கிறோம்; ஆனால் கூடிய விரைவிலே அமுலாக்கப்படும் என்று சொல்லி, அந்த நாளை விரைவிலே காண ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமைகள் நீடித்தால், இது கல்வியின் தரத்தைக் கூட குறைத்துவிடும். மக்களை அறிவில் சிறந்தவர்களாக, திறமையானவர்களாக ஆக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக்கோள். ஆனால் அவர்களுடைய அறிவைக் கெடுக்கும் வகையிலே, எல்லோரும் குடிக்கும் வகையிலே பல கடைகளைத் திறந்து வைப்பது நல்லதல்ல என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே வேளாண்மைத் தொழில் மிகவும் சிறப்பான முறையிலே இருந்தது. அதுதான் நம்முடைய அடிப்படைத் தொழில் என்ற வகையிலே இருந்து வருகிறது. வேளாண்மை சிறப்பாக நடைபெற வேண்டுமானால், அதற்கு மாடுகளும், பசுவும் மிகவும் அவசியம். பசுக்களின் மூலமாக பால், சாணம், காளைமாடுகள் முதலியவைகள் கிடைக்கின்றன. இன்றைக்குப் பார்த்தால், ஆண்டு ஒன்றுக்கு 13 லட்சம் மாடுகள் வெட்டப்படுவதாகக் கணக்கு இருக்கிறது. என்னைப் போன்றவர்கள் கூட கணக்கு எடுத்திருக்கிறோம். அரசாங்கத்திற்கும் அந்தக் கணக்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். இப்படியே பல லட்சக்கணக்கான மாடுகள் போய்க்கொண்டே இருந்தால், எதிர்காலத்திலே விவசாயம் எப்படி நடக்கும்? விவசாயத்திற்கு பசுக்களுக்கு அல்லது மாடுகளுக்குப் பதிலாக டிராக்டர்களைப் பயன்படுத்தலாம் என்று சொல்லலாம், பசுக்கள், காளைமாடுகள் இல்லாவிட்டால், பால் மற்றும் சாணி போன்றவைகள் கிடைக்குமா? இந்தக் காளைமாடுகள் இருப்பதால், எத்தனையோ ஏழைகள் இன்றையதினம் பிழைக்கிறார்கள் என்பதையும் நாம்

(மாற்றுத் தலைவர் திரு. ஜே. எம். மியாகான் தலைமை)

(முற்பகல் 10-40)

பார்க்க வேண்டும். இரண்டு மாடுகளும் ஒரு கலப்பையும் வைத்திருந்தால், கிராமத்தில் இருக்கிற கொல்லர்களுக்கும் தச்சர்களுக்கும் ஒரு அரை வயிற்றுக் கஞ்சியாவது குடிக்க வழி இருக்கும். இனி அதுவும் இல்லாமல் போய்விடும். அவர்களையெல்லாம் நாம் இனிமேல் காப்பாற்றவே முடியாது. சிலருக்கு நன்மை செய்கிறோம் என்ற கொள்கையின் அடிப்படையில் இப்படிப்பட்ட நிலைமை உருவாவதை நாம் ஆதரிக்க முடியாது. மேதாட்டு ஜனதாயகக் கொள்கையில் சொல்லப்படுவதைப்போல், பெரும்பாலான மக்களுக்குப்



பெருவாரியான நன்மை கிடைக்கும்படியான வகையில் நாம் செயல்பட வேண்டும். அந்த வகையில் அனைவருக்கும் நன்மை பயக்கத் தக்க ஒரு ஏற்பாட்டை நாம் செய்ய வேண்டும். நாட்டில் மாடுகள் வதை செய்யப் படுவதை, கொலை செய்யப்படுவதை நாம் அறவே தடுத்தாக வேண்டும்.

நம்முடைய அரசு 1976 ஆம் ஆண்டில் ஒரு உத்தரவைப் போட்டது. அதாவது மாடுகளை, அதிலும் குறிப்பாகப் பசுக்களைக் கொல்லக்கூடாது என்ற வகையில் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அந்த உத்தரவை எதிர்த்து சிலர் நீதி மன்றத்திற்குப் போனார்கள். ஆனால் அரசின் அத்தகைய உத்தரவு செல்லுபடியாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அந்த உத்தரவை நாம் சரியாகச் செயல்படுத்தியிருந்தால், நாட்டில் லட்சக்கணக்கான கால்நடைகள், மாடுகள் கொல்லப்பட்டிருப்பதைத் தடுத்திருக்க முடியும், தவிர்த்திருக்க முடியும். அப்போது வினோபாஜி அவர்களும், பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும் பசுக்கள் கொலைக் களத்திற்குப் போவதைத் தடை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுக்குக்கூட அத்தகைய கடிதம் வந்திருக்கும் என்று நம்புகிறேன். அதைக் கருதி அப்போது ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவந்தார்கள். அப்படிக் கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவு பின்னால் சுற்றுக்கு விடப்படும் என்று சொல்லிவிட்டார்கள். இந்தச் சட்ட முன்வடிவு இன்னும் சுற்றிக் கொண்டேயிருக்கிறது. இது என்னைப் போன்றவர்களுக்கு ஒரு சந்தேகத்தையே உருவாக்கியிருக்கிறது. எப்போதாவது இது வருமா என்ற சந்தேகம் உண்டாகியிருக்கிறது. என்ன ஆகும் என்றால், அந்தச் சட்ட முன்வடிவு சுற்றிச் சுற்றி வந்துகொண்டே இருக்கும். கடைசியில் ஐந்து ஆண்டுக் காலம் முடிந்துவிடும். அதாவது சட்டமாகாமலேயே போய்விடும். எனவே இதைப்பற்றி அரசு என்ன எண்ணிக் கொண்டிருக்கிறது என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், அந்தச் சட்டமே வராவிட்டாலும்கூட, இன்றைக்கிருக்கிற அரசாணையையாவது முறையாக அமுல் செய்தால், அநியாயமான முறையில் ஆண்டுதோறும் 13 லட்சம் மாடுகளைக் கொலை செய்வது தடுத்து நிறுத்தப்படும்.

முன்னாலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது பயனற்ற மாடுகளைத்தான் நாம் கொன்று கொண்டிருக்கிறோம் என்றார்கள். அத்தகைய பயனற்ற மாடுகளை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்வது என்று கேட்டார்கள். இப்போது நிலைமை என்னவென்றால், அத்தகைய பயனற்ற 10 அல்லது 13 லட்சம் மாடுகள் ஏற்கெனவே கொல்லப்பட்டுவிட்டன. இன்றைக்கு நல்ல மாடுகள் கொல்லப்படுகின்றன. சமீபத்தில் நான் பார்த்தேன்.

மந்தை மந்தையாக மாடுகள் போவதை நான் பார்த்தேன். எல்லாம் நல்ல காளை மாடுகள், நன்கு கொழுத்த மாடுகள். அவைகளை அடிப்பதற்காகத் தான் வாங்கிக்கொண்டு போகிறார்கள். எனவே அத்தகைய மாடுகளை வாங்கிக்கொண்டு போவதை நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லிக் கொண்டிருப்பது சரியாகாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் நாம் விரைவாகச் செயல்பட்டால்தான், நாட்டில் கால்நடைச் செல்வத்தை நாம் காப்பாற்ற முடியும். மாநிலத்தில் கால்நடையை வளர்ப்பதற்காக நிறைய பணம் கேட்டு சட்ட மன்றத்தில் நாம் ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் இன்னொரு பக்கத்திலே கால்நடைகளே இல்லாத அளவுக்குச் செய்து கொண்டிருக்கிறோம். இது வேடிக்கையாக இருக்கிறது. எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ அதே காரியத்தை நமக்கு வாய்ப்பிருந்தும்கூட செய்யாமல் கை நழுவ விட்டுக் கொண்டிருப்பது எந்த வகையிலும் சரியல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு கால்நடைகள் நமது மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்குச் செல்லாமல் தடுக்க வேண்டிய சட்டத்தை விரைவில் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் நாட்டில் கல்வி ஓரளவுக்கு வேகமாகப் பரவி வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதிலே எனக்குப் பெரிய மகிழ்ச்சியே இருக்கிறது. அது மட்டுமல்லாமல், சுமார் 65 லட்சம் இளம் மாணவர்களுக்குச் சத்துணவு அளிக்கப்படுவதன் காரணமாக, புதிய புதிய ஏழைக் குழந்தைகள் இன்றையதினம் பள்ளிகளுக்கு வந்து கல்வி கற்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆனால் உலகத்தில் பள்ளிக் கூடங்களால் மட்டுமே முழுக் கல்வியை அளிக்க முடியும் என்று நாம் நம்பிவிடக்கூடாது. பள்ளிகளின் மூலமாக ஓரளவுக்கு எழுத்தறிவைக் கொடுக்கலாம். கொஞ்சம் திறமையை உண்டாக்கலாம். ஆனால் பள்ளிகளின் மூலமாக மட்டுமே அவர் களையெல்லாம் முழு மனிதர்களாக ஆக்க முடியாது. அப்படி அவர்களை முழு மனிதர்களாக ஆக்க வேண்டுமென்றால் சமுதாயத்திலேயே ஒரு மாற்றம் வேண்டும். அவர்களின் தாய் தந்தையர்கள்கூட கற்றவர்களாக இருக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் நமது மத்திய அரசு முதியோர் கல்விக்கு ஒரு பெரும் முக்கியத்துவத்தைக் கொடுத்து, முதியோர் கல்வி என்றும் வயது வந்தோர் கல்வி என்றும் திட்டங்களைத் தீட்டி வயதானவர்களிடத்திலும் கல்வியைப் பரப்பி வருகிறது. நகரங்களில் அதிகமாக இல்லை என்றாலும் கூட நம் மாநிலத்திலேயேகூட இந்த முறையிலான முதியோர் கல்விக் கூடங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆனால் இவை போதுமான அளவில்



இல்லை. இந்த நிலைமை நீடித்தால், நம்முடைய தலைமுறையிலேயே கூட நாட்டில் உள்ள தற்குறித் தன்மை அழியாது. நாடு நல்ல அறிவு வளர்ச்சி அடைய முடியாது. நாமெல்லாம் விரும்புகிறோமே புதிய சமுதாயம் அது அமைய முடியாது. சிறந்த சிந்தனையாளர்களும், மிகுந்த பகுத்தறிவாளர் களும் நிறைந்த சமுதாயம் வளர வேண்டுமென்றால், இந்தத் துறையில் நாம் இன்னும் அதிகமான அளவுக்குச் செலவிட வேண்டும். தற்போது இதற்காகச் செலவழிப்பதைப் போல், நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகமாகச் செலவிட வேண்டும். மத்திய அரசின் உதவித் தொகையை மட்டும் நம்பியிராமல் நமது மாநில அரசின் நிதியிலிருந்தும் இதற்காக பெரிய தொகை ஒதுக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் என்று கிராமங்களில் நாம் இப்போது செயல் படுத்திக் கொண்டிருக்கிறோம். கிராமங்களில் பொதுவாக அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவது மட்டும் போதாது. மனிதனையும் தன்னிறைவு உடையவனாக ஆக்க வேண்டும். மனிதன் அறிவு வளராமல் இருக்கும் வரைதான் ஒருவரை ஒருவர் ஏமாற்ற முடியும். இப்போது ஏழை எளியவர்களைப் பொறுத்த வரையில், நாங்கள் அப்படி இருக்கத்தான் பிறந்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் "எங்களால் கூட நல்ல அறிவு பெற்றவர்களாக மாறி நல்ல முறையில் காரியங்களைச் செய்ய முடியும்" என்று சொல்லுகிற அளவுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும். இந்த வளர்ச்சி உருவாக வேண்டுமென்றால் நாம் முதியோர் கல்விக்காக இன்னும் நான்கு, ஐந்து மடங்கு தொகையை அதிகமாக ஒதுக்கிச் செலவிட வேண்டும்.

அதுமட்டுமல்ல. கிராமங்களில் நாடக அரங்குகள் அங்கங்கே சில செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் அவைகள் போதுமானவையாகாது. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி கல்வி என்பது பள்ளிகளில் மட்டும்தான் கிடைக்கும் என்பதை விட்டு, மற்ற முறைகளிலும் கிடைக்கும் என்ற அடிப்படையில் நாம் பணியாற்ற வேண்டும். இப்போது சினிமா எந்த அளவுக்கு மக்களின் அறிவை வளர்க்கிறது என்பதைப் பார்க்கிறோம். அதனால் கொஞ்சம் நல்லதும் கொஞ்சம் கெட்டதும் நடக்கத்தான் செய்கின்றது, பகல் என்று இருந்தால் இரவு என்று இருப்பதைப்போல், சினிமாவின் மூலம் நல்ல காரியமும் நடக்கிறது, கெட்ட காரியமும் நடக்கிறது. அப்படிப்பட்ட முறையில் கிராமங்களில் உள்ள நாடக அரங்குகளை நாம் இன்னும் அதிகமான அளவுக்கு உற்சாகப்படுத்த வேண்டும். இளைஞர்கள் ஆங்காங்குள்ள தேவைகளை அனுசரித்து, புதிய புதிய நாடகங்களை நடத்தி மக்களை அறிவுடையவர்களாக

[திரு. க. அருணாசலம்] [1983 மார்ச் 9

ஆக்க இது உதவியாக இருக்கும். இதை வெறும் கலை, பண்பாடு என்ற அடிப்படையில் நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்காமல், நாட்டு மக்களின் அறிவுக்குத் தேவையான அம்சம் என்ற அளவில் சிந்தித்து எங்கெங்கே நாடக அரங்குகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் கண்டுபிடித்து அவர்களுக்குத் தேவையான நிதி உதவி கொடுத்து உற்சாகத்தை ஊட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம் நாட்டில் தான உணர்ச்சியை நாம் வளர்க்க வேண்டும். சுத்துவக்கும் இன்பம் என்று சொல்லுவார்கள். அதை நாம் வளர்க்க வேண்டும். கொடுத்து வாழ்பவர்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டும். மகாராஷ்டிரத்தில் "சிரா கம்பனி" என்ற ஒரு அமைப்பை ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் ஒருவர் நடத்திக் கொண்டிருந்தார். இப்போது அவர் அதை தானே நடத்துவதை நிறுத்திவிட்டு, அந்த நிறுவனத்தின் கீழ் பணியாற்றி வந்த 100 தொழிலாளர்களைக் கூப்பிட்டு, "இனி நீங்களே இந்தக் கம்பனியை நடத்துங்கள், இதன் வரவையும் செலவையும் சரிக்கட்டி நடத்துங்கள்" என்று சொல்லி கொடுத்துவிட்டார். "எப்போதாவது என்னைக் கூப்பிட்டால் நான் வந்து என்னுடைய அறிவை உங்களுக்குத் தருகிறேன். நீங்களும் அதன் மூலம் திறமையை வளர்த்துக் கொள்ளலாம்" என்றார். இன்றையதினம் அவர்கள் திறமையாக அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் நம் நாட்டில் பல நிறுவனங்களை, தொழிலாளர்களே பொறுப்பேற்று நடத்தும் நிறுவனங்களை நாம் உருவாக்க வேண்டும். இன்றையதினம் கதர் நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்களைப் பொறுத்த வரையில்கூட, தங்களின் பொறுப்பைத் தாங்களே உணர்ந்து நிறைவேற்றுகிற நிலைமை உருவாகி வருகிறது. அரசாங்கத்திலிருந்து அல்லது சமுதாயத்திலிருந்து மூலதனம் கிடைக்க வேண்டும். அதைக்கொண்டு எதிலும் ஊழியர்களே முடிவெடுத்துச் செயல்படும் நிலைமை உருவாக வேண்டும். இன்றையதினம் கதர்த் துறையில் இத்தகைய நிலைமைகள் இருக்கின்றன. மகாத்மா காந்தியடிகள் இத்தகைய நிலைமையை நினைத்துப் பார்த்து, இந்த நாட்டில் இத்தகைய முறை உருவாக வேண்டும் என்று விரும்பினார். எனவே கதர் போர்டின் தலைவராக இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி எண்ணிப் பார்த்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ சர்க்கார் துறையில் மட்டும் நடப்பதுதான் கதர் என்று நினைக்காமல், பொது மக்கள் அனைவரும் இதில் ஈடுபட வேண்டும் என்ற வகையில் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் தாங்களும் வாழ வேண்டும் மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்று சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

• Thirumathi TARA CHERIAN: Hon. Deputy Chairman, I thank you for giving me the opportunity to participate in this discussion on the Budget speech of our Hon. Finance Minister.

Before I proceed further, I am sure all the Members of the Upper House who are elders would have taken note of what is happening in Delhi. The Seventh Summit Conference of the non-aligned countries is taking place in Delhi and more than half the global population is represented by the Heads of States, Kings, Princes and Prime Ministers. Indeed, we are all happy that India has been chosen as the venue of the meet and we are also happy that our Prime Minister has been unanimously elected as the Chairman. We take pride in that and also in the very fine arrangements that have been made for the meeting. When the curtain is down we must also remember the amount of work that has been done behind the curtain to make it a success.

(முற்பகல் 10-50)

At the same time, Tamil Nadu, as an integral part of the country and as an important unit, has been worried. We have been reading in the papers for the last three weeks about the happenings in Assam. I am not going into the problems in detail. But we cannot get away from the fact that the history of the North-eastern part of the country, and especially Assam, is being written in blood, because there has been so much violence in the happenings there during the past months. Whole villages and clusters of villages have been burnt. Unarmed women and children have been butchered and slaughtered. We thought that there was a little lull. Again Army help has been asked for. All these have happened in the wake of elections in Assam and as their aftermath. We, as neighbours, are also very much concerned. Some of our children are abroad. When we read about the happenings in other places, we pray God to keep our children safe. We are very much moved by some happenings because even innocent people are killed. I am sure our country which is hosting the non-aligned conference will take immediate steps to see that there is security and peace for all those people. We are so much anxious about the security and safety of our people. I am sure we are also very much concerned with the happenings in Assam and hope our Government would soon tackle the situation and bring normally.

After having touched on the unprecedented happenings and problems in Assam, I now come to the Budget. There is severe drought, water scarcity, rice scarcity and scarcity of power. There is

scarcity of almost every essential commodity. Still, the Budget on the whole has to be welcomed. I am quoting from a good paper. The Central Team consisting of experts and headed by the Joint Secretary of the Agriculture Department have visited the State and it will give a lot of comfort to the State Government to know that they have been convinced that there has been drought and they have been convinced with the way in which we are trying to overcome this drought by supplying water, by tankers, by sinking and deepening wells, etc. In spite of all means to overcome the situation, there is much influx of people into the City yet because I think the water problem has become more acute and we are not able to give sufficient water to many areas. The United Nations experts have stated that there is plenty of sub-soil water and, therefore, we will be able to overcome the shortage, if concentration is placed on this at least as a short-term policy, until the monsoon sets in. At the same time, without going into the politics of who started what in the matter of river projects, I am sure that the Government will come to an understanding, evolve a long-term policy and see that the water-shortage is completely eradicated. It will be possible, Sir, because nothing is impossible.

Sir, instead of increasing the sales tax in any manner, the Tamil Nadu Government have imposed two kinds of taxes, of which one is the octroi or what they call the 'Nuzhaivu vari'. Most of the commodities on which octroi has been imposed are exempt from sales tax under section 8 read with the relevant Schedule. I am not going into the details. I can say that there has been some purpose inexempting the essential commodities like sugar, textiles, cement, vanaspati, iron and steel, etc., from sales tax. But, at the same time, the octroi that is imposed now would affect the consumer. Perhaps, for the first time after Independence, the State Government have had to think of octroi because of the unprecedented drought and because of the necessity to find revenue resources for implementing the laudable scheme of Nutritious Meal programme, for providing job opportunities and for achieving the other beneficial objectives set out by the Hon. Minister. The only one criticism that can be made is in respect of the increase in automobile tax, especially on transport vehicles. The levy of octroi on petrol and petroleum products is rather a heavy burden on the consumer. The increase in tax on transport vehicles combined with the levy of octroi on petroleum products and also the rise in the price of petrol as such will definitely affect the consumers, especially the poor persons. The prices of food articles like vegetables, butter, ghee, milk, fish, egg, meat etc.



which have to be transported from various small towns and villages will go up and, ultimately, the consumer will have to bear the burden of the tax. The octroi on petroleum products can be reduced and, in any case, the increase in tax on transport vehicles has to be reduced. At the same time, we have to take note of the fact that the condition of the roads used by these transport vehicles is bad. Even in Madras City, we see that the car-tyres get damaged within a short period. The damage must be much more for the big transport vehicles. Therefore, we have to see that the roads are kept in good condition. Otherwise, the owners of the transport vehicles will find the operation and maintenance of the vehicles very costly and they will increase the transport charges. Then, naturally, the prices of various commodities that we want will increase. Therefore, I am very anxious that these must be looked into.

Sir, I would like to say a few words in regard to the scheme for providing employment to one member in every family. Looking at the amount that has been allotted for this scheme, logically it does not seem to me that this is going to help many families. More than anything else, we cannot get away from the fact that unemployment is rampant among the educated and the uneducated. Now, many things are being done for providing employment to the poor people. For instance, the Banks have been asked to give loans to these people for starting small trades. It would have been good if at least one sentence had been included in the Budget Speech of the Hon. the Finance Minister, stating "We have given employment to so many people; we have spent so much; we have asked the Banks to give so much as loans to these people; and this is the result". After all, Sir, the eating of the cake is the real test. What we want to know is whether the educated unemployed have been given jobs properly on a permanent basis so that they may come up in life. Therefore, what I am very keen about is that there must be an evaluation committee. There is the Planning Commission and we have got intelligent people in that. Not only that. We can employ the graduates and post-graduates through the Social Welfare Department and the School of Social Work for the purpose of evaluation of the work done. We should not keep things hidden because that will give room for suspicion. The real way to assess the outcome is to see the number of people who are benefited by a scheme. I am sure that the Government will listen to this small voice of mine and see that an evaluation committee is formed for

the purpose of going into the projects on which we are spending a lot of money. Frustration among the educated unemployed and the educated physically handicapped is much more, as we all know. Therefore, the evaluation of the projects is very necessary.

Sir, in this connection, I want to say one thing. I do not know whether the Minister in charge is here or not. In the State Housing Board complex there is a beautiful canteen and it gives employment opportunities to a number of deaf and dumb people. It was being run by people who were born deaf, and who had been educated. This canteen is being asked for by some other people. They are jealous of these handicapped women earning a good amount. I request the Hon. the Labour Minister to see that this canteen which has established a good name and which is giving good hygienic food at economic prices is allowed to run so that those hapless deaf people may be rehabilitated—they be allowed to earn their livelihood.

Sir, in the newspapers I read about the Karnataka State mentioning about crop rotation in Thanjavur in relation to the Cauvery waters to be shared. I am not sure whether there is anything to be done by our Government.

(முற்பகல் 11-00)

The achievement of the Integrated Rural Development Programme has been mentioned in the Budget. It is not known whether any impact has been made on account of such programmes. An independent committee should go into the working and the achievements of the programmes. It is worth while to have an impartial study conducted for the purpose of knowing the good and bad aspects of the programme so that we may think of suitable modifications. Sir, I have got a paper with me— நல்ல பேப்பர், எல்லோரும் படிக்கிற பேப்பர் . . .

I will not take much time in reading it. Still I want to mention about it, because some of the points are very harsh. "It is important here, as in other areas of socio-economic development, that the returns by way of the creation of permanent assets and of opportunities for remunerative employment are commensurate with the money spent."

It is also stated very clearly that "there are deficiencies in the efforts made by the States, the implementing authorities at the grassroots level. Only Kerala's Planning Board has made a pointed study of the results, showing that the increase in net income has been small and that not more than 18.6 per cent of



the target households in the State have been able to cross the poverty line through the IRDP. In the other States, the gulf between hopes and results is much wider. Somangalam (Tamil Nadu) which was a rural reconstruction project akin to IRDP was launched in 1976 but its 11,000 beneficiary families are now worse off than before, having to face legal action for default in loan repayment. Mere doling out of money as subsidy or grant is of no use unless it is supported by a concerted attempt on a continuing basis at promoting, sustaining and improving project results." This is a very salient point and I am sure that the Hon. Minister will hear this. The IRDP and other national rural welfare schemes are all very beautiful schemes. I have studied the schemes a little. But the amounts that we spend on them should give the results. I hope that this will be taken note of. I am sure that some of the Ministers are sitting outside. Anyhow, I have a feeling that when hon. Members of the Elders' House speak, most of the Ministers are absent.

Sir, I am now coming again to the scheme for providing job for at least one member in each family. The Hon. the Chief Minister is implementing this scheme with very good intentions. But, as I said earlier, the allotment of Rs. 15 crores is not enough to cover all the families. Perhaps, it can be implemented in one or two areas as a pilot project.

Sir, another essential scheme is the Nutritious Meal Scheme. I hope I will not be misunderstood when I say again and again that I am all in all for the continuance of this scheme. Many people have expressed their views on this scheme. Let us not go into the pros and cons of the scheme and let us not go into questions like who started the scheme and who will go on doing the work. It is a wonderful scheme and, because of this scheme, several children have come to study in schools. This is an enormous scheme covering nearly 68 lakhs of children throughout the State. Therefore, the implementation of such a big scheme is not an easy joke. Perhaps, there may be some room for corruption. Normally the poor people, the people who do not get meals regularly and those who do not have health places to live in are bound to think, "When there is corruption at higher levels, why not at my level also?" Therefore, this attitude has got to be corrected and avoided and vigilance strictly carried out. Because of the present water scarcity, there is no regular water-supply to some of the Nutritious Meal centres. Moreover, some people who are

opposed to this scheme are saying "இவர்களுக்குத் தவிடு கொடுக்கப் போகிறார்களா? மாட்டுக்குப் போடும் சாப்பாட்டை இவர்களுக்குக் கொடுக்கப் போகிறார்களா?" referring to wheat preparation. Let us not believe what they say. Here, I would like to make a suggestion. Wheat is a very nutritious foodgrain and we can make lovely bread out of wheat. In fact, the Central Government have spent lakhs of rupees on starting institutions to propagate the cooking of foodstuffs using wheat. The CARE organisation also has given assistance for this and we have several well-established central cooking centres. Let us see that those are not closed down. Therefore, we have to see that wheat is also used in the Nutritious Meal scheme at least once a week. Of course, I am on the Committee for the implementation of the Nutritious Meal Scheme and there is a place for me to tell this too. But, I would like to take this opportunity to make an appeal to the Hon. the Chief Minister. He has got a good heart and since he has seen days of difficulty, he wants to see that the Nutritious Meal Scheme is properly implemented. What I would like to say is that the people who are in charge of this scheme should not fell that they are doing a sort of bonded labour. Every person, however poor he or she is, wants to be with his or her family at least for a day in a week. At the same time, if the child does not take meals for a day in the centre, it is not going to die of hunger because its parents may not be so poor as not to be able to feed the child even for a day. Therefore, the people in charge of the Nutritious Meal Centres may be given at least a day off in a week. If that is done, at least for a day they can remain at home with their families and take some rest. At the same time, because the children will take food in their homes on one day in a week, they will appreciate the food served in the centre much better.

Then, Sir, in the matter of implementation of the scheme for providing one job for each family, we should have a small committee consisting of experienced people for watching the implementation of that scheme. The implementation of the scheme should be above Party politics so that the needy people may get the benefits of the scheme. We should not say, "This man's grandfather is a pensioner getting a pension of Rs. 25; his mother is getting an income of Rs. 20. Therefore, this man should not be given employment." This is a crucial point because the problem of unemployment has to be approached in the proper way if the scheme is to become a success. I hope that it will be done.



Sir, I now come to the announcements in pages 45 and 47 of the Budget Speech extending some concessions in sales tax. In this connection, I would very much like to make an appeal to the Government that the voluntary organisations producing goods as a measure of rehabilitation of destitutes' deserted windows, orphans, other categories of people who required special attention, etc. may be exempted from payment of sales tax on the goods that they produce. Sir, as one associated with the Central Social Welfare Board and also the State Social Welfare Board, I am glad to say that we have started many ancillary units in Coimbatore. The industrialists there have come forward to help the ancillary units. The Hon. the Labour Minister is here and I hope that he will see that the sales tax exemption requested for by me is given. I have also another request to make. The Hon. the Labour Minister knows very well that children under the age of 15 years are being exploited by the capitalists and others. I think that something should be done about this. I hope that the Hon. Minister will not say that this requires a Constitutional amendment or something like that. For eradicating the exploitation of children, he can make use of the services of the voluntary organisations. Recently, when I had been to Tiruppathur, I found that some lawyers, Rotarians, etc., have all joined together and formed a committee for this purpose. At present, the Hon. the Labour Minister seems to be interested only in the welfare of the grown-up labourers. But some beginning has to be made to prevent the exploitation of young children by the various employers. I hope that the Hon. Thiru Raghavanandam, who knows more about the travails of labour, would do his very best in this matter.

Sir, coming to the State Housing Board, I am very happy that a woman is there on the Slum Board doing good service. May I say that when I was the first woman appointed as member of the City Improvement Trust, it was a surprise to many but as Mayor of the Corporation, I have visited almost all the slums in the City.

(The Deputy Chairman sounded the gong)

Sir, I have taken only about 10 minutes.

(The Deputy Chairman sounded the gong.)

Thirumathi TARA CHERIAN: I have seen the Slums and I know what is happening there. Unless you stop the mushroom growth of many slums coming up over night we will not be able to do much.

I will finish in two minutes, Mr. Deputy Chairman. Coming to the Social Welfare Board, there are different amounts of subsidy given to different orphanages. The children are all the same and of the same age. Therefore, some uniformity should be ensured. I think the Nutritious Meal Scheme may be extended to those in the Orphanages also. A sum of Rs. 35 or so is given for meals, oil, soap etc., for whole month. They could be given the C.M's nutritious midday meals. Though I have many more things to say, I hope I will get another opportunity to say about them.

I want to mention one more thing and that is about the Suppression of Immoral Traffic. Dr. V. S. Rishi is a good person and he is on the Committee which is doing good service in this field. Incidentally I want to mention about omission of appreciation by this Government of various voluntary organisations and international organisations. There are very many other voluntary organisations doing good service to the people. If one sentence is mentioned in the Budget speech expressing thanks to them, it will be a good gesture. There are International Organisations and United Nations organisations which have done many things and one word of appreciation could have been mentioned in the Budget. If that is done, the Voluntary organisations will appreciate the good gesture of this Government. The Suppression of Immoral Traffic Act is not effectively implemented in Tamil Nadu. According to the Act, there should be at least a Special Officer in the City of Madras to be in separate charge of the implementation of the Act, in the City. This is not being done. Therefore, due to poverty, the poor women fall into the oldest profession. I am very sorry to say that in Tamil Nadu even students from Colleges have come into this. Therefore, something must be done. Unless it is nipped now, it will be very difficult later. I congratulate the Hon. the Finance Minister on what he has done in this Budget to the extent possible for him. Thank you.

(முற்பகல் 11-10)

திரு. எ. ஜே. தாஸ்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் பருவ மழை தவறியதன் காரணமாக உணவுப் பஞ்சம், தண்ணீர் பஞ்சம், மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று





சொல்லுவதால், இது ஒரு 'பஞ்ச' பட்ஜெட்டாகத் தெரிகிறது. இன்றைக்கு சென்னை நகரில் ஒரு நாளைக்கு ஒரு முறை தண்ணீர் விடுவது என்பது போய், இரண்டு நாளைக்கு ஒரு முறை, அதுவும் ஒரு மணி நேரம் விடுகிறார்கள். சில இடங்களில் ஒரு மாதமாகியும் இன்னும் தண்ணீர் வரவில்லை. குறிப்பாக தொழிற்சாலைகளுக்கு 100 சதவிகித மின்வெட்டு. ஆயிரம் ரூபாய் சம்பளம் என்று சொல்லுகிறோமே, அந்த ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது இந்த விலைவாசி ஏற்றத்தில் எவ்வளவு போதுமானது என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்கு ரேஷன் அரிசி கிடையாது. இது போதாது என்று 26 கோடி ரூபாய்க்கு இன்றைக்கு வரி விதித்திருக்கிறார்கள். இது எல்லாம் தமிழக அரசினுடைய அறிவாற்றல் என்று எப்படிச் சொல்ல முடியும்? தண்ணீர் பஞ்சம் வராமல் தடுக்க நாம் முன்னெச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். குறிப்பாக ஒரு அரசு போடும் திட்டங்களை, அந்த அரசுக்குப் பின்னால் வருகிற அரசு நிறைவேற்றுவதுதான் அந்த அரசினுடைய கடமையாகும். வீராணம் திட்டம் என்பது சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டுவரும் நல்ல திட்டமாகத்தான் இருந்தது. அதை நிறைவேற்றியிருந்தால், இன்றைக்கு சென்னை நகரில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்காது. அதை விட்டுவிட்டு, இன்றைக்கு இங்கே தண்ணீர் பஞ்சத்தை உருவாக்கிவிட்டோம். பிறகு கட்டளைக் கால்வாய்த் தண்ணீர் சென்னைக்கு வருமென்று சொன்னார்கள். ஆனால் இதுவரை கட்டளைக் கால்வாய்த் தண்ணீர் வந்தபாடில்லை. இப்போது கிருஷ்ணா நீர் வரப் போகிறது என்று சொல்லுகிறார்கள். இன்னும் அதற்கு ஒப்பந்தம்கூட உருவாகவில்லை. அது எப்போது வரப்போகிறது, எத்தனை வருடங்களுக்குப் பிறகு வரப் போகிறது என்பதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. தமிழகத்திலே சிறந்த பொறியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களை அழைத்து, ஒரு குழுவை அமைத்து சென்னை நகருக்கு நிரந்தரமாகத் தண்ணீர் வர, தமிழகத்திற்கு நிரந்தரமாகத் தண்ணீர் வர ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் இப்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். வீராணம் திட்டம் நல்ல திட்டம் என்றும், அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்கள். ஆனால் நெருக்கடி காலத்திலே வீராணம் திட்டம் சரியானதல்ல, அதை நிறுத்த வேண்டும், அதில் ஊழல் ஏற்பட்டதாகப் பெரிய அளவில் மத்திய அரசிடமிருந்து அறிக்கை வெளியிடப்பட்டது. அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் தெரிந்துகொண்டு சொல்லுகிறார்களா, அதை எதிர்க்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** ஊழல் நடந்தது. அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது . . .

**திரு. ம. சங்கரலிங்கம்:** மத்திய அரசு எமர்ஜன்சி பீரியட்டில் ஊழல் நடைபெற்றது என்ற கருத்து இருந்ததையொட்டி ஒரு கமிட்டி நியமித்து, ஊழல் இல்லை என்று தெரிவித்து விட்டார்கள். அதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்களுக்குத் தெரிவிப்பார்களா ?

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பதில் சொன்னார்கள். நானும் அதைத்தான் சொல்லுகிறேன். குழு அமைத்து, அதில் தவறுகள் இல்லை என்று மறுக்கப்பட்டது.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஊழல் இருப்பதாகச் சொல்லி, அதற்குப் பின்னாலே அறிக்கை போட்டு இல்லை என்று சொல்லி விட்டதாகச் சொல்லுகிறார்கள். ஊழல் இருக்கிறது என்று அவர்கள் சொன்னால் ஊழலாகவும், அவர்கள் இல்லை என்று சொன்னால், ஊழல் இல்லை என்றும் ஆகிறது. ஊழல் நடைபெறவில்லை என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** வீராணம் திட்டத்தில் ஊழல் இருந்ததாகவும், அதைப்பற்றி விசாரித்ததாகவும் தவறான தகவலைத் தருகிறார்கள். அந்தக் குழு நியமித்தது, அந்தத் திட்டம் whether it is feasible or not என்பதைக் கண்டறியத்தான். ஊழல் நடைபெற்றிருக்கிறதா என்பதை அறிய குழு நியமிக்கப்படவில்லை, அது feasible திட்டம் தான், நிறைவேற்றலாம் என்று அந்தக் குழு பரிந்துரைத்திருக்கிறது.

**திரு. எஸ். ஆர். இராதா:** நான் சொல்லுவது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லும் அந்தக் குழுவைப் பற்றியல்ல. நான் சொல்லுவது, நெருக்கடி காலத்திலே அந்தத் திட்டத்திலே ஊழல் நடைபெற்றதாக, அரசை டிஸ்மிஸ் செய்யும்போது, அவர்கள் சார்பிலே காரணம் காட்டப்பட்டது. அது அறிக்கை மூலமாக வந்திருக்கிறது. வானொலியில் தெரிவிக்கப்பட்டது. பெரிய ஊழல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இன்றைக்குக்கூட அந்த ஊழலுக்கான அறிகுறிகள் எங்களுடைய பகுதியிலே யிருந்து, சேத்தியாத்தோப்பிலிருந்து, பார்த்தால் தெரியும்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தந்திருக்கிறார்கள். இப்போதுகூட அந்த ஊழலினுடைய பிரதிபலிப்பு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்கள். ஆளும் கட்சி பொறுப்பிலே இருக்கிறது. பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் ஆளும் கட்சிக்காரர். இப்படி ஊழல் இருந்தால், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, அதையே ஐந்து ஆண்டுக் காலம் சொல்லி, அரசியல் நடத்துவது நல்ல பண்பாக இராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே. ஊழல் பிரச்சினை சர்க்காரியா கமிஷனுக்குப் போய்விட்டது. 'பீசிபிலிட்டி ரிப்போர்ட்' என்பதில் நடைமுறையாக இதை நடத்துவது சாத்தியமில்லை, லாபகரமாக இராது என்று வந்து, அந்த சப்ஜெக்ட் 'க்ளோஸ்' செய்யப்பட்டது. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் பேசினார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். Nearly Rs. 20 crores have been spent. Nobody knows where the money has gone ஏறத்தாழ 20 கோடி ரூபாய் squandered. Nearly 20 crores have been squandered; nobody knows where the money has gone என்று பிரதம மந்திரி அவர்களே, அங்கே, சென்னையிலே பேசினார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கத்தைத் தந்தார்கள். அதில் ஒரு பகுதி சர்க்காரியா கமிஷனுக்குப் போயிற்று. பீசிபிலிட்டி இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி ஒரு குழு ஆராய்ந்து, அது செயல்படுத்தத் தக்கதல்ல என்று முடிவு செய்ததாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள், அந்த அறிக்கையை அவையில் வைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அது பப்ளிக் டாகுமென்ட். மத்திய அரசின் குழுவின் அறிக்கை. நாங்கள் கூறியிருப்பதற்கு மாறாக, கான்ட்ராவர்ஷியலாக அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையை அவையில் வைக்க வேண்டும். அறிக்கையை வைக்கவில்லை என்றால், எப்படி அதை நம்புவது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் சொன்னேன். அதோடு அது முடிந்துவிட்டது,

சொல்லுவது அமைச்சர். அந்த இலாக்கா அமைச்சர். அதோடு முடிந்து விட்டது. ஒவ்வொன்றைச் சொல்லும்போது, தன்றாவேஜை சட்டசபையில் வைப்பீர்களா, மேலவையில் வைப்பீர்களா என்றால் There will be no end to it. அதை வைக்க முடியுமா என்பதுபற்றிப் பரிசீலனை செய்கிறேன். பிரதம மந்திரி அவர்கள் இந்த வீராணம் திட்டத்தைப்பற்றிச் சொன்னதை எல்லோரும் கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: பிரதம அமைச்சராக இருந்து சொன்னது வேறு. பீசிபிலிட்டி இருக்கிறதா, இல்லையா என்பதை ஆராய ஒரு எக்ஸ்பெர்ட் கமிட்டி போட்டு, ஆராய்ந்து, அமுல் நடத்தக்கூடியது என்று பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்துப்பட அமைச்சரவர்கள்கூட பேசியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்போது ஒரு கருத்தைச் சொல்வதால், சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தைப்பற்றி கமிட்டியினுடைய அறிக்கையை, சென்னை நகரில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கும் இந்தக் காலக்கட்டத்திலே, சென்னை நகர மக்கள் அதை உணர்ந்து கொள்ளும் விதத்திலே அவையிலே வைப்பது அரசின் கடமை என்று வற்புறுத்துகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, 2½ டி.எம்.சி. தண்ணீர் வீராணத்திலிருந்து வருவதுதான் அந்தத் திட்டம். நடந்திருக்கும் சூழ்நிலைகளை எடுத்துப் பார்த்தால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது லாபகரமல்ல என்பது போன்ற ரிப்போர்ட் வந்திருக்கிறது. தண்ணீர் வராது என்பதல்ல. 'பீசிபிலிட்டி' என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு விளையாடக்கூடாது. தண்ணீரே வராது என்பதல்ல. 2½ டி.எம்.சி. வராது, ஆதலால் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டாம் என்பதல்ல முடிவு. அங்கே நடந்திருக்கக்கூடிய, செயல்பட்டிருக்கக் கூடிய செயல்களை எல்லாம் மனதிலே வைத்துப் பார்த்தால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது உசிதமல்ல என்ற வகையிலேதான் அந்த ரிப்போர்ட் இருக்கிறது. எனவே அதை நடைமுறைப்படுத்துவது சரியில்லை

(முற்பகல் 11-20)

என்று சொல்லி விடப்பட்டிருக்கிறது. மற்றொன்று சர்க்காரியா கமிஷன். அதுபற்றி திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் தவறுக்குக் காரணமானவர்கள் மீது மக்கள் நடவடிக்கை எடுத்து தண்டனையும் கொடுத்துவிட்டார்கள். ஆகவே அதுபற்றித் திரும்பவும் சொல்ல வேண்டியதில்லை.



திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஏற்கனவே இந்த ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி மூன்று, நான்கு முறை கூறியிருக்கிறார்கள். முதல் தடவை இதுபற்றிச் சொல்லும்போது, "பீசிபிலிட்டி ரிப்போர்ட்" கொடுத்திருக்கிறார்கள், ஆனால் அரசுக்கு எக்னாமிக்கலாக இப்போது இல்லை, ஆகவே கைவிட்டு விட்டோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலை அப்போது சொல்லவில்லை. எக்னாமிக்கலாக இருக்காது என்று அந்தக் குழு சொல்லவில்லை. அரசுதான் அப்படிச் சொல்லியது. ஆகவே "பீசிபிலிட்டி இல்லை" என்று குழு முடிவுக்கு வரவில்லை. அரசுதான் அந்த முடிவுக்கு வந்திருக்கிறது. அந்தக் குழு இது "நிறைவேற்றக் கூடிய திட்டம்" என்று தான் சொல்லியிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில், காவிரியில் தண்ணீர் இருந்தால்தான், வீராணம் திட்டத்தின் மூலம் சென்னைக்குத் தண்ணீர் வரும். இப்போது காவிரியில் தண்ணீரே இல்லை. அப்படி இருக்கும்போது, எப்படி வீராணம் திட்டத்தின்மூலம் சென்னைக்குத் தண்ணீர் வரும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னது முழுக்க முழுக்க உண்மை. காவிரியிலிருந்து தான் வீராணம் மூலம் சென்னைக்குத் தண்ணீர் வந்தாக வேண்டும். காவிரியிலிருந்து வீராணத்திற்கு முதலில் தண்ணீர் வர வேண்டும். வீராணத்திலிருந்து சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தண்ணீர் வர வேண்டும். அங்கிருந்து தான் நாம் சென்னைக்குத் தண்ணீர் சப்ளை பண்ண முடியும். இப்போது செலவு செய்வதாக இருந்தாலும், இதற்கு 140 கோடி ரூபாய்க்கு மேல் ஆகும். இன்டர்னல் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டத்துக்கு 200 கோடி ரூபாய் ஆகும். தவிர இப்போது மழையும் இல்லை. காவிரியில் நீரும் இல்லை. இந்தத் திட்டம் நிறைவேற்றப் பட்டிருந்தால் கூட, இப்போது இது பயன்பட்டிருக்குமா என்பது சர்ச்சைக் குரியது என்பதை நானும் மாண்புமிகு உறுப்பினரோடு சேர்ந்து ஒப்புக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இதே அணுகுமுறையோடு தான் கட்டளைக் கால்வாய்த் திட்டமும் பார்க்கப்பட்டதா? அதற்குக் காவிரியிலிருந்து தண்ணீர் வர வேண்டுமா, இல்லை, வேறு ஆறுகளிலிருந்து தண்ணீர் வர வேண்டுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கட்டளைக் கால்வாய்த் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, இப்போது திருத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இது மாண்புமிகு உறுப்பினருக்கும் நன்கு தெரியும்.

(திரு. க. இராமமூர்த்தி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லையே. மாண்புமிகு உறுப்பினர் ரொம்ப சுறுசுறுப்பு. (சிரிப்பு) இப்போது இந்த அரசு முடிவாக எடுத்திருக்கும் திட்டம் கிருஷ்ணா திட்டம் தான். ஆனால் மற்ற திட்டங்களைப் பரிசீலிக்கவில்லை. இறுதியாக அரசின் முடிவு கிருஷ்ணா திட்டம் தான்.

**திரு. க. இராமமூர்த்தி:** சென்னைக்குக் குடிநீர் பிரச்சினைபற்றி இறுதியாகப் பரிசீலனை செய்த பிறகு, கட்டளைக் கால்வாய்த் திட்டம் என்று அறிவித்தார்கள். அது பரிசீலிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு இந்த அவையிலும் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டது. அதற்குத் தண்ணீர் காவிரியிலிருந்து வர வேண்டுமா அல்லது வேறு ஏதாவது ஆற்றிலிருந்து வர வேண்டுமா? இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட பிரச்சினைகளை மாதிரி தான் அதிலும் அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டனவா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இப்போது நாம் விவாதித்துக் கொண்டிருப்பது வீராணம் திட்டம்பற்றி. நான் சொல்வதெல்லாம் இந்த அரசைப் பொறுத்தவரையில், இப்போது சென்னைக்குக் குடிநீரை கொண்டு வர இறுதியாக ஒப்புக்கொண்டு, செயல்படுத்த கருதிக் கொண்டிருப்பது கிருஷ்ணா நதித் திட்டம் தான்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** இப்போது இறுதியாக முடிவெடுத்திருப்பது கிருஷ்ணா திட்டம் தான் என்று மாண்புமிகு அமைச்சர் குறிப்பிடுகிறார். இதற்கு முன்பு போட்ட கட்டளைக் கால்வாய்த் திட்டம் என்ன ஆயிற்று என்று கேட்டால், அது கிடப்பிலே இருப்பதாகச் சொல்கிறார். இன்றைக்கு சென்னைக்கு ஏறக்குறைய 130 தண்ணீர் லாரிகள் அன்றாடம் 1,585 உருக்குத் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி வருகின்றன. இந்த வசதியை ஏழையெளிய மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் ஏழையெளிய மக்கள் குடிசைவாழ் மக்கள் வசிக்கிற பகுதிகளில் எல்லாம் இன்னும் கூடுதலாக உருக்குத் தொட்டிகளை அமைத்து, லாரி மூலம் தண்ணீர் சப்ளை பண்ண வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு 1 கோடியே 17 லட்சம் குடும்ப அட்டைகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. ஆனால் அதை இப்போது நியாய விலைக் கடைகளின் மூலமாகக் கொடுக்கவில்லை. அதோடு சத்துணவுத் திட்டத்திற்கு மாதம்





ஒன்றுக்கு 17 ஆயிரம் டன் அரிசி தேவை என்பதை நாம் நிதிநிலை அறிக்கை வாயிலாக அறிகிறோம். இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தில் இருக்கும் போது, ஒரு வருடத்திற்குத் தேவையான அரிசியை முதலிலேயே கையிருப்பில் வைக்க ஏற்பாடு செய்திருக்க வேண்டாமா? இப்படிப்பட்ட திட்டங்களை அமுல்படுத்த முன்வரும்போது, ஒருமுகமாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டு திட்டத்தை அமுல்படுத்த ஆரம்பிக்க வேண்டுமேயொழிய, அவசர அவசரமாக ஆரம்பிக்கக் கூடாது. ஏழையெளியவர்களுக்குச் சத்துணவு கொடுப்பதை யாரும் ஆட்சேபணை செய்யவில்லை. சத்துணவுத் திட்டத்திற்கு எவ்வளவு அரிசி தேவையோ அதை முதலிலேயே அரசு சேர்த்து வைத்திருக்க வேண்டும். ஆனால் நம்முடைய தமிழக அரசோ எதற்கெடுத்தாலும்— மின்சாரமானாலும் சரி, அரிசியானாலும் சரி, தண்ணீரானாலும் சரி— எல்லாவற்றையும் மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி எல்லாம் சொன்னால், இந்த அரசு மக்களுக்கு என்ன தான் கொடுக்கப் போகிறது என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டு மென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு அரிசி விலை ஏறிக்கொண்டே போகிறது. ஏழையெளிய மக்கள் வாங்கும் அரிசி, மனிதனுக்கு மிகவும் தேவையான அரிசியின் விலை இன்றைக்கு ஏழையெளிய மக்கள் வாங்க அஞ்சும் அளவுக்கு ஏறிக்கொண்டே போகிறது. அதிலும் அரசே அரிசிப் பற்றாக்குறை என்று அறிவித்ததற்குப் பின்னால், அரிசியையெல்லாம் பதுக்கல்காரர்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள். அரிசி இன்றைக்கு ஓரளவுக்கு இருந்தாலும் கூட, அதை பதுக்கல்காரர்களும், சமூக விரோதிகளும் பதுக்கி வைத்து ஏழையெளிய மக்களுக்கு பாதகம் ஏற்படும் வகையில் விலையை உயர்த்திக்கொண்டே போகிறார்கள். பதுக்கல்காரர்கள் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். எத்தனை ஆயிரம் மூட்டைகள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கின்றன? எனக்குத் தெரிந்த வரையில், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் பதுக்கல்காரர்கள் மீது எடுக்கவில்லை. பதுக்கல்காரர்கள் மீது அரசு இந்த நேரத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் அரசு நடவடிக்கை எடுத்தால்தான், ஏழை யெளிய மக்கள் அரிசியை வாங்கிச் சாப்பிடும் நிலை ஏற்படும்.

அடுத்து, மீன் வளம் இந்த நாட்டில் அதிகமாக இருந்தாலும் கூட, இன்றைக்கு மீனைச் சாப்பிடக் கூடிய மக்களும் அதிகமாக இருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு கிலோ மீன் 26 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கிலோ

[திரு. எ. ஜே. தாஸ்] [1983 மார்ச் 9

26 ரூபாய்க்கு விற்றால், எப்படி சாதாரண ஏழையெளிய மக்கள் வாங்கிச் சாப்பிட முடியும்? அரசு அதிகமாக மீன் வளத்திற்குச் செலவு செய்திருக்கிறது என்பது பாராட்டத்தக்கதுதான். ஆனால் கிலோ 26 ரூபாய்க்கு விற்பதால், ஏழையெளிய மக்கள் வாங்கிச் சாப்பிட அஞ்சும் நிலை இருக்கிறது. அதே நேரத்தில் ஐந்து வருடத்திற்கு முன்பு கிலோ 12 ரூபாய்க்கு விற்ற ஆட்டிறைச்சி இன்றைக்கு கிலோ 25 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அன்றைக்கு அதிகமாக மழை பெய்து வெள்ளம் வந்ததால், 12 ரூபாயிலிருந்து 25 ரூபாய்க்கு விலை ஏறியது. இன்றைக்கு மழையும் இல்லை, வெள்ளமும் இல்லை. அப்படி இருக்கும்போது, ஏன் அதன் விலையைக் குறைக்கக் கூடாது? வெள்ளம் வந்ததால் ஏறிய விலை வெள்ளம் இல்லாத நேரத்தில் தானாக இறங்க வேண்டியதுதானே. மக்களுக்கு நிறைய நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அரசு இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் தோணித் துறையை 41 லட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்கு மத்திய அரசு இசைவைத் தெரிவித்திருப்பது பாராட்டத்தக்கது. பொதுவாக மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து மீனை மேம்பாட்டிற்காக 81 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் முத்துச்சிப்பிகளைச் சேகரிப்பதும், முத்துக்களை வளர்ப்பதும் நல்ல திட்டங்கள். ஜப்பானில் அதிக அளவில் நவீன முறையில் முத்துச்சிப்பிகளை உற்பத்தி செய்து நல்ல வருவாயை ஈட்டுகிறார்கள். அந்த முறையை தமிழகத்திலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காடுகளில் உள்ள மரங்களை இன்றைக்கு பல பேர், குறிப்பாக அரசியல் செல்வாக்கு படைத்தவர்கள் எல்லாம் வெட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள். மரங்கள்தான் நாட்டின் செல்வம். நாட்டில் மரங்கள் ஏராளமாக இருந்தால்தான், மழை பெய்யும். ஆகவே இந்த விஷயத்திலே எப்பேர்ப்பட்ட அரசியல் செல்வாக்கு படைத்தவர்களாக இருந்தாலும், தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறக் கூடாது. அதே நேரத்தில் கள்ளத்தனமாக பெருமளவில் மரங்களை வெட்டிக்கொண்டு போகிறவர்களைக் கண்டுபிடிக்க 18 சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தவிருக்கிறார்கள். இதற்காக 13 லட்சம் ரூபாய் செலவு செய்ய இருக்கிறார்கள். இந்த 18 சோதனைச் சாவடிகள் இல்லாமலேயே நாம் கள்ளத்தனமாக மரங்களைக் கடத்துவதைத் தடுத்து 13 லட்சம் ரூபாயை மிச்சப்படுத்தவும் முடியும்.



1983 மார்ச் 9] [திரு. எ. ஜே. தாஸ்]

(முற்பகல் 11-30)

மின் வாரியத்திற்கு அடுத்த நிதியாண்டில், 1,700 கோடி ரூபாயில் 30 சதவிதம் ஒதுக்குகிறோம். ஏற்கெனவே பல கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இன்றைக்கு மின்சார வாரியத்திலே எத்தவிதமான வருமானமும் இல்லை. அது நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. மேலும் இன்றையதினம் சில புதிய திட்டங்களை உருவாக்குகிறோம். அது மிகவும் வரவேற்கத்தக்கது தான். இருந்தாலும், இதிலே எல்லாம் ஒரு கண்காணிப்பு வேண்டாமா? இவ்வளவு கோடி ரூபாய் நஷ்டத்திலே போகும்போது, மக்களுடைய வரிப் பணம் இப்படிப் போகும்போது, இதையெல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டிலே 51 கோடி ரூபாய் நாம் மின் வாரியத்திற்காக ஒதுக்குகிறோம். அந்தப் பணத்தையெல்லாம் நல்ல முறையிலே செலவழிக்க வேண்டும் என்ற அளவிலே அதற்குரிய வகையில் கண்காணிப்பு வேண்டும்.

போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பாகப் பணியாற்றுகின்றன. அப்படி பணியாற்றுவதாகச் சொல்லும்போது, இன்றைக்கு தனியார் பேருந்துகளும் செல்கின்றன. அந்தத் தனியார் பேருந்துகள்தான் பயணிகளை நிறைய ஏற்றிக் கொண்டு போகின்றன. நம்முடைய பேருந்துகள் அந்தத் தனியார்களின் பேருந்துகளுக்குப் பின்னாலே, காலியாகப் போகின்றன. பயணிகளை ஏற்றிச் செல்லவில்லை. இந்த நிலைமைகளைப் பார்க்கும்போது, இந்த டிரைவர்களும், கண்டக்டர்களும் மற்றும் டைம்-கீப்பர்களும் தங்களுக்குள்ளே ஓர் ஒப்பந்தம்' இந்த தனியார் பேருந்து வைத்திருப்பவர்களிடம் வைத்துக் கொண்டுதான் இப்படிப் போகின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இப்படி அவர்கள் செய்வதால், இந்த அரசு மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று கருதுகின்ற திட்டங்களைக் கூட சரியாகச் செய்ய முடியாத நிலைமைதான் வருகின்றன. ஆகவே, இந்தக் குறைகளைப் போக்கி நல்ல முறையிலே போக்குவரத்துக் கழகங்கள் செயல்பட தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு இன்னும் அதிகமான அளவிலே நிதி ஒதுக்க வேண்டும். சுற்றுலா வளர்ச்சி தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலே கூட வளர்ச்சியடைய வேண்டும். அதிகமான எண்ணிக்கையில் மக்கள் தமிழ் நாட்டுக்குச் சுற்றுலா வரும்போது, அதிக அளவிலே தமிழகத்திற்கு வருமானம் கிட்டுகிறது. மேலும், தமிழகத்திலேயுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அவர்கள் பார்க்க முடியும், அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து

வேண்டும். ஆகவே, சுற்றுலா வளர்ச்சிக்கு இந்த நிதி போதாது என்று சொல்லி, இன்னும் அதிகமான அளவிலே நிதி ஒதுக்கி சுற்றுலா வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த நிதியாண்டுக்கு சுகாதாரத் துறைக்கு என்று 147.75 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் குறைவு. இன்றைக்கு மனிதனுக்கு சுகாதாரம் வேண்டும். இன்றையதினம் ஆஸ்பத்திரிகளில் போய்ப்பார்த்தால், நோயாளிகள் அங்கே படும் கஷ்டங்கள் தெரியும். அவர்களுக்குத் தேவையான படுக்கை வசதி இல்லை. தரையிலே, கிழிந்த பாயிலேதான் அவர்கள் படுத்து இருக்கிறார்கள். அப்படியிருக்கும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டாமா? ஏழையெளிய மக்கள் எல்லாம் இன்றைக்குத் தரையிலே கிடக்கிறார்கள். இந்த நிலைமைகளை மாற்ற நல்லமுறையிலே அதற்கு வேண்டிய தொகையை ஒதுக்கி சுகாதாரத் துறை மேலும் நல்லமுறையிலே பணியாற்ற ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறைக்கு புதிய மோட்டார் வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், 200 பேருக்கு புதிய பதவிகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி கொடுக்க வேண்டியது எல்லாம் நியாயம். ஆனால், இன்றையதினம் இருக்கும் நிலைமையைப் பார்த்தால், ஏழையெளிய மக்கள் காவல் துறைக்குப் போய் புகார் கொடுக்க அஞ்சுகிறார்கள். 'நான் உங்களின் நண்பன்' என்று வெளியே எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி எழுதி வைத்திருப்பது அங்கே நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளுக்கு மிகவும் மாறுபட்டதாக இருக்கிறது. உள்ளே போனால் போகின்றவன் படும்பாடு அவனுக்குத்தான் தெரியும். நான் மிகவும் சாதாரண மக்களிடம் பழகுவதால்தான் எனக்குத் தெரியும். ஒரு மனு கொடுக்க வேண்டும் என்று காவல் நிலையத்திற்குச் செல்லும்போது, கூடவே பணமும் கொண்டுபோக வேண்டும். எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்து சொல்லிவிட்டால், மிகவும் நல்லதாக இருக்கும். பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால், அங்கே கொடுக்கப்படும் மனு ஏற்கப்படுவதே இல்லை. காவல் நிலையத்திலே ஒருவன் சென்று 50 ரூபாய் கொடுத்து இன்னொருவன் மீது பொய்ப் புகார் கொடுத்துவிட்டால், யார் மீது புகார் கொடுக்கப்பட்டதோ அவனை அங்கே கொண்டுபோய் உள்ளே வைத்து மிகவும் கொடுமைப்படுத்துகிறார்கள். இப்போது ஆளும் கட்சியிலே உள்ள தொண்டர்கள் சில வட்டாரங்களிலே என்ன செய்கிறார்கள் என்றால், இளைஞர் காங்கிரஸ் தொண்டர்களை எல்லாம் அவர்கள் கட்சியிலே இழுப்பதற்காக அவர்கள் மீது பொய் வழக்குகள் எல்லாம், காவல் நிலையத்திலே உள்ளவர்களின் ஒத்துழைப்போடு, போடுகிறார்கள். இன்றைய



தினம் ஆர். 3 போலீஸ் நிலையத்திலே ஒரு [illegible] நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் மாண்புமிகு [illegible] களுக்கும் கொடுக்கின்றேன், மாண்புமிகு [illegible] இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கொடுக்க [illegible] கொள்கிறேன். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் [illegible] இருந்தாலும், இந்த நாட்டிலே உள்ள கோட்பாடுகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் விரோதமாகப் [illegible] அவர்களை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் [illegible]

திரு. எஸ். ஆர். இராதா : [illegible] போனாலும் காசு கொண்டு போனால்தான் காரியம் நடக்கும் என்று சொல்[illegible], இப்போது ஆளும் [illegible]க்கு, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்குக் [illegible] காரியம் நடக்கிறது [illegible] சொல்லுவது முன்னுக்குப்பின் முரணாக இ[illegible] மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்[illegible] இருக்க முடியும். காசு வைத்திருப்பவர்களுக்குத்தான் காரியம் நடக்கும் என்று சொன்னால், திரு. இராமமூர்த்தி போன்றவர்களுக்குத்தான் இந்த நாட்டிலே காரியம் நடக்கும், வேறு யாருக்கும் நடக்காது.

திரு. க. இராமமூர்த்தி: காசு வைத்திருப்பவர்களுக்குத்தான் காரியம் நடக்கும் என்று சொன்னபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். இப்போது காசு எங்கே இருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, அதைத் திருப்பி விடுகிறார்கள். காசு இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறார்களா? அல்லது காசு கொடுத்து யார் வேண்டுமானாலும் காரியம் சாதித்துக் கொள்ளட்டும் என்று ஆளுங்கட்சியினர் காவல் துறையை விட்டு விட்டிருக்கிறார்களா?

திரு. எஸ். ஆர். இராதா : காசு கொடுத்தால் காரியம் நடக்கும் என்பதிலே எனக்கு நிச்சயமாக மகிழ்ச்சி இல்லை. ஆனால் யாரிடத்திலே இருக்கிறது என்று சொன்னால், ரிசர்வ் பாங்கை அவர்கள்தான் வைத்திருக்கிறார்கள். அவர்கள் நினைத்த நேரத்திலே நோட்டை அடிக்கலாம். அந்த நிலைமை எங்களுக்கு இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: ரிசர்வ் பாங்கை வைத்து அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்ற நிலைமை இருக்கிறவரை பரவாயில்லை. ஒரு அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்து அரசாங்கத்தை நடத்த முடியும் என்ற அளவுக்கு நிலைமை நாங்கள் ஆட்சி நடத்தும் மாநிலங்களில் இல்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : காசு சமாச்சாரம் இருக்கட்டும். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

[1983 மார்ச் 9

திரு. ஏ. ஜே. தாஸ்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொல்வதைப்போல நாங்கள் தமிழகத்திலே ஆளும் கட்சியிலே இல்லை. தமிழகத்திலே உள்ள பிரச்சினையைப்பற்றிதான் நான் இங்கே பேசுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: ஆளும் கட்சியிலேதான் இருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்போது வேண்டுமானால் கட்சி மாறி இருக்கிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது. இப்போது காங்கிரஸ் கட்சி தான் இந்தியாவை ஆண்டுகொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: இந்த மாநிலத்திலேயும் எங்கள் கட்சி தான் ஆளும் கட்சி என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்வார்களானால், மிகவும் மகிழ்ச்சி.

திரு. ஏ. ஜே. தாஸ்: நான் இந்த மாநிலத்தைப்பற்றிச் சொல்கிறேனே தவிர அகில இந்திய அளவிலே சொல்லவில்லை. இன்றையதினம் இளைஞர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டிற்குச் சென்று அங்கேயிருந்த பாரத பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய படத்தை உடைத்திருக்கிறார்கள், அங்கே இருந்த கொடியைக் கிழித்திருக்கிறார்கள். இதிலே தக்க நடவடிக்கை எடுத்தால், இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும்.

இருபது அம்சத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதை நல்லமுறையில் அமுல்படுத்தியதுபற்றி நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். இருபது அம்சத் திட்டத்தை நல்லமுறையிலே செயல்படுத்தி இருக்கிறது. நல்லதைப் பாராட்டுகிறோம், இல்லாததைப்பற்றிச் சுட்டிக்காட்டுகிறோம். அதே நேரத்திலே 13 பொருள்கள் மீது இன்றைக்கு . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதேநேரத்திலே நேரமாகி விட்டது.

திரு. ஏ. ஜே. தாஸ்: 13 பொருள்கள் மீது வரி போடப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் மிகவும் அத்தியாவசியமான பொருள்கள். [illegible] எல்லோரும் போடுவதுதான். ஆகவே, இந்த வரிவிதிப்பு முறை[illegible] மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, [illegible] மீது உள்ள வரிச்சுமையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. பா. ரா. [illegible]: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1983-84 ஆம் நிதி ஆண்டிலே வரவு



[1983 மார்ச் 9] [திரு. பா. ரா. [illegible]]

ரூபாய் 1,774.88 கோடி என்றும், செலவு [illegible] கோடி ரூபாய் [illegible] என்றும், இதனிடையே பற்றாக்குறை உபரியாக ரூபாய் 121.07 கோடி என்றும், [illegible] அதற்குக் [illegible] தொகுப்பு 184.65 கோடி ரூபாய் என்றும் [illegible] மின்சார வாரியத்திற்கு [illegible] செய்ய நிதியிலிருந்து 200 கோடி ரூபாய் [illegible] காட்டப்பட்டிருக்கிறது. மின்சார [illegible] வேண்டியதும் [illegible] ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், நான் வரவேற்கிறேன். ஆனால் [illegible] குறையை [illegible] நுழைவு வரி என்ற முறையிலே 13 பொருள்களின் மீது வரி விதிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, 13 என்ற அந்த எண்ணே [illegible] என்று நான் நினைக்கிறேன். அந்த is not an auspicious one

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

(முற்பகல் 11-40)

13 என்ற எண் மாற்றப்பட வேண்டும். சர்க்கரை, காகிதம், [illegible] செய்யப்பட்ட அட்டைகள், காகிதத் துணி, மருந்துப் பொருள்கள் ஆகிய நான்கு வகைப் பொருள்களையும் இந்த நுழைவு வரி விதிப்பிலிருந்து நீக்கி விட்டால், நல்லதாக இருக்கும். இரண்டு விழுக்காடு நுழைவு வரியை [illegible] நீக்கிவிட்டாலும், நிச்சயமாக வருவாய் இப்பொருள்களின் மீது [illegible] குறைந்துவிடாது. [illegible] ஏழை எளிய மக்களுக்கு இது உதவியாக இருக்கும். அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி 13 என்ற எண்ணையும் இதன்மூலம் ஒன்பது என்ற அளவுக்கு மாற்றிவிட்டால், அது உண்மையிலேயே மிகவும் ராசியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, திரைப்படக் கொட்டகைகளில் காட்டப்படும் [illegible] விளம்பரங்களைப் பொறுத்தவரையில், காட்சிக்கு முறையே 30 காசு, [illegible] என்ற அளவில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு மோட்டார் கார்கள் மற்றும் டீசல் வாகனங்கள் மீதுள்ள வரி 9 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இவைகள் அனைத்தும் வரவேற்கப்பட வேண்டியவைகள்தான். காரணம் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்றால், ஓரளவுக்கு வரி போட்டுத்தான் ஆக வேண்டும். ஆனால் அதே நேரத்தில் பொதுசேவையற்ற, போக்குவரத்து வசதிகளான இரண்டு சக்கர வண்டிகளைப் பொறுத்த வரையில், 3½ பரித்திறன் (ஹார்ஸ் பவர்) சக்திக்குக் கீழுள்ள இரண்டு சக்கர வண்டிகளைப் பொறுத்தவரையில், அவைகளுக்குரிய காலாண்டு வரி ரூ. 10-லிருந்து ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப்போலவே 3½ பரித்திறன் சக்திக்கு மேலுள்ள இரண்டு சக்கர வண்டிகளுக்குரிய காலாண்டு வரி ரூ. 15-லிருந்து ரூ. 20 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

[திரு. பா. ரா. தாமஸ்] [1983 மார்ச் 9

இரண்டு சக்கர வாகனங்களைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் அவைகள் நமது நாட்டில் குடும்ப வாகனங்களாகத்தான் பயன்படுகின்றன. ஒரு குடும்பத்தில் உள்ள ஐந்து, ஆறு பேர்களும் ஒரு இரண்டு சக்கர வாகனத்தில் பயணம் செய்வதை நாம் சாதாரணமாகக் காண முடியும். எல்லோரும் அதே வாகனத்தில் சவாரி செய்கிறார்கள். கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் அனைவருமே ஒரே நேரத்தில் அத்தகைய வாகனங்களில் ஏறிச் சவாரி செய்து கொண்டிருக்கிறார்கள். அத்தகைய வாகனங்களுக்கு ரூ. 10-லிருந்து ரூ. 15 என்றும் ரூ. 15-லிருந்து ரூ 20 என்றும் காலாண்டு வரியை உயர்த்தியிருப்பது குடும்பங்களுக்குத் தொல்லை அளிப்பதாக இருக்கும். இதன் காரணமாக அந்தக் குடும்பங்கள் ஆண்டுதோறும் 20 ரூபாய் அதிகமாக வரி செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நாம் ஏற்கெனவே பெட்ரோல் விலையை ஏற்றிக்கொண்டே போய்க் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் இந்த இரண்டு சக்கர வாகனங்களைப் பொறுத்தவரையில், அவற்றிற்கான காலாண்டு வரியை உயர்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். காரணம், இந்த ஆட்சி, ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட பிறகு, சைக்கிளில்கூட இரண்டு பேர் சவாரி செய்யலாம் என்று அனுமதித்திருக்கிறது. இதன் காரணமாக கிராமப்புறங்களில் உள்ள மக்கள் மிகவும் பயனடைந்திருக்கிறார்கள். கிராமங்களில் வாழும் கணவனும் மனைவியும் ஜோடி ஜோடியாக சினிமாவுக்கு ஒரே சைக்கிளில் செல்கிறார்கள். அதைப்போலவே ஜோடியாக வீடு திரும்புகிறார்கள். இது அவர்களுக்கு மிகவும் சௌகர்யமாக இருக்கிறது. எந்த நகரத்தில் பார்த்தாலும் கூட, இந்த இரண்டு சக்கர வாகனங்கள் மிகவும் பயன் உள்ளவையாக இருக்கின்றன. அந்த அளவுக்கு இரண்டு சக்கர வாகனங்கள் மிகவும் அதிகமான அளவுக்கு நாட்டில் உற்பத்தியாகி, மக்களால் பயன்படுத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். எந்த அளவுக்கு அவற்றின் உற்பத்தி உயர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்கள் புள்ளிவிவரத்தோடு எடுத்துச் சொல்ல முடியும். அந்த அளவுக்கு இரண்டு சக்கர வாகனங்கள் நாட்டில் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. அதோடு மத்திய தர மக்களும், ஏழை எளிய மக்களும் இவைகளை நிறைய வாங்குகிற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. அவர்கள் கண்டிப்பாக வாங்கி உபயோகிக்க வேண்டிய கட்டாயம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அலுவலகம் போவதற்கும், பள்ளிகளில் பிள்ளைகளைக் கொண்டு போய் சேர்ப்பதற்கும், மீண்டும் திரும்ப அழைத்து வருவதற்கும் என்று தகப்பன், தாய் என்று குடும்பத்தில் உள்ள அனைவருமே இன்றைக்கு இரண்டு சக்கர வாகனங்களை நம்பியிருக்க வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது. எனவே இந்த அளவுக்கு மக்களுக்குப் பயன்பட்டு வரும் இரண்டு சக்கர வண்டிகளின் மீது விதிக்கி



1983 மார்ச் 9] [திரு. பா. ரா. தாமஸ்]

ருக்கும் காலாண்டு வரியில் செய்திருக்கும் உயர்வை கண்டிப்பாக அரசு தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது எந்த அளவுக்கு வசூலிக்கப் படுகிறதோ அதே அளவுக்குத்தான் அவைகளிடமிருந்து வரி வசூலிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு இந்த வரி உயர்வைக் கைவிடுவதன் காரணமாக அரசுக்கும் பெரிய இழப்பு ஏற்பட்டுவிடப் போவதில்லை. மாறாக இதே அளவுக்கு அல்லது இன்னும் சொல்லப் போனால் இன்னும் அதிகமான அளவுக்கு வரி கிடைக்கும். காரணம், இந்த வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகும்போது, அவற்றிலிருந்து கிடைக்கக் கூடிய வரித் தொகையும் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கும். எனவே, இத்தகைய வரி விதிப்புகள் மூலமாக அரசுக்கு சுமார் 25 கோடி அளவுக்கு வருவாய் கிடைக்கும் என்பதை மட்டும் நான் நம்பவில்லை. காரணம் இதைவிட அதிகமாகக் கிடைக்கும். என்னைப் பொறுத்தவரையில் இன்னும் நான்கு மடங்கு அதிகமாகத்தான் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்து, நகரப் பேருந்துகளைப் பொறுத்த வரையில்கூட, தற்போது ஒரு இருக்கைக்கு காலாண்டு வரி ரூ. 115 ஆக இருப்பதை ரூ. 150 என்று உயர்த்தி யிருப்பதன் மூலமாக, சாதாரண ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப் படுவார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக, ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் வரிகளை நாம் போடவில்லை என்று கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நடைமுறையில் இதை அமுல்படுத்த வேண்டு மென்றால், நகரப் பேருந்துகளின் இருக்கைக்குப் போடப்பட்டிருக்கும் வரி உயர்வைத் தவிர்க்க வேண்டும். முடிவில் என்ன ஆகும் என்றால், நகரப் போக்குவரத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்திவிடுவார்கள். இப்போதே மிகவும் அதிகமான கட்டணம்தான் பயணிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்ற உணர்வு மக்களிடம் இருந்து வருகிறது. இது மக்களை ஏற்கெனவே அதிகமான அளவுக்கு பாதித்து வருகிறது என்று உணர்கிறோம். இந்த நிலையில் இருக்கைக்கு காலாண்டு வரியை ரூ. 115-லிருந்து ரூ. 120 ஆக உயர்த்துவது சரியல்ல என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். ஏற்கெனவே நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், அவற்றில் பயணம் செய்பவர்களில் முக்கால்வாசிப் பேர்கள் இருக்கைகளில் உட்காருவதே இல்லை. இருக்கைகளில் உட்காராமலேயே அவர்கள் கட்டணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களின் பயணக் கட்டணத்தை இன்னும் உயர்த்துவதற்கு இடம் கொடுப்பது எப்படி நியாயமாகும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அநேகமாக எல்லாப் பேருந்துகளுமே சாய்ந்து கொண்டுதான் போய்க் கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு ஏராளமான பயணிகள் அவற்றில் ஏறிப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இருக்கைகளின் மீதான வரி

[திரு. பா. ரா. தாமஸ்] [1983 மார்ச் 9

உபர்வை அரசு தவிர்க்க வேண்டும் என்ற கருத்தை மிகவும் பணிவன்போடு அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சில வரிவிதிப்பிலிருந்து விலக்குகளையும் அரசு அறிவித் திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அதை வரவேற்றிருக்கிறார்கள். மண்ணெண்ணெய் விளக்குகள், திரிகள், சிம்னிகள் போன்ற பொருள்களின் மீது வரி விதிப்பை நீக்கியிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். [illegible] கிராம மக்களுக்கு நாம் விளக்குகளைக் கொடுப்பதைக்கூட நம்முடைய கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்று கருதுகிறேன்.

வெள்ளி கொலுசு, மற்றும் அரைஞாண் ஆகியவற்றிற்கும் வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் வரவேற்கக்கூடிய அம்சங்கள்தான் என்றால், நாம் ஒன்றை கவனிக்க வேண்டும். இனி வெள்ளியில் எந்தப் பொருளைச் செய்தாலும், அவற்றை விற்கும்போது கொலுசு என்ற பெயரில் விற்றுவிடுவார்கள். வெள்ளியில் செய்யப்படும் எந்த ஆபரணத்தையும் கொலுசு என்ற பெயரைப் போட்டு விற்றுவிட்டு வரி செலுத்தாத நிலைமை [illegible] என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[illegible] மாட்டுத் தீவனம், மா லவ்வலிக் கிழங்கு ஆகியவற்றிற்கும் வரி [illegible] அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இதைவிட நான் [illegible] அதிகமாக வரவேற்றுப் பாராட்டுவது என்னவென்றால், டயர், டியூப் [illegible] போன்றவற்றுக்கு விற்பனை வரி தற்போதுள்ள 12 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருப்பதாகும். நம்முடைய போக்குவரத்துக் [illegible] சார்ந்தவர்களைக்கூட நம்முடைய மாநிலத்தில் இந்தப் பொருள்களின் மீதான வரிவிதிப்பு அதிகமாக இருக்கிற காரணத்தால், வெளி மாநிலங்களுக்குப் போய் அந்தப் பொருள்களை அங்கே வாங்குகிறார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன். இன்றையதினம் அவற்றின் மீதான வரி விதிப்பு குறைக்கப்பட்டதன் காரணமாக, நம்முடைய மாநிலத்திற்குள்ளேயே இவற்றிற்கான விற்பனை அதிகமாகும் வாய்ப்பு இருக்கிறது. [illegible] அதிகமான வருவாய் நமது மாநிலத்திற்கு வரும் வாய்ப்பும் [illegible] முறைகளின் மூலமாக ஒரு கோடி ரூபாய் வரையான வரி [illegible]. ரூ. 26 கோடிக்கு வரி போட்டிருந்தாலும், இந்த ஒரு கோடி ரூபாய்க்கான வரி தவிர்ப்பின் காரணமாக மொத்தம் 25 கோடிக் [illegible] வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், இந்த வரி விதிப்பின் காரணமாக 25 கோடி ரூபாய் மட்டுமல்ல, [illegible] 100 கோடி ரூபாய் அளவுக்கு அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்று நம்புகிறேன். [illegible] மதிப்பிட்டைக் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, [illegible] பொறுத்தவரையில், [illegible] நாம் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறோம். [illegible] தண்ணீரை நம்பியே இருக்க வேண்டியிருக்கிறது. [illegible] தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும்போது [illegible] தொல்லைக்கு உள்ளாகிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழகத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் [illegible] உடலுழைப்பு செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நல்ல [illegible] [illegible] இருக்கிறார்கள். விவசாயத் தொழில் செய்பவர்களாக இருக்கிறார்கள். [illegible] பயிர்த் தொழில்பற்றி அறிந்து வைத்திருக்கிறார்கள். [illegible] அதிகமாக உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அறிவு [illegible] படைத்தவர்களாக இருந்தாலுங்கூட, நம் மாநிலத்தில் உள்ள பெரிய [illegible] தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாக மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே தமிழகத்தில் உள்ள நீர் வளம் இல்லாத குறையை ஆராய்ந்து முறையாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ பற்றாக்குறை வரும்போதும், வறட்சி ஏற்படும் போதும் மட்டுமே இத்தகைய முறைகளைக் குறித்து ஆய்வு செய்யாமல், இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். வட மாநிலங்களிலிருந்து மகா நதி இணைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு பிற மாநிலங்களின் ஆதரவையும் நமது அரசு பெற வேண்டும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நமதே இதனை முன்னின்று நடத்த வேண்டும். இதற்கான [illegible] வகையில் மத்திய அரசின் ஒப்புதலை நாம் கோரிப் பெற வேண்டும். [illegible] வகையில் அரசு துரிதமாகச் செயல்பட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இத்தகைய நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவது நம்முடைய சாகுபடியை மட்டும் பாதித்துவிட்டதாகக் கருதக்கூடாது. இதன் காரணமாக மாநிலத்தில் உள்ள [illegible] நீர் கூட குறைந்துவிட்டது. பல கிராமங்களில் பல பகுதிகளில் [illegible] பயிர் செய்ய ஆரம்பிப்பார்கள். இந்த [illegible] இரு தானியங்களைப் [illegible] செய்ய முடியவில்லை. கண்மாய்களில் இப்போது பணிகளை [illegible] அப்படிச் செய்ய முடியவில்லை [illegible] மேற்கொண்டிருக்கிறார்கள். இரண்டு, மூன்று மாதங்களுக்கு இது ஏழை எளிய மக்களுக்கு ஒரு [illegible] இருக்கும்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1983 மார்ச் 9

அடுத்து, மாநிலத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் போது, அவைகள் அனைத்தும் பொது மக்களாலே மேற்கொள்ளப்பட வேண்டும், காண்ட்ராக்ட் முறைகளை இதில் மேற்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது ஏறத்தாழ ரூ. 45.6 கோடிக்கு நாம் அனுமதி வழங்கியிருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து ஏறத்தாழ 190 கோடி அளவுக்கு நிதியுதவி கேட்டிருக்கிறோம். மத்திய அரசின் குழு தமிழகத்தைப் பார்வையிட்டுள்ளது. இன்னும் அதிகமான அளவுக்குக்கூட தமிழகம் வறட்சி நிவாரண உதவி பெறும் வாய்ப்பு இருக்கிறது என்றுகூட சொல்லப்படுகிறது. அப்படித் தான் கொடுப்பார்கள் என்றே நம்புகிறேன். அப்படி கொடுத்தால்கூட இத்தகைய பணிகளைப் பொறுத்தவரையில், ஒரு இடைவெளியில்லாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராம மக்களே நேரடியாக அந்தப் பொறுப்பை ஏற்று செயல்படும்படி செய்ய வேண்டும். அதிகாரிகள் நேரடியாக அவர்களிடம் வேலை வாங்கி நேரடியாக அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்தால்தான், மக்களுக்கு உண்மையிலேயே பலன் அளிக்கும் திட்டமாக இது இருக்க முடியும் என்பதோடு, கிராம மக்களும் கிராம அபிவிருத்திப் பணிகளில் நேர்முகமாகப் பங்கு கொண்டு செயல்படவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கண்மாய்கள்,

(முற்பகல் 11-30)

குளங்கள், குட்டைகள் ஆகியவற்றையெல்லாம் தூர் வார வேண்டுமென்றால் அந்தந்த மக்களைப் பயன்படுத்த வேண்டும். காண்ட்ராக்ட் கொடுத்து, ஏலம் விட்டு அல்லது டெண்டர் மூலம் செய்யும் முறையையெல்லாம் ஒழித்துவிட வேண்டும். வறட்சிப் பணியைப் பொறுத்தவரையில் நேரிடையாக மக்களுக்கு நன்மை செய்யும் நோக்கமாகக் கொண்டு செய்ய வேண்டுமென்று வலியுறுத்து கிறேன்.

மத்திய அரசு நம்முடைய மாநில அரசுக்கு 80 ஆயிரம் டன் அரிசியை வழங்க வேண்டும், 40 ஆயிரம் டன் கோதுமையை வழங்க வேண்டும், பிற மாநிலங்களிலிருந்து உபரி தானியத்தைக் கொள்முதல் செய்ய வேண்டும், வேண்டுமென்றால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறேன். இதற்கு மத்திய அரசு இடைஞ்சலாக இருந்தால், மத்திய அரசைக் கண்டிக்க ஆயத்தமாக இருக்கிறோம். காரணம், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், இது ஒரு பெரிய சோதனைக் கட்டம் என்று கருதுகிறேன். வரப்போகிற ஆறு மாத காலம் மக்களுக்கும் ஆட்சிக்கும் சோதனைக் காலம், காரணம், விலைவாசிகள் அதிகமாக ஏறக்கூடிய

[திரு. பா. ரா. தாமஸ்] [1983 மார்ச் 9

விற்கப்பட்ட ஒரு வைக்கோல் கட்டு இப்போது 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்தையும் கணக்கு எடுத்துப் பார்த்தால், சாகுபடிக்கேற்ற நிலம் மூன்று இலட்சம் ஏக்கர் என்றால், அதில் இரண்டு இலட்சம் ஏக்கரில் தான் பயிரிட்டிருக்கிறோம். அதில் ஒரு இலட்சம் ஏக்கரில்தான் விளைந்திருக்கிறது. மற்ற ஒரு இலட்சம் ஏக்கரில் விளையவில்லை. ஆகமொத்தம் மூன்றில் ஒரு பங்கு ஃபோடர்தான் (மாட்டுத் தீவனம்) வந்திருக்கிறது. மூன்றில் ஒரு பங்கு நெல்தான் வந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது, நிச்சயமாக நம்முடைய மாநிலத்தில் உள்ள தரமான கறவை மாடுகள் எல்லாம் பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். அதனால் நம்முடைய மாநிலத்தில் கால்நடைச் சொத்து குறையப்போகிறது. மாடுகளைப் பராமரிக்க முடியாத நிலைக்கு மக்கள் உள்ளாவார்கள். ஆகவே மாட்டுத் தீவனத்தைக் கொடுக்கக் கூடிய அளவிலே ஏதாவது ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டி, அதிலே அங்குள்ள மக்களை ஈடுபடச் செய்து, கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறேன்.

[illegible] கஷ்டம் வரப்போகிறது. மக்களுக்குக் குடி தண்ணீர் [illegible] என்று சொல்லுவதைப் போலவே, கிராமங்களில் உள்ள குளம், குட்டைகள், வற்றிவிட்டதால், அதில் உள்ள கொஞ்ச நஞ்சம் தண்ணீரையும் எடுத்து பாய்ச்சி விடுவதால், ஆடு மாடுகளுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. இதையெல்லாம் போக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் வளம், தொழில் நுட்பம், தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய அனைத்தும் மின்சாரத்தை நம்பியிருக்கின்றன. மின்சாரத்தைப் பொறுத்தவரையில், பல திட்டங்களைப்பற்றிப் பேசியிருக்கிறோம். நாம் அடிக்கடி அதிகமாக வலியுறுத்துவது, மதுரை மாவட்டத்திலே மூடிவிட்ட சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை மீண்டும் திறக்க வேண்டும் என்பது தான். ஒவ்வொரு மாவட்டத்திலும் அனல் மின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தும் காலத்தில், சமயநல்லூரில் உள்ள அடிப்படை வசதிகளை வைத்துக்கொண்டு உடனடியாக அனல் மின் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வர வேண்டும். முதற்கட்டமாக மதுரை மாவட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். மின்சாரத்திலே நாம் தன்னிறைவைப் பெற வேண்டும். மைக்ரோ ஹைடல் பவர் ஸ்டேஷன்களை நாம் ஆரம்பிக்கப் போகிறோம். நூறு சிறு சிறு மின் நிலையங்களை ஆரம்பிக்கப் போகிறோம் என்று பேசப்பட்டது. மூன்று மெகாவாட், நான்கு மெகாவாட் என்று



[illegible] மார்ச் 9] [திரு. பா. ரா. தாமஸ்]

[illegible] சிறு சிறு கால்வாய்களில் கூட [illegible] மின் உற்பத்தி செய்யக் கூடிய மினி ஹைடல் யூனிட்டுகளை உண்டாக்க வேண்டும். இதை அரசு துரிதப்படுத்த வேண்டும்.

டர்பைன்களை வைத்து மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்றும் சொல்லப்படுகிறது. அப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று குறிப்புச் சொன்னால், அதற்கும் அரசு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். [illegible] அண்மையில் டாக்டர் [illegible] என்ற அமெரிக்க வல்லுநர் "இரண்டாயிரம் ஆண்டுகளில் அமெரிக்காவிற்குத் தேவையான மின்சாரத்தில் 20 விழுக்காடு மின்சாரத்தை சூரிய வெப்பத்திலிருந்து நாங்கள் பெறப்போகிறோம்" என்று சொல்லியிருக்கிறார். நாம் சூரிய வெப்பத்திலிருந்து எந்த அளவிற்கு மின்சாரத்தைப் பெற்றிருக்கிறோம்? சூரிய வெப்பத்திலிருந்து மின்சாரத்தைப் பெறும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்த அமெரிக்க வல்லுநர் இந்தியாவிற்குக்கூட வந்திருக்கிறார், சென்னைக்கு வந்திருக்கிறார். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்திருக்கிறார், பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார் என்று பத்திரிகையில் பார்த்தாக நினைவு இருக்கிறது. கூடங்குளத்திலே ஏற்படுத்தவிருந்த அனல் மின் நிலையத்தின் நிலை என்ன? மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்களா? நிதி ஒதுக்கீட்டைத் துரிதப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பத்திரிகையில் ஒரு குறிப்பைப் பார்த்தேன். Diesel burnt turbine என்ற முறையில் மின்சாரத்தை உற்பத்தி செய்வது பற்றி பார்த்தேன். தெர்மல் பவருக்குப் பதிலாக டீசல் பர்ண்ட் டர்பைன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். ஐந்தாண்டில் தெர்மல் பவர் ஸ்டேஷனை ஆரம்பிக்க முடியுமென்றால், ஒரே ஆண்டில் டீசல்-பர்ண்ட் டர்பைன் பவர் ஸ்டேஷனை ஆரம்பிக்கலாம். அப்படியானால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக டீசல்-பர்ண்ட் டர்பைன் பவர் ஸ்டேஷனை ஏற்படுத்தி மின்சார உற்பத்தி செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கல்விக்கு வருகிறேன். கல்வியைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலம் நல்ல முறையில் இருக்கிறது. நேற்றுகூட அதைப்பற்றி நான் குறிப்பிட வேண்டிய நிலை ஏற்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள், கல்வியில் நம்முடைய மாநிலம் மோசமாக இருக்கிறது என்று சொன்னவுடனே, நல்ல கல்விக்காக தமிழகம் புகழ்கொடி

[திரு. பா. ரா. ராமன்] [1983 மார்ச் 9

விருந்து ச்கல்போர்காபா என்ற பரிசைப் பெற்றிருக்கிறது என்று சொன்னேன். கல்வித் துறையில் போதுமான பணியிடங்கள் இல்லை. 1,850 பணியிடங்களை வழங்கியிருக்கிறார்கள், வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். 1,250 உயர், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், 150 தமிழாசிரியர்கள், உடற் பயிற்சி ஆசிரியர்கள் 100, பி.எட். ஆசிரியர்கள் 200, பிசிக்கல் டைரக்டர்ஸ் 50 மற்றும் 100 நடுநிலைப் பள்ளி பகுதி நேர கைத்திறப் பணி பயிற்சி ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்கித் தந்திருக்கிறார்கள். ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் போஸ்ட்-கிராஜுவேட் பணியிடங்கள் வழங்கப்படவில்லை. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை; இது வேதனையாக இருக்கிறது. நிதி இல்லாவிட்டால் கல்வி போதிப்பது எப்படி நடத்த முடியும்? தரம் குறைகிறது, தகுதி உயர வேண்டும் என்று சொல்லும்போது, நிதியாதாரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் போஸ்ட்-கிராஜுவேட் பணியிடங்களுக்கு அதிகமாக நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற இண்டக்டேட் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று திட்டம் இருக்கிறது. திட்டம் 1983 ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தேவை. அங்கு பணிபுரியும் அலுவலர்களைப் பொறுத்தவரையில், வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. கூடுதலாகப் பணியாளர்களைக் கேட்கிறார்கள். கூடுதல் பணியாளர்கள் ஒதுக்கப்படவில்லை. சிறப்பூதியமும் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு

(நண்பகல் 12-00)

கூடுதல் சிறப்பு ஊதியம் கொடுக்கவில்லை. அதை அவர்களுக்கு வழ வேண்டும். தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாத தமிழாசிரிய பெருமக்கள் வெளியேற்றப்படக்கூடிய நிலையில் இருப்பதால், அவர்க அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு பணியினைத் தொடர்ந்து கொடுக்கக்கூடிய ஒரு சிறப்பாணையை வழ வேண்டும். தனியார் பள்ளிகளிலேயோ அல்லது கல்லூரிகளிலேயோ இருந் வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு முடிவான முழுமையான தீர்ப்பு வ வரையிலே அவர்களுக்கு ஊதியத்தை வழங்கி பாதுகாக்க வேண்டும்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1983 மார்ச் 9

யாசிரியர்களுக்கு ரூ. 100-ம், உதவி தலைமையாசிரியர்களுக்கு ரூ. 50-ம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசுக்கு வைக்கிறேன். அத்தோடு ஈட்டிய விடுப்பாக ஆண்டு முழுவதற்கும் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு 23 நாட்கள் ஈட்டிய விடுப்பு பெறும் தகுதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமேஸ்வரத்தைப் பொறுத்தவரையில், நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறேன். 'ஐசோலேட்டட் லொக்காலிட்டி அலவன்ஸ்' என்று ஒரு தொகை கொடுப்பது என்று இரண்டாவது ஊதியக் குழுவில் அறிவித்திருந்தார்கள். அதையும் நீக்கி விட்டார்கள். அங்கே சரியான வசதியில்லை. அங்கே கூட்டுறவுக் கடைகளிலே கூட, மெயின் லேண்டிலே இருப்பதைவிட அதிகமான விலைகளைப் போட்டிருக்கிறார்கள். டி.டபிள்யூ.டி.-யில் பணியேற்று நடத்தக் கூட ரேட் கொடுக்கும்போது, 50 விழுக்காடு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அங்கே உணவுப் பொருள்கள் எல்லாம் மெயின் லேண்டிலேயிருந்துதான் இராமேஸ்வரம், மண்டபம் பகுதிக்குப் போகவேண்டியிருக்கிறது. அங்கெல்லாம் போக்குவரத்து வசதி சரியாக இல்லை. இன்னும் பாம்பன் பாலம் கட்டி முடிக்கப்படவில்லை. இந்த நிலையிலே இருக்கக்கூடிய அவர்களுக்கு, இராமேஸ்வரம் தீவு, மண்டபம் பகுதியிலே வாழக்கூடிய ஆசிரியர்களுக்கு, அலுவலர்களுக்கு அவர்கள் வாங்குகின்ற அடிப்படை ஊதியத்திலே 20 விழுக்காடு அளவுக்கு சலுகையாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'ஐசோலேட்டட் லொக்காலிட்டி அலவன்ஸ்', அதிகப்படி செலவினப்படி வழங்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசிகள் அதிகமாகிக்கொண்டே போகின்றன. மத்திய அரசுகூட அகவிலைப் படியை அடிப்படை ஊதியத்தோடு இணைத்து அளிக்கலாம் என்று திட்டமிட்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசு கூட இப்போது அடிப்படை ஊதியத்தோடு அகவிலைப்படியை இணைத்து ஒரு புதிய ஊதிய விகிதத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு எந்த நாளிலே அகவிலைப்படி உயர்த்தி அறிவிக்கின்றதோ அந்த நாளிலே இருந்து மாநில அரசும் அதை அமுலாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1983 மார்ச் 9] [திரு பா. ரா. தாமஸ்]

மாநிலம் முழுவதும் நேரடியாக ஊதியத்தைக் கொடுக்கும் முறையை அமுல்படுத்த வேண்டும் என்று சொல்லி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டே அறிவித்தார்கள். எல்லா ஆசிரியர்களும், அலுவலர்களும் அது அரசு பள்ளியாக இருந்தாலும் கல்லூரியாக இருந்தாலும்கூட, நேரடியாக வங்கியிலே இருந்து ஊதியத்தைப் பெறுவார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைக் கொடுத்தார்கள். அதை நாங்களும் வரவேற்றோம். இப்போது செங்கற்பட்டு மாவட்டத்திலே அதை அமுல்படுத்தியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டு கிறேன். இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக மாநிலம் முழுவதும் இதை அமுல் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு நேரம் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னாலே இந்த வரவு செலவுத் திட்டத்தினை சமர்ப்பிப்பதில் உள்ள முறை பற்றி என்னுடைய மனதிலே எழுந்துள்ள எண்ணத்தை நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பட்ஜெட் பரம ரகசியமாக வைக்கப்பட்டு, யாருக்கும் தெரியாமல், யாருக்கும் அறிவிக்காமல் முதன் முதலாக பட்ஜெட்டை சட்டமன்றத்திலே தெரிவித்த பின்னர்தான் மக்கள் அறிய வேண்டும். தப்பித் தவறி அந்த பட்ஜெட்டில் உள்ள விவரங்களிலிருந்து ஒரு சிறு தகவல் வெளிவந்துவிட்டாலும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதற்காக ராஜிநாமா செய்யவேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகின்ற மரபு இருக்கிறது. அப்படி பரம ரகசியமாக வைக்க வேண்டிய இந்த வரவு-செலவுத் திட்டம் மேலவையிலே வைக்கப்படும்போது எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாக இருக்கிறது. மேலவையிலே வைப்பதற்கு முன்னாலேயே இது வெளியே வந்து விடுகிறது. பத்திரிகைகளிலே பிரசுரிக்கப்படுகிறது. மக்கள் விவாதிக்கின்றனர். காரணம் காலையிலே 11 மணிக்கு இது பேரவையிலே சமர்ப்பிக்கப்பட்டு எல்லோருக்கும் தெரிந்த பின்னர், மாலையிலே பல மணி நேரம் கழிந்த பின்னர் மேலவையிலே வைக்கப்படுவதால், இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே படித்த நிதிநிலை அறிக்கையை மேலவையிலே இரண்டாம் தடவையாக மறுபடியும் படிக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படிக்கின்றார் என்ற காரணத்தினாலே—படிக்க வேண்டுமென்பதற்காகச் சில பகுதிகளைப் படிக்கிறார்—பண்பு காரணமாக ஏற்கெனவே அதுபற்றித் தெரிந்திருந்தாலும் உறுப்பினர்கள் அதைக் கேட்கவேண்டுமென்பதற்காக கேட்கிறார்கள். இது ஒரு நாடகம் போல இருக்கிறது. எதற்கு இந்த நாடகம்? இரண்டு அவை

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1983 மார்ச் 9

களையும் ஒன்றாகக் கூட்டி ஒரே சமயத்திலே இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தால் மிக நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆளுநர் அவர்கள் தன் உரையை இரண்டு சபைகளையும் ஒன்றாகக் கூட்டி வாசிக்கிறார். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரே சமயத்திலே இரு அவையினருக்கும் படித்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். இதுபோன்ற கருத்தை நான் போன வருடம்கூட சொன்னேன். அதைப்பற்றிப் பரிசீலித்து என்ன முடிவு எடுக்கப் பட்டது என்று சொல்ல வேண்டும். அதுபற்றி என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்போதாவது அதுபற்றிப் பரிசீலித்து, செய்ய முடியுமானால் செய்யலாம். ஆளுநர் உரைக்குச் செய்வதுபோல, இதற்கும் இரண்டு அவைகளையும் கூட்டி அடுத்த வருடத்திலிருந்தாவது நிதிநிலை அறிக்கையை வாசிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி மேலவைக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று அரசு கருதினால், இந்த மேலவை தேவையில்லை, எடுத்துவிடலாம். முக்கியத்துவம் இல்லா விட்டால், மேலவை இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன?

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களுக்குப் பதவிக்காலம் எப்போது முடிகிறது?

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** இன்னும் ஒரு வருடகாலம் இருக்கிறது. அதற்காக நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எவ்வளவு காலம் என்று சொன்னார்கள்?

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** ஒரு வருடகாலம் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஒரு வருடம், அதற்கு அப்புறம் கலைக்கலாம் என்று சொல்கிறீர்களா?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுடைய அரிய கருத்துக்களை இந்த நாடு அறிகின்ற வாய்ப்பினை இழந்து விடும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** ஆசிரியர்கள் தொகுதியில் 6. பட்டதாரிகள் தொகுதியில் 6—ஆக 12 மெம்பர்கள் இருக்கின்றார்கள். எங்களை எல்லாம் போனவையிலே மெம்பர்களாகச் சேர்த்துவிட்டால் போதும் என்று சொல்லிக் கொள்கிறேன், பிறகு கலைத்தாலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.



1983 மார்ச் 9]

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரிய பெருமக்களுடைய கருத்துக்களைக் கேட்டறிவதற்கு இந்த அவையும் தேவை என்ற முறையில் மறைமுகமாகவே அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** மேலவையை அவமதிக்கக் கூடாது. அலட்சியப்படுத்தக் கூடாது. அப்படிச் செய்வதாக இருந்தால், அதை எடுத்து விடுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன். இங்கே இப்போது இருக்கின்ற உறுப்பினர்கள் இன்னும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். அவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இன்னும் பல காலம் இந்த அவையிலே உறுப்பினராக இருந்து சிறந்த சேவைகளைச் செய்ய வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலவையை அலட்சியப் படுத்தக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அப்படி இருந்தால் எடுத்து விடலாம் என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும்; நான் சொன்னதிலுள்ள தத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டும். என்னுடைய பதவிக் காலத்தைப் பற்றிக் கேட்கவேண்டிய அவசியமில்லை. இந்த உண்மை நிலைமைகளை அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சில அம்சங்கள் மகிழ்ச்சி அளிக்கின்றன, சில அம்சங்கள் வருத்தத்தை உண்டாக்குகின்றன. எனக்கு முன் பலர் அதைப் பற்றிப் பேசினார்கள். அதைப்பற்றி நான் அதிகம் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. குறிப்பாக குடும்பத்தில் ஒருவருக்கு வேலை, பின் தங்கிய வகுப்பினர், குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தும் திட்டம், [illegible] களிலே குடிநீர் வழங்க வசதிகள், [illegible] வசதிகள் ஏற்படுத்தும் திட்டம், கிராமப்புறங்களில் குடிநீர் வசதித் திட்டம், மகளிருக்குப் பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் போன்ற நல்ல திட்டங்களெல்லாம் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வேண்டு கோளையும் தெரிவித்துக்கொள்கிறேன். [illegible]

களையும் ஒன்றாகக் கூட்டி ஒரே சமயத்திலே இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தால் மிக நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆளுநர் அவர்கள் தன் உரையை இரண்டு சபைகளையும் ஒன்றாகக் கூட்டி வாசிக்கிறார். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரே சமயத்திலே இரு அவையினருக்கும் படித்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். இதுபோன்ற கருத்தை நான் போன வருடம்கூட சொன்னேன். அதைப்பற்றிப் பரிசீலித்து என்ன முடிவு எடுக்கப் பட்டது என்று சொல்ல வேண்டும். அதுபற்றி என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்போதாவது அதுபற்றிப் பரிசீலித்து, செய்ய முடியுமானால் செய்யலாம். ஆளுநர் உரைக்குச் செய்வதுபோல, இதற்கும் இரண்டு அவைகளையும் கூட்டி அடுத்த வருடத்திலிருந்தாவது நிதிநிலை அறிக்கையை வாசிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி மேலவைக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று அரசு கருதினால், இந்த மேலவை தேவையில்லை, எடுத்துவிடலாம். முக்கியத்துவம் இல்லாவிட்டால், மேலவை இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன?

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களுக்குப் பதவிக்காலம் எப்போது முடிகிறது?

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இன்னும் ஒரு வருடகாலம் இருக்கிறது. அதற்காக நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எவ்வளவு காலம் என்று சொன்னார்கள்?

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** ஒரு வருடகாலம் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஒரு வருடம், அதற்கு அப்புறம் கலைக்கலாம் என்று சொல்கிறீர்களா?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுடைய அரிய கருத்துக்களை இந்த நாடு அறிகின்ற வாய்ப்பினை இழந்து விடும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** ஆசிரியர்கள் தொகுதியில் 6, பட்டதாரிகள் தொகுதியில் 6—ஆக 12 மெம்பர்கள் இருக்கின்றார்கள். எங்களை எல்லாம் பேரவையிலே மெம்பர்களாகச் சேர்த்துவிட்டால் போதும் என்று சொல்லிக் கொள்கிறேன், பிறகு கலைத்தாலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு முதலமைச்சர் [illegible] தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரிய பெருமக்களுடைய கருத்[illegible] கேட்டறிவதற்கு இந்த அவையும் தேவை என்ற முறையில் மறைமு[illegible] அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மேலவையை அவமதிக்கக் கூடா[illegible] அலட்சியப்படுத்தக் கூடாது. அப்படிச் செய்வதாக இருந்தால், அதை எடுத்து விடுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன். இங்கே இப்போது இருக்கின்ற உறுப்பினர்கள் இன்னும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். அவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இன்னும் பல காலம் இந்த அவையிலே உறுப்பினராக இருந்து சிறந்த சேவைகளைச் செய்ய வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலவையை அலட்சியப் படுத்தக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அப்படி இருந்தால் எடுத்து விடலாம் என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும்; நான் சொன்னதிலுள்ள தத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டும். என்னுடைய பதவிக் காலத்தைப் பற்றிக் கேட்கவேண்டிய அவசியமில்லை. இந்த உண்மை நிலைமைகளை அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சில அம்சங்கள் மகிழ்ச்சி அளிக்கின்றன, சில அம்சங்கள் வருத்தத்தை உண்டாக்குகின்றன. எனக்கு முன் பலர் அதைப் பற்றிப் பேசினார்கள். அதைப்பற்றி நான் அதிகம் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. குறிப்பாக குடும்பத்தில் ஒருவருக்கு வேலை, பின் தங்கிய வகுப்பினர், குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மானவர் இல்லங்கள் ஏற்படுத்தும் திட்டம், [illegible] களிலே குடிநீர் வழங்க வசதிகள், [illegible] திட்டம், கிராமப்புறங்களில் குடிநீர் வசதித் திட்டம், மகளிருக்குப் [illegible] கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் போன்ற நல்ல திட்டங்களெல்லாம் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் [illegible] [illegible] [illegible] [illegible] தெரிவித்துக்கொள்கிறேன். [illegible]

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1983 மார்ச் 9

குடும்பத்திலே ஒருவருக்கு வேலை கொடுக்கும் திட்டம் நல்ல திட்டம். அதை நல்லமுறையில் நடத்தினால், தம் மக்கள் சிறப்பாக வாழ நல்ல எதிர் காலம் அமையும். அந்தத் திட்டம் எப்படி நடக்கப் போகிறது, அதில் என்னென்ன வேலைகள் அடங்கியிருக்கின்றன என்ற விவரங்கள் நிதிநிலை அறிக்கையிலே இல்லை. நல்ல வழிமுறைகளை வகுத்து இந்தத் திட்டத்தை சிறப்பான முறையிலே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி விதிப்புக் கொள்கையைப்பற்றி எனக்கு முன் பேசிய பலர் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக நுழைவு வரி பற்றிப் பேசினார்கள். இந்த மாநிலத்திலே நுழைவு வரி புதிதாக நுழைக்கப்பட்ட வரியாகும். இந்த நுழைவு வரி, உண்மையிலேயே மக்களிடையே அச்சத்தை நுழைக்கிறது. மதுவிலக்கைத் தளர்த்தி பல கோடி ரூபாயை இந்த அரசு பெற்றிருக்கிறது. அப்படியிருந்தும் இதுபோன்ற நுழைவு வரி போடுவதால் ஏழைகளும், நடுத்தர மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே மதுவிலக்கால் அல்லலுற்றுக்கொண்டிருக்கும் ஏழைக் குடும்பங்கள் இப்போது இன்னும் அதிக அல்லலுக்கு உட்படுவார்கள். இதையெல்லாம் மனதிலே கொண்டு, இந்த வரிகள் அவர்களை பாதிக்காத வகையிலே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டும். வீணாகப் பணத்தை விரயமாக்கக் கூடாது. சிக்கனத்தை எல்லா வழிகளிலும் கடைப்பிடிக்க வேண்டும். அப்படி செலவுகளைக் குறைத்து, ஏழைகளைக் காப்பாற்ற வேண்டும்.

இன்னொரு வரி சொல்லப்பட்டிருக்கிறது. வாடகை சுற்றுலா டாக்சிகளுக்கு காலாண்டு வரி 90-லிருந்து 120 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று பாரா 94-(ii) (ஆ)-ல் கூறியிருக்கிறார்கள். சுற்றுலா மேம்பாடு அதைய பாரா 57 மற்றும் 58-ல் திட்டங்கள் சொல்லப்பட்டுள்ளன. நல்ல சலுகைகளைக் கொடுத்து, சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்க வேண்டும். இதுபோன்ற டாக்சிகளுக்கு வரியை உயர்த்தினால், அது சுற்றுலாப் பயணிகள் மேலேதான் விழும். எனவே இதுபோன்ற வரிகளைப் போட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரவு-செலவுத் திட்டம் அரசு ஊழியர்களுக்கும், ஓய்வு பெற்றவர்களுக்கும் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. ஏனென்றால் எந்த விதமான சலுகைகளும் அவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. சமீபத்திலே உச்ச நீதி மன்றம் ஒரு தீர்ப்பு கொடுத்தது. 1979 ஆம் ஆண்டு தளர்த்திய ஓய்வூதிய விதிப்படி, எல்லா அரசு ஊழியர்களுக்கும், அவர்கள் ஓய்வு பெற்ற தேதி



1983 மார்ச் 9] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

எதுவாயினும், ஓய்வூதியம் அளிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தது. சில நாட்களுக்கு முன்னால் நான் அதுபற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அதற்கு பதில் அளிக்கும்போது, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள், அதற்கான வழிமுறைகள் என்னிடத்தில் இல்லை, மத்திய அரசுக்கு டெலக்ஸ் கொடுத்து கேட்டிருக்கிறோம், வழி முறைகள் வந்த பிறகு நிச்சயமாகச் செய்வோம் என்று சொன்னார்கள். டெலக்ஸ் கொடுத்து பல நாட்கள் ஆகின்றன. இந்நேரம் பதில் வந்திருக்குமென்று நினைக்கிறேன். அதுபற்றி நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடவில்லை. நிச்சயமாக பதில் வந்ததும், அதை மனத்திலே கொண்டு எல்லா ஓய்வூதியக்காரர்களும் பயன் அடையும் வகையில் உச்சநீதி மன்றத் தீர்ப்பை நடைமுறைக்குக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். அதைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தினுடைய வெள்ளி விழா நடக்க இருந்தது. நமது மாண்புமிகு முதல்வரவர்கள் அந்த விழாவிற்கு வர ஒத்துக்கொண்டார்கள். ஆனால் திடீரென்று வேறு அலுவல் காரணமாக வர முடியாமல் போய்விட்டது. ஓய்வூதியம் பெறுபவர்கள் எல்லாம் அவர்கள் வருகையை எதிர்பார்த்ததோடு, அவர் நல்ல சலுகைகள் அறிவிப்பார்கள் என்ற ஆர்வத்திலே, எண்ணத்திலே இருந்தார்கள். முதல்வர் வராததால், அவர்கள் மனம் சோர்ந்திருக்கிறார்கள். மறுபடியும் ஒரு தேதி கொடுத்து, நமது மாண்புமிகு முதல்வரவர்கள் வெள்ளி விழாக் கூட்டத்திற்குச் சென்று நல்ல அறிவிப்புகளைச் செய்து, அவர்களுக்கு மனத் தெம்பு ஏற்படும்படி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

கடைசியாக ஒன்று. போன கூட்டத்திலேகூட பேசினேன். மதுவிலக்கு பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள்கூடப் பேசினார்கள். மது விலக்கால் நன்மைகள் இருந்தும், சில காரணங்களுக்காக அது தளர்த்தப்பட்டது. அதைப்பற்றி நான் பேசவில்லை. அதனால் பல ஏழைக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அடிக்ட்ஸ் என்று சொல்லுவார்களே, குடியின் பிடியிலிருந்து மீள முடியாது பலர் இருக்கிறார்கள். அதனால் பல குடும்பங்கள் கெட்டு, சீரழிந்து போகின்றன. அவர்களை மீள வைப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது டி. டி. கே. ரங்கநாதன் ரிசர்ச் அண்ட் கிளினிகல் பவுண்டேஷன்

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1983 மார்ச் 9

என்று அடையாறில் இருக்கிறது. அதைப்போல ஆல்கஹாலிக் அனானிமஸ் என்று இன்னொரு அமைப்பு இருக்கிறது. அது உலகம் பூராவும் இருக்கும் அமைப்பு. சென்னை நகரில் இந்த இரண்டும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு அமைப்புகளும் அடிக்ட்-ஆக இருப்பவர்களை அதிலிருந்து நல்ல முறையில் நிவர்த்தி செய்கின்றன. அவைகளுக்கு அரசு உதவி செய்ய வேண்டும். அது போன்ற அமைப்புகளை அரசும் அதிகமாக உருவாக்கி, மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு, உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் 10—3—1983 வியாழன் காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-16)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

170. Notification issued with G.O. Ms. No. 1059, Commercial Taxes and Religious Endowments, dated the 16th September 1981 regarding shifting of check post at Madurai Road, Virudhunagar, Ramanathapuram District. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)]

171. Fifth Annual Report of the Tamil Nadu Goods Transport Corporation Limited for the year ended 31st March 1980 (English) (Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).

B. Reports, Notifications and Other Papers.

Nil

* Circulated to all M.L.C's on 7—3—1983.



1983 மார்ச் 9]

## இணைப்பு I

[287 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தற்போதைய கடும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக தேர்வுகளை முன்கூட்டியே நடத்துமாறு பல பெற்றோர் அரசுக்கு முறையிட்டதைக் கருத்திற்கொண்டு பள்ளிக் கல்வி இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்குநர், அரசு அடிப்படை விபர மைய இயக்குநர், தொழிற்கல்வி இயக்குநர் ஆகியோருடன் 18—1—1983 அன்று கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை ஆணையர் மற்றும் செயலாளர் தலைமையில் விவாதிக்கப்பட்டது. வரவிருக்கும் கோடை காலத்தில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை அதிகமாகவிருக்குமென்பதாலும், குடிதண்ணீரைக் குறைத்து உபயோகித்து பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதாலும் அதன் முதற் கட்டமாக பள்ளி முழு ஆண்டு தேர்வுகளை 1—4—1953-க்குள் நடத்திவிட்டால் கல்வி நிறுவனங்களை 1—4—1983 முதல் கோடைவிடுமுறைக்காக மூடி விடலாம் என்பதை கருத்திற்கொண்டு கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிட்டுள்ளது :—

(1) மாநிலத்திலுள்ள எல்லாப் பள்ளிகளும் அவற்றைச் சார்ந்த மாணவ, மாணவியர் விடுதிகளும் 1—4—1983-க்குள் மூடப்படவேண்டும்.

(2) பிளஸ் 2 தேர்வுகளைத் தவிர பிற எல்லா தேர்வுகளையும் 31—3—1983-க்குள் முடிக்குமாறு கல்வி நிறுவனங்களின் தலைமைகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். அதற்காக கல்வி நிறுவனங்கள் பள்ளிகளின் வேலை நேரத்தை அதிகரித்தும், விடுமுறை நாட்களில் (ஞாயிற்றுக் கிழமையையும் சேர்த்து) பள்ளிகள் நடத்தியும் பாடங்களை மேற்சொன்ன தேதிக்குள் நடத்திமுடிக்க வழிவகை செய்யவேண்டும்.

(3) மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் பாடங்களை நடத்தி முடித்த பள்ளிகளை 1—4—1983-க்குள் மூடிவிடவேண்டும். பிளஸ் 2 தேர்வுகள் நடக்கும் நாட்களில் மட்டும் மாணவர்கள் பள்ளிகளுக்கு தேர்வுகளை எழுத வருமாறு அறிவுறுத்தவேண்டும். அவ்வாறே தொழிற்கல்வி இயக்குநரின் கீழ் இயங்கும் டிப்ளோமா தேர்வுகள் நடத்தும் நிறுவனங்களும் கடைபிடிக்க வேண்டும்.

(4) பல்கலைக் கழகங்களைப் பொறுத்தமட்டில் பல்கலைக் கழக ஆட்சிக் குழுக்கள் Syndicates கூட இதேபோன்ற நடவடிக்கை எடுக்கும்படி பல்கலைக் கழகப் பதிவாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

(5) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளை 21—3—1983-ல் ஆரம்பித்து 30—3—1983-ல் முடிக்கவும், பிளஸ் 2 தேர்வுகளை 4—4—1983-ல் ஆரம்பித்து 29—4—1983-ல் முடிக்கவும் ஆலோசிக்கப்படுகிறது.

மேற்சொன்ன ஆணையினால் மாணவர் மனதில் எவ்வித குழப்பமும் எழ வாய்ப்பில்லை. ஏனெனில் அரசுப் பொதுத் தேர்வுகள் (எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ் 2) கடந்த ஆண்டுகளில் நடத்தியவாறே இவ்வாண்டும் நடத்தப்படும். 4 முதல் 9-வது மற்றும் 11-ம் வகுப்புவரைதான் பள்ளிகளில் முழு ஆண்டுத் தேர்வுகள் நடைபெறும். பள்ளிகளில் 1 முதல் 3 வகுப்புவரை முழு ஆண்டுத் தேர்வு கிடையாது. இவ்வகுப்புகளுக்கான பள்ளியின் ஆண்டுத் தேர்வுகளை முன்கூட்டி நடத்துவதால் எவ்வித பிரச்சனையும் எழாது என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். பல்கலைக் கழகங்களைப் பொறுத்தமட்டில் பல்கலைக்கழக ஆட்சிக்குழுக்கள் Syndicates இதுகுறித்து விவாதித்து நிலைமைக்குத் தக்கவாறு முடிவெடுக்கும்.

## இணைப்பு II

[289 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் நகராட்சி நகரியத்திற்கு காவிரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு ஒரு விரிவான குடிநீர்த் திட்டப்பணி 1977-ல் முடிக்கப்பெற்றது. மேற்படி திட்டம் 1977 அக்டோபர் முதல் மேட்டூர் நகரியத்தின்கீழ், செயல்பட்டு வருகிறது. இக்குடிநீர்த் திட்டம் கி.பி. 2001 ஆண்டு வரை எதிர்நோக்கியுள்ள மக்கள் தொகையை கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 113 லிட்டர் விதம் குடிதண்ணீர் வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது மேட்டூர் நகரியம் நாளொன்றுக்கு 46,014 மக்களுக்கு 65 லட்சம் லிட்டர் தண்ணீர் வழங்குகிறது. அதாவது ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 141 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. 1983-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நாளொன்றுக்கு 57.24 லட்சம் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டது. இதன்படி ஒருவருக்கு ஒரு நாளைக்கு 124 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டது. இது ஒருவரின் தேவைக்கு மிகவும் போதுமானதாகும்.

குடிநீர் வழங்க மேட்டூர் நகரியம் மீட்டர்களுடன் கூடிய இணைப்புகள் 2,695 மற்றும் மீட்டர் அல்லா இணைப்புகள் 48-ம், அனுமதிக்கப்பட்ட கட்டணம் பெற்று, வழங்கியுள்ளது. 161 பொதுக்குழாய்களும் நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் எல்லா நாட்களிலும் நகர மக்கள் போதுமான தண்ணீரைப்பெற்று வருகின்றனர்.



மேட்டூர் நகரில் 200 லிட்டர் தண்ணீர் ரூ. 3-00-க்கு விற்பதாக கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது தவறான செய்தியாகும். மேட்டூர் நகரியக் குழு அதிகாரிகளுக்கு இது குறித்து புகார் ஏதும் வரவில்லை.

3—2—1983-ந் தேதிய இரண்டு நாளேடுகளில் இதுபற்றிய செய்தி வந்துள்ளதாக அறிந்து, இத்தகவலை பத்திரிகைகளுக்கு அளித்த நபரைக் கண்டு மேட்டூர் நகரிய அதிகாரிகள் விசாரித்ததில் அச்செய்திக்கு ஆதாரம் ஏதும் இல்லை என்றும் காதில் கேட்ட செய்தியை பத்திரிகைகளுக்கு அளித்ததாகவும் அவர் கூறியுள்ளார் என மேட்டூர் நகரிய அதிகாரிகள் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

[Issued 22-5-1985]

S.No. 1424/5575

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY 10th MARCH 1983

Volume CXCIV (No. 5)

GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

Price Rs. 2.75 Paise

பொருளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் 353—376

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—

கரும்பின் குறைந்தபட்ச விலை டன்னுக்கு 155 ரூபாய் என்று தமிழ்நாடு அரசு நிர்ணயித்திருப்பதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பது குறித்து .. .. .. 376—378

3. கவன ஈர்ப்பு—

(1) நூல் விலை ஏற்றத்தால் நெசவாளர் குடும்பங்கள் அல்லல்படுவது குறித்து .. 378—380

(2) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் ஆகியோருக்கு எம்.எட். பட்டம் பெற்றமைக்கு ஊக்க ஊதியம் மறுக்கப்படுவது குறித்து .. 380—382

4. 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் .. .. .. 382—441

S. No. 142/5578

143141

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

**வியாழக்கிழமை, 1983 மார்ச் 10.**

**மாசி 26, துந்துபி—திருவள்ளுவராண்டு 2014.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள் விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள் 145 மற்றும் 146 ஒத்தி வைக்கப்படுகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தக் கேள்விகள் எல்லாம் 5-9-1982-க்கு முன்பு கேட்கப்பட்டன. இப்போது தான் பதில்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உள்ளூரிலே இருந்துகொண்டு அவைக்கு வரவில்லை. இப்போதாவது எங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கக் கூடாதா? இதை விட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வேறு முக்கியமான என்ன அலுவல்கள் இருக்க முடியும்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளூரிலேயே இருந்துகொண்டு அவைக்கு வராமல் இருப்பதுபற்றி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூடாதா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவதற்கும் பதில் அளிப்பதற்குமான ஏற்பாடுகள் செய்யப்படும்.

#### உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களை நியமித்தல்.

* 147. வினா—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

**(அ)** உயர்நிலைப் பள்ளிகளில், தமிழாசிரியர்கள் நியமனம் பற்றிய, 29—3—1962 ஆம் நாளிட்ட கல்வித்துறை அரசாணை நிலை எண் 726-ம், 27—3—1963 ஆம் நாளிட்ட கல்வித் துறை குறிப்பாணை எண் 54827/ஈ5/61

[1983 மார்ச் 10

-18-ம், தென் ஆற்காடு மாவட்டத்தில் மீறப்பட்டுள்ளதாக, தமிழ்நாடு நடுநிலைப் பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர்கள் சங்கத்திடமிருந்து 1980, பிப்ரவரி மாதத்தில் அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்தக் கேள்வி அனுப்பப்பட்டு அநேகமாக ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு முறையீடு தமிழ் நாடு நடுநிலை பட்டதாரி தலைமை ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து வந்துள்ளது என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் ஆசிரியர் சங்கத்திலிருந்து முறையீடு வந்துள்ளதா என்றுதான் நான் கேட்டிருந்தேன். கேள்வியிலேயே மாறுபாடு இருக்கிறது. அப்படியே நான் கேட்டிருந்ததுபோல் முறையீடு வராவிட்டாலும் கூட, இந்தக் கேள்வியையே ஒரு புகாராகக் கருதி இதன் மீது உரிய நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** குறிப்பிட்ட ஆணையினுடைய கருத்து, உயர் நிலைப் பள்ளிகளில் வாரத்திற்கு குறைந்த வேலை நேரமான 17 மணி நேரத்திற்கு மேல் வேலை இருப்பின், கூடுதலாக ஒரு தமிழ் ஆசிரியரை நியமிக்கலாம் என்று அரசு அறிவுரை கூறியிருக்கிறது. இது மீறப்பட்டதா என்பதுதான் கேள்வி. இது மீறப்பட்டதாக இதுவரை எந்தவிதமான புகாரும் இல்லை. அப்படி மீறப்பட்டதாகப் புகார் ஏதாவது வந்தால், அது பற்றி விசாரிக்கலாம்.

## பள்ளி வேலை நேரம்

* 148. வினா—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :

(அ) சென்னை நகரத்தில், பள்ளி வேலை நேரத்தை, நெருக்கடி காலத்திற்கு முன்பு இருந்தது போலவே காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை இருக்கும்படி மாற்றுவது பற்றிய பொருள் குறித்து அரசு முடிவு ஏதும் எடுத்து விட்டதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும் ?



1983 மார்ச் 10]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ)—சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் காரணமாக காலை 9 மணிக்கு தொடங்கி நடைபெற்று வரும் பள்ளிகளின் சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் (அரசு, தல நிர்வாகம் மற்றும் தனியார்) விரும்பினால், காலை 10 மணிக்கு பள்ளிகளை துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகிய பல்வேறு தரப்பினர்களுடைய உணர்வுகளையும் மதிக்கின்ற வகையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கையை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்று கல்வியிலே மிக முன்னேறிய நாடு களில் கல்வி போதிக்கின்ற நேரத்தைப் பொறுத்தவரையில், அதற்கு ஏற்ற நேரமான அதிகாலை நேரத்திலேயே பள்ளிகளைத் துவக்கி அது வெற்றிக ரமாகச் செயல்பட்டும் வருகிறது. டெல்லியில் கூட கடும் குளிராக இருந்தா லும் அல்லது வெப்பமாக இருந்தாலும், அதிகாலை 7 மணிக்கே பள்ளிக் கூடங்கள் திறக்கக்கூடிய நிலை இருக்கிறது. இப்படி வேலை நேரங்களை மாறுதல் செய்யும்போது, எந்த ஒரு சாராருக்கும் இடர்ப்பாடுகள் ஏற்படாத வகையில், வசதிகளைச் செய்து கொடுத்து விட்டு பள்ளி நேரத்தை மாற்றுவது குறித்து அரசு வருங்காலத்திலாவது பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கேள்வி எந்த அடிப்படையில் கேட்கப்பட்டதோ அதற்கு நேர் மாறான கருத்தை இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்ற வர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே தான் இந்த முடிவை அரசு எடுத்திருக்கிறது. அதற்கு மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ற நேரத்தில் அதற்கு நேர் மாறான கேள்வியையும் இங்கே கேட்டு சங்கடத்தை ஏற்படுத்த விரும்பு கிறார்கள். ஆனால் அவருக்கும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாலையில் பள்ளி ஆரம்பிப்பது என்பது ஒரு சிறந்த கருத்து. பல்வேறு நாடுகள் இதைப் பின்பற்றி வருகின்றன. அதோடு கூட காலை நேரத்தில் பள்ளிகளை வைப்பதன் மூலம் அதிகாலை நேரத்தில் வீணாகிக் கொண்டிருக்கிற பல மணி நேரங்களை நாம் நேர நன்றாகப் பயன்படுத்த முடியும். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கூட அதிகாலை நேரத்திலேயே பள்ளிக்கூடங்கள் ஆரம்பமாகிவிடுகின்றன.

இதுபற்றி எல்லாரும் எல்லோரும், குறிப்பாக ஆசிரியர்களும் பெற்றோர் களும், சிந்திக்க வேண்டும். பல்வேறு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் அலு வலர்களும் யோசிக்க வேண்டும். இதுகுறித்து அனைவரும் ஒருமித்து பொதுவான ஒரு கருத்தை உருவாக்கினால், அந்தக் கருத்தின் அடிப்படையில் இதனை நாம் முடிவுக்குக் கொண்டு வரலாம். ஏற்கனவே 10 மணி என்று

[1983 மார்ச் 10

இருந்ததை 9 மணி என்று ஆக்கியதற்கே ஒரு போராட்டம், ஒரு கிளர்ச்சி என்று ஆரம்பித்தார்கள். இப்போது அதை நாம் 7 மணி என்று ஆக்கியிருந்தால், ஒரு பெரிய பிரளயத்தையே ஏற்படுத்தியிருப்பார்கள். ஆகவேதான் நான் என்ன சொல்கிறேன் என்றால், இதிலே ஒரு பொதுவான கருத்தை நமக்குள்ளேயே உருவாக்கிக்கொண்டு, பிறகு மற்றவர்கள் மத்தியிலும் உருவாக்கி, இதனைச் செயல்படுத்தினால், உண்மையிலேயே நாட்டுக்கு நல்ல பலன் விளையும்.

**செல்வி ஆ. லீலாவதி :** இந்தக் கேள்வி ஓராண்டுக்கு முன்னால் கேட்கப்பட்டது. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரின் குறைகளையும் போக்கும் வகையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 9 மணியிலிருந்து 10 மணி என்று மாற்றியமைத்ததற்கு நான் ஏற்கெனவே நன்றி கூறியுள்ளேன். மீண்டும் நன்றி கூறுகிறேன். ஆனால் அவரவர்கள் விருப்பம்போல். காலை 9 மணியிலிருந்து ஏதாவது நேரத்தில் பள்ளிக்கூடங்களைத் தொடங்கலாம் என்று அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். எல்லாப் பள்ளிகளுக்கும் பொதுவாக ஒரே நேரத்தை உதாரணத்திற்கு 9-30 மணிக்கு எல்லாப் பள்ளிகளும் தொடங்க வேண்டுமென்று ஒரு குறிப்பினை அரசு அனுப்புமா? அதுபோல் எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரே மாதிரி விடுமுறை நாட்களை அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது இருக்கின்ற நிலைமை, நாம் பள்ளிகளுக்கு என்று சில உரிமைகளைத் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறமாதிரி நாம் அந்தப் பள்ளிகளுக்குத் தந்திருக்கிற உரிமையை எடுத்துக்கொள்ள வேண்டுமா என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும். இப்போது இருக்கிற நிலைமையில் நமக்கு பாதகமான விளைவு ஏற்படாமல் இருப்பதுபற்றி நாம் சிந்திக்கலாம். மற்றபடி இதுகுறித்து எந்தவிதமான புகாரும் இதுவரை வரவில்லை. இப்போது வெளியிட்டிருக்கிற உத்தரவின் மூலம் யாருக்கும் எந்தவிதமான பாதகமோ, பிரச்சினையோ இல்லையாதலாலும், இதுகுறித்து புகார் ஒன்றும் நம்முடைய கவனத்திற்கு வராததாலும், மேற்கொண்டு இதுகுறித்து வேறு முடிவெதுவும் எடுக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருடைய உணர்வை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்த முடிவுக்கு நான் முன்பே நன்றி சொல்லியிருக்கிறேன். ஆனால் முன்பு அரசு ஒரு முடிவை எடுத்தபோது, பொதுவாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள் இவர்களுடைய பிரதிநிதிகள்



1983 மார்ச் 10]

மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் கலந்து பேசாமல், அவர்களுக்கு அதனால் ஏற்படக் கூடிய சங்கடங்களையும் தெரிந்துகொள்ளாமல் முடிவெடுத்ததால்தான், இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. தாய்மார்களுக்கு அதிகமாக சங்கடம் ஏற்பட்டது. அவர்கள் மிக அதிகாலையிலேயே எழுந்து தங்கள் பிள்ளைகளுக்குக் காலையுணவு மற்றும் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டிய சங்கடம் ஏற்பட்டது. பலவிதமான இடர்பாடுகள் பல தரப்பினருக்கு ஏற்பட்டது. மேலும் பேருந்து வசதியில்லாத நிலையும் ஏற்பட்டது. இன்னொரு முறை வேலை நேரம் குறித்து அரசு மாறுதல் செய்ய பரிசீலனை செய்வதாக இருந்தால், பெற்றோர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் இவர்களுடைய பிரதிநிதிகள், சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் கலந்து பேசி, அவர்களுக்கு அதனால் ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகளையும், சங்கடங்களையும் போக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து, அதற்குப் பிறகு மாற்றம் செய்வதுபற்றி முடிவெடுக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தப் பிரச்சினையே பொதுமக்கள் சார்பாகப் பரிசீலிக்கப்பட்டதுதான். அவர்கள் 9 மணிக்குப் போனாலும், 10 மணிக்குப் போனாலும், 7 மணிக்குப் போனாலும், எனக்கு ஒன்றுதான் அமைச்சர் என்ற முறையிலும் தனிப்பட்ட முறையிலும் இது எனக்குத் தேவையான சமாச்சாரம் கிடையாது. எல்லோரும் ஒரே சமயத்தில் வேலைக்குப் போவது, பள்ளிக்குப் போவது என்கிற நிலை இருப்பதால், பொதுமக்கள் ரொம்ப அவதிக்கு உள்ளாகிறார்கள் என்று பொதுமக்கள் சார்பாகப் பேசியதால் தான், இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதே நேரத்தில் நாம் இப்போது போதுமான பஸ்கள் விட்டிருந்தாலும் கூட, குறிப்பிட்ட வேலைக்குப் போவது, பள்ளிக்குப் போவது போன்ற நெரிசலான நேரங்களில் மேற்கொண்டும் அதிகமாக பஸ்களை விட முடியாத நிலை இருக்கிறது. பொதுவாக பொதுமக்களுடைய கஷ்டத்தைப் போக்க பல காரியங்களை அரசு செய்கிறது. அதிலே ஒன்று தான் இதுவும். இதுகுறித்து முடிவெடுக்கிற சமயத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றவர்களுடைய கருத்துக்களையும் கேட்டறிந்த பின்னர் தான், இறுதி முடிவுக்கு வருகிறோம். அரசே தானாக இதைக் கொண்டு வந்து செய்வதில்லை. அந்த அடிப்படையில் பொதுமக்களுடைய நன்மையைக் கருதித் தான் இப்படிப்பட்ட முடிவை எடுத்திருக்கிறோம். ஆனால் ஒன்று, பொதுவாகவே இந்த அரசினுடைய நோக்கம் எல்லாம் பொதுமக்களுக்கு முடிந்த அளவுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது தான்.

(முற்பகல் 9-40)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** பொது மக்களுடைய வேண்டுகோளின்படி அரசு செயல்பட்டிருப்பதற்கு மிகவும் மகிழ்ச்சி. சென்னை நகரில் இருக்கும் போக்குவரத்து நிலைமையை மனதிற்கொண்டு, போக்குவரத்து கமிஷனர் அவர்களின் கருத்தைப் பெற்று, ஒவ்வொரு இடத்திலும் பள்ளிகள் எந்த எந்த நேரத்தில் துவக்க வேண்டும் என்று அறிவுரை அளிக்கப்படுமா? மேலும் தட்ப-வெப்ப நிலைமையைக் கருதி வெளிநாடுகளில் இருப்பதைப் போல, வெயில் காலங்களில் அதிகாலையிலேயே பள்ளிக்கூடங்களைத் தொடங்கி, மாலை, இரவுப் பள்ளிகள் எல்லாம் நடத்தினால், அது மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதைவிட வேறொரு வேண்டுகோளை வேண்டுமானால் இங்கே வைக்கலாம். ஆசிரியர்கள் ஒரு பள்ளிக்கு நியமனம் ஆனால், முடிந்த அளவுக்கு அந்தப் பள்ளிக்குப் பக்கத்திலேயே அவர்கள் குடியிருக்க வேண்டும். இன்னொன்று, மாணவர்களை நாம் சேர்க்கும்போது, அவர்களின் வீட்டுக்குப் பக்கத்திலேயிருக்கும் பள்ளிகளிலே தான் சேர்க்க வேண்டும். உதாரணமாக இராயபுரத்திலே இருக்கும் ஒரு மாணவன் தி. நகரிலே இருக்கும் ஒரு பள்ளிக்குப் போகும் நிலைமை இருக்கிறது. எல்.கே.ஜி. மற்றும் யூ.கே.ஜி. வகுப்புகளைப் பொறுத்தவரையில் கூட, இந்த மாதிரி நிலைமைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும், தான் பொறுப்பு. இதிலே அவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால், நாம் பள்ளிகளை தேவையான இடங்களிலே ஆரம்பிக்கவும், தேவையான இடங்களிலே ஆரம்பிக்கும் பள்ளிகளுக்கு அங்கீகாரம் தருவது போன்று தேவையான அளவுக்கு நடவடிக்கை எடுத்து ஜனநெரிசலைப் போக்க வசதியாக நடவடிக்கை எடுக்கவும் உதவியாக இருக்கும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இந்த வினாவிற்கு அளித்த பதிலில் எல்லோருடைய வேண்டுகோளுக்கும் விட்டுக்கொடுத்து நிறைவேற்றியதான அறிவிப்பு வந்திருக்கிறது. கல்வியின் தரம் உயர காலையில் பயில்வது சிறப்பு என்று அரசு கருதினாலும், அதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிற ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இதை நாம் எல்லோரும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதில் ஒரு ஊக்கம் வருகிற நிலைமையில் காலையில் 7 மணி முதல் பகல் 12 மணி வரை வகுப்புகளை நடத்தி முடிக்கும்போது, மாலை நேரத்திலே ஆசிரியர்கள் வேறு வேலைக்குப் போய் ஊதியத்தைப் பெருக்கிக்கொள்ளவும் முடியும், மாணவர்களும் வேறு ஏதாவது தொழில் செய்யவோ அல்லது பெற்றோர்களுக்கு உதவியாக இருக்கவோ வசதியாக இருக்கும். அந்த வகையிலே நேரத்தை மாற்றியமைத்து, அதற்கு உதவும் வகையில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அளித்து, அத்தகைய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா? ஊக்கம் என்று சொல்லும்போது, ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கு அட்மிஷன் மற்றும் டெக்னிக்கல் ஸ்டடிக்கு கல்லூரிகளில் சலுகை போன்றவை அளிக்கும் அளவுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு பரிசீலிக்குமா?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நேற்றையதினம் நான் ஒரு பள்ளிக்குச் சென்றிருந்தேன். அந்தப் பள்ளி ஷிஃப்ட் சிஸ்டம் அடிப்படையிலே நடைபெறுகிறது. அங்கே இருப்பவர்கள் இந்த ஷிஃப்ட் சிஸ்டத்தை ஒழித்துவிட்டு, இரண்டு நேரமும் மாணவர்கள் பள்ளிக்கு வரும் நிலைமை உருவாக வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது என்னவென்றால் ஒரு நேரம் இந்தக் குழந்தைகள் படிக்கின்றன. ஆனால் மீதி நேரத்தை அவர்கள் வீணாக்குகின்றார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, அங்கே இருப்பவர்கள் இரண்டு நேரமும் குழந்தைகள் பள்ளியிலே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில் குழந்தைகள் பள்ளிக்கூடங்களிலே இருக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இதிலே ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்ன கருத்துப்படி பார்த்தால், அரை நேரம் பிள்ளைகள் படித்துவிட்டு, மீதி அரை நேரம் பெற்றோர்களோடு துணையாக இருந்து வேலை செய்யலாம் என்று சொல்வது நாம் எதிர்த்து வந்த மறைந்த இராஜாஜி அவர்களுடைய குலதர்ம கல்வித் திட்டத்தினுடைய சாயல். அப்படி நாங்கள் கொண்டு வந்தால், நாங்கள் இருக்கிற இடம் தெரியாமல் போய்விடவேண்டிய நிலைமை வரும். ஒரு வேளை எங்களைக் கீழே இறக்க வேண்டும் என்று இப்படி ஒரு ஆபத்தான யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களோ என்று கூட நான் நினைக்கிறேன். (சிரிப்பு) அப்படி நாங்கள் ஏமாந்துவிடமாட்டோம். மிகவும் எச்சரிக்கையாக இருப்போம். ஆனால், அதிகாலையிலே சென்று படிக்க வேண்டும் என்பது ஒரு நல்ல கருத்து. அதை எப்படி நிறைவேற்றலாம் என்பதைப்பற்றி பல்வேறு நிலைகளில் விவாதம் செய்வது நல்லது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

[1983 மார்ச் 10

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பள்ளிக்கூடங்களுக்கு அருகிலேயே ஆசிரியர்களும் கூடுமானவரையில் குடியிருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்கள் அந்த வகையில் செயல்படுவதற்கு உறுதுணையாக இருப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்வதோடு ஆசிரியர்களின் சார்பிலே ஒரு வேண்டுகோளையும் விடுக்கிறேன். ஆசிரியர்கள் பள்ளிக்குப் பக்கத்திலேயே குடியிருக்கும் வகையிலே, கிராமப்புறங்களை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு வசதியாக வீடுகள் கிடைக்கவில்லை. ஆகவே, கூடுமானவரையில் பள்ளிக்குப் பக்கத்திலே குவார்ட்டர்ஸ் அமைக்கலாம். அது முடியாவிட்டால் சொந்த ஊரிலேயோ, அவர்கள் குடியிருக்கும் பகுதிகளிலேயோ அவர்களுக்கு 'போஸ்டிங்' தருவதுபற்றி இந்த அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சொந்த ஊரிலேயே அவர்களைப் போட வேண்டும் என்ற கொள்கை கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக கூடுமானவரையில் பின்பற்றப்பட்டு வருகிறது. சொந்த ஊரிலே இருப்பதால், தங்களுடைய தோட்டங்களைப் பார்த்துக்கொண்டோ, வேறுவிதமான வேலைகளைச் செய்துகொண்டோ இந்த ஆசிரியர் பணிக்குக் குந்தகமாக இருக்கிறார் என்ற நிலைமை வருகின்றபோது தான், அவர்களின் மாற்றல் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறோமே தவிர, மற்றபடி நாமே இந்தக் கொள்கையை வரவேற்று, கணவனும் மனைவியும் ஒன்றாக இருக்க வேண்டும், அவர்கள் கேட்கும் இடத்திலே அவர்களைப் போட வேண்டும் என்று சொல்லி கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாகக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். வீடு கிடைக்கிறது, அல்லது கிடைக்கவில்லை என்று இருப்பது பொதுப் பிரச்சினை. இந்தப் பிரச்சினை ஆசிரியர்களுக்கு மட்டும் இருக்கும் பிரச்சினை அல்ல. உதாரணமாக எலக்ட்ரிசிட்டி போர்ட்லே பணியாற்றும் ஒருவரை ஒரு கிராமத்திற்கு மாற்றும்போது, அவர் போகிறார். அதுபோல மற்ற துறையிலேயும் போகிறார்கள். அவர்களைப் போல இவர்களும் ஓரளவுக்கு முயற்சி எடுத்து வீடுகளைப் பார்த்து, இந்தக் கல்விப் பணிக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். அப்படியில்லாமல், சென்னையிலோ அல்லது கோயம்புத்தூரிலோ இருந்து கொண்டு, அல்லது ஒரு 40 அல்லது 50 மைல் தூரத்திலே இருந்துகொண்டு, ஒவ்வொரு நாளும் பஸ்ஸிலேயும், இரயிலிலேயும் சென்றுவருவதும், அப்படிச் செல்லும்போது பள்ளிகளுக்கு நேரத்திற்குச் செல்லாமல் தாமதமாக வருவதும் போன்ற நிலைமைகள் இருப்பதாகப் புகார்கள் வரும் அடிப்படையிலே தான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன். நம்மாலே எந்த அளவிலேயும் பள்ளிகளிலே பணி பாதிக்கப்படக்கூடாது என்ற அளவுக்கு நிலைமைகள் இருக்க வேண்டும்



1983 மார்ச் 10]

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஒருவேளை காலை நேர வகுப்புகள் வருகிற போது, 'காலை எழுந்தவுடன் படிப்பு, மாலையிலே நல்ல விளையாட்டு' என்பதைப்போல உச்சிவெயில் பிள்ளைகளின் தலையிலே விழாத அளவுக்கு இரு நேரப் பிரிவாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** காலையில் 7 அல்லது 8 மணிக்கு, அல்லது அதிகாலையில் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பது என்ற முடிவுக்கு வரும்போது, அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இப்போது மற்ற நேரத்தைப் பயன்படுத்த போதுமான நிலைமைகள் இருக்கின்றன. குழந்தைகள் ஆடவோ, பாடவோ அல்லது ஏதேனும் ஒரு தொழிலில் தங்களை அறிமுகப் படுத்தவோ 'செய்யும் நிலைமைகளிலே காரியங்கள் செய்யலாம். இந்த முடிவுக்கு நாம் தயாரானதற்குப் பிறகு, இதைப்பற்றி நாம் யோசிக்கலாம். முதலில் மக்கள் இதற்குத் தயாராக இருக்க வேண்டும்

**ஆசிரியர்களின் பணிவரன் முறை செய்தல்.**

* 119. வினா—**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1970 முதல் 3—3—1973 வரையிலான கால அளவில் நியமிக்கப்பட்டு, பின்னர் 1976-ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏறக்குறைய 167 ஆசிரியர்களின் பணி, 21—12—1977 நாளிட்ட கல்வித்துறை அரசாணை நிலை எண் 2635-ன் பத்தி 3-ன் படி, வரன்முறை செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ) அரசு ஆணை (நிலை) எண் 2635, கல்வி, நாள் 21—12—1977 இல் 1—4—1970 முதல் 3—3—1973 வரை பணியாற்றிய பட்டதாரி ஆசிரியர்கள் தமிழ்நாடு பொதுப் பணித் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அவர்களது தற்காலிக நியமன நாளிலிருந்து பணி வரன்முறை செய்யப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு உரிய ஊதிய உயர்வு, நிலுவைத் தொகையினை அளிக்க வேண்டும் எனவும் ஆணை பிறப்பித்து உள்ளது. இச் சலுகை 1973-ம் ஆண்டில் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்காகப் பிறப்பிக்கப் பட்டதாகும்.

(இ) 1976 ஆம் ஆண்டில் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், மேலே குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் பணியாற்றிய பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை அவர்களது தற்காலிக நியமன நாளிலிருந்து வரன்முறை செய்து,

அவர்களுக்குரிய ஊதிய உயர்வு நிலுவைத் தொகையினையும் அளிக்க வேண்டும் என அரசு தனது ஆணை (நிலை) எண் 2722, கல்வி, நாள் 22—12—1980 இல் ஆணை தனியாக வெளியிட்டுள்ளது.

**திரு. ம. சங்காலிங்கம்:** இந்தக் கேள்வி நான் 1980-லே கேட்டது. அதற்குப் பிறகு இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு அவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப் பட்டது. அதற்குப் பிறகும் நியமிக்கப்பட்டவர்களுக்கு, தேர்வாணைக் குழுவின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படும் எல்லோருக்கும் அவர்களின் நியமன நாள் முதல், அதாவது அவர்கள் தற்காலிகமாக நியமிக்கப் பட்ட நாள் முதல், அவர்களின் பணியை வரன் முறை செய்யும் பொது விதியை அரசு ஏற்படுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவ்வப்போது பொதுவாக நாம் ஒரு விதியை ஏற்படுத்தி இப்படி ஒரு நிலைமையை எடுத்தால், தேர்வாணைக் குழுவினுடைய பணியை நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்று ஆகிவிடும். அவ்வப்போது ஏற்படும் சிறப்பான நிலையைப்பற்றி முடிவு எடுக்கப்படும். இந்த நேரத்திலே இன்னொரு உத்தரவையும் நான் சொல் கிறேன். ஏ-பிரிவைப் பொறுத்தவரையில், 1973-74 ஆம் ஆண்டு தற்காலிக நியமனம் பெற்றவர்களைத் தான் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்ய ஆணை இருந்தது. இந்த நிலையினை மாற்றி ஏ-பிரிவு பட்டதாரி ஆசிரியர்களையும், பி-பிரிவில் உள்ளவர்களைப் போல 1—4—1970 முதல் வரன்முறை செய்ய அரசாணை நிலை எண் 1493, நாள் 12—7—1982-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** 3—3—1973 வரை நியமிக்கப்பட்ட ஏ-பிரிவு, பி-பிரிவு பட்டதாரி ஆசிரியர்கள் அனைவருக்கும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்ய பிறப்பித்துள்ள ஆணை மிகவும் பாராட்டத் தக்கது. இதற்கு முன்னதாக இப்படிப்பட்ட காரியத்தை யாரும் செய்யவில்லை. ஆனால் 3—3—1973 வரை பணியில் வந்தவர்களுக்கு மட்டும் தான் இந்தச் சலுகை. 1973க்குப் பிறகு பணியில் வந்தவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை என்று சொன்னால், ஒரு 'டிஸ்கிரிமினேஷன்' ஏற்பட்டு ஒரு சாரார்க்கு இந்தச் சலுகை வழங்கப்பட்டு அதே பணியில் இருக்கும் 1973-க்குப் பிறகு வந்தவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றால், ஊதிய இழப்பு ஏற்படுகிறது. பணி மூப்பை நிர்ணயிக்கத்தான் சர்வீஸ் கமிஷனுக்கு அதிகாரம் இருக்கிறது. அதிலேயும் அரசு தலையிட வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால், பணி வரன்முறை என்பது பணியில் சேர்ந்த தேதியிலிருந்து செய்வதற்கான முழு அதிகாரம் அரசுக்கு இருக்கிறது.





அப்படி வரன்முறை செய்யப்பட்டால், பணியில் சேர்ந்த தேதியிலிருந்து தொடர்ந்து ஆண்டுதோறும் ஊதிய உயர்வு பெற்று இழப்பு இல்லாமல் அவர்கள் இருப்பார்கள். ஆகவே, 3—3—1973-க்கு முன்னால் சேர்ந்தவர்களுக்கு இப்படி முற்போக்கான நடவடிக்கையை எடுத்திருப்பதைப் போல, 3—3—1973-க்குப் பிறகும் தொடர்ந்து பணியில் வருபவர்களுக்கும் இச் சலுகை அளிக்க வேண்டும் என்ற கருத்தைப் பரிசீலனை செய்து முடிவெடுக்க அரசு முன்வருமா?

(முடிபகல் 9-50)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இத்தகைய நியமனங்கள் அனைத்தும் தேர்வாணைக் குழுவினாலேயே செய்யப்பட வேண்டும். ஆனால் தற்காலிக அடிப்படையில், நமக்கு ஏற்படுகிற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இத்தகைய தற்காலிக நியமனங்களை நாம் செய்து வருகிறோம். தேர்வாணைக் குழுவினால் முறையாக ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை இத்தகைய பதவிகளில் நியமித்து ஏற்கனவே தற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை வெளியேற்ற வேண்டிய நிலை இருக்கிறது. அல்லது தற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களேகூட தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கே அந்தப் பொறுப்பு தொடர்ந்து தரப்படுகிறது. ஆனால் சில பல காரணங்களால் இவ்வாறு தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுவதில் தாமதங்கள் ஏற்படுகிறபோது, அதன் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை வைக்கின்றார்கள். அதன் மீது நாம் பரிசீலனை செய்து அவர்கள் பணியை வரன்முறைப்படுத்துகிறோம். இதிலுள்ள ஒரு முக்கியமான அடிப்படைக் கருத்து என்னவென்றால், இதற்கு என்று ஒரு முறை இருக்கிறது. ஆனால் அதற்கு அப்பாற்பட்டு சில காரியங்களைச் செய்து, நாம் அவர்களின் பணியை வரன்முறைப்படுத்துகிறோம். அதாவது ஆசிரியர்களின் கோரிக்கையை ஆராய்ந்து பார்த்து ஆசிரியர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடாது என்ற அடிப்படையில் நாம் ஓர் உத்தரவு போடுகிறோம். அதே முறையை நிரந்தரமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதுவது சரியல்ல. அந்த முன்னுதாரணத்தையே நிரந்தரமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பது சரியல்ல. என்றாலும்கூட இப்படிப்பட்ட நிலைமைகளைப் பொறுத்தவரையில், அரசு என்றும்போல் அவ்வப்போது பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ஈ. தாமஸ்:** தற்சமயம், கல்வித் துறையில், குறிப்பாக மேல்நிலைக் கல்வியில் இதைப்போன்றதொரு நிலைமை உருவாகியிருக்கிறது. முதுகலைப் பட்டதாரிகள் கல்வித் துறையால் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு

கிறார்கள். அவர்களும் இனி தேர்வாணைக் குழுவில் தேர்வுக்குப் போக வேண்டுமா அல்லது கல்வித்துறை அதிகாரிகளால் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால், அதுவே அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுமா? இது குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் என்ன செய்ய இருக்கிறார்கள்? ஆசிரியர்கள் இது குறித்து மிகவும் கலக்கம் அடைந்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க முடிவெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பி. டி. பதவிகளுக்கு மேல் இருக்கிற அனைத்துப் பதவிகளுமே தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் அதிகாரத்திற்குட்பட்டவைகள்தாம். எனவே தேர்வாணைக் குழுதான் அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதுதான் தற்போதைய விதிமுறை, நடைமுறையுங்கூட. நாம் இத்தகைய ஆசிரியர்களை தற்போது தற்காலிகமாகத்தான் நியமித்திருக்கிறோம். எனவே இந்த ஆசிரியர்களும் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான், அவர்கள் பணி வரன்முறைப்படுத்தப்படும். இதுதான் இன்றைக்கிருக்கிற நிலைமை. ஆனால் அவர்கள் பாதிக்கப்படுகிற நேரத்தில் எப்படி உதவி செய்ய முடியும் என்பதைத்தான் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். ஆசிரியர்கள் மிகவும் கலக்கம் அடைந்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அளவுக்காவது வேலை கிடைத்ததே என்றுதான் பலர் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த தேதி முதலே அவர்களின் பணி வரன்முறை செய்வது குறித்து அரசு அனுதாபத்தோடு கவனிக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசு தற்போது ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. அதன்படி தற்காலிகமாகப் பணியில் இருந்தாலுங்கூட, அத்தகைய பணியாளர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த தேதியிலிருந்தே, தொடர்ந்து ஆண்டுதோறும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு (இன்க்ரிமெண்ட்) கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. இது அனைத்து அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பொருந்தும் ஒரு சலுகையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே ஆண்டுதோறும் இவர்களுக்கு ஊதிய உயர்வை வழங்கிவிட்ட பிறகு, பின்னால் பல ஆண்டுகளுக்குப் பிறகு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களின் பணி, தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து வரன்முறை செய்யப்பட்டால், அவர்கள் ஏற்கெனவே வாங்கிய



தொகையைத் திருப்பித் தர வேண்டும் என்ற இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்படுவார்கள். எனவே அரசு அதைக் கவனத்தில் கொண்டு தக்க முடிவெடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தக் கருத்து ஒரு பொதுவான உத்தரவின் அடிப்படையில் தெரிவிக்கப்படுவதாகும். அதே அடிப்படையில் ஒரு கோரிக்கையை வைத்து, அதை யாரிடம் கேட்க வேண்டுமோ அவர்களிடம் கேட்டால், அவர்கள் உரிய முறையில் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தற்காலிகமாக ஆசிரியர்களை நியமிக்கும்போது, அதிகாரிகள் ஒரு இன்டர்வியூவை வைத்து, அவர்களின் கல்வித் தகுதியைப் பார்த்து நியமித்து விடுகிறார்கள். அப்படி தற்காலிக நியமனங்கள் பெற்றவர்கள் எல்லாம், ஓராண்டுக் காலப் பணிக்குப் பிறகு, ஆண்டு ஊதிய உயர்வு, இன்கிரிமெண்ட் பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. இப்படி 5 அல்லது 6 ஆண்டுக்காலம் தற்காலிகமாகப் பணியாற்றிய பிறகு, தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படும் போது, அவர்கள் கம்யூனல் ஜி.ஓ. என்னும் அடிப்படையில் ரொட்டேஷன் முறைப்படி ஒரு குறிப்பிட்ட சதவீதத்தின் அடிப்படையில் தேர்வு செய்கிறார்கள். அதன் காரணமாகப் பலர் விடுபட்டுப் போகிறார்கள். இதனால் 5, 6 ஆண்டுக்காலம் பணியாற்றியவர்கள்கூட வேலை இழக்கிற பரிதாபமான நிலை ஏற்பட்டு விடுகிறது. தற்காலிக அடிப்படையில் ஏராளமான முதுகலைப் பட்டதாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். நமக்கு இருக்கும் தேவைக்கு ஈடு செய்யும் அளவுக்கு மாநிலத்தில் ஏராளமான முதுகலைப் பட்டதாரிகள் இருக்கிற காரணத்தால், எந்தக் காரணத்தைக் கொண்டும் தற்காலிகமாகச் செய்யப்படும் நியமனங்கள் என்பவை ஓராண்டுக் காலத்திற்கும் மேற்படாத வகையில் அதற்குள்ளாகவே தேர்வாணைக் குழுவிலிருந்து பட்டியலைப் பெற்று ஆசிரியர்களை நியமிப்பதற்கோ அல்லது தேர்வாணைக் குழுவின் ஒப்புதலை (கன்கரன்ஸ்) பெற்றோ அவர்களை அந்தப் பணியில் நீடிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தேர்வாணைக் குழுவால்தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நிலைமை இருப்பதால்தான், இத்தகைய நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. என்றாலும் கூடுமான வரை காலதாமதம் ஏற்படாமல் அந்தப் பொறுப்புகளுக்குத் தேர்வாணைக் குழுவால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த அரசு ஏற்கிறது. முடிந்த வரையில் தாமதத்தைத் தவிர்க்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 மார்ச் 10

## ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி.

* 150. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மேலவையில் 21—4—1979 அன்று வினா எண் 324-க்கு அளிக்கப்பட்ட விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அனைத்துத்துறை, அனைத்து நிலை ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கும் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கும் திட்டம் குறித்து அரசு முடிவு ஏதும் எடுத்து விட்டதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போதிலிருந்து அமல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இப்போதைக்கு ஒத்தி வைக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அனைத்துத் துறை, அனைத்து நிலை ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கும் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கும் திட்டம் தற்போதைக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதன் மூலமாக, அது நிரந்தரமாகத் தள்ளி வைக்கப்படவில்லை. நிச்சயமாகத் தரப்படும் என்ற நம்பிக்கையை அளித்திருப்பதற்காக அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படும் என்று அரசு அறிவித்து நீண்ட நாட்களாகின்றன. அந்த அறிவிப்பின் அடிப்படையில் அரசால் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை எத்தனை? அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை? பயன் அடைந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை? அதோடு தேசிய நல நிதியில் பணம் இல்லை என்று சொல்லப்படுகிறதே, அதற்கு அரசு மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்ய இருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தேசிய ஆசிரியர் நல நிறுவன நிதியிலிருந்து, அனைத்து ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு ஆகியவற்றிற்கு கல்வி உதவித் தொகை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்தது. அரசு 16—7—1983 அன்று தன் அரசாணை நிலை எண் 1473-ல் 1980-81 ஆம் கல்வியாண்டிலிருந்து ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு, பட்டப்படிப்பு மற்றும் பட்ட



1983 மார்ச் 10]

மேற்படிப்பு ஆகியவற்றிற்கு கல்விக் கட்டணம் கொடுக்க மேற்படி நிதியிலிருந்து தருவதற்கான வகையில் ஆணையிட்டிருக்கிறது. இந்த அளவுக்குத்தான் இங்கே விவரம் இருக்கிறது. எவ்வளவு பேர் என்ற விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் தரப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 1980-81 ஆம் கல்வி ஆண்டிலிருந்து இத்தகைய கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தும்கூட, இதுவரை ஒரு ஆசிரியரின் குழந்தைகூட இந்தப் பயனை அடையவில்லை. எனவே கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்தவிதமான பயனுமில்லாமல் இருக்கிற இந்த அரசாணையை இனியாவது விரைவுபடுத்தி அமுல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இத்தகைய விவரம் மாண்புமிகு உறுப்பினருக்கு எப்படிக் கிடைத்தது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவகையில், ஒருவருக்குங்கூட கிடைக்கவில்லை என்று சொல்லுவது சரியான தகவல் அல்ல. யாருக்காவது கிடைக்கவில்லை என்றால், அதை மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்லலாம். ஆனால் தற்போது கல்வி உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லி, அதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால் பெரும்பாலான ஆசிரியர்களின் குழந்தைகள் பிற்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பதால், அந்த அடிப்படையிலேயே நிவாரணம் பெற்றுவிடுகிறார்கள். எனவே அவர்கள் இந்த நிதியிலிருந்து பணம் வாங்க வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் மட்டுமே இதிலே கேட்க வேண்டிய நிலையில் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிற நிலை இருந்தால், அரசு பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது. ஒருவருக்கும் கிடைக்கவில்லை என்றால் அது சரியாக எனக்குப் படவில்லை. அதுபற்றி விசாரிக்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒருவருக்கும் கிடைக்கவில்லை என்பது எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல். அமைச்சர் அவர்கள் யாருக்காவது கிடைத்திருக்கக்கூடும் என்று சொல்லுகிறார்கள். எனவே இதையே ஒரு புகாராக அல்லது ஒரு கோரிக்கையாக அல்லது ஒரு விண்ணப்பமாகக் கொண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் எத்தனை பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டது, உண்மையில் எத்தனை பேர் இதற்காக விண்ணப்பித்துக் கொண்டார்கள் என்கிற விவரத்தை இந்த அவையில் இனிமேலாவது வைப்பதற்கு முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதற்காகத்தான் தனியாக கேள்வி கேட்டுவிட்டால், நானே தந்து விடுகிறேன் என்று ஏற்கெனவே குறிப் பிட்டேன். தனியாகக் கேள்வி கேட்டால், நான் முழு விவரத்தையும் தரு வதற்குத் தயாராக இருக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் கூறியபடி ஆசிரியர்களுக்கான தேசிய நல நிறுவன நிதி யிலிருந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்புக்காக உதவித் தொகை வழங்கலாம் என்று ஆணை வந்தது என்னவோ உண்மை. ஆனால் உதவித் தொகை கோரி வந்திருக்கிற விண்ணப்பங்களுக்கு ஏற்ப தொகை வழங்க முடியாத அளவுக்கு அங்கே நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும், ஆகவே நிதித் துறையிலிருந்து ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசின் மூலமாக நிதித் துறையை அணுகியதாகவும், அதன் மீது எந்த முடிவும் இதுவரை எடுக்கப்பட வில்லை என்றும் எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அது உண்மை என்றால் அதைத் துரிதப்படுத்தி நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** என்னிடத்திலே தரப்பட்டிருக்கிற விவரத்திலே அவைகள் எல்லாம் இல்லை. அது இல்லாத நிலையில் நான் ஒன்றும் சொல்ல முடியாது. இருந்தாலும் அதைப்பற்றி நான் விசாரிக் கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் நேரிடையாகத் தொடர்பு இல்லாவிட்டாலும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தன்னு டைய கருத்தைக் கூறவேண்டும் என்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். தொடக்கப் பள்ளி, இடைநிலைப் பள்ளி ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர் களின் பிள்ளைகள் ஸ்காலர்ஷிப் பெற்று மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றில் படித்துக்கொண்டு வருகிறார்கள். இப்போது அந்த ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களாகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு ஸ்காலர்ஷிப் உண்டு என்று ஸ்காலர்ஷிப் விதியில் இல்லை. ஆகவே தர முடியாது என்று நிறுத்திவிட்டார்கள். இதனால் பெற்றோர்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே தொடக்க நிலை, இடை நிலை, உயர் நிலை, மேல் நிலை ஆகிய பள்ளிகளில் பணிபுரியும் எல்லா ஆசிரியர்களுக்கும் உதவிச்





சலுகை உண்டு என்று விதியை மாற்றிக் கொடுத்தால், அவர்கள் நன்மை பெறுவார்கள். அப்படிச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஸ்காலர்ஷிப் லோன் வருமானத்தின் அடிப்படையில் தந்து வருகிறோம். மேல் நிலைப் பள்ளியில் அதிகமான வருமானத்தைப் பெறுவதால், ஒருவேளை கிடைக்காமல் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டிருப்பதால், அது என்னவென்று நான் விசாரிக்கிறேன்.

*Agriculture Instructors.*

* 151 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Agriculture Instructors with Post-Graduate qualification in Tamil and B.Ed., are not appointed as Post-Graduate Assistants in Higher Secondary Schools ; and

(b) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம். விவசாய பயிற்றுனர்கள் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் ஆகிய இரண்டிலும் குறிப்பிட்ட பாடத்தை முக்கிய பாடமாக எடுத்து தேர்ச்சி பெறாததால், இவர்களுக்கு மேல்நிலை வகுப்புகளில் பாட ஆசிரியராக நியமனம் பெறும் வாய்ப்பு கிட்டாத நிலையில் உள்ளனர்.

(ஆ) மேல்நிலைக் கல்வி பணிக்கான தனி விதிகளில் நிர்ணயிக்கப்பட் டுள்ள தகுதிகள் பெறாததால், விவசாய பயிற்றுனர்களை, முதுகலைப்பட்ட தாரி ஆசிரியர்களாக மேல்நிலைப்பள்ளிகளில் நியமிக்க இயலவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** இவ்வாறு மேல் நிலைப் பள்ளிகளில் தலைமையாசி ரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றால், அவர்கள் முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் தற்சமயம் வெளியிடப் பட்டுள்ள சர்வீஸ் ரூல்சில் ஒருமுறைப பாடத் திட்டத்திலே ஏற்கெனவே பணியாற்றிய ஆசிரியர்கள் முதுகலைப்பட்டம் பெற்றிருந்தால், அவர்களுக்குப் பணி உயர்வு கொடுக்கலாம் என்று இல்லை. அதோடு கூட மேல் நிலைப் பள்ளிகளில் பாடம் எடுத்திருந்தால், உயர்வு பெறலாம். முதுகலைப் பட்டதாரி பணியிடத்திலே உயர்நிலை தலைமை ஆசிரியர்கள் பணியாற்றியிருந்தால், மேல் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர்களாக ஆகலாம் என்று கூட இருக்கிறது.

[1983 மார்ச் 10

எனவே முதுகலைப் பட்டம் பெற்று மேல் நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வியைப் போதிப்பதால் அவர்களுக்கும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவியைக் கொடுக்கலாம் என்று விதிமுறைகளை மாற்றி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். ஒருமுறைப் பாடத் திட்டத்தின் சர்வீஸ் ரூல்சில் அவ்வாறு இல்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கேட்கப்பட்டிருக்கிற மூலம் கேள்வி பாட ஆசிரியாராக நியமனம் செய்வதைப்பற்றி. மாண்புமிகு உறுப்பினர் இப்போது தலைமையாசிரியர் பற்றி கேள்வி கேட்கிறார். அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும். பாட ஆசிரியராக நியமிப்பதில் என்ன நிலை என்று சொல்லுகிறேன். பொதுவாக விவசாயத் துறையில் பட்டப்படிப்பு பெற்றவர்கள் தனியாக ஆங்கிலத்தில் சரித்திரமும் தமிழில் முதுகலைப் பட்டமும் பெற்றவர்கள்தான் முதுகலை ஆசிரியராக வர விரும்புகிறார்கள். அப்படி வருகிறபோது தமிழில் படித்தவர்கள், தமிழில் எம்.ஏ. வாங்காதவர்கள், ஆங்கிலம் படித்தவர்கள், தமிழில் எம்.ஏ. வாங்கியவர்கள், வரலாறு படித்தவர்கள் ஆகியவர்களுக்கெல்லாம் நாம் வேலை தர முடியாத நிலைமை இருக்கிறது. நாம் என்ன செய்கிறோம் என்றால், இளங்கலையில் எந்தப் பாடத்தில் பட்டம் பெற்றிருக்கிறார்களோ அதிலே முதுகலைப்பட்டம் பெற்றிருந்தால், அவர்களுக்கு முதல் உரிமை தருகிறோம். அவர்கள் தீர்ந்துவிட்டால், அவர்கள் கிடைக்காத நிலையில், இவர்களுக்கு உரிமை தரலாம் என்று விதி வைத்திருக்கிறோம். இப்போது இளங்கலையில் எந்தப் பாடத்திலே பட்டம் வாங்கினார்களோ அதிலே முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கே பணி தர முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலை உயர் நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு மட்டும்தான் இருந்தது. இப்போது புதிதாக பஞ்சாயத்து யூனியன் பள்ளியாசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோம். அதிலே ஏராளமான பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அவைக்கு மிகுதியான ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடத்திலே பட்டம் பெற்றிருக்கிற காரணத்தால், இது ஒரு பெரிய பிரச்சினையாகத் தெரிகிறது. அது மாறுகிறபோதுதான் இதற்கு ஏதாவது செய்ய முடியும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்தப் பிரச்சினை தீர்வதற்கு இரண்டு பேருக்கும் ஒரு ரேஷியோ முறை வகுப்பது சரியாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா?



1985 மார்ச் 10]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நமக்குத் தகுதியுள்ளவர்கள், நிறைய உள்ளவர்கள் வேண்டும் என்ற முறையில் பார்க்கும்போது, ரேஷியோ சரியல்ல. அவர்கள் கிடைக்கவில்லை என்றால், இவர்களை எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் தேர்வாணைக் குழு வில் ஏதாவது தேர்வு நடக்கும்போது. முதுகலைப் பட்டம் (சரித்திரம்) படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என்கிறார்கள். பட்டப்படிப்பு என்ன வென்று சொல்வதில்லை. பட்டப்படிப்பிலே விவசாயத்தைப் படித்துவிட்டு முதுகலையில் தமிழைப் படித்தால் அறிவு பரவலாக இருக்கிறது. அந்த முறையிலே இதைக் கருதலாம் அல்லவா? இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதிலே இருக்கின்ற சிக்கலை தேர்வாணைக் குழு இன்னும் தெளிவாகத் தெரிந்துகொள்கிறது. நான் சொல்லுவது குறிப்பிட்ட ஆசிரியர் தகுதியைக் குறை சொல்வதற்கல்ல. இன்னொரு ஆசிரியரை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவரைவிட அவர் பரவாயில்லை என்று சொல்லி, வரவேற்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தேர்வாணைக் குழுவில் ஆசிரியர்கள் பற்றிய நிறைய பிரச்சினைகள் வருகின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே தேர்வாணைக் குழுவை இரண்டாகப் பிரித்து ஆசிரியர்களுக்கென்று ஒரு தேர்வாணைக் குழு அமைக்கிற செயற்குறிப்பை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பரிசீலிக்கிறபோது, அப்படி தேர்வாணைக் குழு செய்ய முடியுமா என்று கேட்டு பரிசீலிக்கலாம். இப்போது எல்லாவற்றையும் நாம்தான் செய்து கொண்டிருக்கிறோம். இப்போதுள்ள நிலைமையை மாற்றினால், பாதகங்கள் விளையக்கூடும் என்று அஞ்சுவதால், இந்த முறையைப் பின்பற்றி வருகிறோம். இதிலே இப்போதுள்ள பிரச்சினையை நம்மாலே தீர்க்கக் கொள்ள முடியுமா என்று பார்த்து, முடியாத நிலையில் அதைப்பற்றி யோசனை செய்யலாம்.

## Rural Compensatory Allowance to Teachers.

*152 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that Teachers' Associations have made representations for payment of Rural Compensatory Allowance to teachers in rural areas; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: இப்போது கூட நடுநிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டமைப்பின் சார்பில் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள்; அரசுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். கிராமங்களில் வாழக்கூடிய ஆசிரியர்கள் பல தொல்லைக்குள்ளாகிறார்கள். பணியைத் திறமையாகச் செய்ய முடியாத நிலையிலே இருக்கிறார்கள். இரண்டாண்டுகளுக்கு முன்பு அரசு கூட கிராம ஊக்கப்படி என்று பத்து ரூபாயைக் கொடுத்திருக்கிறது. அதற்காக நன்றி தெரிவிக்கிறோம். ஆனால் அது முழுமையாக ஈடுகட்டுவதாக இல்லாததால், எவ்வாறு நகர ஈட்டுப்படி கொடுக்கிறார்களோ அதைப் போலவே கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்களுக்கு கிராம ஈட்டுப்படித் தொகையை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கிராமங்களில் பணியாற்றுவதைவிட நகரங்களில் சில பிரத்தியேகமான சங்கடங்கள் இருக்கின்றன என்பதை முன் வைத்துத்தான் நகர ஈட்டுப் படியை அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பெற்றிருக்கிறார்கள். இப்போது கிராமத்தில் உள்ள சில பிரச்சினைகளை முன் வைத்து நகர ஈட்டுப் படியைப் போலவே ஈட்டுப்படி கொடுக்க வேண்டும் என்று கேட்பதைவிட, பொதுவாக ஊதிய உயர்வு வேண்டும் என்று கேட்பது மிகப் பொருத்தமாக இருக்கும். நகரத்திற்கும் ஈட்டுப்படி, கிராமத்திற்கும் ஈட்டுப்படி என்றால், அதிலே எந்தவிதமான பொருளும் இல்லாமல் போகிறது. கிராமத்தைக் காட்டி நகர ஈட்டுப்படி வழங்கிவிட்ட பிறகு, நகரத்தைக் காட்டி கிராம ஈட்டுப்படி கேட்பது என்பது சரியாகப் படவில்லை. கிராமத்திலே பணியாற்ற வேண்டுமென்ற உணர்வு பல பேருக்கு ஏற்பட வேண்டும். நான் சீனா சென்றபோது, அங்கே ஒரு உத்தரவு போட்டிருப்பதைப் பார்த்தேன். தேர்ந்தெடுக்கப்பட்டவுடனே முதன் முதலாக கிராமத்திலே போய்



(முற்பகல் 10-10)

பணியாற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதாக அங்கே சொன்னார்கள். அப்படியிருந்தால் நம்முடைய கிராமங்களில் முன்னேற்றம் காண முடியும். நம் இஷ்டப்படி இருந்தால், சில பிரச்சினைகள் வருகின்றன. ஆனால் இப்போது இருக்கின்ற நிலைமையில் அவர்களுக்கு அங்கு ஒரு ஊக்கமும் ஆர்வமும் ஏற்படும் என்ற அளவில் இந்த கிராம ஊக்கப்படியை நாம் கொடுத்திருக்கிறோம். அந்த அடிப்படைக் காரணத்தை வைத்துத் தான் தரப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்கள் பணத்தை வாங்குகின்றபோது, அதிலே அவர்களுக்கு ஒரு பெருமையும் இருக்கிறது. அந்த ஊக்கத்தைப் பெற்று கிராம மக்களுக்காக பணியாற்றுபவர்க்கு 10 ரூபாய் தரப்பட்டிருக்கிறது. வேறு காரணங்களுக்காக வாங்குவதைவிட இப்படிச் சொல்லி வாங்குவது அவர்களுக்குப் பெருமையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் அடி என்று கூறுவார்கள். அதுபோல கிராமத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு அங்கு சாதி கட்டுப்பாடு, வீடு இல்லாத குறை என்று இவர்கள் நகரத்திலிருந்து கிராமத்திற்குப் போகும்போது இரண்டு பக்கமும் இடி இருக்கிறது என்று சொல்லி, அது கட்டுப்படியாகின்ற அளவுக்கு ஆசிரியர்களுக்கு உதவி செய்யலாம். நீலகிரியில் சீசன் அலவன்ஸ் என்று சொல்லி, சீசன் காலத்தில் வீட்டைக் காலி பண்ணிக்கொண்டு போகச் சொல்கின்றார்கள். அதற்கும் கட்டுப்படியாகின்ற அளவில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தப் பிரச்சினை பொதுவான பிரச்சினை. அதற்கு எப்படி கேட்கவேண்டுமோ அப்படி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து தீர்த்துக்கொள்ளலாம். ஆனால் கிராமங்களிலே சாதிக் கட்டுப்பாடு என்பது இங்கே சொல்லப்படுகின்ற அளவுக்கு இல்லை. அது என்னுடைய அனுபவம். காரணம் நானும் ஒரு பத்து ஆண்டுக்காலம் கிராமங்களிலே ஆசிரியராகப் பணியாற்றியவன் தான். எந்த ஊரிலே ஆசிரியனாக இருந்தேனோ அந்த ஊரிலேயே குடியிருந்து ஆசிரியப் பணியினைப் புரிந்து கொண்டிருந்தேன். இப்படி ஒரு சிரமம் எனக்கோ, என்னோடு பணி புரிந்தவர்களுக்கோ, தாழ்த்தப்பட்டவர்களுக்கோ, மற்றவர்களுக்கோ வந்து அனுபவிக்கவில்லை. நல்ல நிலையிலேதான் பணியாற்றி வந்தோம் என்பது எனக்கு இருக்கின்ற 10 ஆண்டுக்கால அனுபவம்.

**திரு. பா.ரா. தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்மாதிரியைக் கூட நான் பெருமையோடு ஏற்றுக்கொள்கிறேன். கிராம ஊக்கப் படி ரூ. 10 என்பதை சற்று உயர்த்தி ரூ. 25 என்ற அளவுக்கு மாற்றியமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது ஒரு பொதுப் பிரச்சினையாகும். அதை பொதுவாக முதலமைச்சர் அவர்களிடம் அல்லது நிதி அமைச்சர் அவர்களிடம் அல்லது பட்ஜெட் பொது விவாதத்திலே வலியுறுத்திச் சொல்லிப் பெறுவார்களானால், அதற்கு நான் தடையாக இருக்கமாட்டேன். இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் கோவையைச் சேர்ந்தவனாக இருந்தாலும், கோவையிலேயே வேலை கிடைக்கும் வாய்ப்பு பெற்றவனாக இருந்தாலும் கூட, கிராமங்களிலே பணி புரியவேண்டுமென்பதற்காகத்தான் நான் டிஸ்ட்ரிக்ட் போர்டிலே பணியிலே போய்ச் சேர்ந்தேனே தவிர, வேறல்ல. அந்த மாதிரி உணர்வை ஆசிரியர்கள் மத்தியிலே வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் சங்கத்தில் உள்ள அருமை நண்பர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** கிராமங்களிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு ரூபாய் 10 கிராம ஊக்கப்படியாகக் கொடுக்கப்படுகிறது. நகரத்தில் நகர ஈட்டுப் படி கொடுக்கப்படுகிறது. உண்மையிலே அப்படி இருந்தாலுங்கூட, நகரங்களில் செல்வானாலுங்கூட அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைக்க மற்ற பல்வேறு வசதிகளைப் பெற அவர்கள் நகரங்களுக்குப் போகிறார்கள். அந்த வசதிகளையெல்லாம் கிராமப்புறங்களிலே பெற முடிவதில்லை. கிராமப்புறங்களில் பணியாற்றுகின்றவர்கள் அந்தப் பணியை விரும்பி ஏற்றுக்கொள்கின்ற வகையிலே, அவர்களுடைய குழந்தைகள் கல்லூரியிலே போய்ச் சேர்ந்து நல்ல கல்வி பெறுகின்ற அளவிலே, அதனால் உள்ள சிரமங்களை எல்லாம் தீர்க்கின்ற அளவிலே, கணக்கிட்டு அதற்கேற்ற வகையில் சம்பளத்தை அல்லது ஊதிய உயர்வைத் திருத்தியமைக்க கல்வித் துறை நிதித் துறையை வேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதுவும் ஒரு பொதுப் பிரச்சினையாகத்தான் இருக்கிறது. கிராமங்களில் உள்ள குழந்தைகள் உயர் கல்வி பெறுவதற்கான வகையிலே அரசு கூடுமானவரையில் அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்பதிலே அரசுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. கிராமப் புறங்களில் இருக்கின்ற குழந்தைகள் படிக்க வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகத்தான் இந்த அரசு வைத்திருக்கின்றது. அதனால் அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. அதை எண்ணிப்பார்த்து காரியமாற்று





கிறோம். மேல் நிலைப் பள்ளி என்று வருகின்ற நேரத்திலே 100 கல்லூரி, 100 மேல் உயர்நிலைப் பள்ளி என்று கொண்டுவரவேண்டுமென்று ஏற்கெனவே செய்த முடிவை மாற்றி ஆயிரத்திற்குச் சமீபமான அளவில் மேல் நிலைப் பள்ளிகளை ஆரம்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அது இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் அந்த மாதிரி பல்வேறு காரியங்களை பல்வேறு துறைகளிலே செய்து வருவதால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன சிரமங்கள் படிப்படியாகக் குறைந்து வருகின்றன என்று நம்புகிறேன். அப்படியும் அந்த சிரமங்கள் இருந்தால், அதைப்பற்றித் தனியாக கோரிக்கைகளாக வைத்து, அரசிடம் சொல்லி விவாதித்து, தேவையான தீர்வுகளைக் காண முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கிராமங்களிலே மிகவும் சிக்கனமாக வாழ்க்கை நடத்துவதற்குரிய சூழ்நிலை இருந்தபோது, நகரப்பகுதியிலே அதைவிட அதிகச் செலவு காட்டி நகர ஈட்டுப் படி கேட்டார்கள். ஆனால் இன்றைய தினம் இருக்கின்ற நிலைமைகள் வேறு. கிராமப்புறங்களில் இருப்பவர்கள் நகரங்களுக்கு பொருள்களை வாங்கிச் சென்று அங்கே விற்கின்றபோது, அதிக விலைக்கு விற்கப்பட்டு செலவு அதிகமாக ஆகின்ற காரணத்தினால், விலையேற்றம் இருக்கிறது. கிராமங்களில் வீடுகள் கிடைக்காத பிரச்சினை இருக்கின்றது. அதைக் கருத்தில்கொண்டுதான், கிராமத்திலே வீட்டு வாடகைப் படி வேண்டுமென்ற நிலையை உருவாக்கிப்போனது. அந்தக் கொள்கையை ஏற்றால் அதை மற்றவர்களுக்குத் தருகின்ற பர்செண்டேஜ் தரவேண்டுமென்று கருதி, கிராம ஊக்கப் படி என்பதைப் போல தனியாக நிர்ணயித்து இந்த அரசுதான் வழங்கியது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய சூழ்நிலையில் இதைப் பொதுப் பிரச்சினை, பொதுப் பிரச்சினை என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். இந்த நிலைமையிலே பிருந்து மாறி கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த வீட்டு வாடகைப் படி ரூ. 5 அல்லது ரூ. 10 என்று ஆரம்பித்து வைக்கின்ற நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** வீட்டு வாடகைப் படி என்றாலும் அல்லது வேறு என்றாலும், அது பொதுப் பிரச்சினை. கிராமங்களிலே ஆசிரியர்கள் மட்டும் இல்லை, மற்றவர்களும் இருப்பதால், இது பொதுவாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. கல்வித் துறையே தனியாக முடிவு எடுக்க முடியாது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கரும்பின் குறைந்தபட்ச விலை டன்னுக்கு 155 ரூபாய் என்று தமிழ்நாடு அரசு நிர்ணயித்திருப்பதால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நல்லசிவன் அவர்கள், கரும்பின் குறைந்தபட்ச விலை டன்னுக்கு 155 ரூபாய் என்று தமிழ் நாடு அரசு நிர்ணயித்திருப்பதால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள முன் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கரும்புக்குக் குறைந்தபட்ச விலை டன்னுக்கு ரூ. 155 என்று தமிழ் நாடு அரசு நிர்ணயித்திருக்கிறது. இது மிகவும் குறைவானது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். சென்ற ஆண்டு 175 ரூபாய் டன்னுக்கு என்று நிர்ணயித்தது. அதற்கு முந்திய ஆண்டு ரூ. 185 ஒரு டன்னுக்கு என்று நிர்ணயித்தது. ஆனால் இந்த ஆண்டு தமிழகமே கண்டிராத கடுமையான வறட்சியின் மத்தியிலே, மின்வெட்டுக்கு மத்தியிலே, உரம் விலை ஏறியிருக்கின்ற நிலைமையிலே, கிராமத்தில் விவசாயப் பொருள்களுக்கு விலை ஏறியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, இந்த ஆண்டு ரூ. 155 என்று ஒரு குறைந்த விலையை நிர்ணயித்திருப்பது விவசாயிகளுக்கு பாதகமாக இருக்கிறது. காட்டிலே தானாகவே வளருகின்ற கருவேல மரத்தை வெட்டி விற்பவர்கள்கூட அதை டன்னுக்கு ரூ. 300 என்று விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அப்படி இருக்கும்போது, விவசாயிகள் பாடுபட்டு உற்பத்தி செய்கின்ற கரும்புக்கு ரூ. 155 என்று இருப்பது போதுமானதா என்பதை கருத்தில் கொண்டு பார்க்க வேண்டும். மத்திய அரசே அக்ரிகல்சர் பிரைசஸ் கமிஷன் மூலமாக கரும்பு விலையை பெரிய ஆலைகள் முதலாளிகளுக்குச் சாதகமாக வைத்து விவசாயிகளைச் சுரண்டுகின்ற அளவிலே ரூ. 155 என்று நிர்ணயித்திருக்கிறது. ரூ. 155



என்று மாநில அரசு நிர்ணயித்திருந்தாலும், இது போதவில்லை. பக்கத்திலே இருக்கின்ற ஆந்திராவில்கூட, அந்த அரசு ரூ. 196 என்று வைத்திருக்கிறது. பக்கத்திலுள்ள மாநிலத்திலே ரூ. 41 அளவுக்கு வித்தியாசம் இருக்கிறது. அது எந்த அளவுக்கு நியாயம் என்பதை நம் அரசு யோசிக்க வேண்டும். நான் கேள்விப்படுவது, தமிழக அரசு மத்திய அரசுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ. 200 என்பது தான் பொருத்தம் என்றும், அந்த விலைதான் கட்டுப்படியாகும் என்றும் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. இந்த விலையை சிபாரிசு செய்ததாகக் கேள்விப்படுகிறேன். இந்த நிலையிலே ரூ. 155 என்று இருப்பது போதுமானதாக இல்லை. நேற்றுக்கூட பத்திரிகைகளிலே பார்த்தேன். உற்பத்தியாளர்கள் கூடி அவர்கள் கரும்பு உற்பத்தியை விட்டுவிட்டு வேறு பொருள் உற்பத்திக்குப் போகலாமா என்று இருக்கின்றார்கள். அதை அமைச்சர் அவர்கள்கூட பார்த்திருப்பார்கள். 13, 15 சர்க்கரை ஆலைகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. இப்படி குறைந்த பயன்தான் கிடைக்கின்றது என்பதால் அவர்கள் வேறு பொருள் உற்பத்திக்குப் போகின்ற அபாயகரமான நிலையில் இருப்பதுபற்றிப் பரிசீலிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உரம் முதலிய இடுபொருள் செலவு, டீசல் செலவு கூலி முதலியன உயர்ந்துள்ளதாலும், வறட்சியின் காரணமாகவும், கரும்புக்கு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பது தான் அரசாங்கத்தினுடைய நோக்கம். அதன் காரணமாகவே சாகுபடிச் செலவுக்கு ஏற்ப கரும்புக்கு விலையை நிர்ணயிக்கும்படி மத்திய அரசுக்குத் தமிழ் நாடு அரசு பரிந்துரைத்தது. விவசாய விலை நிர்ணயக் குழு கரும்புக்குக் குறைந்தபட்ச விலையை டன்னுக்கு ரூ. 155 என நிர்ணயிக்கலாம் என மைய அரசுக்குப் பரிந்துரைத்தது. மைய அரசு 1981-82-ல் நிர்ணயித்த டன்னுக்கு ரூ. 130 என்ற அதே விலையை, 1982-83க்கும் நிர்ணயித்து அறிவித்துள்ளது. 1981-82-ல் குவிண்டால் ரூ. 302.13 ஆக இருந்த லெவி சர்க்கரை

(முற்பகல் 10-20)

விலையை 1982-83-ல் ரூ. 309 ஆக மைய அரசு உயர்த்தியுள்ளது. அதே நேரத்தில் சென்ற ஆண்டில் குவிண்டால் ரூ. 450 ஆக இருந்த வெளிச் சந்தை சர்க்கரை விலை, கடந்த நவம்பர் 1982-ல் ரூ. 332 ஆகக் குறைந்துள்ளது. மைய அரசின் ஆணைப்படி உற்பத்தியில் 65 சதவிகிதத்தை லெவிக்கும் 35 சதவிகிதத்தை வெளிச் சந்தைக்கும் கொடுக்க வேண்டியுள்ளது. வெளிச்

### கரும்பின் குறைந்தபட்ச விலை டன்னுக்கு 155 ரூபாய் என்று தமிழ்நாடு அரசு நிர்ணயித்திருப்பதால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து



சந்தை விலை குறைந்துவிட்ட நிலையில், தமிழக சர்க்கரை ஆலைகள் சிக்கலில் உள்ளன. ஆனாலும் இப்போது விதிக்கப்பட்டிருக்கிற 155 ரூபாய் என்ற விலை கரும்பு விவசாயிகளுடைய மனதை நிறைவுபடுத்தக்கூடியதல்ல, அவர்கள் உற்சாகம் இழக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்றெல்லாம் அவர்களுடைய சங்கத்தைச் சேர்ந்த பெருமக்கள் அரூர் முத்து, நல்லசாமி போன்றவர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையும் கருத்திற் கொண்டு, 155 ரூபாய் என்பதை உயர்த்த வேண்டுமென்ற வகையிலே அரசு முடிவு எடுத்திருக்கிறது. எந்த வழி வகைகளிலே அதை உயர்த்திக் கொடுப்பது என்ற அளவில் அரசு இருக்கிறது. அந்த முடிவில் அரசு இருப்பதால், இதைப்பற்றிப் பேச அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி, என் அனுமதி மறுக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### (1) நூல் விலை ஏற்றத்தால் நெசவாளர் குடும்பங்கள் அல்லல் படுவது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

"நூல் விலையேற்றத்தின் காரணமாக நெசவாளர் குடும்பங்கள் தொழில் செய்ய முடியாமல் அல்லல்படுவது குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 446 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, நூல் விலை ஏற்றத்தைக் குறைப்பதற்கு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதை இந்த விவர அறிக்கையில் தந்திருக்கிறார்கள். தமிழக அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தற்போழுது பருத்தி நூல் விலை கீழ்க் கண்டவாறு குறைந்துகொண்டு வருவதற்கு வழி வகுத்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நூற் தமிழ் நாட்டிலுள்ள நூற்பாலைகளிலிருந்தும் பிற மாநிலங்களிலுள்ள தனியார் பாலைகளிலிருந்தும் மொத்தமாக நூலைக் கொள்முதல் செய்து வளர்ச்சிக் துறை நெசவாளர்களுக்கு விநியோகிக்க தமிழ்நாடு கைத்தறி அதற்காகப் கழகத்திற்கு அரசு ரூ. 50 இலட்சம் முதல் பணம் வழங்கியுள்ளது. என்ற கருதுகிறேன். அந்தத் தொகை போதிய தொகையாக இல்லை அரசு பரிசீலிக்கிறது. அதை ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், நெசவாளர் கழக பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டபடி மொத்தமாக நூல் விலையை மேலும் குறைத்து சப்ளை செய்ய தென்னிந்திய ஆலைகள் கழகத்துடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே கண்டுள்ள முன்னேற்றம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, தென் இந்திய நூற்பாலைக் கழகம் பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் அடிப்படையிலே 2 முறை அந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு தடவை விலை நிர்ணயம் செய்து, கொஞ்சம் விலை இறங்கிய பிறகு மறுபடியும் பேச்சு வார்த்தை நடத்தி, விலை நிர்ணயம் செய்திருக்கிறோம். தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம். சாதாரணம், நூல்களின் விலை இறங்குவதால், அதற்கேற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்தி, நெசவாளர்களுக்கு உதவ நடவடிக்கைகளை எடுக்கிறோம். இப்போது இருக்கும் நிதிநிலைக்கேற்ப 50 லட்சம் ரூபாயைக் கடனாகத் தந்திருக்கிறோம். அதற்குமேல் உயர்த்திக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. இதை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அமைச்சரவர்கள் இதிலே நல்ல முயற்சி எடுத்து பதில் தந்திருக்கிறார்கள். ஆகவே அதைப் பாராட்டுகிறேன். நெசவாளர் குடும்பங்கள், இந்த நிலைமைகளாலே மட்டுமல்ல, வேறு காரணங்

களாலும் அவதிப்படுகிறார்கள். நெசவாளர்களுக்கான தமிழக அரசின் பணிப் பாதுகாப்புச் சட்டம் தொழிலாளர் துறையால் அமுல்படுத்தப்பட வேண்டும், கைத்தறி இயக்குநரகத்தாலே அமுல்படுத்தப்படக் கூடாது என்று அவர்கள் விரும்புகிறார்கள். சில தறி உரிமையாளர்கள் கூலியைக் குறைத்துக் கொடுப்பதாகக் கூறி அதற்குக் கண்டனம் தெரிவித்து, அரசு அதில் தலையிட வேண்டுமென்று விரும்புகிறார்கள். கைத்தறி நெசவாளர் சங்கம் இப்படியெல்லாம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அது குறித்து அரசு ஏதாவது முடிவு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே, அதைப் பற்றித் தனியாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம். அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

**(2) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்கு எம்.எட். பட்டம் பெற்றமைக்கு ஊக்க ஊதியம் மறுக்கப்படுவது குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

"பட்டதாரி ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் எம்.எட். பட்டம் பெற்றால் ஊக்க ஊதியம் வழங்கப்பட்டு, ஆனால் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் எம்.எட். பட்டம் பெற்றால் ஊக்க ஊதியம் மறுக்கப்பட்டுள்ளதால் சுமார் 200 மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் 1,000 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும் பாதிப்புக்கு ஆளாகியிருப்பது குறித்தும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய இழப்பு குறித்தும்."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஓர் அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** துணைத் தலைவரவர்களே, ஊக்க ஊதியம் சம்பந்தமாக பல ஆணைகள் 1978 ஆம் ஆண்டுக்கு முன்பு வெளியிடப்பட்டன. ஆனால் 1978 ஆம் ஆண்டு தமிழக அரசு மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கியது. மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கிய பிறகு, சில கேடர்கள் உரு

---

@ 446-ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



வாங்கப்பட்டன. அதிலே ஒன்று மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி. மற்றொன்று மேல்நிலைப் பள்ளி முதுகலைத் தமிழாசிரியர் பதவி, மற்றொன்று முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பதவி என்பனவாகும். ஏற்கனவே ஊக்க ஊதியம் சம்பந்தமான ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு, இந்தப் பள்ளிகள் துவக்கப்பட்டு, புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் எம்.எட். பட்டம் பெற்றிருக்கிறார்கள். தலைமை ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர், முதுகலைத் தமிழாசிரியர்கள் ஆகியோர் எம்.எட். பட்டம் பெற்றிருக்கிறார்கள். அரசு பொதுப்படையாக இந்தப் பிரச்சினையை அணுகி, பரிசீலிப்பதாக ஓராண்டுக்கு முன்னால் அரசாணை வழங்கப்பட்டது. ஒரு ஆண்டு ஆகியும் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. பொதுவாக ஒரு கொள்கையை அணுகும்போது நிலைமை வேறு, வழங்கிய சலுகையை விரிவுபடுத்துவது என்பது வேறு. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதைப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே, விரிவுபடுத்துவதாக இருந்தாலும், புதிதாக ஒரு பிரிவினருக்குத் தர வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்திருக்கிறது. அதைப்பற்றிப் பரிசீலிக்கும்போது பல்வேறு துறைகளில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருப்பதால், இது குறித்து பொதுவாக ஒரு முடிவை அரசு எடுக்க உள்ளது. புதிய பிரிவினருக்குத் தரக்கூடாது என்று தடை போட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இது நிறுத்தப்பட்டிருக்கிறது. பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ள பிரச்சினையோடு இவர்கள் பிரச்சினையையும் சேர்த்துப் பரிசீலித்து, தக்க முடிவு எடுப்பார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** துணைத் தலைவரவர்களே, இன்சென்டிவ் இன்க்ரிமென்ட் சம்பந்தமாக பொதுப்படையாக அரசு பரிசீலனை செய்யும்போது, இன்சென்டிவ் இன்க்ரிமென்ட் என்பதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தொகையைத் தரலாமா என்ற கருத்தும் அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன. அரசு ஊழியர்களும் சரி, ஆசிரியர்களும் சரி, தற்போது நடைமுறையில் உள்ள இன்சென்டிவ் இன்க்ரிமென்ட் முறை, அதாவது ஒரு படிப்பு படித்தால் 2 ஊதிய உயர்வுகள் கொடுக்கும் முறையில் மாற்றங்கள் இருக்கக்கூடாது என்று கருதுகிறார்கள். அந்தக் கருத்துக்கு மதிப்பு கொடுத்து அரசு பரிசீலனை செய்யும்போது அந்தக் கருத்துக்கு ஏற்ப முடிவு அமைவதற்கு ஏற்ற வகையில் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவைத் தலைவரவர்களே, ஒரு கருத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்போது, எல்லாத் தரப்பினரின் கருத்துக்களையும் வைத்து, இருக்கின்ற நிலைமைகளை வைத்து, எப்படி ஒரு முடிவு எடுக்கலாம் என்று பரிசீலனை செய்யலாம். இதை எப்படி கொடுக்கக்கூடாது என்ற அடிப்படையிலே பரிசீலனை செய்யமாட்டார்கள். இதனாலே ஏற்படும் பின் விளைவுகள், தொடர் விளைவுகள், பிற துறைகளில் ஏற்படும் விளைவுகள் இவைகளை வைத்துத்தான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். மொத்தமாக இருக்கிற நிலைமையை வைத்து, உரிய முறையில் பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுப்பார்கள்.

## 4. 1983-84 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது ஆசிரியர்கள், பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலும், ஆழமாகப் பார்த்தாலும், ஒரு அம்சத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை மக்களை அதிக அளவிற்குப் பாதிக்கும் வரிகளைப் புகுத்தாததற்காக நான் மாண்புமிகு நிதி அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், நிதிநிலை அறிக்கையை வெளியிடும்போது உயர்ந்த வருமானம் உடையவர்கள், நல்ல நிலையில் உள்ளவர்கள், செல்வந்தர்கள் இவர்கள் எல்லாம் அதனால் பாதிக்கப்படுவதில்லை என்பது வரலாறு நமக்குக் கூறும் உண்மை. சாதாரணமாக பட்ஜெட்டு வெளியிட்ட பிறகு அதனால் வரிகள் மூலம் அதிகமாக பாதிக்கப்படக் கூடியவர்கள் நலிந்த பிரிவினரும், ஏழையெளிய பாட்டாளி மக்களும் தான். அவர்களை பாதிக்கும் அளவுக்கு புதிய வரிகளை விதிக்காததற்காக நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், நிதித் துறையையும் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் நடுத்தர மக்களைப் பாதிக்கின்ற வகையில் சில வரிகளை அறிமுகப்படுத்தியிருப்பதாக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாடகைச் சுற்றுலா வண்டிகளுக்கு காலாண்டு வரி ரூபாய் 90-லிருந்து ரூபாய் 120 ஆக அதிகரிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். வாடகைச் சுற்றுலா டாக்சி என்று சொன்னால், இது சாதாரண தொழிலாளர்களால் நடத்தப்படுவது. அவர்கள் இதன் மூலம் கிடைக்கின்ற தினசரி வருமானத்தை நம்பி வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். டாக்சி டிரைவர்களுடைய வாழ்க்கையை பாதிக்கின்ற வகையில் இந்த வரி இருக்



கிறது. இதை அருள்கூர்ந்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதுபோல் நடுத்தர மக்களைப் பாதிக்கின்ற வகையில் போடப்பட்டுள்ள வரிகளை அரசு திரும்பப் பெற்றால், நான் மகிழ்ச்சியடைவேன்.

(முற்பகல் 10-30)

அடுத்து, சில குறிப்பிட்ட குடிசைத் தொழில்களுக்கு முற்றிலுமாக வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். இப்படி குடிசைத் தொழில்களுக்கு இருந்து வந்த வரியை முற்றிலுமாக எடுத்திருப்பது பாராட்டத்தக்கது. மிகச் சாதாரண ஏழையெளியவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். காந்தியடிகள் நாட்டின் பொருளாதார உயர்வுக்கு மிக மிக வலியுறுத்திய கருத்து இது. அதேநேரத்தில் அனைத்து குடிசைத் தொழில்களுக்கும் இருக்கின்ற வரிகளை முற்றிலுமாக எடுத்து விடுவது என்பது ஒரு முற்போக்கான நடவடிக்கையாக இருக்கும். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம், வருமானம் எல்லாம் மிக மிகச் சொற்பமாக இருக்கிறது. குடிசைத் தொழில்களுக்கு இருக்கின்ற அனைத்து வரிகளையும் எடுத்து விடுவது நல்லது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகம் என்றைக்கும் இல்லாத அளவுக்கு சோதனைக் கட்டத்தைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. குடிநீர், அரிசி, நிலக்கரி, மின்சாரம், சிமெண்ட் ஆகிய அனைத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு வாழ்க்கையில் அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அரசு எடுத்திருக்கக்கூடிய நிவாரண நடவடிக்கைகளை நான் வரவேற்கிறேன். அதேசமயத்தில் இந்த நிவாரண நடவடிக்கையின் மூலம் கிடைக்கின்ற நன்மைகள், பலன்கள் ஏழையெளிய மக்களுக்கு உரிய நேரத்தில், உரிய வகையில் அவசியம் சென்றடைய வேண்டும். நிவாரண நடவடிக்கைக்காக அரசு பல கோடி ரூபாய்களை பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கியிருந்தாலும் கூட, இந்த நேரத்தில் ஒன்றை அவையின் சிந்தனைக்கும் சொல்கிறேன். பொதுவாகவே நிவாரண நடவடிக்கையினுடைய பலன்கள், நன்மைகள் உடனடியாக ஏழையெளிய மக்களை, உரிய நேரத்தில், உரிய முறையில் சென்றடைவதில்லை என்பது முன்பெல்லாம் நாம் கண்டுகொண்டிருந்த கசப்பான உண்மை. இந்தத் தடவை இந்த வறட்சி நிவாரண நன்மைகள் ஏழையெளிய மக்களுக்கு தடையில்லாமல் உடனுக்குடன் சிரமமில்லாமல் சென்றடைய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 மார்ச் 10

பொதுவாகவே வசதி படைத்தவர்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு என்பது கிடையாது. எப்படியாவது அவர்களுக்கு அது வரும். அதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தண்ணீர் இல்லையென்றால், இங்கே அவைகளில் பிரச்சினையை எழுப்பும் உரிமை இருக்கிறது. பிரச்சினையை எழுப்பியவுடனேயே அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் சாதாரண ஏழையெளியவர்களுக்குக் குடிநீர் கிடைக்கவில்லையென்றால், அது நகர்ப்புறமாக இருந்தாலும் சரி அல்லது கிராமப்புறமாக இருந்தாலும் சரி—அவர்கள் உடனடியாக நிவாரணம் பெற வசதியும் வாய்ப்பும் கிடையாது. இந்தக் கருத்தை ஆட்சியில் இருப்பவர்கள் நல்லமுறையில் மனதில் பதிய வைத்துக் கொண்டு ஏழையெளிய மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இடங்களில் எல்லாம் குடிநீர் வழங்க துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரிய நேரத்தில், உரிய வகையில் வறட்சி நிவாரண நடவடிக்கையின் பலன்கள் தடையில்லாமல், சேதமில்லாமல் ஏழையெளிய மக்களைச் சென்றடைய அரசு கடுமையான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய தமிழகத்தில் ஒரே ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தான் இருக்கிறது. வேறு பல மக்கள் தொகை நம்மை விட குறைவான மாநிலங்களில் கூட இரண்டு மூன்று வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டு அங்கு விவசாயம் சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு விவசாயத் துறையிலே பல வியக்கத்தக்க சாதனைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் தொகையின் அடிப்படையில் பார்த்தால், இப்போது இருக்கின்ற ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் போதாது. நம்முடைய தேவைகளை இது ஒன்றை வைத்துக்கொண்டு பூர்த்தி செய்வது என்பது சாத்தியமானதல்ல. ஆகவே மீண்டும் மீண்டும் நான் இதனை வலியுறுத்துகிறேன். இப்போது இருப்பதுடன் கூட இன்னும் 2 வேளாண்மைப் பல்கலைக் கழகங்களையாவது நம்முடைய மாநிலத்தில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தஞ்சைக்கு அடுத்து வட ஆற்காடு மாவட்டம் விவசாயத் துறையிலே முன்னணியில் இருக்கிறது. அதுபோல் அண்டை மாவட்டங்களான தென்னாற்காடு மாவட்டமும் செங்கை மாவட்டமும் விவசாயத் துறையில் முன்னணி



1983 மார்ச் 10] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

யில் இருக்கின்றன. ஆகவே வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், செங்கை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களையும் மையமாகக் கொண்டு ஒரு புதிய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை விரைவில் அரசு அமைக்க முன்வர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இப்படி அமைக்கப்படும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பலவிதமான ஆராய்ச்சிகளைச் செய்வதன் மூலம் கிடைக்கக் கூடிய பலன்கள் பசுமைப் புரட்சிக்கு உதவி செய்வதாக இருக்கும். அந்தப் பெருமையும் நமக்குக் கிடைக்கும். ஆகவே இன்னும் 2 வேளாண்மைப் பல்கலைக் கழகங்களை அரசு அமைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என்று எடுத்துக் கொண்டால், ஏற்கெனவே சொல்லியிருக்கின்ற கருத்துக்களை நானும் இங்கே மீண்டும் மீண்டும் சொல்ல விரும்பவில்லை. மற்றவர்கள் முன்மொழிந்தவைகளை நான் வழிமொழிகிறேன். பொதுவாக எந்த நிதி நிலை அறிக்கையாக இருந்தாலும் இதற்கு முன்பு உள்ள மரபு என்னவென்றால், அரசு ஊழியர்களுக்கு நலன்கள் என்கிற தலைப்பில் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒருசில சலுகைகள் தருவது வழக்கம். இப்போது அந்த மரபு கைவிடப்பட்டிருக்கிறது. அவர்களுக்காக ஓரிரு பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். இந்த ஆண்டு அவர்களுக்கு எந்தவிதமான ஓரிரு சலுகைகள் கூட அறிவிக்கப்

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

படவில்லை. இது 7½ லட்சத்திற்கு மேல் இருக்கிற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் வேதனையை உண்டாக்கியிருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஓரிரு சலுகைகளையாவது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரை அளிக்கும்போது அறிவிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்த அரசாக இருந்தாலும் சரி அல்லது எந்த ஒரு அரசாக இருந்தாலும் சரி, அரசினுடைய திட்டங்களையெல்லாம் சிறப்பாகச் செயல்படுத்துவது என்பது, அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் நம்பித் தான் இருக்கின்றது. அரசின் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துகின்ற கருவிகளாக இருக்கின்ற அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் அரசு புறக்கணித்தால்,

திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிற அவர்களுக்கு விரக்தி மனப்பான்மை அல்லது வெறுப்பு மனப்பான்மை வளர அது காரணமாக அமைந்து, அரசின் திட்டங்களே தாமதமாகிற நிலைமை கூட உண்டாகலாம். இவர்களும் சமுகத்திலே ஒரு அங்கம் தான். அதிலும் இவர்கள் முக்கியமான அங்கம் என்பதை மனதிலே கொண்டு ஆக இவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற ஒரு சில நல்ல சலுகைகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் அறிவிக்க வேண்டும். முக்கியமாக அகவிலைப் படி உயர்வு, ஊதிய மாற்றம், அகவிலைப் படியை ஊதியத்துடன் இணைத்தல் போன்ற எல்லோருக்கும் பொதுவான சில சலுகைகளையாவது அறிவிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கல்வித் துறையைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே தமிழக கல்வித் துறை மிகவும் சிறப்பானது, நல்ல பெருமையைப் பெற்றிருக்கிறது என்று அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரமே தெரிவிக்கிறது. அதுபோல் தமிழகக் கல்வித் துறைக்கு ஆக ஒதுக்குகின்ற ஒதுக்கீடு குறித்து வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நல்ல பெருமை பெற்றிருக்கிறது. ஆளுநர் உரையில் கூட கல்வித் துறை குறித்து பாராட்டு வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கல்வித் துறைக்கு நம்முடைய ஆக இன்னும் நிறைய ஒதுக்கீடு செய்ய வேண்டும். தேவைப்படுகின்ற இடங்களுக்கெல்லாம் போதுமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். அதற்கு இப்போது அனுமதி வழங்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர் பணியிடங்கள் போதுமானவையா என்று கேட்டால் போதுமானவை அல்ல என்று நான் திட்டவட்டமாகச் சொல்வேன். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு மொத்தத் தேவையில் நான்கில் ஒரு பங்கு கூட பூர்த்தி செய்யப்படக் கூடிய அளவில் இல்லை. அதுமாத்திரமல்லாமல், நிதி நிலை அறிக்கையில் கூட போதுமான ஆசிரியர்கள் நியமனம் குறித்த அனுமதி அளிக்கப்படவில்லை. இது குறித்து [illegible] கல்வி [illegible] யத்தின் மீது பேசும்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் [illegible] செய்து அறிவிக்க இருக்கிறார்கள் என்றாலும் கூட, இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே, இப்போது எவ்வளவு ஆசிரியர்கள் இருக்க வேண்டுமோ அதில் 4-ல் 1 பகுதியினரை நியமிப்பதற்குரிய வாய்ப்பு கூட இடம் பெறவில்லை. இப்படிப்பட்ட நிலையில், தேவையான அளவுக்கு [illegible] பணியிடங்களை நிரப்பாத நிலையில், கல்வியின் தரம் எப்படி இருக்கும் என்பதை ஆக தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு





நிதியமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றும்போது, ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்வது குறித்தும் ஓர் நல்ல அறிவிப்பினைத் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மேல் நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டு, இன்றைக்கு நம் மாநிலத்தில் 1600 மேல் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. மேல் நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டதால், லட்சக் கணக்கான மாணவர்கள் இப்பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் எந்த மேல் நிலைப் பள்ளிக்கும் உதவியாளர் என்று சொல்லக்கூடிய 'அசிஸ்டெண்ட்ஸ்' பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு மேல் நிலைப் பள்ளியிலும் பணிச் சுமை மிகுந்து அங்கு வேலை செய்பவர்கள் படுகின்ற அல்லலைப் பார்த்து வேதனைப்பட்டிருக்கின்றோம். மேல் நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகியும் கூடுதலாக உதவியாளர் பணியிடங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பதை நான் அரசினுடைய [illegible] கொண்டு வருகிறேன். ஒவ்வொரு மேல் நிலைப் பள்ளிக்கும் கூடுதலாக [illegible] உதவியாளர் பணியிடத்திற்கு ஆக [illegible] வேண்டுமென்று நான் பணிவன்புடன் தெரி[illegible] அண்மையிலே அறிவித்த கொள்கையின்படி [illegible]க்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

[illegible] அதற்குப் பதிலாக [illegible] தான் சிறந்தது என்ற அந்தக் கொள்கை [illegible] அந்த அடிப்படையிலே தமிழகத்திலே இருக்கும் [illegible] பார்த்தால், அங்கெல்லாம் எவ்வளவு பாலிடெக் [illegible] — தொழில் நுட்பப் பள்ளிகள் — தேவை என்று பார்த்தால், இப்போது இருக்கின்ற பாலிடெக்னிக்குகளினுடைய எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப்பார்த்தால், தற்போது இருக்கும் பாலிடெக்னிக்குகளின் எண்ணிக்கை போதுமானது அல்ல. [illegible] ஆக அறிவித்திருக்கும் அந்தக் கொள்கையின்படி புதியதாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூடுதலாக பாலிடெக்னிக்குகள், இன்டஸ்ட்ரியல் ஸ்கூல் போன்றவைகள் துவக்கப்பட வேண்டும். வடஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் கூடுதலாக பாலிடெக்னிக்குகள் மற்றும் இன்டஸ்ட்ரியல் ஸ்கூல் போன்றவைகளையும் தொழில் நுட்பப் பள்ளிக்கூடங்களையும் துவக்க வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், நான் முன்பே சொல்லியதுபோல, ஏற்கனவே பேசிய ஆசிரியர் பிரதிநிதிகள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். உயர் நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளி

களைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு பள்ளிஆசிரியர் கூட்டமைப்பின் சார்பாக 17 சங்கங்கள் ஒன்று சேர்ந்து 17 முக்கிய கோரிக்கைகளைத் தேர்ந்தெடுத்து அதை அரசுக்குக் கொடுத்து வலியுறுத்தி வருகின்றது. அவைகளிலே நிதிச் சுமை ஏற்படுத்தும் கோரிக்கைகள் சில, மற்றவைகள் நிர்வாக ரீதியாக அல்லது கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டியவைகள். நிதிச் செலவு ஏற்படும் கோரிக்கைகளை நான் இப்போது குறிப்பிடுகிறேன். இப்போது பள்ளி நாட்கள் 270 நாட்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி உயர்த்தியிருப்பது தேவையற்ற ஒன்று. அதை 200 நாட்களாகக் குறைத்து அதன் அடிப்படையில் அவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டும். அரசாங்கக் கணக்குப்படி பார்த்தால் கூட, 23 நாட்கள் ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் ஈட்டிய விடுப்பு தரப்பட வேண்டும். ஆனால் இப்போது 10 நாட்கள் தான் தரப்படுகிறது. 23 நாட்கள் அவர்களுக்குத் தரப்பட வேண்டும் என்பது கோரிக்கை. 1—6—1981 முதல் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் அவர்கள் இரண்டாண்டு பெற்ற பயிற்சியின் அடிப்படையிலே ஒரு கூடுதல் ஊதிய உயர்வு—அடிஷனல் இன்கிரிமெண்ட்—வழங்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் உயர் நிலைப் பள்ளிகளிலேயும், மேல் நிலைப் பள்ளிகளிலேயும் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குக் கூடுதல் ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. It is a point of discrimination ஒரு தரப்பினருக்கு வழங்கப்பட்டு, அவர்களைப் போன்ற ஆசிரியர் பயிற்சி பெற்ற மற்றவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று சொன்னால், அது மிகப் பெரிய முரண்பாடு என்பதை உணர்ந்து, அதைப் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அனைத்துப் பிரிவு ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் அந்தப் பயிற்சி காலத்திற்கு டிரெயினிங் குவாலிபிகேஷனுக்கு என்று கூடுதல் ஊதிய உயர்வை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல ஊக்க ஊதிய உயர்வு சம்பந்தமாக, கேள்வி நேரத்தின்போது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். அரசு இதை ஒரு பொதுவான முறையில் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். இது நீண்டகாலமாகவே தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஒரு ஆண்டு ஆகிறது. ஆகவே, இன்றும் ஒன்றிரண்டு மாதங்களில் முடிவெடுத்து நல்ல அறிவிப்பை வழங்கி அனைத்துப் பிரிவினருக்கும் அவர்கள் பெறும் கல்வித் தகுதியின் அடிப்படையிலே இன்செண்ட்டிவ் இன்கிரிமென்ட்—ஊக்க ஊதிய உயர்வு வழங்க ஆணையிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



உயர் நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் பி.எட்., பி.டி., பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள், இதர சிறப்பு ஆசிரியர்கள் ஆயிரக் கணக்கிலே 10 ஆண்டுகளாகப் பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறார்கள். மிகப் பெரிய 'ஸ்டேக்னேஷன்' அவர்களிடையே நிலவுகிறது. அதனால் அவர்களுக்கு ஏற்படும் அதிருப்தியை பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அதை நான் மீண்டும் இந்த அவையிலே நினைவுபடுத்துகிறேன். ஆகவே, அவர்கள் ஊதிய உயர்வு பெறும் வகையில் ஆயிரம், அல்லது இரண்டாயிரம், அல்லது மூன்றாயிரம் இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்களை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக உயர்த்துமாறும்—தமிழாசிரியர் பணியிடங்கள் உயர்த்தியது போன்று உயர்த்துமாறு—இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். இலவசக் கல்வி என்பது அரசால் முன்பே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப் பட்ட கோரிக்கை. ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கும் இந்தக் கோரிக்கை ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப் பட்டதுதான். கேள்வி நேரத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்போதைக்கு தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் கூட, வருகின்ற ஆண்டிலேயாவது இதைப் பரிசீலித்து ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் குழந்தைகள் அனைத்து மட்டத்திலேயும் இலவசக் கல்வி பெறும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இன்னொன்று, மருத்துவப் படி. இது மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களால் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அம்சம். அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மருத்துவப் படி வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்போது அது செயல்படுத்தப் படவில்லை. ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் அவர்கள் பெறும் ஊதியத்திலே 10 சதவீதம் மருத்துவப் படியாக வழங்க வேண்டும் என்றும், கிராமப்புறங்களிலே பணியாற்றுபவர்களுக்கு அவர்கள் பெறும் ஊதியத்திலே 10 சதவிகிதம் வீட்டு வாடகைப் படியாக அறிவிக்க வேண்டும் என்றும் நான் இந்த சமயத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்போலவே, தேர்வு நிலை, சிறப்பு நிலை இவைகள் சம்பந்தமாக அரசு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் கூட பல முரண்பாடுகள் இருக்கின்றன. அதிலே ஒன்று என்னவென்றால், தேர்வு நிலை அல்லது சிறப்பு நிலை நிர்ணயிக்கும்போது, அவர்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு ஊதிய உயர்வு கூட வழங்கப்படாமல் மிகவும் அற்பமான தொகையை நிர்ணயிப்பதால், இது குறித்து அவைவரிடமும் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஊதியம் நிர்ணயிக்கும்போது, குறைந்தபட்சம் ஓராண்டு ஊதிய உயர்வு வரும் வகையில் அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 மார்ச் 10

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் கோட்டத்திலே நடைபெற்ற ஒரு அரசு விழாவில் கலந்து கொண்ட போது, ஆசிரியர்களுக்கு என்று ஒரு தனி வீட்டுவசதி வாரியம் அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும், ஆசிரியர்களின் சங்கங்கள் இதுகுறித்து கோரிக்கைகளை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க விரிவான கோரிக்கையை தயார் செய்து அனுப்பி யிருக்கிறோம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அந்த அறிவிப்பு அரசால் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. ஆசிரியர் களுக்கும், அலுவலர்களுக்கும் என்று ஒரு தனி வீட்டு வசதி வாரியத்தை அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைப்போலவே, உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், மேல் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் சிறப்பு ஊதியமும், பணிப்படியும் அளிக்க வேண்டு மென்றும் மேலும் உதவி தலைமையாசிரியருக்குச் சிறப்பு ஊதியமாக வழங்கப் படும் ரூபாய் 25-ஐ ரூபாய் 50 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது, அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் ரொக்கத் தொகையாகக் கொடுப்பது பற்றிப் பரிசீலிக்க என்று வைத்திருக்கும் குழுவினுடைய அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி ஒரு முடிவு எடுப்ப தாகச் சொன்னார்கள். அந்த அறிவிப்பை இந்த சட்டமன்றத் தொடரிலேயே அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை அறிவிப்ப தால் அரசுக்கு எந்த விதத்திலேயும் பணச் செலவு இல்லை. ஆசிரியர்களிட மிருந்தும், அலுவலர்களிடமிருந்தும் பணத்தை வாங்கி அதை மீண்டும் அவர் களுக்குத் திருப்பித் தரும் ஒரு திட்டம் தான் இது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்புதான் இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே, இந்தப் பொறுப்பையும் அரசு ஏற்று, இந்த அறிவிப்பைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒருசில நிதி சம்பந்தமான கோரிக்கைகளை மட்டும் நான் இந்த சமயத்திலே வலியுறுத்தி, செயற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுற்றுலாவைப் பொறுத்தவரையில், வடஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களிலே இருக்கும் நிலைமையைப் பார்த்தால், வடாற் காடு மாவட்டத்தில் ஏலகிரி மலையும், தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன்



1983 மார்ச் 10] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

மலையும் இருக்கும் பகுதிகளை ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்க உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

லீவு டிராவல் கன்சஷனைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அரசு இந்த அறிவிப்பை வழங்கியிருக்கிறது. இந்த அறிவிப்பில் ஒருவழிச் செலவை மட்டும் இந்த அரசு ஏற்றுக்கொள்வதாக இருக்கிறது. அவ்வாறின்றி, இரண்டு வழிச் செலவையுமே இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவும் இந்த மாநிலத்திற்கு உள்ளேதான் செல்ல வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கி, பிற மாநிலங்களுக்கும் சென்றுவரும் வகையில் இந்த வசதியை விரி வாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சலுகையை அரசுப் பள்ளிக்கூடங்களிலேயும், தனியார் பள்ளிக்கூடங்களிலேயும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், இதர ஆசிரியர் அல்லாத அலுவலர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். இப்போது இருக்கும் அரசாணையில் குழப்பமான சொற்றொடர் கள் இருக்கின்றன. அதையும் போக்க வேண்டும்.

இறுதியாக ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அரசு தனியார் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் மக்களுடைய வரிப்பணத் திலிருந்து ஊதியமும், மற்ற மானியங்களும் வழங்குகிறது. அரசு அப்படி வழங்குவதையே கூட வாங்கித் தரவே மாட்டேன் என்று தனியார் நிர்வாகங் கள் இருமாப்போடு இருந்தால், அதைத் தட்டிக்கேட்கும் அதிகாரம் இந்த அரசுக்கு இருக்கிறது. முகவை மாவட்டத்தில் காரைக்குடிக்கு அருகில் உள்ள கோட்டையூரில் சிதம்பரம் செட்டியார் மேல்நிலைப் பள்ளியில் ஒரு ஆசிரியையை 18—1—1982 லிருந்து பள்ளிக்கு உள்ளே நுழைய விடாமல் பள்ளி நிர்வாகம் physical prevention என்ற அளவிலே பகிரங்க மாகத் தடுக்கும் முறையைக் கையாண்டு வருகிறது. இது குறித்து சம்பந்தப் பட்ட அதிகாரி, இவ்வாறு பள்ளியின் நிர்வாகமே அந்த ஆசிரியையை பள்ளி யின் உள்ளே வர முடியாதபடி தடைசெய்கிறது என்று அறிக்கையும் அனுப்பி யிருக்கிறார். ஆனால் இன்னும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

(முற்பகல் 10-50)

அதன் காரணமாக இன்று ஒரு போராட்டத்தில் அங்கே பணியாற்றும் ஆசிரியர் களும் அலுவலர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். இதைப்போலவே தென்னாற் காடு மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிப்பாடி எஸ்.கே.பி.டி. மேல் நிலைப் பள்ளி யில் பணியாற்றும் 13 ஆசிரியர்களுக்குத் தரப்பட வேண்டிய ரூ. 60,000-க்கும்

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 மார்ச் 10

மேற்பட்ட நிலுவைத் தொகையை அந்த நிர்வாகம் வாங்கித் தர முடியாது என்ற அளவுக்கு இருமாப்போடு, ஆணவத்தோடு இருக்கிறது. அரசு அந்த நிர்வாகத்தைத் தட்டிக்கேட்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளாத காரணத்தால், எந்தத் தவறுமே செய்யாத அந்த 13 ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய ரூ. 60,000-க்கும் மேற்பட்ட நிலுவைத் தொகை கிடைக்காது ஒரு முட்டுக்கட்டை . ஏற்பட்டிருக்கிறது. இங்கே நான் இரண்டு உதாரணங்களை மட்டுமே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமை பல்வேறு இடங்களில் இருக்கின்றது. பல கொடுமைகளும் ஆசிரியர்களுக்குப் பல்வேறு இடங்களில் இழைக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாகத் தனியார் நிர்வாகங்களில் அரசு கொடுக்கிற சலுகைகளை வாங்கித் தராமல் அரசாங்கத்திற்கே ஒரு சவால் விட்டு, பேரலல் கவர்ன்மெண்ட் Parallel Government என்று சொல்லத் தக்க அளவுக்கு ஒரு போட்டி அரசாங்கத்தையே அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். உங்களுடைய சட்டம் எங்களை என்ன செய்யும் என்று சவால் விட்டுக்கொண்டு, அரசையே அவமானப்படுத்தும் வகையில், அவமதிக்கும் வகையில் அந்த நிர்வாகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் நிதியைத் தந்து கொண்டிருக்கிற அரசு இவைகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அரசாணையை அமுல்படுத்தாதவகையில் நிர்வாகங்கள் செயல்பட்டால், அவைகளைத் தட்டிக் கேட்டு, அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுத்து, தேவைப்பட்டால் அத்தகைய நிறுவனங்களுக்கு உரிய தண்டனையைக் கொடுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், அரசாணையை அமுல்படுத்தும் அத்தகைய நிறுவனங்களின் செயல்பாட்டில் அரசே தலையிட்டு அவற்றின் நிர்வாகத்தை உடனடியாக அரசே மேற்கொண்டு அவற்றின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, மீண்டும் ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் வகையில் வரிகளைப் போடாமைக்கு அரசுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு. ஜேப்பியார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகிற வாய்ப்பு ஏற்பட்டமைக்கு நான் உள்ளபடியே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 மார்ச் 10] [திரு. ஜேப்பியார்]

நிதிநிலை அறிக்கையைப்பற்றி பல்வேறு கருத்துக்களை இங்கே பலர் பேசியிருந்தாலும்,—எனக்கு முன்னாலே பலர் பேசி இருக்கிறார்கள்—இந்த அரசு தாக்கல் செய்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை ஒட்டுமொத்தமாக, ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால்—என்னைப் பொறுத்த வரையில், இது பலராலும், தமிழகத்திற்கு அப்பாலும் இருக்கிற பல மாநிலங்களாலும் வரவேற்கக் கூடிய நிதிநிலை அறிக்கையாகும். ஆனால், எல்லோரும் இதைச் சொல்ல வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் தங்களுடைய கருத்துக்களை, தங்களுக்குத் தெரிந்த கோணத்திலிருந்துதான் பேசுவார்கள் இங்கே சொல்லியிருக்கிற அல்லது சொல்ல இருக்கிற காரணங்களை மனதில் வைத்து, அதற்கு நான் பதில் சொல்ல முன்வரவில்லை. என்றாலும் இன்றையதினம் நிதிநிலை அறிக்கையின் மீது நான் பேசுகிற சந்தர்ப்பம் ஒரு நல்ல சந்தர்ப்பமாகும், மகிழ்ச்சி தரக்கூடிய சந்தர்ப்பமாகும் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மகிழ்ச்சி என்பது உள்ளத்திலிருந்தோ உதட்டிலிருந்தோ வருகிறதா என்றால், கண்டிப்பாக இல்லை. ஆனால் 'மகிழ்ச்சி' என்ற சொல்லை நானே வரவழைத்து இங்கே பேசுகிறேன். என்ன மகிழ்ச்சி என்றால் இந்தியத் துணைக் கண்டத்தை ஆளுகிற மைய அரசு அறிவித்திருக்கிற—ஒரு பயங்கரமான—தமிழகத்து மக்களெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்திடக்கூடிய நல்ல நேரத்தில் நான் இங்கே பேசுகிறேன். அதாவது அவர்களாகவே முன்வந்து, ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். விலாசங்களே இல்லாதவர்கள், அல்லது சொன்னால் தங்களை யார் என்று தெரிந்துகொள்ள முடியாதவர்கள் மத்திய அரசாங்கத்தைப் போய்ப் பார்த்து அதன் மூலமாகத் தமிழகத்திற்கு ஒரு மாபெரும் வெற்றி கிடைத்திருப்பதைப்போல் மத்திய அரசைச் சார்ந்த நிறுவனங்கள் ஒரு செய்தியை விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றன. யாரோ ஒருவர் டெல்லிக்குப் போனாராம். அவர் சார்ந்த கட்சி ஏதோ தமிழகத்தை ஆளுவதற்குத் தகுதி படைத்த கட்சியைப் போலவும் அல்லது மக்கள் அவர்களின் கட்சியை ஏற்றுக்கொண்டிருப்பதைப் போலவும் டெல்லிக்குச் சென்று கேட்டதால், டெல்லி பெருந்தன்மையோடு, மனமுவந்து நம்முடைய தமிழகத்து மக்களெல்லாம் மகிழ்ச்சியடைகிற வகையில் 10,000 டன் அல்ல—5,000 டன் அரிசியை அள்ளித் தந்திருப்பதாகவும் சொல்லியிருப்பதைத் தான் நான் இங்கே பேசுகிறபோது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்று குறிப்பிட்டேன்.

அதுவும் தொலைக் காட்சியில் ஒரு பெரிய விளம்பரம் செய்தார்கள். தொலைக் காட்சி நிலையத்தை யார் நடத்துகிறார்கள் என்றுகூட எனக்குத் தெரியவில்லை. அது அரசு நடத்துகிற நிறுவனமா அல்லது அங்கே

[திரு. ஜேப்பியார்] [1983 மார்ச் 10

பணியாற்றுகிற தொலைக் காட்சி நிறுவன ஊழியர்களின் பணத்தால் நடத்தப்படுகிற நிறுவனமா என்றுகூட எனக்குத் தெரியவில்லை. இங்கே சபையில் இல்லாத ஒருவரைப்பற்றிக் குறிப்பிடக்கூடாது என்ற மரபு இருக்கிறது. ஆனால் இந்தச் சபையில் இல்லாத ஒருவர், சம்பந்தமே இல்லாத ஒருவர் டெல்லிக்குப் போய்ப் பார்த்ததன் காரணமாக இந்த அளவுக்கு அரிசியை வழங்கியிருக்கலாம் என்று தொலைக் காட்சி நிலையம் ஒரு தவறான தகவலை இந்த நாட்டு மக்களுக்குத் தருகிறது என்றால், அப்படிப்பட்ட ஒரு தொலைக் காட்சி நிலையம் தேவைதானா என்ற கேள்வி நமக்கு ஏற்படுகிறது.

இந்த மாமன்றத்தின் மூலமாக நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். உண்மைக்குப் புறம்பான செய்திகளை எப்படி அந்தத் தொலைக் காட்சி நிலையம் மக்களுக்குத் தெரிவித்தது? பத்திரிகைக் குறிப்பில் ஒரு கருத்து தெரிவிக்கப்படுகிறது. தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போய்ப் பார்த்தார், பேசினார், அதன் மூலம் நாங்கள் தந்தோம் என்று பத்திரிகைச் செய்தியில் வருகிறது. ஆனால் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தில் உள்ள தொலைக் காட்சி நிலையம் அறிவிக்கிறது. தமிழகத்திலிருந்து ஒரு மாபெரும் தலைவர், எங்கே சென்றாலும் மக்களால் வரவேற்கப்படுகிற ஒரு கட்சியின் தலைவர். அதுவும் தமிழகத்தில் எந்தப் பொறுப்பிலும் இல்லாத ஒருவர் அரசாங்கம் கேட்பதற்கு மேலேயே போய், மத்திய அரசில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் கட்சியைச் சார்ந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக போய்ப் பார்த்தார், அதனால் அரிசி தந்தார்கள் என்று சொல்லுகிற அப்பட்டமான உண்மைக்கு மாறான செய்தியைத் தான் இந்த மன்றத்தில் பேசுகிற எனக்கு மகிழ்ச்சியைத் தரும் செய்தியாகச் சொன்னேன். உதட்டிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் மகிழ்ச்சியைத் தராத அந்தச் செய்தியைப் பகிர்ந்து கொள்ள அந்தக் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் இங்கே யாரும் இல்லையே என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது.

ஒன்றை மட்டும் நான் இங்கே தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற நாம் எல்லோரும் ஒன்றை நன்கு அறிந்திருக்கிறோம். இந்தியா என்ற பெருநாட்டில் பல்வேறு மாநிலங்கள் இருக்கின்றன என்ற உண்மையை மத்திய அரசு எப்போதும் மறந்துவிடுகிறது. அந்த மாநிலங்களில் எல்லாம் மக்கள் வாழ்கிறார்கள் என்பதையும்கூட மைய அரசு மறந்துவிடும். ஆனால் வரி போடும் ஒரே ஒரு நோக்கில் மட்டும்தான் இந்தியா என்பது இமயம் முதல் குமரி வரை பரவியிருக்கிறது என்பதையும், அங்கெல்லாம் மக்கள் வாழ்கிறார்கள் என்பதையும், அவர்கள் மீது நாம் வரி போட வேண்டும் என்பதையும் நினைவில் கொள்கிறார்கள். இப்படி நிதி



1983 மார்ச் 10] [திரு. ஜேப்பியார்]

நிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது மட்டும்தான், மத்திய அரசில் இருப்பவர்கள் இமயத்திலிருந்து குமரி வரை எண்ணிப் பார்க்கிறார்களே தவிர, மற்ற நேரங்களில் அவர்களைப் பொறுத்தவரையில், இந்தியா என்பது ஏதோ டெல்லியில் தான் இருக்கிறது என்றும், அல்லது பக்கத்திலே இருக்கிற உத்திரப் பிரதேசத்திலும் அல்லது இமாசலப் பிரதேசத்திலும் அல்லது பஞ்சாப் அல்லது ஹரியானாவிலும் தான் இருக்கிறது என்ற குறுகிய கண்ணோட்டத்திலேயே இருக்கிறார்கள். தென்நாட்டில் தமிழ் நாடு அல்லது அதற்குப் பக்கத்திலே ஆந்திர மாநிலம் போன்றவை இருக்கின்றன என்ற எண்ணம் வரி போடுகிற நேரத்தை தவிர, மற்ற நேரங்களில் அவர்களுக்கு வருவதே இல்லை என்பதைக் கடந்த கால வரலாறுகளிலிருந்து நாம் பார்த்து வருகிறோம்.

மத்திய அரசு தமிழகத்திற்கு 5000 டன் அரிசி தந்திருக்கிற மகிழ்ச்சியான செய்தி அல்லது திக்கிக்கும் செய்தி இன்றைக்கு வந்திருக்கிறது. சில நேரங்களில் சில கட்சிகள் இங்கே நிற்க முடியாத நேரத்தில் தங்களாலே பேச முடியாத நோக்கில், இன்னொருவர் பலத்தை நாடுவார்கள். அந்த பலத்தைத் தருகிற அந்த நண்பர்கள்கூட தமிழ் நாட்டு மக்களுடைய பிரச்சினைக்காக 5000 டன் அரிசி மட்டும் தந்திருப்பது சரிதானா? இதைக் கொண்டு யாருக்கு எவ்வளவு தர முடியும் என்று எண்ணிப் பார்த்து தட்டிக் கேட்கிற நிலை எதிர்ப் பக்கத்திலே இருந்துகூட வரவில்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகிறபோது, அப்படிப் பேசுவார் என்று நினைக்கிறேன். காரணம் அவர் நல்ல காரியங்களுக்கு ஒத்துழைப்பார். நல்ல செய்திகளை இந்த மாமன்றத்திலே சொல்வார். நல்ல காரியங்களைப்பற்றிச் சொல்லுகிறபோது அவற்றை ஒப்புக் கொள்வார். நான் இப்படிச் சொல்வதால் வேறு விதமாக யாரும் எண்ணிவிடக் கூடாது. அவருடைய நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது, எனக்கு ஒரு மகிழ்ச்சி வருவதுண்டு. அவர்கள் அளித்திருக்கிற 5,000 டன் அரிசியும் 5,000 டன் கோதுமையும் நமக்குத் தேவைதானா? நாம் கேட்ட 80,000 டன் எங்கே அவர்கள் அளித்திருக்கிற 5000 டன் எங்கே? நமக்கிருக்கிற நிலைமை என்ன? இதைக் கொடுத்துவிட்டு நாங்கள் கொடுத்துவிட்டோம் என்று சொல்லி, நம்மைப் பட்டினி போட்டு சாகடிக்க திட்டம் தீட்டுகிறார்கள். இது தேவைதானா என்ற கேள்வியை மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது கேட்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். மாநில சுயாட்சி என்ற
பேசினால் அது வேறு விவகாரமாகிவிடும். மாநிலத்திற்கு அதிக அதிகாரம்
வேண்டும். இன்றையதினம் நாம் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒட்டு
மொத்தமாக சகோதரர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் அனை
வரும் ஒன்றாக இணைந்து வாழ்கிறோம் என்று எண்ணிக்கொண்டு நாம்
நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளாமல், இத்தகைய நியாயமான பிரச்சினைகள்
வருகிறபோது, எதிர்க் கட்சியில் இருப்பவர்கள்கூட அரசாங்கத்தின் குறை
களை மட்டும் எடுத்துச் சொல்லி, தங்களுக்கு விளம்பரத்தைத் தேடிக்கொள்
வதற்கு மாறாக, இது உண்மையான மக்கள் பிரச்சினை, ஆளுபவர்கள்
அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வினராக இருந்தாலும்கூட இது
இந்த நாட்டுப் பிரச்சினை என்று எண்ணி, ஒத்துழைப்பை நல்க வேண்டும்.
நமக்கிருக்கிற உணர்வுகள், நமக்கிருக்கிற எண்ணங்கள் எல்லாம் இந்த நாட்டு
மக்களை வாழ வைக்க வேண்டும் என்பதாகும். அகில இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்
தாலும்கூட, இந்த நேரத்தில் எதிர்க் கட்சிகள் ஆளும் கட்சியைக் குறை
சொல்வதை விட்டுவிட்டு, "எங்களுடைய முதலமைச்சர் கேட்ட 80,000 டன்
என்னவாயிற்று? 5,000 டன் மட்டும் தருகிறீர்களே, இது என்ன நியாயம்?
இந்தியாவின் மத்திய தொகுப்புக்கு தமிழகம் அரிசி தரவில்லை என்ற
காரணத்திற்காக நீங்கள் தர வில்லையா?" என்ற கேள்வியை ஒட்டுமொத்த
மாகக் கேட்க முன்வர வேண்டும். அப்போதுதான் இந்தியத் துணைக்
கண்டத்தை ஆளுகிற மத்திய அரசு நம்மைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கும்.
இப்படி ஒரு நாடு இருக்கிறது, எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சில பிரச்சினை
களில் குரல் கொடுக்கிறார்கள். அவர்கள் மக்கள் பிரச்சினையில் ஒன்றாக
நிற்கிறார்கள். ஒன்றாகக் குரல் கொடுக்கிறார்கள். அவர்களுக்குள்ளே
கருத்து வேற்றுமைகள் இருந்தாலும்கூட, மக்கள் பிரச்சினையைப் பொறுத்த
வரையில், ஒன்றாக இணைகிறார்கள். மத்திய அரசு அவர்களை மதிக்கத்
தவறினால், அவர்கள் ஒன்றாக இணைந்து விடுவார்கள் என்ற உணர்வை
உருவாக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்திலேயிருந்து கேட்டுக்கொள்

(முற்பகல் 11-00)

கிறேன். நமக்குள் பிரச்சினைகள் இருக்கலாம். திருச்செந்தூரில் யார்
இருந்தார்கள்? யார் வெற்றி பெற்றார்கள்? யார் டிப்பாசிட் இழந்தார்கள்?
மக்களால் யார் துரத்தப்பட்டார்கள்? இவைகள் எல்லாம் நடந்து முடிந்த
பிரச்சினைகள். நடக்க இருக்கிற பிரச்சினைகளைச் சொல்ல வேண்டும்.
"நீங்கள் செய்யத் தவறிவிட்டீர்கள்" என்று சொல்லக்கூடும். என் தவறி
விட்டீர்கள் என்று கேட்டால், அதற்கு ஆயிரம் காரணங்களைச் சொல்ல





முடியும். ஆனால் நம்முடைய எண்ணம் இந்த மாநிலம் இருக்க வேண்டும் என்பது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட 1962 ஆம் ஆண்டிலே சீனா போர் தொடுத்தபோது, அன்றைக்கிருந்த எண்ணங்களை மாற்றி, இந்தியா என்ற ஒரு நாடு இருந்தால்தான், நாம் கேட்க முடியும் என்று சொன்னார்கள். அதைப் போலவே இன்றைக்கு நம்மைப் புறக்கணிக்கிறபோது, என் உள்ளத்திலே எழுகிற சந்தேகத்தைக் கேட்க விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டிலே ஒரு பிரச்சினை இருந்தது. காங்கிரஸ் கட்சி தமிழகத்தை ஆண்டபோது அரிசிப் பஞ்சம் வந்தது. அரிசிப் பஞ்சம் வந்ததன் காரணமாக அந்த அதிகார வர்க்கம் மாற்றப்பட்டது என்று விவரம் தெரியாத சில பேர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரிசி போட மறந்த காங்கிரஸ் இயக்கம் அப்போது மறைந்ததைப் போலவே அண்ணா தி.மு. காவிற்குச் சோதனை வந்தால், அதன் மூலம் இலாபம் பெற முடியும் என்று விவரம் புரியாதவர்கள், மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள், எங்கே சென்றாலும் டிப்பாசிட்டை இழக்கக் கூடியவர்கள் கருதிய காரணத்தால்தான், இந்த எண்ணம் டில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்ட காரணத்தால்தான், இப்படிப்பட்ட சூழ்நிலை மைய அரசுக்கு உருவாகியிருக்கிறதோ என்ற எண்ணம் என் நெஞ்சிலே எழுகிறது. அப்படிப் பட்டதொரு சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று கனவு கண்டால், அவர்கள் எல்லாம் சென்னையிலே உள்ள கீழ்ப்பாக்கம், திருவனந்தபுரத்தில் உள்ள ஊளம்பாறை போன்ற இடங்களுக்குத்தான் போக வேண்டுமே ஒழிய இது போன்ற மாமன்றத்தில் இருக்கமாட்டார்கள் என்று . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வேறு மாநிலத்தில் சேர்த்துக் கொள்வமாட்டார்கள் என்று நினைக்கிறாரோ!

திரு. ஜேப்பியார் : வேறு மாநிலத்தில் சேர்க்கிறார்கள் என்றாலும் தமிழகத்திலே சேர்க்கப் போவதில்லை. அதுதான் என்னுடைய எண்ணம். எதிர்க் கட்சியாக இருப்பவர்கள் தமிழக மக்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில், மகுடி வித்தை காட்டி மக்களை தங்கள் பக்கம் இழுக்க வேண்டும் என்பதற்காக வேறு கருத்துக்களைச் சொல்லி திசை திருப்பிவிட வேண்டாம் என்று இந்த மன்றத்தின் மூலமாக அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையை எந்தப் பக்கம் திருப்பினாலும், நல்ல பக்கம்தான், பொன் எழுத்துக்களாக அமைந்திருக்கின்றன. வரிக்கு வரி படிக்கலாம். "மாநில சுயாட்சி" என்று சில பேர் மார்தட்டிய காலம் உண்டு. பிறகு

[திரு. ஜேப்பியார்] [1983 மார்ச் 10

மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று மார் தட்டிய காலம் உண்டு. ஆனால் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மைய அரசு நசுக்கப் பார்க்குமானால், அதைத் தடுத்து நிறுத்துகிற கேடயங்களாக நாம் அனைவரும் ஒன்றாகச் சேருவோம். இங்குள்ள பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவோம். ஆனால் நம்மைப் புறக்கணிக்கிற எண்ணம் மைய அரசுக்கு வந்தால், அதற்கு ஒரு சந்தர்ப்பம் தந்துவிடக் கூடாது என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் அரசின் நல்ல முடிவுகளை ஆதரிப்பவர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சபையில் அன்றைக்குத் தெரிவித்தபோது அவரும் இரண்டறக் கலந்த அந்தக் காட்சி தமிழக மக்களுடைய எண்ண அலைகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. மக்களுடைய அந்த எண்ணத்தை விரிவுபடுத்த வேண்டும், மதிக்க வேண்டும். "மைய அரசு நம்மைப் புறக்கணிக்கும்போது நீங்கள் எங்களுக்குத் துணையாக வாருங்கள்" என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேயுள்ள சில பிரச்சினைகள்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். பெரும் பிரச்சினைகளைப்பற்றி அவர்கள் மறுத்துவிட்டால், அதைக் கண்டிக்கவில்லையென்றால், கடைசியாக நம்மையே அது மறந்துவிடும் என்று நாங்கள் கொண்டிருக்கிற எண்ணத்தை எதிர் கட்சியினரும் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வெவ்வேறு அமைப்புகளைக் கொண்டவர்கள் வெவ்வேறாகப் போவதைவிட ஒட்டுமொத்தமாக தமிழக மக்களுக்குத் தேவையானவற்றைப் பேசும்போது, சில நன்மைகள் ஏற்படும். காவிரி நீர்ப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகின்றபோது, "ஆளுகிற நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்கிறவர்கள் அவர்கள் ஆண்ட காலத்திலே என்ன செய்தார்கள் என்று கேட்டால், "எங்களைக் கேட்கக் கூடாது. நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும்" என்று சில பேர் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். 1974ஆம் ஆண்டில் ஒப்பந்தம் காலாவதியானபோது, ஆளும் கட்சி சார்பில் வழக்கைத் தொடர்ந்ததும், அதைப் பின்னாலே திரும்பப் பெற்ற வரலாறும் மக்களாலே மறந்துவிடக் கூடியதல்ல. அதற்காக நான் யாரையும் தவறு சொல்லவில்லை. என் திரும்பப் பெற்றார்கள்? பேச்சுவார்த்தையில் அவர்கள் தந்த வாக்குறுதியை நம்பி, அந்த முடிவை எடுத்தோம் என்று சொல்லுவதற்கு முன்வருகிறார்களா? அப்படிச் சொன்னால், அந்த வாக்குறுதியை முன் வைத்து இப்போது நாங்கள் போராட முடியும். அவர்கள் ஆண்ட நேரத்தில், காவிரிப் பிரச்சினை



1983 மார்ச் 10] [திரு. ஜேப்பியார்]

சம்பந்தமான ஒப்பந்தம் காலாவதியான நேரத்தில், அதைச் செய்ய மறந்துவிட்டார்கள். அதற்காக எடுத்த முயற்சிகளை காலால் தோண்டிப் புதைத்துவிட்டார்கள்.

அதைப் போலவேதான் இன்னுமொரு பிரச்சினையிலும் நடந்திருக்கிறார்கள். சென்னையிலே தீவுத் திடலில் அரசு நிகழ்ச்சிகளை நடத்துவது வழக்கம். அது வெட்ட வெளிச்சமாக இருந்ததால், சென்னைக்கே காற்று வந்து கொண்டிருந்தது. அதை பாதுகாப்புத் துறைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வந்தபோது அன்றைக்கு இருந்தவர்கள் வழக்கு தொடர்ந்தார்கள். அதிலும் ஆளும் கட்சி வழக்கு மன்றத்திலிருந்து வழக்கைத் திரும்பப் பெற்றது. அந்த வழக்கைத் திரும்பப் பெற்றது என்ன நோக்கத்தோடு என்று நாட்டிற்குச் சொன்னதுண்டா? காவிரி நீர்ப் பிரச்சினையைப்பற்றி நாட்டுக்குத் தெளிவாக்குங்கள் என்று எதிர்க் கட்சியைக் கேட்டுக்கொள்கிறேன். "நாங்கள் இருந்தபோது இப்படிக் கேட்டோம்" என்ற விவரத்தை தயவு செய்து சொல்லவேண்டும். அப்படிக் கேட்டபோது அந்த மாநிலத்தில் இருந்தவர்கள் தண்ணீர் தருகிறோம் என்று அளித்த வாக்குறுதியைச் சொன்னால், இன்றைக்கு அவர்களைக் கேட்க வேண்டிய கேள்வியாக அது இருக்கும். "நீங்கள் கேட்டீர்கள்" என்பதற்காக நாங்கள் ஒதுக்கிவிடும் பிரச்சினையாக காவிரி நீர்ப் பிரச்சினை இருக்க முடியாது. ஆனால் இதை திசை திருப்ப வேண்டாம். காவிரித் தண்ணீர் வரவில்லை. அதற்கு இந்த அரசு காரணம் என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது, பெங்களூரில் ஒரு முறை சொன்னார்கள். அங்கே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்ட போது, அன்றைக்கிருந்த முதலமைச்சரை, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் சந்தித்தபோது, இதே மாமன்றத்திலேயே கேட்டார்கள். அப்போது "யார் இவர்? இவர் கேட்பதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது? ஆட்சிக் கட்டிலா இருக்கிறார்? இவர் எப்படிக் கேட்கலாம்?" என்று விமர்சிக்கப்பட்டார். அதற்குப் பின்னாலே இப்போது தண்ணீர் வரவில்லை என்றால், ஆளும் கட்சித் தரப்பிலே என்ன செய்தார்கள் என்று இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் கேட்டால், இவர் யார் கேட்க என்று நாங்கள் கேட்பதில்லை. தண்ணீர் வந்தால் தமிழகத்திற்குத்தானே வருகிறது. தனி நபர் வீட்டுக்குப் போகவில்லையே என்று எண்ணுகிற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. அதைப் போலவே நாங்கள் ஜெயிப்போம் என்று பேசுகின்ற கட்சி இருக்கிறது. 1967-லே இல்லாமல் ஆக்கப்பட்ட கட்சி. இன்றைக்கு ஒரு கார்ட்டூனைப் பார்த்தேன். அதனாலேதான் பேசுகிறேன். அதிலே பெரியகுளத்திலே சட்டை அவிழ்க்கப்

[திரு. ஜேப்பியார்] [1983 மார்ச் 10

பட்டதாகவும், திருச்செந்தூரிலே வேஷ்டி அவிழ்க்கப்பட்டதாகவும் போட்டி
ருந்தது. அனிதப் பார்த்ததால்தான் பேசுகிறேன். இப்படிப் பேசுவதால்
பாராளுமன்ற வார்த்தைக்கு அப்பாற்பட்டது என்று கருத வேண்டாம்.
சட்டையையும் கழற்றி, வேட்டியையும் இழந்து நடுத்தெருவில் ஓடுகிற கட்சி
தண்ணீர் கேட்டு வருகிறது என்ற செய்தி வந்திருக்கிறது. அவையில் இல்
லாத அவருடைய பெயரைச் சொல்ல முடியவில்லை. அவர்கள் கட்சி ஆண்ட
நேரத்தில் கேட்டார்கள். டெலிவிஷனில்கூட படம் பிடித்துக் காட்டினார்கள்.
இவர்கள் தண்ணீர் கேட்டவுடனே தருவதாகச் சொன்னார்கள். , சொல்லி
நான்கைந்து மாதங்கள் வரைக்கும் பதில் வரவில்லை.

(முற்பகல் 11-10)

ஏறத்தாழ அந்த நிலை இருக்கிறது. 50-லே சிதறிப்போய், சின்னா
பின்னப்பட்டுப்போய், இன்றைக்கு எங்கே இருக்கிறது என்று தெரியாமல்
இருக்கிறது. மத்திய அரசின் கையில் இருப்பதன் காரணமாக மத்திய
அரசைக் காட்டி மிரட்டுகிறார்களா ? மத்திய அரசின் கட்சியின் அங்கம்
வகிப்பதாலேயே இந்த டெலிவிஷன் அவர்களுக்குச் சொந்தமாக ஆகிவிடுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தொலைக் காட்சிபற்றிப் பேசுகின்றபோது, 'பொய்' என்ற வார்த்தையைச்
சொன்னார்கள். அது பார்லிமெண்டரி மரபு அல்ல. 'உண்மைக்கு
மாறானது' என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வது உறுப்
பினருக்கும் திருப்தி தரும். அந்தப் பொருள் அதில் வந்துவிடுகிறது.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : பொய் பேசினார் என்று சபையிலே
சொன்னால்தான் பிரச்சினை, பிரிவிலெஜ் வரும். வெளியிலே எவ்வளவு
பேசலாம். பொய் பேசினதாகச் சொல்லலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாம் அந்த மரபைக் கடைப்
பிடிப்போம். அதனால் என்ன வந்துவிடப்போகிறது ?

திரு. ஜேப்பியார் : தலைவர் அவர்கள் சொன்னதுபோல் உண்மைக்குப்
புறம்பாக என்றே சொல்கிறேன். நம்மால் மதிக்கப்பட வேண்டியவர்கள்
அந்த அளவுக்கு உயர்ந்தவர்கள், அவர்களைப்பற்றிப் பேசுகின்றபோது, இந்த
உயர்ந்த வார்த்தைகளை நான் பேசியாகவேண்டும் என்ற நிலை வருகிறது.
அது காலத்தின் கட்டாயம். பொய்மை என்ற வார்த்தையை வைத்துக்
கொள்ளலாம். அதுவும் அந்தப் பொருளுடையதுதான்.



1983 மார்ச 10]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இருந்தாலும் 'உண்மைக்கு மாறான' என்று சொன்னால் போதும்.

திரு. ஜேப்பியார் : தொலைக் காட்சி நிலையத்தைப்பற்றிச் சொல்கின்ற போது . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் சொன்னதால்,, உறுப்பினர் அவர்கள் அதையே திரும்பப் பேசவேண்டுமென்று சொல்லவில்லை.

திரு. ஜேப்பியார் : தொலைக் காட்சி நிலையத்தைப்பற்றிச் சொல்கின்ற போது, எல்லோருடைய மனதிலும் ஒரு எண்ணம் வரும். அது தொலைக் காட்சியா, கொலைக் காட்சியா என்றெல்லாம் விமர்சிக்கப்படுகின்ற அளவுக்கு வரும். அந்தத் தொலைக் காட்சி நிலையம் பற்றி பல பேர்கள் பேசலாம். அந்தத் தொலைக் காட்சி நிலையம் இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் எப்படி இருக்கிறது ? ஒரு நாட்டினுடைய முதலமைச்சர் மக்களால், பல கோடிக்கணக்கான மக்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு முறை, 'நீங்கள் இல்லை என்று சொன்னபோதுகூட', "நீங்கள் யார் சொல்வது, நாங்கள் இருக்கிறோம்" என்று உறுதிப்படுத்தி, அவர்களைச் சென்று பார்த்து, பேசினார்கள். அதுபற்றி பத்திரிகையிலே வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். நிலைமைகளை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதன்காரணமாக "நாங்கள் தருகிறோம்" என்று சொன்னார்கள். அதுவும் 'தமிழகத்திற்கு' என்று சொன்னார்கள் இந்தப் பேச்சின் காரணமாக நிறைய தந்திருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது, தொலைக் காட்சி நிலையம் 'உண்மைக்குப் புறம்பான' செய்தியை வெளியிட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'உண்மைக்குப் புறம்பான' என்கிறார் ரொம்ப சரி.

திரு. ஜேப்பியார் : அதைப்பற்றி எண்ணுகின்றபோது, நான் உள்ள படியே இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்கிறேன். நான் வேதனைப் படுகிறேன். எனக்கு இருக்கின்ற ஆதங்கம் எல்லாம், தொலைக் காட்சி நிலையம் என்பது இந்த நிலையிலே இருக்கின்றதே என்பதுதான். சில நேரங்களிலே ஒரு கட்சி சில விமர்சனங்களைப் பண்ணும். அந்தக் கட்சியின் பெயரைச் சொல்வது தவறல்ல. அது காங்கிரஸ் கட்சி. அது ஆளுநரிடம் ஒரு மகஜர் தரச் செல்கிறது. நான் அதன் விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. ஒரு உதாரணம் சொல்கிறேன். உண்மைக்குப் புறம்பாகச்

[திரு. ஜேப்பியார்] [1983 மார்ச் 10

சொல்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். ஆளுநரிடம் மகஜர் புறப்படுகிறது. அது எவ்வளவுதூரம் என்று நமக்குத் தெரியும். எவ்வளவு பேர் என்பது நமக்குத் தெரியும். அதுவும் எங்கிருந்து கொண்டு வந்தார்கள் என்பதும் நமக்குத் தெரியும் அவர்கள் கூடுகின்ற இடத்திலிருந்து மகஜரைக் கொண்டு போய் ஆளுநரிடம் தருகின்ற வரைக்கும், நாம் எல்லோரும் தருகின்ற வரிப்பணத்திலேயிருந்து வாங்கப்படுகின்ற அந்த பிலிம், ஆரம்பத்திலே இருந்து முடிகின்ற வரைக்கும் நாட்டிற்குக் காட்டப் படுகிறது என்றால், அதற்கு இருக்கின்ற கொள்கை, அதற்கு இருக்கின்ற பித்தலாட்டம் என்னென்ன என்று பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே ஒப்புக்கொண்டார்கள். நான் சொன்னதை ஒப்புக்கொண்டாகிவிட்டது. அதன் பிறகு இப்படிப் பேசுவது எப்படி சரியாகும்? அது சரிதானா?

**திரு. ஜேப்பியார் :** அதைத் தொடர்ந்த வார்த்தை பொய்மை என்பது. பொய்மை என்பது ஒன்றும் தவறான வார்த்தை இல்லை என்று கருது கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருக்குறளில் இருக்கின்றது.

‘வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றும்
தீமையிலாது சொலல்’

என்று இருக்கிறது.

**திரு. ஜேப்பியார் :** திருவள்ளுவரே பொய்மை பற்றிச் சொல்லியிருக் கிறார்கள். பொய்மையாக . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதற்கு ஏன் சும்மா பொய் பொய் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்? பேச்சில் முடிவுக்கு வர வேண்டும்.

**திரு. ஜேப்பியார் :** அதற்கு இருக்கின்ற வெறித்தனமான ஒரு எண்ணம் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கண்டிக்கத்தக்க ஒன்றாகும். இப்படிப்பட்ட தவறான காரணங்களைச் சொல்வது என்பது உண்மையிலேயே வருந்தத் தக்கதாகும். அப்படித்தான் நான் அதை எடுத்துக்கொள்கிறேன். இன்னும் சொல்கிறேன். இந்த மாமன்றத்திலே நிகழ்ச்சிகள் நடக்கின்றன. செய்தி எடுப்பதற்கு என்று பிலிம் வாங்கிவிட்டு, அதை வெளியிலே விற்றுவிட்டு



1983 மார்ச் 10] [திரு. ஜேப்பியார்]

எத்தனை பேர் இங்கு வராமல் இருக்கிறார்கள்? அதைப்பற்றிய விவரங்களை அவை கேட்டால், நான் தரத் தயாராக இருக்கிறேன். இங்கே வருகிறோம் என்று சொல்லிவிட்டு, ப்ரைவேட் டாக்சியில் வந்ததாகச் சொல்லிவிட்டு பணம் ‘கிளெய்ம்’ பண்ணுகிறார்கள். மேல் சபைக்குப் போனேன் என்று சொல்லிவிட்டு, அரசின் பணம் பெறுகின்றார்கள் என்பதும் தெரிகிறது. நான் தெளிவாகச் சொல்கிறேன். அந்தக் கட்சியைப் பற்றி, ஆளாத கட்சியைப் பற்றி, இங்கே ஒரு கூட்டமாக இருக்கின்ற கட்சியைப் பற்றி, மக்களாலே ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு கட்சியைப் பற்றிப் படம் எடுத்துக்காட்டுகின்றார்கள். அந்த நிலைக்கு சூழ்நிலைகளை உருவாக்கியிருக்கிறது. அதுவும் இந்த நாட்டிற்கு என்று இருக்கின்ற அந்த டெலிவிஷனில் யாரோ ஒரு அம்மையார் பார்த்தார்களாம், அப்படிப் பார்த்தவுடனே மனம் இறங்குகிறது, அந்த அமைச்சருக்கு மனம் இறங்கி அதன் காரணமாக ஒரு 5 ஆயிரம் டன் அரிசியைக் கொடுத்தார்களாம். இது நம்பக்கூடிய விஷயமா? அவர்கள் கேட்டுத்தான் அரிசி வந்தது என்றால், அந்த அரிசி தேவையில்லை. இந்த மன்றத்தின் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் கேட்கட்டும். ஆனால் அவர்கள் கேட்டுத்தான் அரிசி வந்தால், அந்த அரிசி தேவையில்லை. “முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள், அதனால் நாங்கள் தந்தோம்” என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** முந்திய உறுப்பினர்கள் பேசுகின்றபோது, யார் கேட்டு தண்ணீர் வந்தாலும் இந்த நாட்டிற்குத்தான் பயன்படுத்து கிறோம் என்று பெருந்தன்மையோடு சொன்னார்கள். ஆனால் நாங்கள் கேட்ட அரிசி “இப்போது எங்களுக்கு வேண்டாம்” என்று சொல் கின்றார்களே அது எந்த அளவுக்கு ஏற்புடையது என்று அறிய விரும்பு கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** ஏற்கெனவே பத்திரிகைகளிலே வந்த குறிப்பை வைத்துப் பேசிக்கொண்டிருக்கிறேன். மத்திய அரசு தெளிவாகச் சொல்லிற்று. முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலைமைகளை எடுத்துச் சொன்னதற்கு இணங்க இந்த அரசுக்குத் தந்திருக்கிறோம் என்று மத்திய அரசினுடைய பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் அதிகாரபூர்வமாக தெரிவித்த செய்தியைத்தான் உண்மைக்குப் புறம்பாக தொலைக்காட்சி நிலையத்திலே காட்டியிருக்கிறார்கள். அப்படித்தான் வந்தது என்று சொன்னதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். அப்படி

[திரு. ஜேப்பியார்] [1983 மார்ச் 10

வந்த அரிசி நமக்கு வேண்டாம். நமக்கு என்று தரப்பட்ட அரிசிதான் நமக்கு வேண்டும். உறுப்பினர் அவர்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. யார் கேட்டு தண்ணீர் வந்தாலும், அது தமிழ் நாட்டிற்குத் தானே. அதுபோல அரிசி யார் கேட்டு வந்தாலும், அது தமிழ் நாட்டிற்குத் தானே வருகிறது என்றால், நான் பெருமையடைவேன். மத்திய அரசுக் கட்சியைச் சார்ந்த ஒருவர் இங்கேயிருந்து சென்று அவர்கள் கேட்டுத்தான் அரிசி கொடுத்தோம் என்று தவறான அரசியல் கண்ணோட்டத்தோடு பேசப்பட்ட செய்தியை வைத்துத்தான் பேசுகிறேன். அப்படி வந்த அரிசி வேண்டாம். தமிழ கத்தின் 4½ கோடி மக்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற, புரட்சித் தலைவர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டதற் கிணங்க இந்த அரிசி வந்தது. வாங்கினார்கள். வாங்கவில்லை என்பது வேறு விஷயம். ஆனால் அதை அரசியல் ஆக்கவேண்டாம். அரசியல் ரீதியாக இது நடைபெறும் என்றால், அதைத் தலை மேல் சுமக்கத் தயாராக இருக்கிறோம். ஒரு கட்சிக்கு விளம்பரம் வரவேண்டும் என்று செய்கிறார்கள். ஒரு கட்சிதான் எல்லாவற்றையும் நடத்த முடியும் என்று எண்ணம் இருந்தால், அது உண்மையாகவே கண்டிக்கத்தக்க நிகழ்ச்சியாகும் என்பதைத்தான் இந்த மாமன்றத்தின் மூலமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : உறுப்பினர் அவர்களுக்கு, வேறு யாரும் பேச இல்லாததால், நிறைய சந்தர்ப்பம் இருக்கின்றது. அந்தக் காரணத்தினால் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்காக எப்போதும் பேசிக் கொண்டே இருக்க முடியுமா ?

திரு. ஜேப்பியார் : நிதிநிலை அறிக்கைப்பற்றி நான் ஒன்று சொல்கிறேன். இதிலே முக்கியமானது வரி. வரி போடுகிறபோதுதான் இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிறோம் என்ற நினைப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்று கருதுகிறேன். வரி போடுகின்ற நேரத்திலே மட்டும்தான் அவர்கள் மாநிலங்களை நினைக்கிறார்கள். மற்ற நேரங்களிலே மாநிலங்கள் இருக் கின்றனவா, அங்கே என்ன நடக்கிறது என்று நினைப்பதில்லை. அவர்களுக்கு எப்படி உதவி செய்வது என்று நினைப்பதில்லை. கேட்டாலொழிய கொடுப் பதாக இல்லை. ஆகவே கேட்கின்ற இடத்தில் ஒன்றாக இணைவோம், உரிமைகளை விட்டுவிடாமல் கேட்போம். சோதனைகள் வரவேண்டு மென்று விட்டுவிட்டு, அந்தச் சோதனைகளிலே வெற்றி பெற வாய்ப்பு



1983 மார்ச் 10] [திரு. ஜேப்பியார்]

கிடைக்கும் என்று கனா கண்டுகொண்டிருக்க வேண்டாம். அப்படிப்பட்ட அவர்களுடைய கனவுகளையெல்லாம் காலிலே மிதிக்கின்ற ஒரு சந்தர்ப்பம் வரும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நமக்குத் தேவையான உணவு, நமக்குத் தேவையான உரிமைகளை, நமக்குத் தேவையான தண்ணீரை, மின்சார உற்பத்தி செய்வதற்குத் தேவையானவைகளைப் பெற மத்திய அரசை அணுகுவதற்கு நாம் எல்லோரும் ஒன்றாக இணைவோம் என்று கேட்டு, நான் அமைகிறேன்.

(முற்பகல் 11.20)

செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக் களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டும், அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டும் பருவ மழை பொய்த்துப் போனதன் காரணமாக ஏற்பட்ட இடர்ப் பாடுகளை தமிழக அரசு சமாளித்து, மக்களின் துயரத்தை நீக்கிட எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பார்கள் என நான் நம்புகிறேன். இது தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பெரிய பிரச்சினை. மக்களும், மற்ற கட்சிகளும் அரசோடு ஒத்துழைக்க வேண்டும். அரசை 'கிரிட்டிசைஸ்' மட்டும் செய்துகொண்டிராமல், எந்தெந்த வகையில் அரசு மக்களுக்கு உதவ ஆர்வம் காட்டுகிறதோ அவற்றில் எல்லாம் உதவினால் நிச்சயமாக இன்று ஏற்பட்டுள்ள பலவகையான கஷ்டங்களை—தண்ணீர் பஞ்சம், உணவுப் பஞ்சம், மின்சாரப் பற்றாக்குறை—எல்லாம் சுலபமாக அரசால் சமாளிக்க முடியும். பொது மக்களும் இதனால் பயனடை வார்கள். ஆகையால் அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும் வகையில் அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசும் தமிழகத்தில் இருப்பவர்களும் இந்திய மக்கள்தான் என்று எண்ணி, இவர்களுடைய துன்பத்தை, துயரைக் களைய அவர்களால் இயன்ற அளவிற்கு உதவ வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய நெருக்கடியிலும் தமிழக அரசு 67 லட்சம் குழந்தைகளுக்கும் 2 லட்சம் முதியோர்களுக்கும் சத்துணவு வழங்கும் திட்டத்தை வெற்றி கரமாக செயல்படுத்தி வருவதை நான் வரவேற்கிறேன். இன்னும் அதிக படியான முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டும். விதவை களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நான்

கேட்டுக்கொள்கிறேன். முதியோர்கள் இன்றைக்கு அதிகமாக இருக்
கிறார்கள். முக்கியமாக அதிகமான பெண்கள் இருக்கிறார்கள். 1978 ஆம்
ஆண்டிலிருந்து முதியோருக்குக் கொடுக்கும் உதவித் தொகையை அரசு
ஓராண்டிற்கு நிறுத்தி வைத்திருக்கிறது. அதை விரிவுபடுத்தி, அநேக
முதியோர்கள் பயனடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். குழந்தைகளுக்கு 7 நாட்களும் சமைத்துப் போடுவது
என்பது எல்லா வகையிலும் சிரமமாக இருப்பதால், வாரத்திற்கு ஒரு நாள்
அல்லது 2 நாட்கள் அந்தக் குழந்தைகளுக்கு ரொட்டியும், முட்டையும்
கொடுத்தால் சமைப்பவர்களுக்கு ஓய்வும், குழந்தைகளுக்கு உணவில்
மாற்றமும், அரசுக்கு இதனால் பணச் செலவு குறைவும் ஏற்படும் என்பதை
நான் பல முறை கூறியிருக்கிறேன். பலரும் இங்கே அதைக் கூறியிருக்
கிறார்கள். ஆகையால் முதல்வர் அவர்கள் இதனை ஏற்றால், பல
வகைகளிலே பயன் பெறலாமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிந்த பிரிவைச் சேர்ந்தவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த
கடன் வழங்க கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து முன்வருவதை நான்
வரவேற்கிறேன். கிராமங்களில் மட்டுமல்லாமல், நகர்ப்புறங்களில் உள்ளவர்
களுக்கு, முக்கியமாகப் பெண்களுக்கு இந்தக் கடனை வழங்கி, அவர்களுக்கு
சுய வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். முக்கியமாக நகரங்களில் ரிக்ஷா
இழுப்பவர்கள், கட்டை வண்டி இழுப்பவர்கள் ஆகியோர்களின் மனைவி
மார்கள் வேலையில்லாமல், தெருக்களிலே அமர்ந்திருப்பதைப் பார்க்கிறேன்.
கூட்டுறவு வங்கிகளின் மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுத்து. சுய வேலை
வாய்ப்புத் திட்டத்தை அமுல் படுத்தினால், அவர்கள் அதனால் பலனடைய்
வார்கள். வீதிகளிலே வசிக்கும் அவர்கள் நிறைய குழந்தைகளோடு
இருக்கிறார்கள். ஒரு ஆண் சம்பாதித்து வருவது, அவர்களுக்குப் போதிய
உணவுகூட கொடுக்க முடியாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட பெண்
களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கூட்டுறவு சங்கங்களின் மூலம்
கடன் அளித்தால், நலமாக இருக்கும். அவர்கள் தோசை முதலிய பண்டங்
களைச் செய்து விற்க முதலீடு 30 ரூபாய் இருந்தால், அதை வைத்து





சமாளித்துக்கொள்வோமென்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். சிலர் உணவைத் தயாரித்துக் கொடுக்கிறார்கள். அதற்கான முதல் இல்லாமல் அவர்கள் துன்புறுகிறார்கள். இம்மாதிரி வீதி ஓரங்களில் இருக்கும் ஏழைகளுக்கு உதவித் தொகையைக் கொடுத்தால், அவர்களுக்கு மிகவும் நன்மையாக இருக்கும். இன்றைக்கு அநேகம் பேர்கள் கிராமங்களிலிருந்து சென்னை நகருக்கு வருகிறார்கள். பல நல்ல திட்டங்களைத் தீட்டி வரும் இந்த அரசு, அந்த மக்களுக்காகவும் நல்லதொரு திட்டத்தைத் தீட்டி, அவர்கள் சுய வேலை வாய்ப்பு அடையும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சோம்பேறிகளாக இருந்து, தெருச் சண்டைகள் போடுவதைத் தவிர்க்க இந்த அரசு முன்வர வேண்டும். வீட்டு வசதியும் நகர்ப்பகுதி வளர்ச்சியும் என்ற தலைப்பின்கீழ், இந்த நிதியாண்டில் குடிசைப் பகுதி சீரமைப்பு விரிவுத் திட்டத்தில் 12,000 குடும்பங்கள் பயனடையும் என்பதை வரவேற்கிறேன். ஆசிரியர்களுக்கு என தனி வீட்டு வசதி வாரியம் அமைத்து, அனைத்து ஆசிரியர்களுக்கும் குடியிருப்பு வசதிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

கல்வி அமைச்சரவர்கள் இப்போது கூறியதுபோல, கிராமங்களிலே பணி புரியும் ஆசிரியர்கள் வீட்டு வசதியில்லாமல் மிகவும் துன்பப்படுகிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வீடுகள் கிடைக்காமல் இருக்கிறதென்று அவர்கள் என்னிடம் முறையிட்டிருக்கிறார்கள். ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பணியில் வந்து சேர்ந்த பிறகு, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தைப் பார்த்து அவர்கள் எந்த வகுப்பைச் (கேஸ்ட்) சேர்ந்தவர்கள் என்று அறிந்து கொண்டு, அந்த கிராமத்தில் அவர்களைப் பல தொல்லைகளுக்கு உள்ளாக்கும் நிலை இன்றும் இருக்கிறது. அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல், இன்னும் கிராமப்புறங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வசதி செய்து தர வேண்டும். அநேகமாக கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்கு நிலம் பரவலாக இருக்கிறது. பள்ளி ஒரு புறம் இருக்கும். அதனை ஒட்டி நிலப்பரப்பு இருக்கும். அப்படிப்பட்ட இடங்களிலே, அந்த நிலத்தை ஆசிரியர்களுக்குக் கொடுத்து, அவர்களை அதில் சொந்தமாக வீடுகளைக் கட்டிக் கொள்ளச் சொல்ல வேண்டும்.

[செல்வி ஆ. லீலாவதி] [1983 மார்ச் 10

ஆசிரியர்களுக்கு வேலை மாற்றம் என்று சொல்லும்போது, அவர்கள் அங்கே
வீடு கட்டிக் கொள்ளலாமென்ற நிலையில், அந்த மாற்றத்தைப் பொருட்
படுத்தாமல், அங்கே சென்று பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்பது
உறுதியாகத் தெரிகிறது. அதுமட்டுமல்ல, இப்போது வீட்டு வசதி வாரியம்
பொது மக்களுக்கு குலுக்கல் மூலமாக வீடுகளைக் கொடுக்கிறது. இது
வரவேற்கத்தக்கது. ஊழல் ஓரளவிற்கு அங்கே ஒழிக்கப்படும். ஆனால்
குலுக்கலில் விழாமல் பலர் பல முறை அப்ளிகேஷன் வாங்க வேண்டியிருக்
கிறது. அதற்கு ஒவ்வொரு முறையும் 50 ரூபாய் செலவு செய்ய வேண்டி
யிருக்கிறது. இதைத் தவிர்க்க ஒரு முறை அந்த வீடுகளுக்கு அப்ளிகேஷன்
போட்டால், 3 அல்லது 5 குலுக்கல்களில் அவர்கள் கலந்துகொள்ள வாய்ப்பு
உண்டு என்று செய்தால் நலமாக இருக்கும். முன்பு 5 ரூபாயாக இருந்தது.
இப்போது 50 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகையைக்
கொடுத்தால், ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் இது மிகப்
பயனுள்ளதாக இருக்கும்.

குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை அளிப்பது மிக மிக வரவேற்கத்தக்கது.
பல குடும்பங்களில் ஒருவரும் வேலை செய்யாமல் இருப்பது மிக வேதனைக்
குரியதாக இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அதை நான்
பாராட்டுகிறேன். எவ்வாறாகிலும் அதைச் செயல்படுத்திவிட்டால், தமிழக
அரசின் பெருமை நிரந்தரமாக நிலைத்துவிடும் என்பது யாரும் மறுக்க

(முற்பகல் 11-30)

முடியாத உண்மையாகும். குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பினை
அளிக்கப்போவதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். இது எல்லாப்
பொதுமக்களாலும் வரவேற்கத் தக்க ஒரு திட்டம். இது சம்பந்தமாக
உடனடியாக அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்து திட்டத்தைச் செயல்
படுத்த வேண்டும்.

அடுத்து, வேலைவாய்ப்பகத்தில் தங்களுடைய பெயர்களை வேலை
வேண்டி பதிவு செய்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் தங்களுடைய
பெயர்களை 'ரென்யூ' செய்ய முடியாமல் போய்விடுகிறது. அப்படி
கவனக் குறைவால், 10 ஆண்டுகளாக 'ரென்யூ' செய்து கொண்டிருப்பவர்கள்
கூட 'ரென்யூ' செய்யாமல் போய்விட்டால், உடனே அந்த கார்டையும்,
சீனியாரிட்டியையும் ரத்து செய்து விடுகிறார்கள். அப்படி ஒருவர் கவனக்



[[illegible] மார்ச் 10] [செல்வி ஆ. லீலாவதி]

குறைவின் காரணமாக 'ரென்யூ' செய்யாமல் போய்விட்டால், ஒரே
சமயத்தில் அப்படி அவருடைய பெயரை விடுபடச் செய்வதற்கு பதிலாக,
உண்மையில் அவர் வேலையில்லாமல் இருக்கிறாரா இல்லையா என்பதைக்
கண்டறிந்து அவர் மறுபடியும் 'ரென்யூ' செய்வதற்கான வாய்ப்பினை அருள்
கூர்ந்து அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பலர் 10 ஆண்டுகள்,
12 ஆண்டுகள் தங்களுடைய பெயர்களை ஒழுங்காக 'ரென்யூ' செய்து விட்டு
கடைசியில் ஒரு மாதத்தில் பெயரை 'ரென்யூ' செய்யாமல் இருக்கும்போது,
அவர்களுடைய பெயர்களை விட்டு விடுவதால், அவர்கள் 10 ஆண்டுகள்
சீனியாரிட்டியையும் இழக்க வேண்டிய நிலை இருக்கிறது. இதனை அரசு
மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்து, உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர் பதவிகள் 1,250 இன்னும்
பல்வேறு தரப்பட்ட ஆசிரியர் நியமனங்களுக்கு, புதிதாக கல்வித் துறையைப்
பொறுத்தவரையில், வழிவகை செய்திருப்பதற்காக நான் அரசின் செயலை
வரவேற்கிறேன். இது போதுமான அளவாக தற்போது இருந்தாலும்
கூட, இன்னும் அவ்வப்போது இந்த எண்ணிக்கையை ஏற்றிக்கொண்டு வர
வேண்டும். ஏனென்றால் மற்ற துறைகளில் ஒரு வேலையை இரண்டு
மூன்று பேர் செய்கிறார்கள், செய்யவும் முடியும். ஆனால் ஆசிரியப் பணி
அவ்விதம் செய்ய முடியாது. பள்ளிகளில் ஒரு ஆசிரியர் இல்லையென்றால்,
அது மாணவர்களுக்குப் பெருத்த இழப்பாகும். ஏனைய வகுப்புகளும்
அதனால் பாதிக்கப்படும். அதனால் ஆசிரியர் நியமனத்தில் அரசு அதிக
அக்கறை எடுத்துக்கொண்டு அதிகமான ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு
செய்ய வேண்டும்.

அடுத்து, வறட்சியின் காரணமாக ஆசிரியர்கள் எதிர்பார்த்த அளவுக்கு
சலுகைகள் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்திருந்தாலும், அதைக்
கேட்பது எப்படி, கேட்காமல் இருப்பது எப்படி என்கின்ற நிலைமையில்
நான் இருக்கிறேன். அரசுக்கு அதிகமாகச் செலவு இல்லாத ஒருசில
சலுகைகளையாவது அரசு செய்ய வேண்டும்.

அடுத்து, தமிழ் நாட்டிலே 1978 ஆம் ஆண்டுக்கு முன்பு 25 மெட்ரி
குலேஷன் பள்ளிகள் இருந்தன. ஆனால் 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு அது
110 பள்ளிகளாக ஆயின. அடுத்து, 150 பள்ளிகளாக அது ஆக்கப்படும்
என்று கூறப்படுகிறது. அப்பள்ளிகளில் பல்லாயிரக்கணக்கான முழுத்
தகுதி பெற்ற ஆசிரியர்கள் வேலைப் பாதுகாப்பற்ற நிலையில் பென்ஷன்

[செல்வி ஆ. லீலாவதி] [1983 மார்ச் 10

இல்லாத நிலையில், பணிக் கொடை இல்லாத நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் 'ஓரல்' அப்பாயின்ட்மென்ட், 'ஓரல்' ஆகத்தான் டெர்மினேஷனும். ஆகத்தான் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் எம்.ஏ., எம்.காம்., எம்.எல்., படித்துக் கொண்டு, குறைந்த சம்பளத்தில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கு அவர்களுக்கு திடீரென்று ஒரு மாத நோட்டீஸ் கூட கொடுக்காமல் 'நாளை யிலிருந்து உனக்கு வேலையில்லை' என்று நிர்வாகம் சொல்லி, வீட்டுக்கு அனுப்பி விடுகிறது. செயின்ட் தாமஸ் மவுண்டில் ஒரு பள்ளிக்கூடம். ஒட்டுமொத்தமாக அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த ஆசிரியர்களைப் பார்த்து, 'உங்களுக்கு நாளையிலிருந்து வேலையில்லை' என்று அந்த நிர்வாகம் சொல்லியிருக்கிறது. இது நடைபெற்றது போன ஆண்டு. அங்கு பணியாற்றுபவர்களில் அநேகர் பெண்கள். அத்தனை பெண்களும் மிகவும் தவித்துப் போய் பல போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால் நிர்வாகம் தான் செய்தது சரி, தான் செய்தது தான் சரி என்று சொல்லியது. இந்த ஆசிரியர்களால் தான் அந்தப் பள்ளி உயர்ந்தது. அந்தப் பள்ளியில் உள்ள ஒவ்வொரு செங்கல்லும் அந்த ஆசிரியர்களுடைய உழைப்பால் கட்டப்பட்டது. அந்த மலையில் ஏறி 12, 13 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டு தங்களுடைய ரத்தத்தைச் சிந்தி அந்தப் பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டார்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கும் நிலைக்கு அந்தப் பள்ளியைக் கொண்டு வந்தார்கள். அவர்களை ஒரே நாளிலே ஒட்டுமொத்தமாக வேலையிலிருந்து நிறுத்தி விட்டது பள்ளி நிர்வாகம். அவர்கள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வந்து தங்கள் குறைகளைக் கூறினார்கள். அவர்களுடைய குறைகள் அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படுவதாகவும் உடனடியாக அந்த ஆசிரியர்களுக்கு வேறு பள்ளிகளில் பணி கொடுக்கப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித் தார்கள். ஆனால் கல்வித் துறை அதிகாரிகள் அப்படிச் செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள். எந்தச் சட்ட திட்டத்திலும் அப்படி இல்லை என்றும் அவர்களுக்குப் பணிப் பாதுகாப்போ, வேறு வேலையோ கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார்கள்.

அடுத்து, தியாகராய மேல் நிலைப் பள்ளியிலும் இன்றைக்கு அப்படிப் பட்ட ஒரு நிலை தான் இருக்கிறது. அங்கும் பிரச்சினை காரணமாக ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று



1983 மார்ச் 10] [செல்வி ஆ. லீலாவதி]

அந்த நிர்வாகம் பிரின்ஸிபால் மற்றும் 7 ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்தது. அந்த ஆசிரியர்கள் வாரக் கணக்கில், நாட் கணக்கில் வீதியிலே உட்கார்ந்துகொண்டு போராட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அவ்வாறு தற்காலிகமாக வேலை நீக்கம் செய்தது நியாயமில்லை. அங்கு இருக்கின்ற நிர்வாகியின் அராஜகம் காரணமாக, அங்கு இருக்கும் கல்லூரி ஆசிரியர்கள் எல்லோரும் சேர்ந்து 2 மாதங்களாகப் போராட்டம் நடத்தி னார்கள். ஆனால் அந்த நிர்வாகத்தின் தூண்டுதலால் அந்தப் போராட்டத் திற்கு எதிராக ஆசிரியர்களைத் தயார் செய்து எதிர்நீச்சல் போராட்டம் நடத்தினார்கள். ஆகையால் பச்சையப்பன் கல்லூரி நிர்வாகத்தை, டிரஸ்ட் போர்டை எடுத்ததுபோல், இந்த தியாகராய மேல் நிலைப்பள்ளி நிர்வாகத் தையும் அரசே எடுத்து அங்குள்ள ஆசிரியர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நிர்வாகமே ஒரு சில ஆசிரியர்களைத் தன் பக்கம் வைத்துக்கொண்டு அங்குள்ள பள்ளியிலும் கல்லூரியிலும் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடுபவர்களுக்கு எதிராக எதிர்ப் போராட்டங்களையும் கிளர்ச்சிகளையும் செய்வது சரியல்ல. இதை நான் ஏற்கெனவே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நல்ல பல திட்டங்களை ஆசிரியர்கள் நலன் கருதி கொண்டு வந்திருக்கிறார்கள். அரசே ஆசிரியர்களுக்கு பல பாதுகாப்புக்களை முன்வந்து அளித்திருக்கிறது. அதே சமயத்தில் அரசின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய இம் மாதிரியான சில கல்லூரிகளும், பள்ளிகளும் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளின் அராஜகத்தை ஒழிக்க அப்படிப்பட்ட அனைத்துப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். அங்கு பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அனை வருக்கும் அரசே நேரிடையாகச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளில் படிக்கின்ற ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு மாதமும் இவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டு மென்று நிர்ணயித்து விட்டார்கள். இப்பள்ளிகள் தன்னிச்சையாக இயங்கக்கூடியவை. அதாவது 'பீஸ் லெவியிங் ஸ்கூல்ஸ்'. ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளில் ஆடிட் நடைபெறுகிறது. அவர்கள் கணக்குக் கூட காண்பிக்கிறார்கள். ஆனால் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் மாதந்தோறும் மாணவர்களிடமிருந்து 50 ரூபாய் பீஸ்

வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. அப்படி [illegible] பெரும் பணக்காரர்களாக ஆகிக்கொண்டிருக்கிறார்கள். [illegible] பள்ளிகளுக்கு ஆடிட் இல்லை. இப்படி பீஸ் வாங்கினாலும் [illegible] பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கும், முதுகலைப் [illegible] ஆசிரியர்களுக்கும் 400 ரூபாய், 300 ரூபாய் என்று தான் சம்பளம் [illegible] கிறார்கள். எப்படியோ அவர்களை நிர்வாகங்கள் குறைந்த சம்பளம் [illegible] கொடுத்து திருப்தி செய்கின்றன. ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகளில் ஆடிட் [illegible] ஆடிட் செய்த பின்னர் துண்டு விழும் தொகையை அரசே மானியமாகக் கொடுக்கிறது. அங்கு பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் அரசு நிர்ணயித்த சம்பளம், பென்ஷன், கிராஜுவிட்டி ஆகிய சலுகைகள் வழங்கப்படுகின்றன. அம்மாதிரி மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் ஒரு குறிப்பிட்ட சிறிய தொகையை மாதந்தோறும் மாணவர்களிடமிருந்து வாங்கலாமென்று அரசே நிர்ணயிக்க வேண்டும். அப்படி பீஸ் வாங்கியும் துண்டு விழுவதாக ஆடிட் செய்து கண்டுபிடித்தால், அத்தொகையை அரசே கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் அரசின் கட்டுப் பாட்டுக்குள் வரும். இப்போதெல்லாம் சில நேரங்களில் அவர்கள் அரசை எதிர்த்து, அரசுக்கு எதிராக, அரசுக்குக் கட்டுப்படாமல் செயல்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட வாய்ப்பினை அவர்களுக்கு வழங்காமல் இருப்பதற்காக இதனை அரசு உடனடியாகச் செய்ய வேண்டும். மேலும் புதிதாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளைத் தொடங்குவதற்கான அனுமதியை அல்லது உத்தரவை வழங்கும்போது, சில சட்ட திட்டங்களை வகுத்து அவர்களிடமிருந்து அவைகள் குறித்து கையெழுத்தைப் பெற்ற பின்பு தான் வழங்க வேண்டும்.

அடுத்து, மெட்ரிகுலேஷன் பள்ளிகளை ஆய்வு செய்வதற்கு 150 பள்ளிகளுக்கு ஒரே ஒரு இன்ஸ்பெக்டர் தான் இம்மாநிலம் முழுவதற்குமாக, ஸ்டேட்வைட் (State vide) இருக்கிறார். அப்படியில்லாமல் இரண்டு இன்ஸ்

(முற்பகல் 11-40)

பெக்டர்கள் நார்த்துக்கும், சவுத்துக்கும் போட்டு, அவர்கள் சென்று பார்வையிடும் அளவுக்கு காரியங்களைச் செய்ய வேண்டும். வீட்டுவசதி வாரியம் பல இடங்களிலே வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறது. அப்படிக் கட்டிக் கொடுக்கும்போது அரசுப் பள்ளிகளோ, மாநகராட்சிப் பள்ளிகளோ அந்த இடங்களிலே அமைக்கப்படுவதில்லை. அதனால் மெட்ரிகுலேஷன், சி.பி.எஸ்.இ. மற்றும் ஐ.சி.எஸ்.இ. போன்ற பள்ளிகள் அந்த இடங்களில் [illegible]





வருகின்றன. அவர்கள் நல்ல காரியம் செய்தாலும், மாணவர்களுக்கு நல்லமுறையில் படிப்பைக் கொடுத்தாலும், அங்கே எல்லாம் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை. சி.பி.எஸ்.இ., ஐ.சி.எஸ்.இ. பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தேர்வுக் கட்டணத்தை பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் மூலமாக அனுப்பச்செய்து அந்தப் பள்ளிகளை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும். சி.பி.எஸ்.இ., ஐ.சி.எஸ்.இ. பள்ளிகள் இப்போது ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் அவர்கள் தன்னிச்சையாக தமிழகத்திலே இருக்கிறார்கள். அவர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமானால், மாணவர்கள் தேர்வுக் கட்டணத்தை பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் மூலமாகக் கட்ட வேண்டும் என்ற உத்தரவை அரசு பிறப்பித்தால், அவர்கள் ஓரளவுக்கு நாமும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறோம் என்ற எண்ணத்தோடு இருப்பார்கள். ஆகையால் அரசு இம்மாதிரியான பள்ளிகளின் மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு வரும்போது, சில சட்டதிட்டங்களை அமைத்து, அவர்களை தன்னுடைய கன்ட்ரோலில் கொண்டுவர வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், இன்டக்டட் ஆசிரியர்களை unqualified service உள்ள ஆசிரியர்கள் என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே 6 ஆயிரம் ஆசிரியர்கள் unqualified service என்ற அடிப்படையிலே இருந்து அரசுக்குப் பணியாற்றுகிறார்கள். இப்போது அந்த எண்ணிக்கை 5 ஆயிரம் என்ற அளவிற்கு குறைந்திருக்கிறது. இந்த ஆசிரியர்களால்தான் அரசு மேல் நிலைப் பள்ளியைத் துவக்கியது என்பதை யாரும் தயவுசெய்து மறந்துவிடக் கூடாது. மேல் நிலைப் பள்ளி மிகச் சிறந்த முறையில் தமிழகத்திலே செயல்பட்டு வருவது எல்லோரும் அறிந்த உண்மை. அப்படி இருக்கும் போது, இந்த ஆசிரியர்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை வரவேண்டும்? இந்த ஆசிரியர்களைக் கொண்டே மேல் நிலைப் பள்ளிகளைத் திறம்படச் செயல்படச் செய்த அரசு, ஏன் இப்போது அவர்களைப் புறக்கணிக்க வேண்டும்? இந்த 5 ஆயிரம் ஆசிரியர்களும் அவர்கள் எந்தவிதமான சிறப்புப் பயிற்சியும் இல்லாமல் இருந்தும், அவர்கள் ஏற்கெனவே அனுபவத்தின் அடிப்படையிலே தங்களுக்குத் தேவையான பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள். மேலும் கல்வித் துறையே கூட அவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறது. அவர்களை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சமமாகக் கருத வேண்டும். இப்போது பள்ளிகளில் இரண்டு வகையினராக இருப்பதால், அவர்கள் unqualified Teachers என்ற வகையிலே தாழ்வு மனப்பான்மையோடு

பார்க்கப்படுகிறார்கள். அவர்கள் கடந்த 4 ஆண்டுகளாக மாணவர்களைத் தேர்வுக்கு அனுப்பியிருக்கிறார்கள். தேர்விலே வெற்றியினைக் கருதுகிறார்கள். அவர்கள் அன்குவாலிஃபைடாக இருந்தாலும், பல புஸ்தகங்களைப் படித்து தங்களுடைய அறிவுத் திறனை உயர்த்தியிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அந்த ஆசிரியர்களையும் முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குச் சமமாக நடத்த வேண்டும். அப்போதுதான் அந்த ஆசிரியர்களுக்கு இந்த அரசு ஒரு நல்ல காரியத்தைச் செய்தது என்ற வகையில் அமையும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

இப்போது பகுதி நேர ஆசிரியர்களாக எம்.ஏ., எம்.காம். பட்டம் படித்தவர்கள் 150 ரூபாய் சம்பளத்திலே பள்ளிகளிலே பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றுபவர்களுக்கு—அவர்கள் 10-வது வகுப்பு வரைதான் படித்திருக்கிறார்கள்,—அவர்களுக்கும், மற்றும் குழந்தைகளைப் பார்த்துக்கொள்பவர்களுக்கும் மாதம் 150 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் இவர்கள் எம்.ஏ., எம்.காம். பட்டம் படித்தவர்கள் அந்த அளவுக்குச் சம்பளம் பெறும் நிலைமையிலேதான் இருக்கிறார்கள். ஆகவே, இதை மிகவும் அவசரமாகக் கருதி, அரசு அவர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகிதத்தை மாற்றி, அவர்களையும் உயர் பதவியிலே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகளிலேயும், மாவட்டக் கல்வி அலுவலகங்களிலேயும் கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டும். இப்போது ஆசிரியர்களுடைய எண்ணிக்கையும், மாணவர்களுடைய எண்ணிக்கையும் மிகவும் அதிகமாக இருக்கிறது. மேல் நிலைப் பள்ளிகளிலும், மாவட்டக் கல்வி அலுவலகங்களிலும் பணியாளர்கள் அதிகமாக இருந்தால்தான், ஆசிரியர்களுடைய சம்பளம் மற்றும் பல சம்பந்தப்பட்ட காரியங்களை உரிய நேரத்தில் செய்ய வசதியாக இருக்கும். பல இடங்களிலே மாதக்கணக்காக அவர்களுடைய 'இன்கிரிமெண்ட்' போட்டுக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். வேலைப்பளு அதிகமாக இருக்கும் ஆசிரியர்களும் கூட அந்த வேலையோடு இந்தப் பணியும் செய்யும்படி ஈடுபடுத்தப்படுகிறார்கள். அரசு சுய வேலைவாய்ப்பு மூலமாக பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் போது, முதல் முதலாக இந்த மேல் நிலைப் பள்ளிகளிலே பணியாளர்களை நியமிக்க அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





குக்நேவலர்களுக்கு 1—4—1979-ல் ரூ. 200—5—300 என்ற விகிதத்தில் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்களுக்கு 40 ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய ஊதியத்தை 240—5—330 என்ற அளவிலே நிர்ணயம் செய்தால் தான், அவர்கள் ஏற்கெனவே பெற்றுக்கொண்டிருந்த அளவுக்கு பணம் பெறுவார்கள். ஆகவே, அதையும் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளியிலே வேலைநாட்கள் 220 என்று இப்போது செய்யப்பட்டிருக்கிறது. முன்பு 180 நாட்கள்தான் வேலைநாட்களாக இருந்தது. அதற்குப் பிறகு 200 நாட்கள் என்ற வகையில் அது மாற்றப்பட்டது. இப்போது 220 நாட்களாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் உண்மையாகப் பாடம் போதித்தால், அதாவது ஆசிரியர்கள் தங்களுக்கு உள்ள அத்தனை நாட்களும் உண்மையாகப் பாடம் போதித்தால், நிச்சயமாக நோய்வாய்ப்பட்டு விடுவார்கள் என்பது என்னுடைய அனுபவத்திலேயிருந்து தெரிகிறது. தனியார் பள்ளிகளிலே அந்த அளவுக்கு ஆசிரியர்களைக் கசக்கிப் பிழிகிறார்கள். இது அரசுக்கும் தெரியும். அவர்கள் ஓய்வே எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, 220 நாட்களும் இந்த ஆசிரியர்கள் வேலை செய்தால், அவர்கள் மிகவும் வேதனைக்கு உள்ளாகிறார்கள். 220 நாட்கள் வேலைக்குப் பிறகு அவர்கள் பிரமோஷன் வேலையைப் பார்க்க வேண்டும். அதனை ஒவ்வொரு பிள்ளையின் வீட்டுக்கும் அனுப்ப வேண்டும். பிறகு புது அட்மிஷனுக்காக பள்ளிக்கு வர வேண்டும். இப்படியாக ஏறக்குறைய 300 நாட்களும் ஆசிரியர்கள் பள்ளியிலே இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஓய்வு பெறும்போது ரூ. 10 ஆயிரம் கொடுக்க வேண்டும். அனைத்து தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நேரிடையாகச் சம்பளம் வழங்க வேண்டும். மாநகராட்சியிலே ஒவ்வொரு ஆசிரியரும் அவரவர்களுடைய பாங்கிலிருந்து பெறும் அளவுக்கு சம்பளத்தை தனிப்பட்ட முறையில் பாங்கிலே போட்டுக்கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு அங்கே பணியாளர்களை உயர்த்தவில்லை. இருந்தாலும் ஒவ்வொரு ஆசிரியரும் நேரிடையாகச் சம்பளம் அவரவர்களுடைய பாங்க் மூலமாகப் பெறும் நிலைமை இருக்கிறது. ஆனால், இங்கே கல்வித் துறை, பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கிக்கொடுத்தால் தான், ஆசிரியர்களுக்கு நேரிடையாகச் சம்பளம் கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே, அதையும் தயவுசெய்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): [illegible], முடிக்க வேண்டும்.

செல்வி ஆ. விலவதி: [illegible] தலைமையாசிரியர்களுக்கு [illegible] இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லை. [illegible] இணைக்க வேண்டும். ஓய்வுபெறும் அனைவருக்கும் [illegible] பென்ஷன் அளிக்க வேண்டும். 1—6—1981-லே பயிற்சி பெற்ற அனைத்துப் பிரிவு ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் கூடுதல் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஏழை மக்களை பாதிக்காத அளவுக்கு வரி விதிக்கப்பட்டிருப்பதற்கு இந்த அரசைப் பாராட்டி, அமைகிறேன்.

THIRU J. M. MIAKHAN: Hon. Chairman, I thank you for
asking me to speak on the Budget today. At the outset, our
Finance Minister in his speech has dealt with water scarcity very
well. There is water scarcity everywhere and, as a matter of
fact, drought this year is unprecedented. We are facing acute
water scarcity not only for agricultural purposes but also for
drinking purposes. We should also see and try to augment our
resources and also find out other alternative sources of water,
either from ground-water sources or by reclamation or by de-
salination plants. In the whole of our country, there is no de-
salination plant. Our population is increasing day by day and,
therefore, de-salination plant may be necessary. As a matter of
fact, in foreign countries, they have de-salination plants and they
have also brought down their cost. They produce not only
potable water from sea water but at the same time they use
the stream to generate electricity. As a matter of fact, in Jeddah,
steam from the de-salination plant is used for running the turbines
and electricity is generated. By adoption of that method, we
can bring down the cost of de-salination of water. This could be
fruitfully considered, instead of depending on other States for our
needs and I am sure it will yield very good results.

(முற்பகல் 11.50)

Another thing I want to mention is this. In our rivers we
see that all the water that flows is not fully utilised and most of
the water is allowed to go waste into the sea. [illegible]



these rivers flows in plenty at inconvenient times or during the rainy seasons, when those waters could not be fully utilised. If we are able to provide tanks near the estuaries, we can collect plenty of water and the same can be used fruitfully. In foreign countries, they have even connected two islands with four walls and they have pumped out the sea water and have constructed a tank. When they are able to do it, why not we have tanks near estuaries and collect water in those reservoirs. This water could be put to proper use later on.

In agriculture also, we must try to do a lot more. We are using a lot of water for our agriculture, especially for raising paddy and other crops. In foreign countries, the quantum of water that is being used is much less. Therefore, some research has to be made in this regard. If we manage the available resources efficiently, it is possible to conserve water.

Sir, the present drought is also due to imbalance in ecology. The forests and the greeneries are supposed to attract the clouds and bring rains. If the forests are destroyed, naturally, the lands go dry. Even in places where there are flourishing greeneries, some desert plants creep in. This is an accepted fact and it is a scientific truth. It is said that nearly one-third of the land area available in a country should be forest areas. But we have got a large population in our country. We have the second largest population in the world, next only to China. Perhaps, because of this, we are not able to set apart one-third of the land area for growing forests. But, at least we must protect and conserve the existing forests and see that they are not depleted. Therefore, besides resorting to afforestation, illegal cutting of trees must also be stopped forthwith. Now, many malpractices are still going on. I hear that valuable sandalwood and rosewood trees are even now being cut stealthily with the connivance of the Forest officials and exported abroad because these trees fetch fabulous prices in foreign markets. Especially, the sandalwood and rosewood trees are not available in any other part of the world, and there is very good demand for them. Therefore, they are somehow being stealthily exported to foregin countries. The Government should see that such things are stopped forthwith.

[Thiru J. M. Miakhan] [1983 மார்ச் 10

that they do not have large funds. But, they have scrapped Prohibition and, by that, they will be getting about Rs. 600 crores. Where has all that money gone? Why do they not utilise at least a part of those funds for the purpose of researches? Our research institutions can also be benefited by the results of similar researches undertaken in other parts of the world. They can have arrangements for exchange of information and, by that, they can get very useful information. If only there is an arrangement for

(நேரம் 12.00)

vigorous research, I am sure that some solution can be found for the energy problem. We were producing only about 3374 mu. till some years back. We have stepped it up to 4160 m.u. and we have proposed to increase it to 5000 mu. I have a feeling that even this amount of generation may not be adequate, if whatever energy is available is not properly distributed. Now, we have reduced line loss to a great extent. Now, the line loss is only 18 per cent or so. Formerly, it used to be more than 30 per cent. It can be still further reduced, if we do the generation in different places, by having thermal stations or by resorting to other means of generation. By utilising wind-power also, we can produce sizable quantities of power, especially for utilisation in small villages. If there is a hill, we can have a huge wind-mill on its top. That wind-mill can produce 5 MV of electricity. This electricity can cater to the needs of the villages nearby and some small industries can be started in those villages. The energy generated by wind-mills can be used directly for running of lathes, etc. These things can be explored and we should see that the electrical energy generated by major stations is conserved. Besides finding out alternative sources of energy, we should see that whatever we now have is equitably distributed. Now, somehow or other, our Government seem to care only for the agriculturists. Of course, they form the backbone of our country and they should not be affected. If they are affected, we will have to suffer because we would not get the required foodgrains. But, at the same time, the industries should not be neglected at any cost. It is they who create the wealth. It is they who give us the money to run the Government. Only by producing more in the industrial sector, we



1983 மார்ச் 10] [Thiru J. M. Miakhan]

can achieve self-sufficiency. Only by producing more in the industrial sector, we can get taxes and the money to spend on other schemes. So, these industries should not be let down. They must be given a proper share in the electricity that is generated. Now, the Government have said that there is a 75 per cent cut on demand and that there is a 60 per cent cut on consumption, in respect of the H.T. units. But, there may be some special cases relating to some industries which cater to some special interests. For example, the leather industry is an export-oriented industry. It earns valuable foreign exchange not only for Tamil Nadu but for the whole country. As far as this country is concerned, it is the third largest foreign exchange earner. This industry should not be disturbed and it should be given adequate quantity of power so as to produce more. The hon. Members of this House should know that the leather industry employs more than 8 lakhs of people and all of them belong to weaker sections and are people belonging to Adi-Dravidar or Scheduled Castes. They are in larger number, while a few thousand people who are in the managerial cadres belong to other communities. This is a labour oriented industry and should not be distrubed but should be given continuous supply of electricity to tide over the present crisis. Though some of the Leather Companies have their own generators, they are all diesel oil fired ones. The cost of diesel has gone up and it is also not easily available. The cost of energy produced in diesel generator sets has become high. If they want to keep sufficient stocks of diesel, they should have tanks and they have to incur huge expenditure on them. We should see that they are not put to great hardship. The leather industry is helping the growth of the economy of the country and it should be given protection. Because of fluctuation in markets abroad the leather industry was in trouble for two to three years and many people in the industry have lost crores of rupees. In Periamet itself about 3 crores of rupees have been lost by them. Now the Government of India and the Government of Tamil Nadu have been good enough to grant fresh loans and they are starting afresh now. They were not able to procure orders and that was also a difficulty. Only this year they have been able to get sizable orders and they have

the orders on hand but they are not able to fulfil them because of lack of supply of power. The power supply is based on the average consumption in August, September and October 1981. In this period many of these tanneries were either closed down or were working with minimum capacity. The average of this period should not be taken as the basis. The average consumption will be 40,000 or 35,000 units. During the particular period, the energy consumed was only 7,000 units and on that basis, the present quota allowed is 4,000 units and this will not be 40 per cent of the requirement. 40 per cent will really be about 15 to 20 thousand units and this quota should be given to the tanneries as a special case. Only then they can be run. Otherwise, we will lose much foreign exchange which is earned by this leather industry. Because I am representing the Leather Industry, I happen to speak a little exhaustively on this subject.

So far as the Nutritious Meal Programme is concerned, it is good. It is a big and ambitious programme and it requires a great deal of ground-work, preparation and infra-structure. It has to be worked out in full detail and if it is then implemented, it will really be a boon to the poor children. The intention is very good but while implementing it and spending more than Rs. 130 crores on such a scheme, we must see that the benefits really reach the people for whom it is intended. Now what happens is this. In many schools, much of the time of the teachers is lost in the preparation and the serving of this meal. We know that in a marriage the important part of the function is the feast and it usually takes a longer time. The Mahr and the Nikkah parts of the marriage will take only about one hour and the feast will take more than 2 or 3 hours. Similarly in every school, they are not able to complete the serving of the meals within the lunch hour and it spills over into the working hours also. Especially, the education of the children, for whose welfare this scheme is intended, is more important. We should see that education does not suffer. We are spending more than Rs. 350 crores on education. We should see that the benefits of education accrue to the children. Therefore, preparations should be made in advance before implementing this scheme. I feel that this should have been





done and I think that the Hon. the Chief Minister will not misunderstand me when I say this. I request him to ponder over the matter, plan everything in advance and, then, implement the scheme so that the aim of the scheme may be fully achieved and the benefits may reach all the people. As I said earlier, a sum of about Rs. 360 crores has been allotted for Education. This is a desirable thing. It is said that, after the implementation of the Nutritious Meal Scheme, the enrolment of children in the schools has increased by more than 2.63 lakhs. It may be that they are all poor children and, in the hope of getting at least one square meal a day, they have enrolled themselves in the schools. This scheme has proved to be an incentive for them and it is a good thing. But, the increase in staff in the schools is not proportionate and is not adequate.

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்)

Do you want me to stop, Sir?

(பிற்பகல் 12-10)

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து 22 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. எம். மியாகான்: தலைவர் அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றால் நிறுத்திக்கொள்கிறேன்.

மாற்றுத்தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): உறுப்பினர் அவர்கள் உடல் நலம் கருதித்தான் சொல்கிறேன்.

THIRU J. M. MIAKHAN : Sir, only 1,250 Secondary Grade teachers, 150 Tamil Pandits, 100 Physical Education Teachers, 200 B. Ed. Assistants, etc., have been allotted. I think this is very inadequate. Some more teachers have to be appointed. When so many children have been newly enrolled, the children must be given proper education. There is no use in huddling 80 or 100 children in a class because one teacher cannot manage all those children. The ratio between the teacher and the students must be at least 1:40. I do not say that one teacher should have

[Thiru J. M. Miakhan] [1983 மார்ச் 10

only 15 or 20 children. But, it should be at least 1:40. If it is more, the teacher cannot concentrate on teaching and the pupils may not be benefited.

Sir, I would now like to say a few words about ourselves, that is, the Legislators. A scheme for the construction of a new building for the Legislature Secretariat has been on the anvil for quite some time. Somehow, it has been put off, every now and then. In the Budget Speech, I do not find any mention about provision of funds for the new building for the Legislature Secretariat. It was said that about Rs. 5 crores would be required for constructing the new building. By the time our Government get clearance from the Central Government for utilising some land in the Fort St. George campus for the purpose of constructing this building and, then, construct the building, the estimate may go up. Therefore, I request the Government to consider whether, at least as a stop-gap measure, we can utilise the Island Grounds for this purpose. This land is in the possession of our Government and a nice, new building for the Legislature Secretariat can be built on that land. It is a very centrally located and airy place. The land is at the disposal of our Government and I think that some Exhibitions, fairs, etc., are even now being held there.

Thirumathi TARA CHERIAN: Sir, it is the only lung for Madras City. I request the hon. Member not to suggest the Island Grounds.

Thiru J. M. MIAKHAN: I am only making a suggestion. The Government may consider it or they may drop it. I am making this suggestion only as a short-term measure. As far as we the M.L.Cs. are concerned, we have got a good Lounge Room. The area of the M.L.A.'s Lounge is not even one-tenth of that of our Lounge Room. Moreover, there are only one or two benches in their Lounge. I think that the M.L.A.'s must be given more facilities. A small piece of vacant land is now available just behind and adjacent to our Lounge Room. A six-storeyed building can be built on that land. If that building is constructed, more space will be available and a Lounge Room for the M.L.A.'s can be located in that building. Moreover, some more offices of the



1983 மார்ச் 10] [Thiru J. M. Miakhan]

Legislature Secretariat can also be located in that building. For example, we have our Assurances Committee. It is the only Committee that is being presided over by the Leader of the Opposition. Most of the other Committees are headed only by Ministers. Therefore, in the new building that I am now suggesting, a separate room may be allotted for our Assurances Committee. At present, there is no separate Secretariat for the Assurances Committee and the Secretary of the Council attends to the work connected with the Assurances Committee also. We must have a separate Secretariat for the Assurances Committee. There must be separate staff and a separate room for the Assurances Committee. I would even say that there should be a separate Minister to see whether all the Assurances have been fulfilled. If it is not possible to have a separate Minister, at least a separate portfolio can be created for this purpose and that portfolio may be attached to some Minister. All these facilities must be provided so as to heighten the prestige of the Assurances Committee and its Chairman. These things can be done if a new building is put up in the open space behind the M.L.C.s' Lounge Room.

Sir, I have all along been expressing my views about the importance of sports. Out State does not seem to consider the importance of sports. Sports is as important as education. If the people are physically healthy, their mental health also will improve. Sports will make them more intelligent also. As far as our country is concerned, now only we had the Asiad conducted in our country and this should give us an impetus. In the Budget I expected some provision to be made for sports. There is no provision for sports at all. There must be a separate Ministry for Sports: not only a separate Ministry, but a separate Minister for Sports should be there, when only he will be able to do justice to sports. The N.C.C., Scouts and Guides and similar other subjects can also be tacked on to the Minister for Sports. He will be able to concentrate on building up of sports. Besides educational institutions, other Sports organisations and institutions should also be encouraged because they are also sponsoring sports and conducting tournaments. The sportsmen should be extended

facilities to go abroad to participate in tournaments. If that is done, it will not only help the country but also improve the brain of the youngsters and it will be more useful to the country as a whole.

I am glad that the Government of Tamil Nadu are going to give assistance for construction of 200 rural godowns and 5 marketing godowns with a total capacity of 26,000 tonnes during 1983-84. There are also seed farms and researches are being conducted. I request the Government to pay some attention to growing of wheat in our State. Now wheat is grown in Haryana and Punjab and other places where the climate is suitable for growing wheat. I heard that even in tropical countries, where there is more sunshine than water, wheat was being grown.

திரு. ப. மாணிக்கம்: கோதுமை உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் பயிராகிறது.

Thiru J. M. MIAKHAN : Sir, I thank the hon. Member for the information. But it may be a small quantity. We require 40,000 tonnes of wheat. I think if research is made and a new strain of wheat is found, wheat can be grown in large quantities in Tamil Nadu also. Now the research in Aduthurai is good in respect of paddy. The same kind of research could be made in relation to wheat. This will go a long way in solving our food problem also.

As I have been saying, industries in our State are given a step-motherly treatment and many of the major industries are flying from our State to other States and even adjoining small States like Pondicherry because those States are extending various concessions and the pin-pricks of the Government are lesser. People who desire to start industries are put to a lot of difficulties and they have to run from pillar to post to get sanction from the Municipality and to get other clearances from various other departments of the Government. If one particular authority is vested with all those powers, the industrialist can get all licences and permission from that single authority without difficulty. All the formalities can be observed at one and the same place and we



should not put impediments in the way of the persons who wish to start industries. By doing so, we can attract many industries to our State and our State will flourish in the field of industry.

So far as handlooms are concerned. . . .

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிட்டத்தட்ட 30 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

Thiru J. M. MIAKHAN : In other States the cloth produced by the powerlooms is passed on as handloom cloth and they are in a better position because the cost of production is less. We should see that our people are not unnecessarily penalised because we want to stick to rules.

I want to speak something about Tourism and because the Vice-Chairman wants me to finish the speech early, I will confine myself to one or two small points. So far as the Wakf Board is concerned, it is an unwidely body. I have been saying many times before about this. Whoever may be at the helm of affairs, he will not be able to deal with the entire problems because it will be beyond one's capacity. Several cases are pending with the Wakf Board and it is not able to deal with them. The Government have agreed, in principle, to decentralise the Wakf Board and to have different regional Wakf Boards. I request the Government to expedite the matter and see that Regional Boards are formed as early as possible. The existing Wakf Board may be retained as an apex body. If the Wakfs are managed properly, it will benefit not only the Muslims but the entire Tamil Nadu. The entire country is entitled to the benefits that the Wakfs offer.

(பிற்பகல் 12-20)

Sir, in the matter of Police administration, I request the Government not to be complacent. They say that there have been only a few communal clashes. But, here and there, clashes occur. Even recently, in Kadayanallur, there was a communal clash. In Kayalpattinam, Police harassment and other things are going on. This should definitely be stopped. The elections are bound to come and people are bound to vote. You cannot expect people to vote as you like. They are free to exercise their franchise

Because they exercise it in a particular way, they should not be penalised and they should not be put to inconvenience. After the election, frequent raids are going on and it seems that harassment is going on. I request the Government to put an end to this immediately.

In the Police Department, there should be proper representation for the various communities in the whole of Tamil Nadu. Only then, the Police Department will function more efficiently. I have been saying, again and again, that there is no representation for the Muslim community in the Police force, especially in the higher echelons.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இல்லாததால், அவருக்கு முன்னால் பேசிய அம்மையார் அதிக நேரம் பேசினார்கள். அதனால் மாண்புமிகு உறுப்பினரவர்களை சுருக்கமாகப் பேசச் சொல்கிறேன். அவர் அவையில் இருந்திருந்தால், இன்னும் 10 நிமிடங்கள் கூடுதலாகப் பேசியிருக்கலாம்.

THIRU J. M. MIAKHAN : In the Police, proper representation has not been given . . . . .

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்தலுக்காக அரசு செய்ததாகப் பேசுவது நல்லதல்ல. ஏனென்றால் அவர்கள் காயல்பட்டினத்தில் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஓட்டு யார் போடுவார்கள், போடமாட்டார்கள் என்பதைப் பார்ப்பதில்லை. நிச்சயமாக அப்படி இருந்தால், நிலைமைகள் எல்லாம் மாறியிருக்கும். அவர்கள் ஓட்டு போடவில்லை என்பதாலோ அல்லது போட்டார்கள் என்பதாலோ நிச்சயமாக அரசு யார்மீதும் நடவடிக்கை எடுக்காது. நிச்சயமாக இது அவருக்குத் தெரியும். ஏதோ பேச வேண்டுமென்பதற்காகப் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

THIRU J. M. MIAKHAN : You know much about me. I do not make false allegations. I do not use abusive language in any criticism. If I mention any points, I mention only those points



that are constructive and that may be useful to the Government. I do not unnecessarily criticise or scold or abuse the Government. I do not do it and the hon. Member must know this. I am saying that, as a matter of fact, harassment is going on. They were leading a peaceful life and . . . . .

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏதோ தேர்தலுக்காக அல்லது தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, அங்கே ஆளும்கட்சிக்கு வாக்கு அளிக்கவில்லை என்று நடவடிக்கை எடுக்கப்படுவதாக தவறான கருத்தை இப்போது தமிழகத்தில் பரப்பி வருகிறார்கள். உண்மையான நிலைமை என்னவென்றால், இதுவரையில் ஆளுங்கட்சிக்கு வாக்களித்ததை விட கூடுதலாக அங்கே இப்போது வாக்களித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் அந்தப் பகுதிக்கு வரவில்லை. அதனால் அவர்களுக்கு அது தெரியவில்லை.

திரு. ஜே. எம். மியாகான் : எனக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அதைவிட அதிகமாகத் தெரிந்தவன் என்ற முறையிலும், அந்த ஊரிலேயே பொறுப்பு ஏற்றிருந்தவன் என்பதாலும் சொல்கிறேன். தமிழக அரசின்மீது அன்பு காட்டி, அங்கே [illegible] வாக்களித்திருக்கிறார்கள். [illegible] ன்குடி, குலசேகரன்பட்டினம் போன்ற முஸ்லீம்கள் வாழும் பகுதிகளிலும் 1980-ல் கிடைத்த வாக்குகளைவிட 2,000 வாக்குகள் கூடுதலாகக் கிடைத்திருக்கிறது. முஸ்லீம்கள் எல்லாம் ஆளும் கட்சிக்கு விரோதிகளாக ஆகிவிட்டார்கள் என்று சிலர் தவறான கருத்தைப் பரப்புவது என்பது அந்த சமுதாயத்திற்கே [illegible] எந்த ஒரு சிறுபான்மை மக்களையும் விரோதித்துக்கொள்ளாது. ஏதோ ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்தமாகப் பார்க்கக்கூடாது. காயல்பட்டினத்தைப் பொறுத்தவரையில், அங்கே ஏற்பட்டுவிட்ட சில சம்பவங்களுக்காக ஒருசிலரைத்தான் காவல் துறையினர் தேடியிருக்கிறார்கள். அவர்களிலே இரண்டு பேர் 'பெயில்' எடுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். எனவே சம்பந்தப்பட்டவர் ஒருவர்தான். இந்த நிலையில் எல்லா முஸ்லீம்களையும் காயல்பட்டினத்திலே அரசு, அதிகாரிகளை வைத்து துன்புறுத்த நினைப்பதாகப் பேசுவது தவறு. சட்டம், ஒழுங்கு என்ற அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய நியாயமான நடவடிக்கைகளை ஒட்டி ஒருசில காரியங்கள் நடக்கலாமே தவிர, அதை ஒரு சமுதாயத்திற்கு எதிராகத் திருப்ப முயற்

சிப்பது என்பது அந்த சமுதாயத்திற்கு, அதன் தலைவர்களுக்கு நல்லதல்ல. நேற்றையதினம் காயல்பட்டினத்திலிருந்து சுல்தான் காஜி அவர்கள், அங்கே மிக முக்கியமானவர், முதலமைச்சரவர்களைச் சந்தித்தார்கள். காலையிலே உணவு அருந்தினார். நேற்று மாலை என்னுடைய அங்கே வந்தார்கள். இன்று மாலை 4-30 மணிக்கு சந்திக்கிறார்கள். வீட்டுக்கு திலே கேட்டு விசாரித்ததில், 2 பேர்கள் மிகவும் அவரிடத் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பழக்கப்பட்டவர்கள், மோசமான எலிமென்ட்ஸ் என்று தெரிகிறது. அதற்காக ஆன்டி-சோஷியல் விரோதமாக இருக்கிறார்கள் என்ற தவறான எண்ணத்தைக் முஸ்லீம்கள் பூராவும் வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். கொண்டுவர

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். காயல்பட்டினத்திலே சமூக விரோதிகளாக இருக்கும் இரண்டு பேர்கள்மீதுதான் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதென்று இப்போது சொல்லுகிறார்கள் பின்னாலேதான் இந்த ஆட்சிக்கு அல்லது அங்குள்ள காவல் துறைக்கு இது தெரிய வந்ததா ? அப்படி தவறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர் களாக இருந்தால், தேர்தலுக்கு முன்பு என் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது ? தேர்தல் முடிவுக்குப் பின்னாலே அரசியல் கண்ணோட்டத் தோடு பழி வாங்க இந்த முயற்சியில் ஈடுபடுகிறார்கள் என்பதுதான் உண்மையே தவிர, அதை மறைத்து தவறான தகவல் கொடுப்பது முறை யாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகத்திற்கும் காயல்பட்டினத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நான் கேட்க விரும்பவில்லை. காரணம், 15 நாட்கள் நான் அங்கே இருந்தவன். இப்போது 2 பேர்கள்மீது நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும்போது, ஏதோ காயல்பட்டினத்தின்மீது படையெடுத்ததுபோல பேச ஆரம்பித்திருக் கிறார்கள். இதுவே தேர்தலுக்கு முன்பு என்றால், எப்படியெல்லாம் பேசு வார்கள் என்பது தெரியும். கூடுமானவரை சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்ற வேண்டுமென்று மிக தார்மீகமாக இந்த அரசு நடந்திருக்கிறது. அங்கே நடந்த சம்பவங்களைப் பக்கத்தில் இருந்து பார்த்தவன் என்பதாலே, அதைப்பற்றிப் பேச விரும்பவில்லை. அதற்கும், இந்த சமுதாயத்திற்கும் சம்பந்தமில்லை. ஒரு முதலமைச்சர் வருகின்ற நேரத்திலே எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற பண்புகளையெல்லாம் இங்கே பேசுவது



நல்லதல்ல. மிகப் பெருந்தன்மையோடு முதலமைச்சரவர்கள் நடந்து கொண்டார்கள். கண்ணியமான முறையிலே உத்தரவிடப்பட்டது. அந்தச் சம்பவத்திலே ஒரு டி.எஸ்.பி.யின் கையே பிளேடால் கிழிக்கப்பட்டது. அப்படியிருந்தும்கூட, 'ப்ரவோக்' ஆகாமல், மிக எச்சரிக்கையாக உத்தர விடப்பட்டது. காரணம், சிறுபான்மை மக்கள் மிகப் பெரும்பான்மையாக வாழக்கூடிய இடம். அதில் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டுமென்று அன்றும் நினைத்தோம், இன்றும் நினைக்கிறோம், நாளைக்கும் நினைப்போம். அதில் சந்தேகமில்லை. ஒன்றிரண்டு பேருக்காக ஒட்டுமொத்தமாக ஒரு சமுதாயத்தை அதில் இணைக்க வேண்டாமென்றுதான் சொல்லுகிறேன். அந்த 2, 3 நபர்களைப்பற்றி நன்றாக விசாரித்துப் பார்த்தால் தெரியும். அதனால்தான் சொல்கிறேன்.

Thiru J. M. MIAKHAN : I thank the Hon. Minister as well as the hon. Member for the informaition given to me. What I say is this. If these people are anti-social elements, action could have been taken earlier. They need not have waited. Why should they take action just after the election ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மன்னிக்க வேண்டும். 5 நிமிடங்கள் அதிகமானாலும், தலைவரவர்களே, நேரத்தை நீட்டிக்க வேண்டும். வேறு யார் பேசினாலும் குறுக்கிட மாட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் நல்ல பாரம்பரியத்தைச் சார்ந்தவர்கள், நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர்கள், மதிப்பிற்குரிய காயிதே மில்லத் அவர்களின் புதல்வர். மனச் சாட்சிப்படி பல கருத்துக்களைச் சொல்பவர். அவருடைய அனுமதியில்லாமல், அவர் பெயரைக் குறிப்பிட்டு, அவர் வந்து பேசினால் நல்லது, முதலமைச்சரவர்களின் பரந்த மனப்பான்மையை, சிறுபான்மை மக்களுக்கு எவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை திரு. மியாகான் அவர்கள் சொல்லுவார்கள் என்று சொன்னேன். அவர்கள் மூலமாக இந்தச் சமுதாயத்திற்குச் செய்தி போய்ச் சேர வேண்டும். காயல்பட்டினம் உட்பட பெரும்பான்மையாக வாழும் சிறுபான்மை மக்களாகிய முஸ்லீம்கள் இந்தத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்திருக்கிறார்கள். அதைச் சான்றுகளோடு என்னால் தர முடியும். எனவே வாக்கு அளித்தார்களா, அளிக்கவில்லையா என்பதை வைத்தல்ல அங்கே உள்ள பிரச்சினை. சட்டம் ஒழுங்கு என்ற அடிப்படையிலே, அதுவும் குறிப்பாக 3 பேர்கள் செய்யும் தவறுகளுக்காக நடவடிக்கை எடுக்கப் படுகிறது. முன்னால் செய்ததா, பின்னால் செய்ததா

(திரு. கா. இராசாமுகமது) [1983 மார்ச் 10

எப்போது அந்தச் சம்பவம் நடக்கிறது? 28 அல்லது 29 ஆம் தேதி நடக்கிறது, மறுநாள் வாக்குப் பதிவு. எந்த அரசும் அந்தத் தவறைச் செய்துவிடாது. பிறகு அவர்கள் தேடப்பட்டபோது, முன் ஜாமீன் எடுத்து வந்திருக்கக்கூடும். இதற்கு ஒட்டுமொத்தமாக ஏதோ அதிகாரிகள் அங்கே போய் பார்க்கிறார்கள் என்பதல்ல. மிகக் கவனமாக நம்முடைய முதல்வர் அவர்கள் முகமது அலி என்ற போலீஸ் அதிகாரிதான் அந்தப் பகுதிகளைப் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். வேறு ஒருவர் பார்த்தால், முஸ்லீம் சமுதாயத்தைச் சேராதவர் என்றெல்லாம் சொல்லக் கூடும். எதாவது ஒரு காரணம் கிடைக்காதா, இந்த அரசின்மீது களங்கம் சொல்ல முடியாதா என்று பல பேர் முயற்சி செய்வதால், நாங்கள் எச்சரிக்கையாக இருக்கிறோம். நன்றாக விசாரிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்பினால், அவரோடு ஒருவரை நாங்கள் அனுப்புகிறோம். காயல்பட்டினம் சென்று நடுநிலைமையோடு பார்த்தால், உண்மை தெரியும்.

Thiru J. M. MIAKHAN: We are now discussing the Budget and I am only saying that law and order, harmony and peace must be maintained. Whatever I say is only to help the Government so that they may function more efficiently. The report I have received may be different. If only two or three anti-social elements have been rounded up, to whichever community they may belong, we have absolutely no objection. They may belong to the Muslim community. But, if they are rowdy elements and if they are really bad elements, the Government may give them double the punishment and I do not mind. But, the ordinary people, especially the 'Gosha' ladies—usually they do not come out and, even if they come out, they come only with their 'purdah' on—need not be unnecessarily harassed. Let not the peace be disturbed. The Hon. Minister mentioned the name of one Muslim officer. I am glad that the Government have utilised the services of at least one Muslim officer.

(பிற்பகல் 12-30)

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மியாகான் அவர்களும் டாக்டர் முத்தையா செட்டியார் அவர்களும் பேசி முடியும்வரை அவையின் அனுமதியுடன், அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



1983 மார்ச் 10]

திரு. ஜே. எம். மியாகான்: நான் பேசுகிறபோது மற்றவர்கள் டிஸ்டர்ப் பண்ணாமலிருந்திருந்தால் இந்நேரம் நான் பேசி முடித்திருப்பேன். நேரம் கொடுத்ததற்கு ரொம்ப நன்றி.

Therefore, I request the Government to see that at least in future recruitments to the Police Department, there is proper representation for every community and especially, for the minority communities and for the Muslim community. If that is done, people belonging to various communities will place some reliance on the Police people. If people belonging to a particular community find that two or three persons belonging to their own community are there in the Police Station, they will feel that no ill-treatment would be meted out to them in the Police Station. At least, the confidence will be there. I am not mentioning about any particular community.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மன்னிக்கவும். இன்றைக்கு குறிப்பிட்ட முஸ்லிம் சிறுபான்மையினர் சமுதாயத்திலேயிருந்து காவல் துறையிலே, பதவிகளிலே எவ்வளவு பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை பல சான்றுகளுடன் நான் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதெல்லாம் சிறுபான்மையினர் இந்தப் பதவிகளுக்கான பட்டியலிலே வருகிறார்களா இல்லையா என்பதுபற்றிதான். பின்தங்கியோர் பட்டியலை எடுத்துக்கொண்டால் இடங்களை விட தகுதி குறைந்தவர்கள் வந்திருக்கிறார்களா என்றால் இல்லை. அந்த முறையிலே ஆர்.டி.ஓ. ஆக மதுரையிலே இருக்கிற திரு. வருசை முகமது ராவுத்தர் அவர்களுடைய மருமகன் ஒரு முஸ்லிம் தான். அதுபோல் ஆர்.டி.ஓ. ஆக இருக்கிற திரு. பரோஸ்கான் அவர்களும் ஒரு முஸ்லிம் தான்.

திரு. ஜே. எம். மியாகான்: எஸ்.பி.க்கள் யாரும் இல்லை.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மன்னிக்க வேண்டும். எஸ்.பி. திரு. காசிம் முதற்கொண்டு பார்த்தால் காவல் துறையிலே உயர் பதவிகளிலே நிறைய பேர் வருகிறார்கள். இவர்களிடமெல்லாம் நம்பிக்கையில்லாமல் இருந்திருந்தால், எப்படி இவ்வளவு பெரிய பதவிகளைக் கொடுத்திருக்க முடியும்? டி.ஜி.பி. போஸ்ட் இந்தியாவிலே, குறிப்பாக ஒரு முஸ்லிமுக்கு தமிழகத்திலே தான் வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த ஆட்சியில்

தான். சிறுபான்மையினரிடம் நம்பிக்கை வைத்திருப்பதால் தான் இது வழங்கப்பட்டிருக்கிறது. இதே டி.ஜி.பி.யை டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் போட்டது யார் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : சீக்கிரம் முடிக்க வேண்டும்.

THIRU J. M. MIAKHAN : I request the Hon. Minister concerned to see that proper representation is given to the Muslim community in future recruitments. At present, the representation in the Police Department does not work out to even one person in every 100 persons. It works out to less than one person. If the Hon. Minister agrees to furnish us the details about the number of Muslim people working in the Police Department and if he looks into those details, he will find that what I say is quite true. Now, in the Police Department, the Muslims are not represented even by one per cent. It is so in several department and it is very much so in the Police Department. There is no Muslim at all there. I now hear that some more Sub-Inspectors of Police and Police Constables are going to be recruited. At least in that recruitment, I request the Government to see that a little more representation is given to these people so that the present imbalance may be set right.

Sir, I am coming to the last point. It is about the levy of a 2 per cent tax *ad valorem*. An amount of only Rs. 26 crores is going to be realised by the taxes. They call the new tax Entry Tax; but actually it is octroi. Octroi is an obnoxious tax which has been taken away from many other States. I do not know why the Government want to introduce it here. As a matter of fact, the expenditure on collecting the tax will be very much. In fact, a Central Minister once expressed the view that for every rupee of tax collected, there will be an expenditure of 86 paise on collecting it.

Even the Hon. the Prime Minister has stated that such 'Entry Duty' must be removed. If it is removed, there will be free flow of traffic and there will be saving of petrol, which will be a gain to the country. Though it is mentioned that this will be collected at a single place, there will be harassment of





merchants and traders. There is already a deficit and we are going to find the money by vigorous collection of taxes. The total deficit is about Rs. 184.55 crores. If there is no taxation, this sum of Rs. 26 crores will also be included in the deficit and it will be only about Rs. 200 or 210 crores. By vigorous collection of taxes and by reason of increase in volume of trade and increased collection of sales tax, the deficit will be much less. I request the Government not to stand on prestige but drop at least this 2 per cent *ad valorem* octroi duty. With these words I thank the Vice-Chairman for giving me the opportunity to speak and the hon. Members for hearing me patiently.

Dr. M. A. MUTHIAH CHETTIAR: Mr. Vice-Chairman, If I begin to talk in Tamil it will take much time. As there is no sufficient time, I hope you will give permission to speak in English.

First of all, I am very happy to see that the Lower House has passed a resolution relating to the successful holding of the Non-aligned Meet at Delhi. Though such a resolution has not been passed in this House, I am very glad that such a resolution has been passed in the other House and they have done a very good thing.

With regard to drought situation, I am glad that thousands of tubewells have been dug and it is not enough. I am glad the Hon. Minister Thiru Raghavanandam, who is the Chairman of the M.M.D.A. is here. The number of tubewells should be increased. -less we take up Krishna water scheme in right earnest, because -lugu Desam Government are willing to give water, we will not able to solve the water problem.

With regard to water transport in the City, though a railway -ne is going to be put, it would not be sufficient and we have t- -ear the Cooum river and see that it is used for transport. Thir- -hiagaraja Chettiar who was the Leader of the Justice Part- -ut up a proposal for water transport at a cost of Rs. 1 cro- -ut because of diarchy, it was not accepted. If sufficient wat-

[Dr. M. A. Muthiah Chettiar] [1983 மார்ச் 5

is let into the Cooum, steam boats carrying 20 to 25 persons could be plied. The bridges could be remodelled and it will ease the transport problem.

Sir, regarding destruction of forests, I am glad that the Government have taken note of it. Because there has been no rain, the area under forests has dwindled. I am sure that the Hon. Minister will take interest in aforestation. Besides that, there should be more stringent regulations and they must be enforced. The Hon. the Minister for Forests is also in charge of Temples and I would like to implore one thing from him. Of course, the Government are now busy with various other matters. I am sure that, at least after the current Budget Session, the Hon. Minister will find time to fill up the Trustees' posts in both the old renowned Temples and the small new temples. The old system of having hereditary Trustees has been given up. But, if a member of a hereditary Trustee's family is available and if he is a good person then, he can also be considered for the post of Trustee. He need not be the sole Trustee but he can be one among many Trustees. I am sure that the Government will be able to find respectable persons to fill up these posts because the people should get a feeling that the funds of the Temples are spent usefully. In the past, the Trustees appointed under the old system have done well. Now, the system of appointing Trustees has changed. But, still, in certain cases where a member of the family of the old Trustee is found to be good, he can be appointed Trustee. Sir, the same Minister is in charge of Art and Culture also and I would like to say something on this subject. Even this morning, I heard the views of Thavathiru Kundrakkudi Adigalar to the effect that family planning was quite necessary. For propagating this scheme, folk-dramas should be arranged in the villages. If that is done, people in the villages and in the slum areas in the towns will spend their time usefully without remaining in ignorance. Therefore, it is very necessary for the Government to have some folk-drama troupes. I think that even now there are some folk-drama troupes but their services are utilised only during Election times. It would be better if their services are utilised throughout the year.



1983 மார்ச் 10] [Dr. M. A. Muthiah Chettiar]

(பிற்பகல் 12-40)

Sir, I am glad to see that allocation of funds has been d for some irrigation projects. In the Budget speech, I do not find a complete list of irrigation projects. But, I would like to suggest that, besides the major schemes, we should also have schemes for the construction of some small dams which would be of help in generating electricity also. Here, I would like to remind the House of what I have been saying very often. Sir C. P. Ramaswami Iyer, while introducing the Pykara Bill, said, in the same breath, that he wanted thermal schemes also to be implemented. My own view is that every Municipality and every big Panchayat should have a thermal station under its own control. Of course, the Electricity Board should have control over the staff of these Municipal and Panchayat thermal stations. The staff may not like to serve under a Municipal Chairman. Therefore, in the matter of the staff of these thermal stations, the powers of transfer, grant of leave, enquiry, dismissal, etc., should remain with the Electricity Board. But the responsibility for the installation of the thermal plant should be with the local body. To find the resources for starting thermal plants, loans may be floated and debentures may be issued. By issuing debentures a few crores of rupees could be raised. The electricity generated in the thermal stations managed by the Municipalities can be utilised for starting small-scale industries in places within a radius of 5 miles or 10 miles. In that case, the load on the main grid will be reduced and, as a result, we will not be put to the necessity of waiting for better days to improve the power situation or to depend upon the neighbouring States for electricity. In fact, all the three other Southern States are short of electricity. Because of shortage of electricity, the continuous process industries are facing difficulty. The cement industry is a continuous process industry. The sugar industry also requires electricity continuously for five or six months in a year, during the crushing season. The paper industry also requires electricity throughout the year. These industries cannot run on a reduced supply of electricity at 40 per cent

[Dr. M. A. Muthiah Chettiar] [1983 மார்ச் 10

of the required supply of electricity. The cement factories, sugar mills, paper mills, etc., have to be supplied electricity continuously for all the 24 hours.

While talking about Tourism, the Hon. Minister has mentioned about Pichavaram but there is not much work done in that direction. It is one of the finest tourist centres and work should be done early to make it a tourist centre. What about the East Coast Road? We have been talking about it. Unless the East Coast Road is fully developed and laid, Pichavaram and Mahabalipuram will not attract tourists. If that road is completed, there will be a straight road from Madras to Pichavaram via Mahabalipuram and Pondicherry. I hope the Hon. Minister will be able to impress on the Government of India the need to make haste in regard to East Coast Road.

Regarding Education, a large amount of money is being allotted. I have been shouting at the top of my voice that we must increase the number of polytechnics and other Engineering institutions. Such technical education will alone help our younger generation. I am glad that the Education Minister has been responsible for increasing the number of polytechnics in recent years and it is good. He is also introducing many new courses. But that is not enough. I would like to implore him as well as the Hon. the Chief Minister and the Hon. the Finance Minister to see that a polytechnic is started in each taluk. There must also be Junior Polytechnics and they should be later converted into Senior Polytechnics. The whole country will prosper only by starting technical institutions and by introducing new courses of study.

Therefore, it is necessary that H.T. current should be given to them. They cannot be having thermal plants costing crores of rupees. If they take loan for them, interest charge will become heavy. The cost of cement will then go up. Already it is high and we are importing cement and the people are not able to get cement to the extent required. Thus there is loss of employment for the masons, carpenters and other skilled artisans who are engaged in construction activities. The entry tax is



1983 மார்ச் 10] [Dr. M. A. Muthiah Chettiar]

to be levied on several items and one of the items is cement. The entry tax on cement will be Rs. 3.50 and the cement bag will now cost Rs. 65.50. I do not know at what rate cement is being sold in the open market and it is bound to be higher. I am mentioning only the official price. The extra amount over and above the official price does not go to the manufacturer and there is no benefit to the consumer also. The traders and other intermediaries are getting the extra money and the consumers are suffering. There are constructions going on in respect of Government buildings also. I learn that stealing from the construction sites is going on and this should be controlled. I hope the Hon. the Finance Minister will consider all these and withdraw the 2 per cent entry tax on cement at least.

Regarding Health, I would like to mention that in some of the hospitals, through the sanctioned strength of doctors is five, two or three posts remain vacant for almost 8 or 9 months.

Still, we find from the newspapers that there are many unemployed M.B.B.S. doctors. I do not know why the Department of Medical Services has not been able to post doctors to fill the vacant posts. Especially, where there is no woman-doctor, people do not send cases of child-birth to the hospital with confidence. In one place, the post of a woman-doctor is vacant for the past eight years. All these years, a single doctor is attending to all the work that two doctors should do and that doctor is a male doctor. There are some people who are conservative and who do not want a male doctor for attending to cases of child-birth. Therefore, it is necessary for the Hon. the Minister for Health to look into this matter. I will give the name of the hospital, which I referred to just now, later on. Right now, I do not know the name of the hospital. But, I know that there are one or two hospitals which suffer from this kind of disease, I should say. I think that this malady should be removed.

As regards the Police Department, I would like to make a suggestion. I think I am making this suggestion for the 100th time in my experience of nearly 40 or 50 years in both the

[Dr. M. A. Muthiah Chettiar] [1983 மார்ச் 10

Houses of the Legislature. The Police Stations are now very ineffective because they do not have jeeps or other means of quick transport. The Inspector of Police or the Sub-Inspector of Police goes about only by cycle. If he is given a motor-cycle, the Inspector of Police can move about quickly. I would even suggest that a jeep may be given for every three Police Stations. There should be three jeeps in charge of every Deputy Superintendent of Police. One jeep should be under his own control. He should set apart two jeeps for use by the Police Stations in his jurisdiction. Now, the Police Department is using micro-wave transmitters for sending messages. Recently, there was a highway robbery committed by some people who were identified as speaking Telugu. They stopped a bus and committed robbery. Because of the micro-wave facility, the nearest Police Station was able to inform the Deputy Superintendent of Police within 10 or 15 minutes, a Police van was able to come. It is very good to have such facilities. At the same time, we should see that each Inspector of Police and each Sub-Inspector of Police has a jeep ready at hand. If he has got a jeep, the Inspector of Police can go along with 6 or 7 Policemen with arms. In the absence of a jeep, he can go only by cycle. If a case is reported to him, either he does not go at all or, even if he goes, it is of no use because he goes late. Therefore, I feel that it would be worth while and even more economical, in the long run, to give jeeps to the existing Police Stations, instead of increasing the number of Police Stations. If jeeps are given to all the Police Stations, there may not be any necessity for opening more police stations. At present, these are not at all given to any Police Station as such. Only one jeep is given to the Deputy Superintendent of Police and one jeep is given to the Inspector of Police at the District headquarters. This, in my humble opinion, is not at all enough.

Sir, I am glad that the Tamil Nadu Government stand first in the whole country in the implementation of the Twenty-Point Programme. I am delighted to know this. I would like to say a few words about deficit financing. The Budget for the



1983 மார்ச் 10] [Dr. M. A. Muthiah Chettiar]

coming year shows only a small deficit. To make good that deficit partly, Government have proposed to levy taxes to the tune of Rs. 26 crores. I think that this is not at all necessary.

(பிற்பகல் 12-50)

If there is good investment, there will be more income and nobody will cringe to give loans in respect of good items of work. Such loans are taken for the benefit of the present generation as well as for the benefit of the future generation. Deficit financing is not at all bad. I have always been speaking in favour of deficit budgeting in this House, in the other House and in many forums like Chambers of Commerce. It is not bad to have deficit in a budget. There is only a deficit of about Rs. 200 crores and I would request the Hon. the Finance Minister not to worry about the deficit. There is inflation due to various factors. Deficit budgeting to such a small extent is not going to add up to the inflationary tendencies to a large extent.

With these words, I wish to congratulate the Hon. the Finance Minister and the Government on the excellent budget they have been able to present in the present extraordinary situation.

திரு. சி. இராமலிங்கம் (மாற்றுத் தலைவர்) : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் நாளை காலை (11—3—1983 வெள்ளிக் கிழமை) 9-30 மணிக்கு, அவை கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-51)

## இணைப்பு I

[378 ஆம் பக்கத்தில் இனம் 3 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

சென்ற டிசம்பர் மாதம், தமிழ்நாட்டில் அமுலுக்கு வந்த 100 சதவிகித மின்வெட்டை ஒட்டி வெளி மார்க்கெட்டில் நூல் விலை அபரிமிதமாக சுமார் 40 சதவிகிதம் வரை உயர்ந்தது. இதனால் குறிப்பாக 20 நெ., 40 நெ., 2/17 நெ., எண்ணுள்ள நூலைப் பயன்படுத்தி துணி உற்பத்தி செய்யும் மதுரை, கரூர், ஈரோடு மற்றும் நாகர்கோவில் பகுதிகளிலுள்ள தனியார் துறை நெசவாளர்கள் தொடர்ந்து தொழில் செய்வதில் சிரமமே ஏற்பட்டது. நெசவாளர்களிடமிருந்து இது பற்றிய முறையீடுகளும் வந்தன. நெசவாளர்களுக்கு மேலே கண்ட எண்ணுள்ள நூல் நியாய விலையில் வழங்கி, அவர்கள் தொடர்ந்து தொழில் நடத்த வசதி செய்து கொடுப்பதற்காக கீழே விவரிக்கப் பட்டபடி சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

**கூட்டுறவுத் துறை :**

தமிழகத்திலுள்ள கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு பலவகை நூல்களாக சுமார் 4,500 பேல்கள் வரை தேவைப் படுகின்றன. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் தேவையில் சுமார் 60 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் வரை ஜெனரேட்டர்களைக் கொண்டு மின் உற்பத்தி செய்ய வசதிகள் உள்ளன. அவற்றை முழுமையாகப் பயன்படுத்தி தேவையான எண்ணுள்ள நூல் உற்பத்தியை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்யவும், அவற்றைப் பூராவையும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு விநியோகிப் பதற்காக "கோ-ஆப்டெக்சிற்கு' சப்ளை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இது தவிர, மேற்கண்ட எண்ணுள்ள நூல் சுமார் 3,000 பேர்கள் இதர மாநிலங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து அகில இந்தியக் கூட்டுறவு நூற்பாலைகள் சம்மேளனத்தின் மூலமாக நியாய விலையில் அடுத்த மூன்று மாதங்களிலே 'கோ-ஆப்டெக்சிற்கு' சப்ளை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 60 எண் கோம்புடு நூல் சுமார் 100 பேல்கள் ஆந்திராவிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் வாங்கி, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியுள்ளது. மேலும் கோ-ஆப்டெக்ஸ், கூட்டுறவு நூற்பாலையி



லிருந்து. தள்ளி வைக்கப்பட்ட செலுத்துகை (Deferred payment) அடிப்படையில் நூலைப் பெற்று பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கி, கோ-ஆப்டெக்ஸ் கொடுக்க வேண்டிய நிலுவையை பகுதி நூலாகவும், மீதியைப் பணமாகவும் தந்து ஈடு செய்து வருகிறது. இவ்விதமாக கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் நூல் தேவை முழுவதையும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வழங்கி வருகிறது.

**தனியார் துறை கைத்தறி நெசவாளர்களுக்கு மோட்டார் மற்றும் சன்ன ரக நூல் விநியோகம் பற்றி விபரங்கள்.**

தென்னிந்திய பஞ்சாலைக் கழகம், தனியார் நெசவாளர் கழகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் முதல் கூட்டத்தில் கைத்தறி இயக்குநரும், இறுதியாக மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களும், பேச்சு வார்த்தை நடத்தியதன் விளைவாக தென்னிந்திய பஞ்சாலைக் கழகம் கீழ்க்கண்டவாறு நூல் ஒதுக்கீடு செய்ய முன் வந்துள்ளது.

| நூல் எண். | பேல்கள் | விலை |
|---|---|---|
| 2/17 | 1562 | ஜனவரி அல்லது பிப்ரவரி விலை இதில் எது குறைவோ அதிலிருந்து ரூ. 7/- குறைவாக. |
| 20 நெ. | 309 | ஜனவரி அல்லது பிப்ரவரி விலை இதில் எது குறைவோ அதிலிருந்து ரூ. 5/- குறைவாக. |
| 40 நெ. | 601 | ஜனவரி அல்லது பிப்ரவரி விலை இதில் எது குறைவோ அதிலிருந்து ரூ. 10 குறைவாக. |
| 60 நெ. | 210 | ஜனவரி அல்லது பிப்ரவரி இதில் எது குறைவோ அதிலிருந்து ரூ. 14·50 குறைவாக. |
| மொத்தம் | 2682 | |

[1983 மார்ச் 10

| சன்ன ரக நூல் நூல் எண் | பேல்கள் | விலை குறைப்பு விவரம் (ஜனவரி '83 அல்லது பிப்ரவரி '83 விலை. இதில் எது குறைவோ அதிலிருந்து) |
|---|---|---|
| 80 நெ. காடட் நூல் | 85 | ரூ. 20·00 குறைவு. |
| 80 நெ. கோம்புடு | 40 | ரூ. 21·50 குறைவு. |
| 100 நெ. காடட் நூல் | 10 | ரூ. 25·50 குறைவு. |
| 100 நெ. கோம்புடு நூல் | 39 | ரூ. 27·00 குறைவு. |
| | 174 | |

25—2—1983 தேதியில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், தென்னிந்திய ஆலை சங்கம் மற்றும் தனியார் நெசவாளர் கழகப் பிரதிநிதி களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின்போது நூலின் விலையை கீழ்க் கண்டவாறு மேலும் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குறைவு செய்யப்பட்டபின் நூலின் விலை/கட்டுக்கு.

| | |
|---|---|
| 20 எஸ் | .. ரூ. 93·00 |
| 2/17 எஸ் | .. ரூ. 120·00 |
| 40 எஸ் | .. ரூ. 123·00 |
| 60 எஸ். காடட் | .. ரூ. 161·50 |
| 60 எஸ். கோம்புடு | .. ரூ. 178·50 |

மேற்படி விலைக்கு நூலைப் பெற்றுக்கொள்ளுமாறு தனியார் நெசவாளர் கழகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. தென்னிந்திய ஆலை சங்க உறுப்பினர் நூற்பாலைகளுக்கு மின்சக்தி வழங்குதலை ஒழுங்குபடுத்துவதன் மூலம், கூடுதல் நூலை உற்பத்தி செய்து, அந்நூலை கைத்தறியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யவும், தென்னிந்திய ஆலை சங்கம் மூலம் அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நெசவாளர் கழகப் பிரதிநிதிகள் இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நூலை பெற்று பயனடைவார்களென எதிர்பார்க்கப் படுகிறது.



1983 மார்ச் 10]

நெசவாளர் கழக பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டபடி மோட்டா ரக நூல் விலையை மேலும் சப்ளை செய்ய தென்னிந்திய ஆலைகள் கழகத்துடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகளிலிருந்தும், பிற மாநிலங்களிலுள்ள நூற்பாலைகளிலிருந்தும் மோட்டா ரக நூலை கொள்முதல் செய்து தனியார் துறை நெசவாளர்களுக்கு விநியோகிக்க தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு ரூ. 50 இலட்சம் முன் பணம் வழங்கியுள்ளது.

இதுவரை ஆந்திர மாநிலத்திலுள்ள நூற்பாலைகளிலிருந்து 261 பேல் மோட்டா ரக நூல்களை தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் கொள்முதல் செய்துள்ளது. இவை கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது. மேலும் பிற மாநிலங்களிலுள்ள மற்ற ஆலைகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. தமிழக அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தற்போழுது பருத்தி நூல் விலை கீழ்க்கண்டவாறு குறைந்துகொண்டு வருவதற்கு வழி வகுத்துள்ளன.

| மாதம் | 20 நெ. | 40 நெ. | 2/17 நெ |
|---|---|---|---|
| டிசம்பர் 1982 | ரூ. 107 | ரூ. 148 | ரூ. 132 |
| 28—1—83ல் இருந்தபடி | ரூ. 102 | ரூ. 142 | ரூ. 129 |
| 23—2—83ல் உள்ளபடி | ரூ. 95 | ரூ. 125 | ரூ. 118 |

## இணைப்பு II

[380 ஆம் பக்கத்தில் இனம் 3 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

இப்போது பல துறைகளிலும், பல பணிகளுக்கும் பலவிதமாக ஊக்க ஊதியங்கள் வழங்கப்பட்டு வருவதை ஒரே விதமாக ஒழுங்குபடுத்துவதற்கு அரசு ஆலோசித்து வருகிறது. இதில் ஒரு முடிவு எடுக்கும் வரை எந்த புதிய பிரிவினருக்கும் புதிதாக ஊக்க ஊதியம் இப்போதைக்கு வழங்குவதில்லை என அரசு முடிவு செய்துள்ளது. இனிமேல் ஊக்க ஊதியங்கள் வழங்குவது, அரசு எடுக்கப்போகும் புதிய பொதுவான முடிவிற்கேற்ப இருக்கும்.

143141
சென்னை-600 008.